## -1- காலத்தின் தேவை அரசியல் வேலை

தமிழ் சமூகத்தை அதனுள் இயல்பாகக் காணப்படும் முரண்பாடுகளை கூர்மை அடையச் செய்வதன் மூலம் அடக்கி ஆளலாம் என நவீன சிங்களப் பேரினவாதிகள் நம்புகின்றார்கள்.

தமிழ் மக்களைப் பட்டி தொட்டியெங்கும் இன்று அரசியல் தெளிவுபடுத்த வேண்டிய தேவை எம்முன் உள்ள மாபெரும் வரலாற்றுக் கடமையாகும்.

பிரித்தாளும் தந்திரோபாயங்களின் ஊடாக எம்மை வென்று விடலாம் என சிங்களப் பேரினவாதிகள் எதிர்பார்க்கின்றனர்.

தமிழ்ச் சமூகம் என்ற மேற்பரப்பை நாம் சற்று சுரண்டிப் பார்த்தால் அதன் கீழ் பிரதேசவாதம், மதம், சாதி, வட்டார வழக்கு உரசல்கள், ஊர்களுக்கு இடையிலான அடிபிடிகள் எனப் பலவற்றைக் காணலாம். ஆனால் சிங்களப் பேரினவாதம் இவற்றையெல்லாம் கணக்கிலெடுக்காது தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக வலுவிழக்கச் செய்து தமிழர் தாயகம் அனைத்தும் சிங்கள பௌத்தத்தின் வரலாற்று உரிமைக்கு உட்பட்ட இடங்கள் என்ற கருத்தை நிலைநாட்ட அயராது உழைத்து வருகிறது.

1958 ஆம் ஆண்டிலும் 1977 ஆம் ஆண்டிலும் 1983 ஆம் ஆண்டிலும் அவற்றைத் தொடர்ந்து வந்த போர் ஆண்டுகளிலும்

சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளும் அவற்றின் படைகளும் தமிழ் மக்களை சாதி, சமூக, மத, பிரதேச மற்றும் வட்டார பேதமின்றி அழித்தொழிக்க முற்பட்டு வந்துள்ளன. போர்க்காலத்தில் எம்மை நோக்கி எப்போதும் நீண்ட சிங்களப் பேரினவாதத்தின் துப்பாக்கிகள் எம்மை யாழ்ப்பாணத்தான் என்றோ, திருகோணமலையான் என்றோ, வன்னியான் என்றோ, மட்டக்களப்பான் என்றோ வேற்றுமைப் படுத்தியது கிடையாது.

சிங்களப் பேரினவாதிகளின் கண்களில் நாம் அனைவருமே தமிழராகவே காணப்பட்டோம். விடுதலைப் புலிகளோடு நீண்டகாலம் போரிட்டதால் பெற்ற அனுபவங்களைக் கொண்டும், வெளிநாடுகள் மற்றும் ஏகாதிபத்தியங்கள் எவ்வாறு தாங்கள் அடிமைப் படுத்திய சமூகங்களை பிரித்து ஆண்டு வந்துள்ளன என்பதை அண்மையில் நுட்பமாக கற்கத் தொடங்கியதாலும் இன்று சிங்களப் பேரினவாதம் புதிய வடிவம் பெற்றுள்ளது. தமிழ் சமூகத்திலுள்ள சகல முரண்பாடுகளையும் ஆழமாகக் கற்றறிந்து அவற்றை கூர்மையடையச் செய்து தமிழ் சமூகத்தின் அரசியல் ஒருமைப்பாட்டைச் சிதைக்க வேண்டும் என்பதில் நவீன சிங்கள பௌத்தம் மிகத் தெளிவாகவே உள்ளது.

இன்று ஹெல உறுமயவின் போசகர்களாக இருக்கின்ற திலக் கருணாரட்ண (தலைவர்), சம்பிக்க ரணவக்க (தேசிய அமைப்பாளர்), உதய கம்மன்பில (பொதுச் செயலாளர்) ஆகிய மூவரும் 16 வருடங்களுக்கு முன்னர் என்னோடும், நான் சார்ந்திருந்த இயக்கத்தோடும் நெருங்கிப் பழகியவர்களே. சிங்கள பௌத்தத்தின் வெற்றிக்காக அவர்கள் இன்று மிக நுட்பமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

போரில் வென்றெடுக்க முடியாத தமிழ்ச் சமூகத்தை அதனுள் இயல்பாகக் காணப்படும் முரண்பாடுகளைக் கூர்மையடையச் செய்வதன் மூலம் அடக்கி ஆளலாம் என இந்த நவீன சிங்களப் பேரினவாதிகள் நம்புகின்றார்கள். அதற்கென நமது சமூகத்தின் வெங்காயத்தனமான பிளவுகளையும் முரண்பாடுகளையும் அவர்கள் இன்று நிறையவே கற்று வருகின்றார்கள். இந்தக் கற்றலின் வெளிப்பாடுதான்

ஜாதிக ஹெல உறுமயவுக்கும் கருணாவிற்கும் ஏற்பட்ட நெருக்கமான தொடர்பாகும்.

இதனால்தான், இன்று ஜாதிக ஹெல உறுமய கட்சி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடனும் ஈ.பி.டி.பி.யுடனும் உறவை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு காலத்தில் தமிழரையே சாதியத்தின் பெயரால் மிருகத்தனமாக ஒடுக்கியபோது சிங்கள பௌத்த பேரினவாதம் ஒடுக்கப்பட்டவர்களின் சார்பாக எம்மிடையே புகுந்து எமது தேசிய ஒருமைப்பாட்டை சிதைத்து விடலாம் என பல வேலைத்திட்டங்களில் ஈடுபட்ட கதைகளை யாழ்ப்பாணத்-திலுள்ள சொக்கத்திடல் போன்ற ஒடுக்கப்பட்ட ஊர்களின் வரலாறுகளை நாம் கற்கும்போது தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

(1984 ஆம் ஆண்டில் சிறி லங்கா இராணுவம் எம்மை முற்றுகையிட்டபோது சொக்கத்திடலில் ஓடி ஒளிய நேரிட்டது. அப்போது அங்கு நான் கேட்டறிந்த கதையை இன்றும் மறப்பது கடினமாகவே உள்ளது.)

கொழும்பிலுள்ள சிங்கள, பௌத்த அறிஞர்கள் சிலர் தமிழ்ச் சமூகத்தை எந்தெந்த வகையில் பிரித்து ஆளலாம் என வெளிப்படையாகவே இன்று பேசுகின்ற ஒரு சூழல் தோன்றியுள்ளது.

எமது சமூகத்தில் காணப்படுகின்ற சகல வகையான முரண்பாடுகளையும் எவ்வாறு பயன்படுத்தி எமது தேசிய ஒருமைப்பாட்டை அழித்துவிடலாம் என்பதில் இன்று நவீன சிங்களப் பேரினவாதிகள் பெருநாட்டம் கொண்டுள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களாக கிழக்கில் காணப்படுகின்ற நிலைமைகள் சிங்களப் பேரினவாதிகளின் எண்ணத்துக்கு மேலும் வலுச் சேர்த்துள்ளன. கிழக்கு மாகாணம் தமிழர் தாயகத்தின் ஒரு இன்றியமையாத அங்கம் என நாம் ஒரு புறம் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கையில், மறுபுறம் எம்மிடையே சில

துரோகிகள் எம் எதிரிகளோடு கைகோர்த்துக் குலாவித் திரிகின்றனர்.

போர்க்காலத்தில் வெல்ல முடியாததை மிக நுட்பமான பிரித்தாளும் தந்திரோபாயங்களின் ஊடாக எம்மை வென்று விடலாம் என சிங்களப் பேரினவாதிகள் எதிர்பார்க்கின்றனர். அவர்களோடு அண்மைக் காலத்தில் எனக்கு உரையாடக் கிடைத்த சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர்கள் எமது சமூகத்தை எந்தளவுக்கு நுட்பமாக புரிந்து செயல்பட விரும்புகிறார்கள் என்பதை நான் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மிகத் தெளிவாக அறியக் கூடியதாயிற்று. இது கிழக்கைச் சேர்ந்த மக்களுக்கு ஒரு முக்கிய சவால் ஆகும்.

இடையே ஒரு மிக முக்கியமான விடயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

ஆரம்ப காலத்திலே தமிழ் மக்களிடையே பிராந்திய வேறுபாடுகள், ஊர் முரண்பாடுகள், சமய வேற்றுமைகள் போன்றவற்றை மேவிநின்ற ஒரு முற்போக்கான - சமதர்ம நோக்கம் கொண்ட - தமிழ்த் தேசியக் கோட்பாட்டை மிகவும் முயற்சி செய்து கட்டியெழுப்ப தமிழரசுக் கட்சியும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் மாணவர் பேரவை போன்ற பல அமைப்புகளும் இடையறாத போராட்டங்கள் மூலமாகவும் அரசியல் வகுப்புகளின் ஊடாகவும் ஊர் ஊராகவும் தெரிவு செய்யப்பட்ட இரகசியக் குழுக்கள் ஊடாகவும் பரப்ப கடும் முயற்சி எடுத்தன. பல்வேறு வேலைத்திட்டங்களில் சளைக்காது ஈடுபட்டன.

இந்தக் காலகட்டத்தின் பின்னர் உருவாகிய பல்வேறு இயக்கங்கள் ஊர் ஊராக மக்களை - குறிப்பாக இளம் சமூகத்தை - அணிதிரட்டி அவர்களுக்கு தமிழ்த் தேசியத்தின் அரிவரியிலிருந்து கார்ல் மார்க்ஸின் மூலதனம் வரை ஒரு பரந்துபட்ட அரசியல் பார்வையை - தெளிவை - அத்தெளிவின் ஊடாக ஏற்படக்கூடிய போராட்டப் பற்றுறுதியை - உண்டாக்கின.

இதன் காரணமாகத்தான் புலிகள் தேடித் தேடி அழிக்க முற்பட்ட முன்னாள் மாற்றியக்கக்காரர்கள் பலர் இன்று எமது மக்களின் விடிவுப் போராட்டத்துக்கு தம்மால் இயன்றதை எங்கிருந்தாயினும் செய்ய வேண்டும் என ஏங்கி நிற்கின்றனர்.

இன்று விடுதலைப் புலிகள் தமிழ் மக்களிடம் வீடு வீடாகச் சென்று அரசியல் தெளிவையும் ஒரு பரந்துபட்ட பார்வையையும் ஏற்படுத்த உடனடியாக ஆவன செய்ய வேண்டும். மட்டக்களப்பில் அண்மையில் ஏற்பட்ட குழப்பங்கள், எந்தளவுக்கு அரசியல் அறிவீனம் என்பது மிக ஆழமாக புரையோடிப் போயிருந்துள்ளது என்பதை நமக்கு நன்றாகக் காட்டிற்று. எத்தனையோ ஆயிரம் போராளிகளைப் பறிகொடுத்து கட்டியெழுப்பப்பட்ட தமிழ்த் தேசிய உணர்வை கணப் பொழுதில் ஒரு சிலர் தங்களது சுயநலத்திற்காகத் தூக்கியெறிந்து கண்ணிமைக்கும் பொழுதில் பிரதேசவாதச் சேற்றுக்குள் உழல்கின்ற எருமைகளாக மாறியதன் அடிப்படைக் காரணம் அரசியல் அறிவீனமே அன்றி வேறில்லை.

தமிழ் மக்களை பட்டி தொட்டியெங்கும் இன்று அரசியல் தெளிவு படுத்த வேண்டிய தேவை எம்முன் உள்ள மாபெரும் வரலாற்றுக் கடமையாகும்.

ஒரு காலத்தில் ஊர் ஊராக காடுமேடு பள்ளம் எனப்பாராது அரசியல் வகுப்பெடுக்க தமிழீழத்தின் பல அறியா மூலைமுடுக்குகளிலெல்லாம் அலைந்து திரிந்த பல்வேறு இயக்கங்களினுடைய அரசியல் மற்றும் மக்கள் அமைப்பைச் சேர்ந்த போராளிகளின் வேலைகள் ஏதோ வகையில் பல்வேறு நன்மைகளை செய்துள்ளன.

வெற்றி பெற்ற விடுதலைப் போராட்டங்களின் கதைகளை, எமது போராட்டத்தின் தெளிவுகளை, தோல்வியடைந்த பல்வேறு ஒடுக்கப்பட்ட மக்கள் போராட்டங்களின் தவறுகளை எமது மக்களிடையே சலிப்பின்றி நாம் கொண்டு சென்று புரிய வைக்க வேண்டிய வரலாற்றுக் கடமை எம்முன் பரந்து கிடக்கிறது.

சர்வதேச நல்லெண்ணத்தை பெற்றுக் கொள்வதற்கு நாம் காட்டுகின்ற ஊக்கத்தைவிட பல நூறு மடங்கு ஆர்வத்துடன் நாம் எமது மக்களிடையே பரந்து சென்று பேச வேண்டிய காலம் இது. இதை மறந்த பந்தா பரமசிவன்கள் தமிழீழ விடுதலை வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் வீழ்வது தவிர்க்கப்பட முடியாதது.

ஊடகங்கள் மூலமாக மக்களை முழுமையாகச் சென்றடைந்து விடலாம், அவர்களுக்கு அரசியல் தெளிவை ஏற்படுத்துவதற்கு ஊடகங்களே போதும் என எண்ணுவது மகாதவறாகும். தகவல்போர் யுகத்தில் நாம் வாழ்பவர்கள் என்ற வகையில் ஊடகங்கள் - குறிப்பாக எமது போராட்டம் சார்ந்த ஊடகங்கள் - மிக நுட்பமாகச் செயற்பட வேண்டும் என்பதிலோ அதில் நாம் கட்டாயம் பெரு முதலீடு செய்ய வேண்டும் என்பதிலோ மறுபேச்சுக்கு இடமில்லை. ஆனால் மக்களிடம் சென்று அரசியல் கருத்தரங்குகளையும் உலக விடுதலைப் போராட்டங்கள் பற்றிய தெளிவு ஏற்படுத்தும் கூட்டங்களையும் நாம் செய்யும் வரை எமது ஊடகச் சாதனைகள் நீர் மேல் ஊற்றிய மண்ணெண்ணெய்யாகத்தான் இருக்கும்.

25.07.2004

## -2- இராணுவச் சமநிலையைப் பேணுவதாயின் அரசியல் மயமாக்கல் தேவை

எமது விடுதலைப் போரட்டத்தில் முழுநேரமாக இன்று இணைந்து கொள்பவர்களின் தொகை தற்போது மிகவும் குறைந்து வருகிறது எனவும் இதற்கு முக்கியமான காரணம் புலிகள் ஒரு கெரில்லா இயக்கமென்ற நிலையிலிருந்து மாறி மரபுவழிப் படையாக இன்று மாறியுள்ளமையே எனவும் சில ஆய்வாளர்கள் கூறுவர். மக்களோடு தொடர்பற்ற மரபுவழிப் படையாக புலிகள் மாறிவருவதாலேயே ஒரு கெரில்லா இயக்கத்தின் மீது இயல்பாக ஏற்படக் கூடிய ஈர்ப்பு இன்றைய தமிழ்த் தலைமுறையினரிடையே அருகி வருகிறது என்பது அவர்களுடைய கருத்து.

1984, 86 காலப்பகுதியில் யாழ் மாவட்டத்தில் முழுநேர விடுதலைப் போராளியாக செயல்பட்ட அன்பர் ஒருவர் அண்மையில் மேற்படி கருத்தை இன்னொரு கோணத்தில் முன்வைத்தார்.

அதாவது ஒரு கெரில்லா போராளியிடம் இருக்கக் கூடிய அர்ப்பணிப்பு, சூழலுக்கேற்ப செயற்படும் திறன், பொது மக்களை அரவணைத்துச் செல்லும் பாங்கு, அரசியல் தெளிவு, மனிதநேயம் என்பன ஒரு இராணுவப் பயிற்சி முகாமின் நான்கு வேலிகளுக்குள் உருவாக்கப்படும் மரபுவழிப் படையாளிடமோ அல்லது அதிகாரியிடமோ காணப்படுவதற்கு வாய்ப்பே இல்லை.

இதனால் தற்போது நிலவும் அமைதி நீண்டு செல்லச்செல்ல விடுதலைப் புலிகளின் படைகளிலிருந்து விலகிச் செல்பவர்களின் தொகை அதிகரிக்கப் போகிறது என அந்த முன்னாள் போராளி கூறினார். இதுமட்டுமன்றி மரபு வழிப்படை என்பது மக்களோடு தொடர்பின்றி சமூகத்திற்கு வெளியில் முகாமிடப்பட்டு தனித்து வைக்கப்படுவதாகும். இதனால் விடுதலைப் போர் விழுமியங்களும் உணர்வுகளும் மக்களிடையே பரப்பப்-படுவதற்கான வாய்ப்பு இல்லாது போய்விடும் என்றும் அவர் குறிப்பிட்டார். இது விடயத்தில் எமது போராட்டம் ஒரு முக்கியமான இரு தலையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கெரில்லாப் போர் என்ற மட்டத்திலேயே நாம் தேக்கமடைந்திருந்தால் எமது போராட்டம் காலவரையறையின்றி இழுபட்டுக்கொண்டே சென்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. தென்அமெரிக்காவில் பல மக்கள் போராட்டங்கள் முப்பது நாற்பது வருடங்களாக கெரில்லாபோர் நிலையிலேயே முன்னேற்றமின்றி கிடப்பதை நாம் காண்கிறோம்.

அதேவேளை ஒரு மரபுவழிப் படையை உருவாக்கி அதை போரற்ற ஒரு சூழலில் நீண்டகாலம் பேண முற்படுகையில் அது கெரில்லாக்களால் முன்னெடுக்கப்படும் விடுதலைப் போருக்குரிய குணாம்சங்களையும் பற்றுறுதியையும் இழந்து இயந்திரத்தனம் மிக்கதொன்றாக மாறக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது.

மரபு வழிப்படையொன்றை சம்பளங்கள், கேளிக்கை, படைத்துறை முகாமைத்துவம் என்பவற்றின் ஊடாகவே அரசுகள் நீண்டகாலம் பேணுகின்றன. ஆனால் தமிழருக்கென்று இதுவரை ஒரு அரசில்லை. ஆகவே நாம் எமது உரிமையை முழுமையாக வென்றெடுக்கும்வரை கெரில்லா போராளிகளுக்குரிய அரசியல் பற்றுறுதியையும் அர்ப்பணிப்-பையும் கைவிட முடியாது. எனவே ஒரு கெரில்லா இயக்கத்திற்குரிய குணாம்சத்தைக் கொண்ட மரபுவழிப் படையொன்றை போர்த்தயார் நிலையில் எவ்வாறு நீண்டகாலம் பேணுவது என்பதே எம்முன் இன்றுள்ள கேள்வியாகும்.

புலிகளின் மரபுவழிப் படைவலு சிறி லங்கா இராணுவத்திற்குச் சமனாக இருப்பதாலேயே இலங்கையில் அமைதி நிலவுகின்றது என்பது இன்று சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும்.

இதனடிப்படையிலேயே இந்தியாவுடன் சிறி லங்கா ஒரு படைத்துறை கூட்டுறவு ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டால் அது மேற்படி சமநிலையைப் பாதிக்குமெனவும் அதனால் இலங்கையில் இன்று நிலவும் அமைதி குழம்பக்கூடிய சூழல் ஏற்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

இந்திய சிறி லங்கா இராணுவக் கூட்டுறவு ஒப்பந்தத்தின் கீழ் புலிகளுக்கும் சிறி லங்கா அரசிற்கும் இடையில் மீண்டும் போர் தொடங்கும் பட்சத்தில் இந்தியப் படைகள் இங்கு அனுப்பப் படுவதற்கான எந்த நிர்ப்பந்தமும் இல்லை என்பது தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. ஆயினும் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் இந்தியாவின் படைப்பலம் தமக்கு பக்கபலமாக நிற்கும் என்ற நம்பிக்கை சிங்கள மேலாண்மையாளருக்கு ஏற்படும். அப்படியான நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டால் சிறி லங்கா அரசு மீண்டும் போர் மூலம் தமிழர் பிரச்சினையை அணுகுவதிலேயே பேரவா கொள்ளும் என்ற நியாயத்தின் அடிப்படையிலேயே தமிழர் தரப்பு இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து வந்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இந்தியத் தலைநகரில் பாதுகாப்பு கூட்டுறவு ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டு சிங்கள தேசத்திடம் பாராட்டுப் பெறலாம் என்ற நம்பிக்கையில் டெல்லி சென்ற ஜனாதிபதி சந்திரிகாவின் எண்ணம் நிறைவேறவில்லை. இலங்கையின் இராணுவச் சமநிலையில் குறிப்பிடத்தக்க எந்தவொரு தளம்பல் ஏற்பட்டாலும் அது இத் தீவில் மீண்டும் போர் வெடிப்பதற்கே வழிவகுக்கும் என்ற எண்ணம் இந்திய கொள்கை வகுப்பாளரிடமும் இன்று காணப்படுகின்றது. புலிகளிடம் மரபுவழி படைவலு உருவாகி இருக்காவிட்டால் இலங்கையில் ஒரு இராணுவச் சமநிலை என்ற பேச்சுக்கே இடமிருந்திருக்காது. கெரில்லா போராக மாத்திரமே நடைபெறும் ஒரு விடுதலைப்

போராட்டம் ஒரு அரசுடன் இராணுவச் சமநிலையை எட்டுவது சாத்தியமில்லை. ஒரு கெரில்லா இயக்கம் அது எதிர்த்துப் போராடும் ஒடுக்குமுறை அரசினுடைய மரபுவழிப் படைகளின் எண்ணிக்கையை விடக் கூடிய போராளிகளைக் கொண்டதாக இருப்பினும் அது தனது எதிரியோடு இராணுவச் சமநிலையை ஏற்படுத்தி விட்டதாக யாரும் கொள்ளப் போவதில்லை.

உதாரணமாக 1983-1986 காலப்பகுதியில் தமிழீழ விடுதலைக்காக ஆயுதமேந்திய அனைத்து இயக்கங்களி-லுமிருந்த போராளிகளின் எண்ணிக்கை அப்போதிருந்த சிறி லங்கா இராணுவத்தின் மொத்தத் தொகையை விட குறைந்த பட்சம் மூன்று மடங்காவது கூடுதலாகக் காணப்பட்டது.

1983 ஆம் ஆண்டிலே சிறி லங்கா இராணுவத்தில் பன்னிரண்டாயிரம் நிரந்தரப் படைகளே இருந்தன. ஆனால் அவ்வாண்டில் நடைபெற்ற தமிழினப் படுகொலைக்குப் பின்னர் தமிழர் தாயகத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் ஆயுதம் ஏந்திய ஈழவிடுதலை இயக்கங்களில் தேடிச் சென்று இணைந்தார்கள். அனைவரும் கெரில்லா போர்முறையில் ஏதோ ஒரு வகையில் பல்வேறு பயிற்சிகளையும் அனுபவங்களையும் பெற்றார்கள். ஆனால், அப்போதிருந்த சிறி லங்கா இராணுவத்தின் எண்ணிக்கையை விட மூன்று மடங்கிற்கு மேல் அதிக போராளிகளை எமது விடுதலை இயக்கங்கள் கொண்டிருந்தபோதும் இலங்கையில் ஒரு இராணுவச் சமநிலை அன்று நிலவியதாக யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. சிறி லங்கா அரசு கூட எமது விடுதலை இயக்கங்களின் ஆட்தொகையை ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை. அக்காலகட்டத்தில் அனைத்து விடுதலை இயக்கங்களுடைய ஆட்பலமும் ஒரு குடையின் கீழ் தமிழருக்கான மரபுவழிப் படைவலுவாக மாற்றப்பட்டிருந்தால் இன்று வரலாறு வேறு பாதையில் சென்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த விடயத்தில் இந்தியா அப்போது மிகக் கவனமாக நடந்து கொண்டதாகத்தான் சொல்ல வேண்டும். தமிழீழ விடுதலை இயக்கங்கள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ

மரபுவழிப் படைவலுவை உருவாக்குவதற்கு எந்தவொரு வழியையும் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில் இந்தியா மிகக் கவனமாக நடந்துகொண்டது. அதாவது அந்நேரத்தில் விடுதலைப் போராட்டத்தில் இணைந்த இளைய சமூகத்தின் ஒரு பிரிவினரையாவது ஐக்கியப்படுத்தி ஒரு மரபுவழிப் படையை நாம் உருவாக்கியிருந்தால் இந்திய இராணுவத் தலையீடுகூட கேள்விக் குறியாகியிருக்கும்.

எமது ஆட்பலம் ஓகோவென்றிருந்த ஒருகாலத்தில் அது மரபுவழிப் படைபலமாக மாறிவிடக்கூடாது என்பதில் இந்தியாவும் சிறி லங்காவும் மிகக்கவனமாக இருந்தன. அதில் அவை 1990 ஆம் ஆண்டுவரை வெற்றியும் கண்டன. சிறி லங்கா இராணுவத்தின் படை எண்ணிக்கையைவிட எமது இயக்கங்களில் அதிக போராளிகள் இருந்த அப்பொன்னான சந்தர்ப்பம் வீணாகிப் போனதற்கு எம்மிடையே இருந்த அரசியல் கற்றுக்குட்டித் தனங்களும் போரியல் பேதமையுமே காரணமாயின.

கெரில்லா இயக்கமென்ற நிலையிலிருந்து மரபு வழிப் போரை நோக்கி வளர்ச்சியடையாத விடுதலைப் போராட்டங்கள் வெற்றியடைந்த வரலாறு மிகமிக அரிதென்றே கூறலாம். விடுதலைப் போர்களை கெரில்லா நிலையில் அமுக்கி வைத்திருப்பதற்கே அரசுகளும் ஏகாதிபத்தியங்களும் விரும்புகின்றன. ஏனெனில், கெரில்லா இயக்கங்களை காலப்போக்கில் பிரித்தாள்வதும் மக்களோடு முரண்பட வைப்பதும் இலகுவாகும். அது மட்டுமன்றி பலநாடுகளில் போலி கெரில்லா இயக்கங்கள் அரசியல் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கெனவே அரசுகளால் உருவாக்கப்பட்டு போராடும் மக்களிடையே உலவ விடப்படுகின்றன. அவை அப் போராட்டத்தின் அரசியல் ஒருமைப்பாட்டையும் போரியல் நோக்கத்தையும் சிதைக்கின்றன. அத்துடன் ஒரு கெரில்லாப் போர் நீடித்துச் செல்லும்போது அது உருவாகிய சமூகம் சின்னாபின்னப்பட்டு போவதும் தவிர்க்க முடியாதது. ஒரு சமூகத்தைச் சீர்படுத்தி வளம்பெறச் செய்வதென்றால் அதனுடைய விடுதலைக்காகப் போராடுபவர்கள் அதிலிருந்து

விலகி வேறாக முகாமிட்டிருக்க வேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் நீதியின் கையில் விட்டுவிட வேண்டும். கெரில்லா இயக்கங்கள் பல்கிப் பெருகியுள்ள ஒரு சமூகத்தில் இது சாத்தியமில்லை. முதலாம், இரண்டாம் ஈழப்போர்களின் போது கிழக்கில் இதுவே நடந்தது. இதனாலேயே விடுதலைப் போராட்டம் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டுமாயின் அது விரைவாக மரபுவழி இராணுவக் கட்டமைப்புகளை நோக்கி நகரவேண்டும்.

எனவே, எவ்வளவு துரிதமாக ஒரு விடுதலை இயக்கம் மரபுவழி இராணுவமாக மாறுகின்றதோ அந்தளவிற்கு அது தனது சமூகத்தையும் அதன் அரசியல் குறிக்கோளையும் காப்பாற்றுவதற்கும் விடுதலையை நோக்கி முன்னேறுவதற்கும் வாய்ப்பு அதிகரிக்கிறது. எனவேதான் ஒடுக்குமுறை அரசுகளும் ஏகாதிபத்தியங்களும் ஒரு விடுதலைப்போர் கெரில்லா நிலையிலிருந்து மரபு வழிப்படையாக வளர்ச்சியடைவதை தடுப்பதற்கு ஆவன செய்வதில் குறியாக இருக்கின்றன. இந்தியாவும் சிறி லங்காவும் 1993 ஆம் ஆண்டிலிருந்து எமது போராட்டத்தை அணுகியமுறையை நோக்கினால் அதன் அடிப்படையும் இதுவாகவே இருந்தது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிவிட்டால் புலிகள் மரபுவழிப் படையாக இயங்குவதற் கான வளங்கள் அனைத்தும் இல்லாது போய்விடும் என அவை நம்பின. பின்னர் ஏ-9 பாதையைக் கைப்பற்றி வன்னியை இரண்டாகப் பிரித்துவிட்டால் புலிகள் மீண்டும் கெரில்லா போரில் ஈடுபட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவர் என இந்தியாவும் சிறி லங்காவும் எண்ணின.

இன்று எமது உரிமைப் போராட்டத்தில் தமிழ் மக்களுக்கு முதலாம், இரண்டாம் ஈழப்போர்களின் காலத்திலிருந்த நம்பிக்கை அற்றுப்போய் விட்டது எனவும், நீண்டகாலம் போரின் அனர்த்தங்களால் சோர்ந்துபோய்க் கிடக்கும் அவர்கள் தமது பிள்ளைகள் நன்றாக வாழ்ந்தால் போதும் என்றே எண்ணுகின்றார்கள் எனவும், இதன் காரணமாக இன்று காணப்படும் அமைதிச்சூழல் இன்னும் பல ஆண்டுகளுக்குத் தொடருமானால் புலிகள் தமது மரபுவழிப்

படைபலத்தை பேணமுடியாது போய்விடும் எனவும் பல வெளிநாடுகளும் சிறி லங்கா படைத்துறைத் திட்டமிடலாளர் களும் நம்புகின்றனர். நான் குறிப்பிட்ட முன்னாள் போராளி இதை மனதிற் கொண்டே புலிகளின் மரபுவழிப் படையாட்கள் கெரில்லாக்களாக, அரசியற் பற்றுறுதி கொண்டவர்களாக மாற்றப்பட வேண்டும் என குறிப்பிட்டார். ஆனால், எந்தக் கணத்தில் புலிகள் தமது மரபுவழிப் படை நிலைப்பாட்டிலிருந்து சற்றேனும் சறுக்குகின்றார்களோ அப்போதே சிங்கள தேசத்தோடு எமக்கிருக்கின்ற பேரம்பேசும் வலு இல்லாதொழியும்.

சீரான இராணுவ முகாமைத்துவமும் மரபுவழி இராணுவமொன்றைப் பேணுவதற்கான வளங்களைத் திரட்டக்கூடிய கட்டமைப்பும் இருந்தால் எத்தனை ஆண்டுகள் போனாலும் புலிகள் தமது மரபுவழிப் படைபலத்தை சிதைவின்றிப் பேணலாமென சிலர் கூறுவர். கடந்த 25 வருடங்களாக சீனா எந்தப் போரிலும் ஈடுபடவில்லை. ஆனால் இன்றும் அதனுடைய படைகள் உலகம் கண்டு அஞ்சுமளவிற்கு போரிடும் ஆற்றலோடு இருக்கின்றன என்பது போன்ற உதாரணங்களையும் அவர்கள் காட்டுவர். இது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. ஏனெனில் நாம் இன்னும் முழுமையான சுதந்திரமடைந்த தனிநாடாகவில்லை. அதை நோக்கிய பாதையில் சென்று கொண்டிருப்பவர்கள். ஒட்டுமொத்தமான எமது மக்களின் அரசியல் ஈடுபாடும் தெளிவும் ஆழமாக்கப் படுகையிலேயே எமது மரபுவழி படைபலத்தின் தேவை நடைமுறையில் உணரப்படும். எனவே நீண்டுசெல்லும் அமைதிச் சூழலில் புலிகள் தமது மரபுவழிப் படைபலத்தை சிதைவின்றிப் பேணுவதற்கு தமிழ்ச் சமூகத்தை எந்தளவிற்கு அரசியல் மயப்படுத்த தயாராயிருக்கின்றார்கள் என்ற கேள்வியே இலங்கையின் இராணுவச் சமநிலையை எமக்குச் சாதகமாக வைத்திருப்பதற்கு முக்கியமானதாகிறது.

11.07.2004

## –3– தமிழர் பிரச்சனையை சிங்கள தேசத்திற்கு விளக்க முனைவது பயனற்ற செயல்

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் ஒரு புத்தக வெளியீட்டுக்குச் சென்றேன். சிங்கள கடும்போக்காளர் எஸ். எல். குணசேகர புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைவைக் கடுமையாகத் தாக்கி எழுதியுள்ள அந்நூலின் அறிமுக விழாவிற்கு சிங்கள தேசத்தின் ஆங்கிலம் பேசும் மேலாண்மையாளர்களில் பெரும்பாலானோர் வந்திருந்தனர். கூட்டம் முடிந்ததும் இவர்களுள் எனக்குத் தெரிந்த ஒருசிலருடன் நாட்டு நடப்புகளைப் பற்றி பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் அங்கு மிகவும் உறுதியாக ஒரு கருத்தை என்னிடம் தெரிவித்தனர். கருணா சிறி லங்கா படையினரோடு இணைந்திருக்கும் வரை விடுதலைப் புலிகள் கடைசிவரை போருக்கு வரமாட்டார்கள் என அந்த சிங்கள பௌத்த மேலாண்மையாளர் அறுதியிட்டுக் கூறினார். இதன் காரணமாகவே சிறி லங்கா ஜனாதிபதி சந்திரிகாவும் அமைதிப் பேச்சுக்களைத் தொடங்காமல் இழுத்தடித்து வருகிறார் எனவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த விடயத்தை அடுத்தடுத்த நாட்களில் கொழும்பிலுள்ள அரசுக்கு நெருக்கமான சில விடயமறிந்தவர் களிடம் விசாரித்துப் பார்த்தேன். மட்டக்களப்பில் குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தால் அல்லது அங்கு ஒரு குழப்பமான சூழ்நிலை நிலவுவது போன்ற ஒரு மாயையை ஏற்படுத்தினால்

புலிகளுடைய கவனம் எல்லாம் கிழக்கை சரிப்படுத்துவதிலேயே திசை திருப்பப்படும் எனவும், இதன் காரணமாக அவர்கள் மீண்டும் போரில் ஈடுபடுவதற்கான அரசியல் மற்றும் படைத் தயாரிப்பு வேலைகளில் ஈடுபடுவது கடினமாக இருக்கும் எனவும் அரச தரப்பில் சிலர் இன்னும் நம்புகின்றனர் என்பது தெரியவந்தது. அதுமட்டுமன்றி மேற்படி சிங்கள மேலாண்மையாளர் என்னிடம் கூறிய கருத்தும் சந்திரிகா தரப்பில் உண்மையாகவே நிலவுகின்றது என்பதையும் அறியக் கூடியதாயிற்று. சுருக்கமாகச் சொல்லப் போனால் தமிழ் மக்களுக்கு நியாயமான ஓர் அரசியல் தீர்வை வழங்கி இனமுரண்பாட்டைத் தீர்ப்பது தவிர்ந்த ஏனைய வழிமுறை களையே சிங்கள தேசத்திலுள்ள பெரும்பான்மையானவர்கள் இன்னும் நாடுகின்றனர் என்பதையே மேற்படி விடயங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. நீதியான அரசியல் தீர்வொன்றைக் கொடுத்தால் தமிழ் மக்களுடைய சிக்கலுக்கும் போருக்கும் முடிவு காணலாம் என்பதை விடுத்து காலத்துக்குக் காலம் எமது உரிமைப் போரட்டத்தை ஒரேயடியாக முறியடிப்பதற்கான வழிவகைகளையே சிறி லங்கா ஆட்சியாளர்களும் சிங்கள மேலாண்மையாளரும் தேடி வந்துள்ளனர்.

கடந்த 15 வருடங்களாக சிங்கள ஊடகத்துறையோடும் தென்னிலங்கையின் கருத்தியலாளர் பலரோடும் பழகியதில் இருந்து இன்னொரு விடயத்தையும் நான் புரிந்து கொண்டிருக்கிறேன். தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் சிங்கள தேசம் தான் விரும்பியதையே கேட்கத் தயாராய் இருக்கின்றது என்பதே அந்த உண்மை. எனவேதான் ‘புலிகளைத் தமிழ் மக்கள் ஒட்டு மொத்தமாக வெறுக்கிறார்கள், உட்பிரச்சினை காரணமாக புலிகளுக்கு அழிவு நெருங்கிக் கொண்டிருக்கிறது, புலிகளுக்கு வெளிநாட்டுத் தமிழர்களிடம் கடும் எதிர்ப்பு இருக்கிறது, புலிகள் தம்மைச் சுட்டு விடுவார்கள் என்று அஞ்சியே தமிழ்ப் பத்திரிகையாளர்கள் போராட்டத்துக்கு ஆதரவாக எழுதுகிறார்கள்’ போன்ற கருத்துக்களையே சிங்கள மேலாண்மையாளர் - ஏன்? சிங்களப் பொதுமக்கள் கூட - கேட்க விரும்புகின்றார்கள். இதுபோன்ற கருத்துக்களைத்

தெரிவிக்கின்ற, விரித்துவிளக்குகின்ற தமிழ் எழுத்தாளர்களையே அவர்கள் தலைமேல் வைத்துக் கொண்டாடுகின்றார்கள்.

தமிழ் மக்களுடைய நியாயமான அரசியல் உரிமையை வழங்காமையாலேயே விடுதலைப் போர் நடைபெறுகிறது, எனவே அதை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவர நியாயமான அரசியல் தீர்வொன்றை வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை என எழும் தமிழ்க் குரல்களைக் கேட்கச் சிங்கள தேசம் இன்றுவரை தயாராக இல்லை. அன்றிலிருந்து இன்றுவரை இந்த உண்மையைக் காண மறுத்து எமது உரிமைப் போரை நசுக்க அரசியல் தீர்வு தவிர்ந்த வேறு வழிவகைகளைக் கண்டுபிடிப்பதிலும் அவற்றில் பெருமுதலீடு செய்வதிலுமே சிங்கள தேசம் நாட்டம் காட்டி வருகின்றது. தென்னிலங்கையில் காணப்படும் இந்த அடிப்படை உளவியல் பாங்கை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். இல்லையெனில் சிங்கள தேசத்திற்கு எமது பிரச்சினையை நன்றாகப் புரிய வைப்பதற்கான முயற்சிகளை எடுத்தால் எல்லாம் சரிவந்துவிடும் என்ற மாயையை நம்பி நாம் மீண்டும் மீண்டும் மோசம் போய்க் கொண்டிருப்போம்.

சிங்கள தேசத்திற்கு எமது பிரச்சினையை விளக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தில் புலிகள் இப்போது இறங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய நோக்கம் நல்லது. ஆனால் சரிவராது. எமது பிரச்சினையைப் பொறுத்தவரையில் சிங்கள தேசம் தான் விரும்பியதை மட்டுமே கேட்கும். இதுவே உண்மை.

எமது போராட்டத்தை நசுக்க சிங்கள தேசம் காலத்துக்குக் காலம் நம்பிய அரசியல் தீர்வு அல்லாத மற்ற வழிவகைகள் சிலவற்றை முதலில் சுருக்கமாகப் பார்ப்போம். அதனடிப்படையில் இப்போது சிங்கள மேலாண்மையாளர் எமது பிரச்சினையை அணுகுவதற்கு கையாளும் அரசியல் தீர்வு தவிர்ந்த ஏனைய வழிவகைகளை புரிந்துகொள்வது முக்கியமானதாகும்.

எண்பதுகளில் தமிழர் தாயகத்தின் ஒருமைப்பாட்டை திட்டமிடப்பட்ட இராணுவக் குடியேற்றங்கள் மூலமாக படிப்படியாகச் சிதைத்து விட்டால் எமது உரிமைப் போராட்டத்தை நசுக்கி விடலாம் என்ற நம்பிக்கையோடு சிங்கள மேலாண்மையாளர் பல வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்தினர். மணலாறு, மூதூர் தெற்கு, மட்டக்களப்பில் வடமுனை என சிறி லங்கா அரசும் படைகளுமாக இணைந்து பல சிங்களக் குடியேற்றங்களையும் அவற்றை ஒட்டிய இராணுவ நிலைகளையும் ஏற்படுத்தலாயினர். இந்தத் திட்டங்கள் பற்றிய பல முக்கியமான விபரங்களை கடும் சிங்களப் போக்காளரான மாலிங்க குணரட்ன For a Sovereign State என்ற நூலில் எழுதியுள்ளார்.

இதற்கடுத்ததாக தமிழகத்தில் எமது விடுதலை இயக்கங்களின் செயற்பாடுகளை வலுவிழக்கச் செய்துவிட்டால் அல்லது இல்லாதொழித்துவிட்டால் எமது உரிமைப் போராட்டத்துக்கு சாவுமணி அடித்து விடலாம் எனச் சிங்கள மேலாண்மையாளர்கள் திடமாக நம்பினர். இதுபற்றி கொழும்பிலிருந்து வரும் சிங்கள, ஆங்கில செய்தித்தாள்களில் அந்நேரத்தில் தொடர்ச்சியாக கட்டுரைகளும், ஆசிரியர் தலையங்கங்களும், கேலிச் சித்திரங்களும் வெளிவந்த வண்ணமிருந்தன. தமிழகத்தில் எமது உரிமைப் போராட்ட நடவடிக்கைகளைச் சீர்குலைப்பதற்காக சிறி லங்கா அரசு அப்போது பல திட்டங்களைத் தீட்டியது. இதற்கு அடித்தளமாக ஜேர்மனியில் சிறி லங்காவின் தூதுவராக இருந்த திஸ்ஸ ஜயக்கொடி சென்னைக்குக் அனுப்பப்பட்டார். இந்தியாவிற்குத் தூதுவராக வேண்டிய தகைமையிலுள்ள ஒரு மூத்த வெளிநாட்டலுவல்கள் அதிகாரி ஏன் சென்னையிலுள்ள துணைத் தூதரகத்திற்குப் பொறுப்பாக அனுப்பப் படுகின்றார் என்ற கேள்வி அன்று பலருக்கும் தோன்றிற்று. திஸ்ஸ ஜயக்கொடியின் புலனாய்வுப் பின்னணி பலருக்கும் அந்நேரத்தில் தெரிந்திருக்க வாய்ப்பிருக்கவில்லை.

தமிழீழ விடுதலை இயக்கங்களோடு இரகசியத் தொடர்புகளை ஏற்படுத்தி அதன் மூலம் இந்தியப் புலனாய்வுத்

துறையினருக்கும் தமிழ்ப் போராளிகளுக்குமிடையில் சந்தேகத்தையும் முரண்பாட்டையும் தூண்டிவிடுவதே ஜெயக்கொடியின் நோக்கமாக இருந்தது. இதுவிடயத்தில் அவர் ஓரிரு வெற்றிகளைக் கண்டார். அது மட்டுமன்றி அப்போது சென்னையில் தமிழீழ விடுதலை இயக்கங்களினுடைய செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு பொறுப்பாகவும் இந்தியாவின் வெளிநாட்டுப் புலனாய்வுத்துறையான றோவின் தென்பிராந்திய செயற்பாடுகளுக்கு தலைமை அதிகாரியாகவும் இருந்த உன்னிகிருஷ்ணனை கையாளும் வேலைக்காகவும் திஸ்ஸ ஜெயக்கொடி சென்னைக்கு அனுப்பப்பட்டார் என நம்பப்படுகிறது. (உன்னிகிருஷ்ணன் அப்போது அமெரிக்க புலனாய்வு நிறுவனமான CIA இற்கு வேலை செய்து வந்ததும், 1985 இல் அவர் கையும் களவுமாகப் பிடிபட்டதும் பலரும் அறிந்த செய்தி.)

திஸ்ஸ ஜெயக்கொடி சென்னை வந்து தாஜ் கொரமன்டல் ஹோட்டலில் முகாமடித்து (இவர் தனது அதிகாரபூர்வ வாசஸ்தலத்தில் தங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது) வேலை தொடங்கிய அதே காலப்பகுதியில் சிறி லங்கா தேசியப் புலனாய்வுத் துறை தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கு எதிராக தமிழக மக்கள், தமிழகக் காவல் துறையினர் ஆகியோரைத் திசைதிருப்பும் நோக்கில் ஒரு திட்டத்தை வகுத்தது. சென்னையில் சில முக்கியமான பகுதிகளில் குண்டுகளை வெடிக்கச் செய்து பழியைத் தமிழ் இயக்கங்களில் தலையில் போடுவதே அந்தத் திட்டமாகும். இதன் மூலம் தமிழ்நாட்டு மக்களும் காவல்துறையினரும் தமிழ் இயக்கங்களை வெறுத்து அவற்றைத் தமிழக மண்ணிலிருந்து துரத்தி விடுவார்கள். தமிழகத்தில் பின்தளம் இல்லாவிட்டால் எமது விடுதலை இயக்கங்களை சிறி லங்கா இராணுவம் மிகச் சுலபமாக நசுக்கி ஒழித்துவிடுமென அப்போதிருந்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையும் சிங்கள மேலாண்மையாளரும் திடமாக நம்பினர். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த சிறி லங்கா தேசியப் புலனாய்வு அமைப்பில் அப்போது வேலை செய்துகொண்டிருந்த தமிழர் ஒருவர் சென்னைக்கு அனுப்பப் பட்டார். தமிழகத்தின் தலைநகரில் அவரது முயற்சியில் ஒருசில

குண்டுகள் வெடித்தன. ஆனால் தமிழகக் காவல்துறையினர் அவரைக் கண்டுபிடித்து சிறையில் அடைத்துவிட்டனர். இந்த நபர் சிறைமீண்ட பின்னர் மலையக அரசியலில் இறங்கி தன் சுயமுன்னேற்றத்திற்கு தற்போது ‘ஆவன’ செய்துவருகிறார்.

இப்படியாக எமது உரிமைப் போராட்டத்தின் பின்தளத்தை தமிழகத்தில் சிதைப்பதற்கு சிங்கள அரசியல் தலைமைகள் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. எனினும் அவர்கள் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் தமிழகத்திலிருந்து இயக்கங்களை முற்றாக வெளியேற்றுமாறு நேரடியாகவே டெல்லியை அழுத்தி வந்தனர். இரண்டாம் ஈழப்போர் 1990 ஆம் ஆண்டு தொடங்கியபோது தமிழ்நாட்டில் புலிகள் இயங்க முடியாவிட்டால் அவர்களால் ஓரிரு மாதங்களுக்கு மேல் போரிட முடியாது என சிறி லங்கா படைத்தளபதிகளும் பல சிங்கள மேலாண்மைக் கோட்பாட்டாளர்களும் திட்டவட்டமாக நம்பினர். இந்த அடிப்படையிலேயே டெல்லிக்கு அப்போது கொழும்பிலிருந்து பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. ராஜீவ் காந்தியினுடைய கொலையின் பின்னர் புலிகள் தமிழகத்திலோ இந்தியாவிலோ இனிக் கால்பதிக்கவே முடியாது என்ற நிலை தோன்றிய போது தமிழரின் உரிமைப்போரை நசுக்கி முற்றாக வென்றுவிட்டதைப் போன்ற உணர்வில் சிங்கள மேலாண்மையாளர்களும் சிறி லங்காப் படை அதிகாரிகளும் அன்று பேசியவற்றையும் எழுதியவற்றையும் பலர் மறந்துவிட்டார்கள். ஆனால் தமிழகத்திலிருந்து முற்றாக வெளியேறிய பின்னரே புலிகள் மரபுவழிப் படைவலுவைப் பெற்றனர் என்ற உண்மையை எதிர்கொள்ள வேண்டி வந்தபோது தமிழருடைய உரிமைப் போரை நசுக்குவதற்கு சிங்கள மேலாண்மையாளர் நம்பியிருந்த இரண்டாவது வழியும் அர்த்தமற்றுப் போனது.


இந்த வேளையில் சோர்ந்திருந்தவர்களுக்கு மாத்தையாவின் வடிவில் ஒரு புதுவழி திறந்தது. 1993 ஆம் ஆண்டு இந்தப் பிரச்சினை தென்னிலங்கையில் பெரிதாக அடிபட்டுக் கொண்டிருந்தபோது எனக்குத் தெரிந்த ஒரு முக்கியமான சிறி லங்கா அரச திட்டமிடலாளர் ஒருவர்

ஆணித்தரமாக ஒரு கருத்தை என்னிடம் தெரிவித்தார். 'புலிகளில் இரண்டாவது தலைமைப் பதவியை வகிப்பவர் மாத்தையா. இந்தியா செல்லாமல் நீண்டகாலம் களத்திலே நின்று வேலை செய்தவர். இவருடைய பிரச்சினை காரணமாக புலிகள் இயக்கம் விரைவில் சிதைந்து போவது எந்தவகையிலும் தவிர்க்க முடியாதது' என்பதே அவரது கூற்று. இதுபற்றி நான் தெரிவித்த மாற்றுக் கருத்துக்களை அவர் செவிமடுக்கவில்லை. மாறாக தனது கூற்றையே வலியுறுத்திக் கொண்டிருந்தார். 'இதில் நான் உங்களோடு வாதிடவில்லை. இன்னும் ஒருசில மாதங்களில் புலிகளின் மாவீரர் நாள் வருகிறது. அதையொட்டி அவர்கள் ஏதாவது தாக்குதலில் ஈடுபடுவார்கள். அது சிறியளவில் இருந்தாலோ அல்லது நடக்காவிட்டாலோ நீங்கள் கூறுவது சரி என நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் பெரியளவில் ஏதாவது நடந்துவிட்டால் நான் கூறுவது சரி என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்' என நான் அவரிடம் கூறிச் சென்றேன். புலிகளின் பூநகரித் தாக்குதலின் பின்னர் அவரை ஓரிரு முறை நான் சந்தித்தபோதும் அவர் மாத்தையா என்ற பேச்சை எடுக்கவேயில்லை. சிங்கள ஊடகங்களும் சிங்கள மேலாண்மையாளர்களும் அவருடைய கருத்தையே அன்று கொண்டிருந்தார்கள் என்பதை நான் இங்கு குறிப்பிட வேண்டும்.

இதன் பின்னர் யாழ்ப்பாணத்தை சிறி லங்காப் படைகள் கைப்பற்றியபோது தமிழரின் உரிமைப் போராட்டத்தை இனி ஒரேயடியாக நசுக்கிவிடலாம் என சிங்கள தேசத்தில் சீனவெடி கொளுத்திக் கொண்டாடினார்கள். 'எதிரியின் படைகளையும் படைத் தளபாடங்களையும் குறிப்பிடத்தக்களவில் அழிப்பதையே வெற்றியென போரியலாளர் வரைவிலக்கணப் படுத்துகின்றனர் எனவும் அந்த அளவுகோலின்படி பார்க்கையில் யாழ்ப்பாணத்தைப் பிடித்தது புலிகளை வெற்றி கொண்டதற்குச் சமனாகாது. ஏனெனில் அவர்கள் தமது படைகளையும் போர்த் தளபாடங்களையும் அதிக சேதமில்லாமல் வன்னிக்குக் கொண்டு சென்று விட்டார்கள்' என அந்தவேளையில் Sunday Times பத்திரிகையில் விரிவாக எழுதியிருந்தேன். சிங்கள தேசம் அதைக் கண்டுகொள்ளவில்லை. புலிகளின் அழிவைப் பற்றியே

தெற்கில் எல்லோரும் அப்போது பேசிக் கொண்டார்கள். ஆனால் முல்லைத்தீவு படைத்தளத்திற்கு விழுந்த அடியோடு அவர்களுடைய நம்பிக்கையில் மீண்டும் மண் விழுந்தது. 1999 வரை ஜெயசிக்குறு நடவடிக்கையின் வெற்றியை மலையென நம்பியிருந்தது சிங்கள தேசம். அந்த நம்பிக்கையும் ஆனையிறவின் வீழ்ச்சியோடு வீணாகியது. பின்னர் கருணாவைப் பிடித்தார்கள் கொண்டாடினார்கள். இப்போது வெளிநாட்டுப் படை ஏதாவது வருமென்று கனவு காண்கிறார்கள். எமக்கு ஓர் நியாயமான அரசியல் தீர்வை வழங்குவதைப் பற்றி மட்டும் நினைக்கவே அவர்கள் மறுக்கிறார்கள், மறுத்துக்கொண்டே இருப்பார்கள்.

03.10.2004



தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
30/04/2005.

தமிழ் மண்ணையும் தமிழ் மக்களையும் ஆழமாக நேசித்த ஒரு உயர்ந்த மனிதரை தமிழர் தேசம் இன்று இழந்துவிட்டது. தமிழீழ மண்ணின் விடிவிற்காகவும் தமிழீழ மக்களின் விடுதலைக்காகவும் ஓங்கிஒலித்த ஒரு உரிமைக் குரல் இன்று ஓய்ந்துவிட்டது. எதிரியின் கோழைத்தனமான தாக்குதலுக்கு ஒரு தலைசிறந்த தமிழ்ப் பத்திரிகையாளர் பலியாகிவிட்டார்.

திரு. தர்மரட்ணம் சிவராம் அவர்கள் எளிமையும் நேர்மையும் பொருந்திய ஒரு தனித்துவமான மனிதர். நிறைந்த அறிவு படைத்தவர். எழுத்துத்துறையில் மிகுந்த விற்பனர். உலக அரங்கில் மிகவும் பிரபலமான பத்திரிகையாளர். இவருக்கு அறிமுகமே தேவையில்லை.

இவர் தனது எழுத்துக்களால் தமிழரின் தேசியப் பிரச்சினையை உலக அரங்கிலே மிகவும் நேர்த்தியான முறையில் தெளிவாக எடுத்துக்கூறினார். சிங்கள அரசு மேற்கொண்டுவருகின்ற அப்பட்டமான பொய்ப்பரப்புரைகளை சர்வதேச சமூகத்திற்கும் இராஜதந்திர சமூகத்திற்கும் மிகச் சாதுரியமாகவும் சாமர்த்தியமாகவும் அம்பலப்படுத்தினார். சிங்களப் பேரினவாதத்தின் கோட்டையில் நின்றுகொண்டே அது தமிழர் தேசத்திற்கு எதிராகப் புரிகின்ற அநீதிகளையும் அக்கிரமங்களையும் உலகிற்கு உறுதியாக எடுத்துக்கூறினார். ஆபத்துக்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டபோதும், அஞ்சா நெஞ்சுடன் அநீதியை எதிர்த்துநின்றார். எல்லாவற்றுக்கும் மேலாக, எம்மக்களுக்கு ஓயாது அரசியல் விழிப்புணர்வூட்டி, தமிழ்த் தேசியத்தைத் தொடர்ந்து வலுப்படுத்தினார். அன்னார் ஆற்றிய அரும்பணி என்றுமே போற்றுதற்குரியது.

திரு. தர்மரட்ணம் சிவராம் அவர்களின் இனப்பற்றிற்கும், விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக "மாமனிதர்" என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்துவிடுவதில்லை. எமது தேசத்தின் வரலாற்றில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

வே. பிரபாகரன்
(வே. பிரபாகரன்)
தலைவர்,

## -4- விடிந்த பின் இராமர் சீதைக்கு என்ன முறை எனக் கேட்கும் சிங்கள தேசம்

சிங்கள தேசத்திடம் எமது சிக்கலைப்பற்றி விளங்கப்படுத்துவதால் எந்தப் பயனும் இல்லை என போனகிழமை நான் எழுதியதைப்பற்றி நெதர்லாந்திலிருந்து சந்திரநாதன் ஒரு கருத்தை எழுதி அனுப்பியிருக்கின்றார்.

சிங்கள மக்களை அவர்களுடைய தலைவர்களும் கருத்தியலாளர்களும் இனச்சிக்கல் விடயத்தில் ஒரு மாயைக்குள் வைத்திருக்கிறார்கள் எனவும் அதனால் நாம் சிங்கள தேசத்திலுள்ள ஒரு சிலரையாவது எமது கருத்துக்களைப் புரிந்து கொள்ள வைப்பதற்கு இடையறாது முயற்சிக்க வேண்டும் என எனது வீரகேசரி கட்டுரைகளை மறுபிரசுரம் செய்யும் தமிழ்நாதம் இணையத்தளத்தூடாக சந்திரநாதன் மின்னஞ்சல் அனுப்பியுள்ளார்.

அவரது கருத்தை நான் மறுக்கவில்லை. சிங்கள மக்களிடத்தில் எமது தரப்பு நியாயங்களை நாம் தொடர்ந்து கொண்டுசெல்ல வேண்டுமென்பதில் இரண்டாம் பேச்சுக்கு இடமில்லை. ஆனால் அவ்வாறு செய்வதனால் எம்முடைய உரிமைகளைப் பெற்றுவிடலாம் என்ற மாயைக்குள் யாரும் வீழ்ந்துவிடக் கூடாது என்பதே எனது அக்கறையாகும். சிங்கள மேலாண்மையால் அரை நூற்றாண்டுக்கு மேலாக பெரும் அழிவுகளைச் சந்தித்துவரும் நாம், இன்றுவரை அதை

விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து புரிந்துகொள்வதற்கு எந்தளவு முயற்சி எடுத்திருக்கின்றோம்? 'சரிநிகர்' ஏட்டில் வெளியாகிய ஒருசில ஆய்வுகளைத் தவிர தமிழ் அறிவுலகப் பரப்பில் சிங்கள பௌத்த மேலாண்மைக் கருத்தியலையும் அதன் வரலாற்று மற்றும் சமூகப் பரிமாணங்களையும் ஆராய்வதற்கோ புரிந்து கொள்வதற்கோ எடுக்கப்பட்ட எந்த முயற்சியையும் யான் கண்டிலன். (அப்படி ஏதாவது உங்களுக்குத் தெரிந்திருந்தால் தயவு செய்து எனக்கு அறியத் தரவும்).

அண்மையில் தென்னிலங்கையைச் சேர்ந்த சில பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், கருத்தியலாளர்கள் போன்றோர் கலந்துகொண்ட இரு நாள் கருத்தரங்கொன்றிற்குச் சென்றிருந்தேன். அங்கு என்னை தமிழ் மக்களின் அரசியல் அவாவுதல்களைப் பற்றி விளக்குமாறு அதை ஒழுங்கு செய்தவர்கள் கேட்டனர். தமிழ் மக்களும் அவர்களுடைய ஆங்கிலம் மற்றும் சிங்களம் பேசத் தெரிந்த தலைவர்களும், செய்தியாளர்களும், அறிஞர்களும் 56 வருடங்களுக்கு மேலாக இடையறாது எமது அரசியல் கோரிக்கைகள் என்ன என்பதைப்பற்றி எல்லாவகையிலும் பேசியும் எழுதியும் வந்துள்ளார்கள்.

அதுமட்டுமன்றி இந்த அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் சிங்கள அரசுகளுக்கெதிராக 28 ஆண்டுகளாக (1948-1976) அமைதி வழியிலும் அதன் பின் 28 ஆண்டுகளாக (1976-2004) பெரும் ஆயுதக் கிளர்ச்சி மூலமாகவும் போராடி வந்துள்ளனர். அவர்களது கோரிக்கைகள் நிறைவேறாமையாலேயே சிங்கள மக்கள் மத்தியில் குண்டுகள் வெடித்தன என்பது அப்பட்டமான விடயம். எந்த மந்த புத்தியுள்ள பேர்வழியும் தன்னைச்சுற்றி ஏன் குண்டுகள் வெடிக்கின்றன, தனது நாட்டின் பன்னாட்டு வான்தளத்தை ஏன் சிலர் தகர்த்துச் செல்கிறார்கள் என கேள்வியெழுப்புவது நிச்சயம்.

ஆனால், இவ்வளவுக்குப் பின்னரும் தமிழரின் அரசியல் அவாவுதல்கள், கோரிக்கைகள் என்ன என்று கேட்கும் போக்குத்தான் சிங்கள தேசத்தில் இன்னும் காணப்படுகின்றது.

‘அரை நூற்றாண்டுக்கு மேலாக தமிழ் மக்கள் தமது அரசியல் கோரிக்கைகளைப் பற்றி வடக்கு கிழக்கிலும் சிறி லங்கா நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் பன்னாட்டு அரங்குகளிலும் வாய்கிழிய விளக்கிய பின்னரும் நீங்கள் அவை என்ன என்று கேட்பது மகா அபத்தம். ஆகவே நான் இந்த விடயம் பற்றிப் பேசமுடியாது’ என அவர்களிடம் கூறிவிட்டேன்.

இதில் சுவையான விடயம் என்னவென்றால் தமிழருடைய அரசியல் கோரிக்கைகள் என்னவென்பது பற்றி அங்கு வந்திருந்த பெரும்பான்மையானவர்களுக்கு உண்மையிலேயே தெரிந்திருக்கவில்லை என்பதாகும். 56 வருடங்களாக இவ்வளவு நடந்தும் எமது கோரிக்கைகளை புரிந்து கொள்ளாதவர்கள் இனி எப்படிப் புரிந்து கொள்ளப் போகின்றார்கள் என எனக்குத் தெரியவில்லை. எம்முடைய கோரிக்கைகளைப் பொறுத்த வரையில் ‘விடிய விடிய இராமர் கதை, விடிந்த பின்னர் இராமர் சீதைக்கு என்னமுறை’ என்ற பாணியில்தான் சிங்கள தேசம் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

சிங்கள மக்களுக்கு எங்களுடைய அரசியல் கோரிக்கைகளைப் புரியவைக்க வேண்டும் என்று கூறிவருபவர்கள் ஒன்றை ஆராய வேண்டும். அதாவது 56 வருடங்களாக எமது கோரிக்கைகளை முன்வைத்து எத்தனையோ தடவைகள் பேசிய பின்னரும் போராடிய பின்னரும் சிங்கள தேசம் இன்னும் ஏன் எங்களைப் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றது என்பதை நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரை நூற்றாண்டுக்கு மேலாக புரிந்துகொள்ள மறுத்தவர்களை அல்லது புரிந்து கொள்வதில் அக்கறையில்லாமல் இருந்தவர்களை இனி நாம் எப்படி மாற்ற முடியும்?

இதில் இன்னொன்றையும் நாம் முக்கியமாக நோக்க வேண்டும். 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை தமிழ் மக்களுடைய சிக்கலையும் நியாமான அரசியல் கோரிக்கைகளையும் புரிந்து கொண்ட சிங்கள அரசியலாளர்கள், கருத்தியலாளர்கள் கூட காலவோட்டத்தில்

தலைகீழாக மாறியிருக்கின்றார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

இங்கிலாந்தில் கல்விகற்றுத் திரும்பியவுடன் ஜனாதிபதி சந்திரிகாவின் தந்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா இலங்கை ஒரு சமஷ்டி ஆட்சியாக மாற்றப்பட வேண்டும், அதில் கண்டி, கரையோரச் சிங்களப் பகுதிகள், தமிழர் தாயகம் என மூன்று மாநிலங்கள் அமைய வேண்டும் எனவும் கூறிவந்ததை நீங்கள் அறிவீர்கள். அவர் பின்னர் என்ன செய்தார்?

இதேபோல இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, 1944 இல் நடைபெற்ற தன்னுடைய தேசிய மாநாட்டில் தமிழருக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டுமென வற்புறுத்தி தீர்மானம் நிறைவேற்றியது. இதே கம்யூனிஸ்ட் கட்சியே 1972 ஆம் ஆண்டில் இலங்கையை ஒரு சிங்கள பௌத்த நாடென சிறி லங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து பிரகடனப் படுத்தியது.

'ஒரு மொழியெனில் இரு நாடுகள். இரு மொழிகளெனில் ஒரு நாடு' என தனிச்சிங்களச் சட்டத்தைப் பற்றி தீர்க்கதரிசனத்தோடு கூறிய இலங்கையின் மூத்த இடதுசாரித் தலைவர்களில் ஒருவரும் சமசமாஜக் கட்சியின் தூணுமாயிருந்த கொல்வின் ஆர்.டி. சில்வா என்ன செய்தார்? 1972 ஆம் ஆண்டிலே சிறி லங்காவின் சிங்கள பௌத்த ஒற்றையாட்சி அரசியல் யாப்பை முன்னின்று வடிவமைத்தவர்களுள் இவரே முதன்மையானவராயினார்.

இவையெல்லாம் நீங்கள் அறிந்த பழைய கதைகள். எமது உரிமைப் போராட்டம் ஆயுதமேந்திய காலகட்டத்தை எடுத்துக் கொள்வோம். 1970 களின் பிற்பகுதியிலிருந்து தமிழருடைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை ஜே.வி.பி. வலியுறுத்தி வந்தது.

இந்த அடிப்படையில் மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் எத்தனையோ தமிழ் இளைஞர்கள் அதில் இணைந்து செயலாற்றினார்கள். பின்னர் என்ன நடந்தது? 1986

ஆம் ஆண்டில் ஜே.வி.பி.யின் தலைவர் ரோஹண விஜேவீர, அதன் மத்திய குழுவுக்காற்றிய மிக நீண்ட உரையில் தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டம் முறியடிக்கப்பட வேண்டிய ஓர் ஏகாதிபத்திய சதி என நிறுவி அறுதியிட்டு உரைத்தார். அந்தப் பேச்சு நூல் வடிவில் பின்னர் வெளிவந்து இன்றுவரை ஜே.வி.பியின் அரசியல் வேதமாக திகழ்கிறது.

1973 ஆம் ஆண்டளவில் ஜே.வி.பி. அல்லாத சில படித்த சிங்கள இடதுசாரி இளைஞர்கள் இணைந்து 'ஸ்டாலினிஸ கல்வி வட்டம்' என்றொரு அமைப்பை உருவாக்கினார்கள். இவ்வமைப்பு தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை முன்னிலைப்படுத்தி எழுதியும் பேசியும் வந்தது. தமிழ்ப் போராட்டக் குழுக்களோடும் இந்த அமைப்பு அந்த நேரத்தில் சில தொடர்புகளையும் ஏற்படுத்தியிருந்தது. (வீரகேசரி வார வெளியீட்டில் இப்போது எழுதிவரும் பெ. முத்துலிங்கம் அப்போது இந்த அமைப்போடு சம்பந்தப்பட்டிருந்தார்.)

ஸ்டாலினிஸ கல்வி வட்டத்தில் தமிழரின் சுயநிர்ணய உரிமை பற்றியும் எமது ஆயுதப் போராட்டத்தின் நியாயத்தைப் பற்றியும் அப்போது முன்னின்று பேசி வந்தவர் தயான் ஜயதிலக்க. அதுமட்டுமன்றி, 1982 இலே அவரும் அவரது சகாக்களும் 'விகல்ப கண்டாயம' என்ற ஆயுதப் போராட்ட அமைப்பை நிறுவினர்.

இடதுசாரிக் கோட்பாட்டின் அடிப்படையில் ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து வந்த சில இயக்கங்களோடு இணைந்து தமிழரின் சுய நிர்ணய உரிமைக்காக அவர்கள் செயற்பட்டனர். கண்டியிலும் கொழும்பிலும் இவர்களைச் சந்தித்து அக்காலத்தில் நான் உரையாடித் திரிந்ததுண்டு. (மூன்றாம் உலக நாடுகளில் நடைபெற்றுவந்த விடுதலைப் போராட்டங்களைப் பற்றியும், ஏகாதிபத்தியத்தின் உலகளாவிய அடக்குமுறைகளைப் பற்றியும் தயான் ஜயதிலக அன்று முன்வைத்த கூர்மையான விளக்கங்களும், ஆய்வுகளும் ஏற்படுத்திய தாக்கத்தை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது.)

விகல்ப கண்டாயம அமைப்பு அரசைக் கவிழ்க்கச் சதி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு 1986 ஆம் ஆண்டு தடைசெய்யப்பட்டது. தயான் ஜயதிலக்க தலைமறைவாகினார். அவரை சிறி லங்கா காவல்துறையினரும் படையினரும் சல்லடைபோட்டுத் தேடினர். 1987 இல் அவர் பிடிபட இருந்த வேளையில் என்னுடன் தொடர்புகொண்டார். கொழும்பில் தயான் ஜயதிலக்க இருந்த மறைவிடத்திலிருந்து அவரைப் பாதுகாப்பான வேறு இடத்திற்கு கொண்டுசெல்ல அப்போது அவருக்குத் தெரிந்த பல சிங்கள நண்பர்கள் கூட எனக்கு உதவ மறுத்தனர். இறுதியில் நடுநிசியில் அவரை இரகசியமாக அழைத்துச் சென்று மறைந்த நடிகரும் ஜனாதிபதி சந்திரிகாவின் கணவருமான விஜய குமாரதுங்கவிடம் பேசி அவருடைய உதவியுடன் கொழும்பிற்கு வெளியில் ஒரு மறைவிடத்தில் தங்கவைத்தோம். (இது விடயத்தில் தனது மனைவி உட்பட யாரிடமும் ஆலோசனை கேட்காது எனக்கு உடனடியாகவே உதவிய விஜய குமாரதுங்க ஒரு வித்தியாசமான மனிதர்) தயான் ஜயதிலக்க பின்னர் இந்தியாவிற்குத் தப்பிச் சென்றார். பின்னர் பொதுமன்னிப்புப் பெற்று திரும்ப வந்து மாகாணசபையில் அமைச்சரானார்.

இந்தளவிற்கு தமிழர் விடுதலை இயக்கங்களோடு நெருங்கிப் பழகிய தயான் ஜயதிலக இன்று என்ன செய்கிறார்? தமிழருடைய போராட்டம் எப்படியெல்லாம் முறியடிக்கப்பட வேண்டும் என இடையறாது எழுதி வருகிறார். ஒரு காலத்தில் கடும் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பாளராக இருந்த அவர் இன்று தமிழரின் படைபலத்தை இல்லாதொழிப்பதற்கு அமெரிக்காவுடன் சிறி லங்கா கூட்டுச்சேர வேண்டுமென வலியுறுத்தி கிழமைக்குக் கிழமை எழுதி வருகிறார்.

ஒரு காலத்தில் தமிழர், சிங்களவர் என்ற பேதத்திற்கப்பால் ஏகாதிபத்திய அடக்குமுறைக்கு எதிராகவும் வர்க்க விடுதலைக்காகவும் எழுதியும் பேசியும் வந்த எனது இனிய நண்பன் தயான் ஜயதிலக்க இன்று 'நாம்' - அதாவது சிங்களவர்களாகிய நாம் - தமிழ் மக்களின் படைபலத்தை

முறியடிக்க அமெரிக்காவின் உதவியை கட்டாயம் நாட வேண்டும் என 'ஐலன்ட்' செய்தித் தாளில் எழுதுகிறார்.

இவருக்கு என்ன நடந்தது?

இது மட்டுமா? 1984-86 காலப்பகுதியில் தென்னிலங்கையில் எமது போராட்டத்திற்குச் சார்பான சிங்கள இயங்கங்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி ஐக்கிய இலங்கையில் பரந்துபட்ட புரட்சியொன்றை உருவாக்கும் வேலையில் நான் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சார்பில் ஈடுபட்டிருந்தேன். அப்போது கொழும்பில் எனக்கு ஒரு முக்கிய தொடர்பாக இருந்தவர் கணிதத்துறைக் கலாநிதி நளின் டி சில்வா.

கொழும்புப் பல்கலைக் கழகத்திலிருந்த அவருடைய அலுவலகத்தில் எமது போராட்டத்திற்கு நேரடியாக உதவி வந்த அவருடைய இரு சிங்கள இடதுசாரி இளைஞர்களை சந்திக்கச் செல்வேன். அவ்வேளைகளில் கலாநிதி சில்வா என்னோடு மிக அன்பாக நடந்துகொள்வார். ஒருநாள் கூட அவர் என்னிடம் பழகப் பயந்தது கிடையாது. எனது கைத்துப்பாக்கியைக் கண்டுகூட அவர் திடுக்கிடவில்லை. இன்று அவர் என்ன செய்கிறார்? சிங்கள பௌத்த மேலாண்மை அடிப்படைக் கருத்தியலான 'ஜாதிக சிந்தனய' என்பதின் தலைமைக் கருத்தியலாளராக அவர் இன்று திகழ்கிறார்.

அவருக்கு என்ன நடந்தது?

என்னை இப்போது கண்டாலும் அன்பாக நடந்து கொள்கிறார். ஆனால், இலங்கை சிங்கள பௌத்தத்தின் உறைவிடம் என்பதை அவர் இடையறாது வலியுறுத்தியே வருகின்றார். தென்னிலங்கையில் இடதுசாரிக் குழுக்களோடு மட்டும் நாம் தொடர்புபட்டுப் பயனில்லை. பரந்துபட்ட சிங்கள மக்களிடம் எமது போராட்டத்தின் நியாயப்பாடுகளைக் கொண்டு செல்வதானால் நாம் அவர்களிடையே பரந்து கிளைபரப்பியுள்ள சிறி லங்கா சுந்திரக் கட்சியிடமும் பேசவேண்டும் என நான் முன்வைத்த கருத்தை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

ஏற்றுக் கொண்டது. அதன் அடிப்படையில் அப்போது அக்கட்சியின் ஒரு முக்கிய கருத்தியலாளராக இருந்த மங்கள முனசிங்க அவர்களைத் தொடர்பு கொண்டேன். அவர் எனக்கு ஏற்கெனவே தெரிந்தவர். ஆனால் அவர் என்னை தனது கட்சியின் எதிர்காலத் தலைமை வட்டத்தைச் சேர்ந்தவர் என ஒருவரை அறிமுகப்படுத்தி வைத்தார். அவர்தான் திலக் கருணாரட்ன. அவருக்கும் எமது இயக்கத்துக்குமான உறவு மிகக் குறுகிய காலத்தில் இறுக்கமடைந்தது.

எமது போராளிகள் கொழும்பில் அவருடைய வீட்டிலும் அவருடைய தொகுதியான பண்டாரகமயிலும் தங்கலாயினர். அவருக்காக பல வேலைகளைச் செய்தனர். (எமது துப்பாக்கி ரவைகள் சில அவருடைய காரில் பிடிபட்டு அவருக்கெதிரான வழக்கு நீண்டகாலம் தொடர்ந்தது) சிறி லங்கா அரசை ஆயுதப் புரட்சியூடாக ஒரேயடியாகக் கவிழ்ப்பதற்கான வெளிநாட்டு உதவியொன்றைப் பெறுவதற்கு அவர் நெருக்கடியான காலகட்டத்தில் செய்த முயற்சி சிங்கள தமிழ் அரசியல் உறவு வரலாற்றில் முக்கியமானது. அவரும் அவரது குடும்பத்தினரும் என்னோடும் எனது தோழர்களோடும் எப்போதும் மறக்க முடியாத மிக அன்புடனே பழகினர். இப்படியான திலக் கருணாரட்னவுக்கு என்ன நடந்தது? சிஹல உறுமய என்ற சிங்கள பௌத்த கடும் போக்குக் கட்சியை அவர் ஏன் உருவாக்கினார்?


இது மட்டுமா?

தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை வழங்குவதன் மூலம் மட்டுமே இலங்கையின் இனச்சிக்கலைத் தீர்க்கலாம் என ஆணித்தரமாகக் கூறிவந்தவர் ஜனாதிபதி சந்திரிகா. கொழும்பில் என்னையும் எனது சில தோழர்களையும் தன்னுடைய வீட்டில் தங்கி, தென்னிலங்கையில் வேலை செய்வதற்கு அவரும் அவரது கணவரும் எமக்கு உதவி செய்தனர். அக் காலகட்டத்தில் ‘தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஏற்காதவர்களிடம் பேச்சு வைத்துக் கொள்ளாதே’ என அவர் என்னிடம் கூறியதுண்டு. (அவரது கணவர் நடிகர் விஜய குமாரதுங்க எமது மக்கள் மீதும் எமது போராட்டத்தின்

மீதும் அன்பும் ஆதரவுமுள்ளவராக இருந்தவர். ஆனால் ஜே.வி.பி.யால் கொலைசெய்யப்பட்டு விட்டார்). இப்படியாகவிருந்த ஜனாதிபதி சந்திரிகாவுக்கு என்ன நடந்தது? 'சமாதானத்துக்கான போர்' என்ற கொடூரத்தைத் தமிழ் மக்கள் மீது அவர் ஏன் ஏவி விட்டார்?

இவற்றுக்கெல்லாம் விளக்கம் அறிய வேண்டும் என்றால் நாம் சிங்கள தேசத்தின் உளவியலை மிக ஆழமாக ஆராயவேண்டும். இதனடிப்படையில்தான் சிங்கள தேசத்தை நோக்கிய எமது அணுகுமுறை அமைய வேண்டும்.

10.10.2004



## –5– சிங்கள பௌத்தத்தைப் புரிந்துகொள்வது பேச்சுவார்த்தைக்கு அவசியம்

கடந்தமுறை எழுதிய கட்டுரையில் தென்னிலங்கையில் தமிழர் உரிமைக்காக ஒருகாலத்தில் குரல்கொடுத்ததோடு மட்டுமல்லாமல் எமது சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப் போராட்டத்திலும் ஈடுபாடு காட்டிய பலர் (ஜனாதிபதி சந்திரிகா உட்பட) எங்ஙனம் இன்று சிங்கள மேலாண்மையாளர்களாக மாறியுள்ளனர் என்பதுபற்றி எனது அனுபவங்களை எழுதியிருந்தேன். இவர்கள் அனைவரும் ஏன் இப்படி மாறினார்கள் என்ற கேள்வியை மட்டும் அக்கட்டுரை எழுப்பியதேயொழிய விளக்கம் எதனையும் முன்வைக்கவில்லை. அதைப் படித்தவர்களிடமிருந்து இரு கருத்துக்கள் வந்தன. முதலாவது, நான் குறிப்பட்ட அனைவரும் தத்தமது சுயநலம் மற்றும் சந்தர்ப்பவாதம் காரணமாகவே சிங்கள மேலாண்மையாளர்களாக மாறினார்கள் என்பது. இரண்டாவது, சிங்கள தேசியவாதத்தின் உள்ளார்ந்த தன்மை காரணமாகவே இந்த மாற்றங்கள் நிகழ்ந்தன என்ற கருத்தாகும்.

தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வை வழங்குவதற்குச் சிங்கள தேசியம் மற்றும் கலாசாரம் என்பவற்றின் அடிப்படைத் தன்மை இடமளிக்காது என்பதே ஆரம்பத்திலிருந்து இந்தக் கட்டுரைத் தொடரின் உட்கிடையாகும். சுயநலம் காரணமாகவே தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிங்கள மேலாண்மையாளராக மாறுகின்றனர்

என நம்புகின்றவர்கள் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். அதாவது இந்த அரசியல்வாதிகளுடைய சுயநலம் அவர்களை எப்போதுமே இறுதியில் ஏன் சிங்கள மேலாண்மைக் கருத்தியலுக்குள் தள்ளவேண்டும்? அவர்களுடைய சிங்கள அடையாளத்தின் அடிப்படைத் தன்மையே அவர்களை இவ்வாறு செய்யத் தூண்டுகின்றது என்பது எனது கருத்து. தமிழர் பற்றிய சாதகமற்ற வரலாற்றுப் பார்வைகளும் 'சிங்களமாய் இருத்தல்' என்ற உளநிலைக்கு இன்றியமையாத அத்திவாரமாக இருக்கின்றன என்பதை நாம் நோக்க வேண்டும்.

சிங்களத் தேசியவாதத்தால் நாம் கடந்த 56 ஆண்டுகளுக்கு மேலாக பெரும் பாதிப்புகளுக்குள்ளாகி வந்துள்ளோம். ஆகவே அதன் வரலாறு பற்றி, உளவியல் பற்றி, கலாசாரம் பற்றி தமிழில் தொடர்ச்சியான ஆய்வுகள் செய்யவேண்டிய கடமை, கட்டாயம் எம்முன் உள்ளது. காலத்துக்குக் காலம் பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை எனக் கத்துகிறோம். எல்லாம் பிழைத்த பின்னர் ஏமாந்த வரலாறுகளைப் பற்றிப் பேசுகிறோம். சிங்கள தேசியத்தைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொண்டால் நாம் இவ்வாறான குழப்பங்களுக்கு ஆளாகி காலத்துக்குக் காலம் அல்லலப்படுவதை ஓரளவேனும் தவிர்த்துக் கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

சிங்கள தேசியத்தின் பிரிக்கமுடியாத அம்சம் பௌத்த மதமாகும். சிங்கள அடையாளத்தின் வடிவம், வரலாறு, சமூக உளவியல் என அனைத்துமே ஏதோவொரு வகையில் இலங்கையின் தேரவாத பௌத்தத்தோடு பின்னிப் பிணைந்தவையாகவே காணப்படுகின்றன. இதுபோலவே பௌத்த குருமாரும் அவர்களுடைய பீடங்களும் இல்லாத ஒரு சிங்கள சமூகத்தை நாம் கற்பனை செய்வது கடினம். ஏனெனில் சிங்கள அடையாளமும் உணர்வும் இலங்கையின் பௌத்த மத பாரம்பரியங்களில் வேரூன்றி இருப்பதற்கு பௌத்த பீடங்கள் சிங்கள சமூகத்தில் இன்றியமையாதனவாகும்.

முதலில் எழுதப்பட்ட தீபவம்சம், அதையொட்டிப் பின்வந்த மஹாவம்சம், சூளவம்சம், ராஜாவளிய என சிங்கள

அடையாளத்தின் ஊற்றுமூலங்களாக உள்ள அனைத்தும் பௌத்த பிக்குகளால் இலங்கைத் தீவில் தேரவாத பௌத்தத்தின் அரசியல் மேலாண்மை கருதி உருவாக்கப் பட்டவையாகும். இவையின்றி சிங்கள தேசியமில்லை. ஏன்? சிங்களம் என்ற இனப்பெயரின் தோற்றுவாயான விஜயன் கதையே இல்லை. சிங்கள கிறிஸ்தவர்கள் கூட தங்களுடைய இன அடையாளத்தின் அடித்தளமாக மேற்படி பௌத்த அரசியல் மேலாண்மையை நிறுவும் நூல்களின் கருத்தியலையே கொள்கின்றனர். எனவேதான் சிங்கள தேசியத்தையும் இலங்கையின் தேரவாத பௌத்த பீடங்களின் அரசியல் மேலாண்மைக் கலாசாரத்தையும் பிரித்துப் பார்த்திட முடியாது என நான் கருதுகிறேன்.

மதத்தைத் தூக்கி ஒருபக்கம் போட்டாலும் தமிழ் அடையாளம் மாறுபடாது. மதமே இல்லாத தமிழ்த் தேசியம் சாத்தியமானது. 'கடவுள் இல்லை. கடவுள் இல்லவே இல்லை. கடவுளை உருவாக்கியவன் ஒரு முட்டாள். கடவுளை வணங்குபவன் ஒரு காட்டுமிராண்டி' என தன் இறுதிநாள்வரை அயராது கூறிவந்த பெரியாரை நாம் இன்றுவரை தமிழ்த் தேசியத்தின் தந்தையாகப் போற்றுகின்றோம். மறுபுறம் பேராசிரியர் சிவத்தம்பி அடிக்கடி கூறுவதுபோல உலகின் பெருமதங்கள் அனைத்தும் (கிறிஸ்தவம், இந்துமதம், இஸ்லாம், பௌத்தம், சமணம்) தமிழில் தம்மைச் சிறப்புற வெளிப்படுத்தியுள்ளன. இதுமட்டுமன்றி மத நம்பிக்கையை அறவே மறுத்த ஆசீவகமும் உலோகாயதமும் தமிழில் தமது கோட்பாடுகளைப் பரப்பியுள்ளன. மதமில்லாமலோ அல்லது அனைத்து மதங்களுாடாகவோ தமிழ்த் தேசியமென்பது சாத்தியமாகும். ஆனால், பௌத்தமின்றி சிங்கள தேசியத்தைப் பற்றி நாம் பேசமுடியாது. அதுவே அதன் பிரிக்கமுடியாத அடித்தளமாகும்.

இலங்கை பௌத்தத்தின் முக்கிய அம்சங்களாக இரண்டு விடயங்கள் வரலாற்றில் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன. ஒன்று, பௌத்த தர்மத்தைக் காப்பாற்றிப் பேணுவதற்கான விசேட இடமாக இலங்கைத் தீவு

புத்தபகவானால் ஆசிர்வதிக்கப்பட்டது என்ற நம்பிக்கை. இரண்டு, பௌத்த அரசியல் மேலாண்மைக்கும் சிங்கள தேசத்தின் இருப்பிற்கும் தமிழரே பெரும் அச்சுறுத்தல் என்ற எண்ணம்.

ஆரம்பத்தில் எழுதப்பட்ட தீபவம்சத்திலிருந்து பிற்காலத்தில் எழுதப்பட்ட ராஜாவளியவரை இவ்விரு கருத்துகளுமே ஊடுபாவாகக் காணப்படுகின்றன. இக்கருத்துக்களின் மேலாதிக்கம் காரணமாக இலங்கையில் பௌத்தத்தை வளர்ப்பதில் தமிழர்களின் பங்கோ, அம்மதத்தை பர்மா தொடக்கம் சீனாவரை தமிழர்கள் பரப்பிய கதையோ எடுபடாமல் போயிற்று. புத்தர் வானில் பறந்துவந்து இலங்கைத் தீவின் நான்கு திசைகளை ஆசிர்வதித்தார் என்றும், இதன் காரணமாக இந்நாட்டின் அனைத்துப் பகுதிகளும் சிங்கள, பௌத்த மக்களுக்கே உரித்துடையவை என்ற நம்பிக்கை சிங்கள அடையாளத்தின் அடிநாதமாக அன்றிலிருந்து இன்றுவரை இருந்துவருகிறது.

கடந்த 56 வருடங்களாக இலங்கை ஒரு சிங்கள பௌத்த ஒற்றையாட்சி நாடு என்ற கருத்தும் தமிழர் மீதான சந்தேகம், வெறுப்பு என்பனவும் இன முரண்பாட்டிற்கு ஒரு நியாயமான தீர்வை உருவாக்குவதற்கு முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றன. அன்று பண்டா-செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராகக் குரலெழுப்பிய ஜே.ஆர். ஜயவர்தன கூறியதும் இன்று புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபைத் தூக்கி எறியவேண்டும் என்று கோரி பத்து லட்சம் கையெழுத்துக்களை சேகரிக்கக் கிளம்பியுள்ள ஜாதிக ஹெல உறுமய கூறுவதும் ஒன்றே. எந்த மாற்றமும் இல்லை.

இலங்கை சிங்கள பௌத்த ஒற்றையாட்சிக்கு உட்பட்ட நாடு என்பது தீபவம்சத்திலிருந்து இன்றுவரை நிலவி வரும் நம்பிக்கையாகும். துட்டகைமுனு தமிழரை முறியடித்து இலங்கையின் அனைத்துப் பாகங்களையும் சிங்கள பௌத்த ஆட்சியின் கீழ் கொண்டுவந்தான் என்ற கதை அன்றிலிருந்து இன்றுவரை சிங்கள தேசத்தில் கொண்டாடப்படுவதின் அடிப்படையில்தான் இலங்கையின் ஒற்றையாட்சியை மாற்றி

எமக்கொரு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொள்வதில் நாம் காலம் காலமாக எதிர்கொண்டுவரும் முட்டுக்கட்டைகளை நோக்க வேண்டும். இதில் நான் அடிக்கோடிட்டுக் காட்ட விரும்புவது என்னவெனில் சிங்கள பௌத்த ஒற்றையாட்சி என்பதும் சிங்கள அடையாளம் - தேசியம் என்பதும் வேறாக்கிட முடியாத ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்ற உண்மையாகும்.

சிங்கள ஆட்சியாளர்கள் சமஷ்டி பற்றி இடையிடையே பேசினாலும் அவர்கள் இலங்கையின் ஒற்றையாட்சியை பல்வேறு வழிகளில் பேணவும் பலப்படுத்தவுமே முயற்சி செய்தனர் / செய்கின்றனர். இது விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா, ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க, ஹெல உறுமய தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் ஆகியோரிடையே எந்த வேற்றுமையும் இல்லை. இதை உணராமல் எம்மிடையே காலத்துக்குக் காலம் தோன்றும் சில 'வெங்காயக் கூட்டங்கள்' ஒவ்வொரு சிங்களத் தலைவரைப் பற்றியும் எம் மக்களிடையே போலி நம்பிக்கைகளையூட்டிடும் வேலைகளில் ஈடுபடுகின்றன.

சிங்கள தேசியத்தின் இந்த அம்சங்கள் 20 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிங்கள அதிகார வர்க்கங்களால் இலங்கைத் தீவின்மீது தமது பிடியை வலுப்படுத்தும் நோக்கோடு உருவாக்கப்பட்ட மேலாண்மைக் கருத்தியலின் கூறுகள் எனப் பல அறிஞர்கள் கூறிவந்துள்ளனர். அதாவது நாம் இன்று காணும் சிங்களத் தேசியம் என்பது நவீன சிங்கள ஆளும் வர்க்கத்தால் தயார்செய்யப்பட்டு பரப்பப்பட்ட ஒருவகைக் கற்பிதம் என்ற கருத்தே இந்த அறிஞர்களிடம் காணப்பட்டது. இந்த அடிப்படையில் சிங்கள ஆளும் வர்க்கம் முறியடிக்கப்பட்டால் சிங்கள தேசியமும் அதன் மேலாண்மைக் கருத்தியலும் தாமாகவே இல்லாதொழிந்துவிடும் என இடதுசாரிகளும் பின்நவீனத்துவ கல்வியாளர்களும் நம்புகின்றனர். தமிழரின் நியாயமான அரசியல் அவாவுதல்கள், இன்னல்கள் பற்றி சிங்கள மக்களிடையே நாம் இடையறாது பரப்புரைகளைச் செய்தால் அவர்கள் தமது ஆட்சியாளரின்

சிங்கள பௌத்த தேசியம் என்ற கற்பிதத்திலிருந்து விடுபட்டு சரியான தீர்வொன்று ஏற்படுவதற்கு உறுதுணை செய்வார்கள் என்ற எண்ணம் இந்த நம்பிக்கையிலிருந்துதான் பிறக்கிறது.

ஆனால் சிங்கள பௌத்த ஒற்றையாட்சி என்பதும் தமிழர் பற்றிய சாதகமற்ற பார்வைகளும் சிங்கள அடையாளத்தின் இன்றியமையாத கூறுகள் என்ற நோக்கில் நாம் சிங்கள தேசியத்தை அணுகுவோமேயானால் இரண்டு விடயங்களை ஆராயவேண்டும். ஒன்று சிங்கள தேசியமும் அதன் அடிப்படைகளும் நவீன சிங்கள ஆளும் வர்க்கத்தால் தன்னுடைய நலன்களை முன்னெடுப்பதற்காக உருவாக்கப் பட்டவையல்ல, ஆனால் அவை சிங்கள மக்களிடையேயும் அவர்களுடைய கலாசாரத்திலும் வேரூன்றியுள்ள விடயங்கள் என்பது. இரண்டு, அவை 20 ஆம் நூற்றாண்டில் சிங்கள ஆளும் வர்க்கத்தாலும் அநகாரிக தர்மபால போன்ற அதன் நவீன கருத்தியலாளர்களாலும் தயாரிக்கப்பட்ட ஒரு அரசியற் கருத்தியல் அல்ல என்பது.

சிங்கள தேசியக் கருத்தியல் என்பது இருபதாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திலிருந்து சிங்கள பௌத்த ஒற்றையாட்சி, தமிழ் விரோதம் என்ற அடிப்படைகளைக் கொண்ட கருத்தியலாக எவ்வாறு நிலவியது என்பதையும் அது வெறுமனே ஆளும் வர்க்கத்திற்குரியதாக அல்லாமல் சிங்கள பொது மக்களிடையே நிலவி வேரூன்றிக் காணப்பட்டது என்பதையும் பின்வரும் உதாரணங்களில் காணலாம்.

கடைசிக் கண்டி மன்னன் தமிழகத்தைச் சேர்ந்தவன் என்பது நீங்கள் அறிந்ததே. இவனை வீழ்த்துவதற்கு எஹெலப்பொல என்ற சிங்கள அதிகாரி செய்த சதிமுயற்சிகளுக்கு ஆதரவாக இரு நூல்கள் இயற்றப்பட்டன. ஒன்று கிரில சந்தேஷய (ஆட்காட்டியின் தூது). இக்கவிதை நூல் கித்தாலகம தேவமித்த என்ற பௌத்த பிக்குவால் எழுதப்பட்டது. மற்றது எஹெலப்பொல வர்ணனாவ. இது வலிகால கவிசுந்தர முதலி என்பவரால் எழுதப்பட்டது. இவையிரண்டும் தமிழரை முறியடித்து இலங்கைத் தீவு முழுவதும் சிங்கள பௌத்த ஆட்சியை நிறுவிய நாயகனாக

எஹெலப்பொலவைப் போற்றுகின்றன. 'ஐயாயிரம் ஆண்டுகள் இலங்கைத் தீவில் நிலைபெற்று விளங்க வேண்டிய (பௌத்த) சாசனத்தை அழித்த களவாணித் தமிழ்க் கூட்டங்களை லங்காவிலிருந்து (எஹெலப்பொல) துரத்தியடித்தான்' என கிரில சந்தேஷய கூறுகிறது. கண்டியின் கடைசி மன்னனை கெட்ட தமிழன், களவாணித் தமிழன் (தெமல சொரா), தமிழ் அலி போன்ற பல இனக்குரோத சொற்பதங்களால் கிரில சந்தேஷயவும் எஹெலப்பொல வர்ணனாவவும் தூற்றுகின்றன. தமிழர்களையும் இவை கடுமையாகத் தாக்குகின்றன. 'பெருத்த நீற்றுப்பூசணி போல் உடல்பருத்த சாம்பல் பூசிய தமிழர்கள் பன்றிகளைப்போல் மோரை உறிஞ்சிக் குடிப்பர்' என எஹெலப்பொல வர்ணனாவ கூறுகிறது.

கேடுகெட்ட தமிழர்களை அழிப்பதற்கு துட்ட கைமுனு படைதிரட்டியதைப் போல எஹெலப்பொலவும் படை திரட்டியதாகவும் சிங்களவரின் நாட்டை அழித்த குற்றத்திற்காக தமிழ் மன்னனுக்கு (எஹெலப்பொல) அடித்த அடியில் அவனுடைய பற்களெல்லாம் வீழ்ந்தன எனவும் கிரில சந்தேஷய கூறுகிறது. இதிலெல்லாம் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் மகாவம்சம், சூளவம்சம், பூஜாவளிய, தூபவம்சம், ராஜாவளிய ஆகிய முக்கிய சிங்கள பௌத்த நூல்களிலெல்லாம் மேற்படி இலங்கைத் தீவு பௌத்த ஒற்றையாட்சி நாடு என்பதும் தமிழ் விரோத கருத்துக்களும் தொடர்ச்சியாகவே காணப்படுகின்றன என்ற உண்மையாகும். இவ்விரண்டு விடயங்களும் பல்வேறு வரலாற்றுச் சந்தர்ப்பங்களில் சிங்கள வெகுஜனங்களிடையே மேலோங்கியதை கிரில சந்தேஷயவும் எஹெலப்பொல வர்ணனாவவும் காட்டுகின்றன. கண்டியின் சிங்களப் பிரதானிகள் பிரித்தானியரோடு சேர்ந்து மலைநாட்டுக்குப் படையெடுத்த போது கண்டி மக்களை மூன்று தலைமுறையாக அடக்கியாண்ட தமிழரை ஆட்சியிலிருந்து மீட்பதற்காக அது செய்யப்பட்டதாகக் கூறினர்.

கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டபோது வெளியிடப்பட்ட பிரகடனத்தில் 'தமிழினம் சிங்கள மக்களுடைய

நாட்டை ஆளுவதற்கான உரிமை இத்தால் முற்றாக ஒழிக்கப்படுகிறது' என்ற முக்கிய சரத்து காணப்படுகிறது. (பேராசிரியர் கே.என்.ஓ. தர்மதாச இவை பற்றி விரிவாக எழுதியுள்ளார்.)

மகாவம்சம் தொடக்கம் கிரில சந்தேஷயவரை காணப்படும் இலங்கை தனிச்சிங்கள பௌத்த நாடு என்ற கருத்தும் தமிழர் விரோதிகள் என்ற எண்ணமும் சிங்கள வெகுஜனங்களிடையே நிலவவில்லை, ஆனால் 20 ஆம் நூற்றாண்டில் அச்சு இயந்திரத்தின் வருகையோடுதான் சிங்கள ஆளும் வர்க்கம் தன்னுடைய சுயநல நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சிங்களப் பொதுமக்களிடையே இவ்விடயங்களைப் பரப்பியது என்று இடதுசாரிகளும் பல்வேறு சிங்கள, தமிழ் அறிஞர்களும் கூறிவந்துள்ளனர். அண்மைக் காலத்தில் சாதாரண சிங்கள மக்களிடையேயும் மேற்படி கருத்துக்கள் பரவலாகக் கொண்டு செல்லப்பட்டன எனவும் இவை சிங்கள வெகுஜனங்களிடையே நாட்டார் கதைகள், பாடல்கள், கவிகள், ஆலய ஓவியங்கள் போன்ற ஊடகங்களுடாக பல நூற்றாண்டுகளாக வேரூன்றி வந்துள்ளன எனவும் சில அறிஞர்கள் நிறுவி எழுதி வருகின்றனர். இதில் முக்கியமானது பேராசிரியர் மைக்கல் ரொபர்ட்ஸ் எழுதியுள்ள 'Sinhala Consciousness in the Kandyan Period 1590s-1815' என்ற ஆய்வு நூலாகும். இதில் இலங்கை சிங்களவருக்கே உரிய நாடு, தமிழர் விரோதிகள் ஆகிய மகாவம்ச காலம் தொடக்கம் கூறப்பட்டுவரும் கருத்துக்கள் 1590–1815 காலப்பகுதியில் சாதாரண சிங்கள மக்களிடையே எங்ஙனம் பரவிக் காணப்பட்டன என்பது விளக்கப்படுகிறது. தேசியவாதம் பற்றி அண்மையில் நடைபெற்றுவரும் மறுபரிசீலனைகளும் இதற்கு வலுவூட்டும் என நினைக்கிறேன்.

இலங்கை முழுவதையும் உள்ளடக்கும் சிங்கள பௌத்த ஒற்றையாட்சியும் தமிழர் பற்றிய சாதகமற்ற பார்வைகளும் ஆளும் வர்க்கம், உழைக்கும் வர்க்கம் என்ற வேறுபாடின்றி சிங்கள அடையாளத்திற்கு இன்றியமையாதனவாக

நீண்டகாலமாக இருந்து வந்துள்ளன என்பதையே மேற்படி உதாரணங்களும் ஆய்வுகளும் காட்டுகின்றன.

சிறி லங்காவின் சிங்கள பௌத்த ஒற்றையாட்சியை மாற்றி எமக்கொரு நியாயமான தீர்வைப் பெறுவதற்கு சிங்கள மக்கள் மத்தியில் எமது இன்னல்களைப் பற்றி பிரச்சாரம் செய்வது பலனளிக்கும் என்ற கருத்தை இவற்றின் அடிப்படையில்தான் இக்கட்டுரைத் தொடர் கேள்விக்கு உள்ளாக்கியிருக்கிறது.

24.10.2004



## –6– சர்வதேச வியூகங்களே தமிழீழம் எதிர்கொள்ள வேண்டிய சவால்

ஜோர்ஜியாவிற்கும் தமிழீழத்திற்கும் என்ன தொடர்பு? ஸ்டாலின் ஜோர்ஜிய நாட்டவர் என்பதும் அவருடைய பெயரை மட்டக்களப்பிலுள்ள எனது பத்திரிகை நண்பர் தனது மகனுக்கு வைத்திருக்கின்றார் என்பதைத் தவிர என்ன தொடர்பென யாராவது கேட்கலாம். ஜோர்ஜியாவின் பிராந்திய ஒருமைப்பாடு எவ்வகையிலும் பேணப்பட வேண்டுமெனவும் அந்நாட்டிலிருந்து பிரிந்து செல்ல முனையும் தெற்கு ஒசற்றியா மற்றும் அப்காசியா ஆகிய பிராந்தியங்கள் தமது சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை கைவிட வேண்டுமெனவும் அமெரிக்கா வற்புறுத்தி வருகின்றது.

ஜோர்ஜியாவிலும் இலங்கையிலும் தமது உரிமையை நிலைநாட்ட முனையும் இனங்களுடைய சுயநிர்ணய உரிமையை மறுப்பதற்கும் பல்வேறு வழிவகைகள் மூலம் தடுப்பதற்கும் அமெரிக்கா கொண்டிருக்கும் காரணம் ஒன்றே

கஸ்பியன் கடலிலுள்ள பெரும் எண்ணெய் வளத்தைக் கையகப்படுத்தி, அங்கிருந்து நெடுந்தூரக் குழாய்களின் ஊடாக அந்த எண்ணெயை தனது நேசநாடான துருக்கிக்கும் மத்திய தரைக் கடலிலுள்ள தனக்கேதுவான துறைமுகங்களுக்கும் கொண்டு செல்வதற்கு இன்றியமையாத வகையில் ஜோர்ஜியா அமெரிக்காவிற்குத் தேவைப்படுகின்றது.

பயன்படுத்தப்படாமலிருக்கும் மத்திய ஆசியாவின் பெரும் எண்ணெய், நிலவாயு வளங்களை வெளிக்கொணர் வதற்கு இன்றியமையாத இடைநிலை வழியாக (Oil transit route) ஆப்கானிஸ்தானை அமெரிக்கா கருதியது. ஆப்கானிஸ்தானில் இவ்வாறான ஒரு எண்ணெய்ப் பெருங்குழாயை அமைப்பதற்கு முயன்று கொண்டிருந்த உனோகால் (Unocal) என்ற அமெரிக்கக் கம்பனியின் ஆப்கான் பிரதிநிதியாக இருந்தவரான கமீட் கர்சாய் என்பவரை - அந்நாட்டின் மீது படையெடுத்து அங்கிருந்த தலிபான் அரசை முறியடித்த பின்னர் - அமெரிக்கா பொம்மை ஜனாதிபதியாக நியமித்த விடயம் நீங்கள் ஏற்கனவே அறிந்ததே.

மத்திய ஆசியாவிலிருந்து ஆப்கானிஸ்தான் ஊடாக அமெரிக்கா நிறுவ முற்படும் எண்ணெய்ப் பெருங்குழாய் பாகிஸ்தான் ஊடாகச் சென்று இந்திய உபகண்டத்திற்கு மேற்காகவும் பாரசீக வளைகுடா, ஆபிரிக்காவின் வடகிழக்கு முனை ஆகியவற்றின் கிழக்காகவும் அமைந்துள்ள அரபிக்கடலைச் சென்றடைந்து அங்கிருந்து அது அமெரிக்காவிற்கும் அதன் கூட்டு நாடான ஜப்பானுக்கும் பாதுகாப்பாக எந்தவொரு சூழ்நிலையிலும் கொண்டு செல்லப்படுவதாயின் இலங்கை அரசியல் தளம்பல், பிரிவினைச் சிக்கல் என்பன இல்லாத ஒரு நாடாக இருக்க வேண்டுமென்பது அமெரிக்காவின் அவா. அது மட்டுமின்றி உலகின் வரையறுக்கப்பட்ட வளங்களை கையகப்படுத்தவும் அவற்றைத் தமது பொருளாதாரங்களைப் பேணுவதற்கும் துரிதமாக நவீன மயப்படுத்தி வளர்ப்பதற்காக தத்தமது பிராந்தியங்களுக்கு அவ்வளங்களைத் தடையின்றிக் கொண்டு செல்வதற்கும் தனக்குப் போட்டியாக ஐரோப்பிய யூனியன், சீனா, இந்தியா, ரஷ்யா ஆகிய நான்கும் செயற்பட்டு வருகின்றன, செயற்படப் போகின்றன என அமெரிக்கா கடந்த பல ஆண்டுகளாக மிகக் கவனம் கொள்கின்றது.

மேற்படி நாடுகளின் முயற்சிகளைப் பலவீனப்படுத்தவும், மறைமுகமாக முறியடிக்கவும் அமெரிக்கா பயங்கரவாதம் என்ற பம்மாத்தை நன்றாகவே பயன்படுத்தி வருகின்றது. ஒசாமா

பின்லேடன் தலைதூக்குவதற்கு முன்னதாகவே அமெரிக்காவின் சக்திவள அமைச்சு மத்திய ஆசியாவிலிருந்து ஆப்கானிஸ்தான் ஊடாக எண்ணெய்க் குழாய் அமைக்கப்பட்டாக வேண்டும் என அறிக்கை சமர்ப்பித்திருந்தது. இதற்குத் தலிபான் மறுத்ததும் அமெரிக்காவின் நேச சக்தியாக இருந்த அவ்வரசு பயங்கரவாத அரசாகப் பிரகடனப் படுத்தப்பட்டதும் பயங்கரவாத ஒழிப்புப் போர் என்ற போர்வையில் அந்நாட்டின் மீது அமெரிக்கா படையெடுத்து அங்கு நிலை கொண்டிருப்பதும் நாமறிந்ததே. இந்தியா, சீனா மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவை தனக்குப் போட்டியாக மத்திய ஆசியாவின் எண்ணெய் வளங்களைக் கையகப் படுத்துவதையும் வெளிக்கொணர்வதையும் தடுப்பதற்கு அமெரிக்கா வகுத்துவரும் வியூகத்திற்கு பிரிவினை நெருக்கடியற்ற, தனக்குச் சார்பான, வலுவான மத்திய அரசொன்று சிறி லங்காவில் அதற்கு இன்றியமையாது தேவைப்படுகிறது. இந்த வியூகத்தின் தன்மைகளை ஓரளவு புரிந்து கொள்வதற்கு ஜோர்ஜியாவில் தற்போது அமெரிக்கா அரங்கேற்றி வரும் நாடகம் எமக்கு உதவும்.

சோவியத் குடியரசு உடைந்து ஜோர்ஜியா 1990 இல் தனிநாடாகியபோது அந்நாட்டுக்கு பெரும் பொருளாதார உதவியை அமெரிக்கா வழங்கியது. அத்துடன் உலகில் ஜோர்ஜியாவிற்கும் இலங்கைக்குமே மிகக்கூடுதலான சராசரி உதவித் தொகையை கடந்த பத்தாண்டுகளில் அமெரிக்கா வழங்கியுள்ளது. இது மட்டுமின்றி படிப்படியாக ஜோர்ஜிய இராணுவத்துடன் பயங்கரவாதத்திற்கு எதிரான பயிற்சி என்ற போர்வையில் மிக இறுக்கமான உறவுகளையும் அமெரிக்கா வளர்த்து வந்துள்ளது. இது மட்டுமின்றி மிக்காயில் சாக்கஸ்விலி என்ற அமெரிக்காவில் பயின்ற ஒரு சட்டத்தரணியைத் தனக்குச் சார்பான ஒரு தேசிய அரசியல்வாதியாக பெரும் பணத்தைச் செலவிட்டு உருவாக்கியது.

கடந்த மாதம் அமெரிக்காவினால் பயிற்றுவிக்கப்பட்ட வெகுஜன ஆர்ப்பாட்டக்காரர்களின் உதவியோடும் மேலைத்தேய ஊடகங்களின் சார்புநிலை அறிக்கைகளின் பின்னணியோடும்

சாக்கஸ்விலி ஒரு அமைதியான கிளர்ச்சியை நடத்தி ஜோர்ஜிய ஜனாதிபதி எட்வேர்ட் செவர்நாட்சேயின் ஆட்சியைக் கவிழ்த்தார்.

ஆரம்பத்தில் அமெரிக்காவையும், பிரித்தானியாவையும் ஆதரித்ததன் மூலமும், செச்சென்னியா பிரிவினைவாதிகளுக்கு மறைமுக உதவியும், ஊக்கமும் வழங்க அந்நாடுகளை அனுமதித்ததன் மூலமும் செவர்நாட்சே ரஷ்யாவைப் பகைத்துக் கொண்டார். செச்சென்னியப் பிரிவினைவாதிகள் ஜோர்ஜியாவிலே பின்தளம் அமைத்துச் செயற்படுகின்றனர் எனவும் அவர்களுக்கு அமெரிக்காவும், பிரித்தானியாவும் மறைமுக ஆதரவும் போர்த் தளபாடங்களும் வழங்குகின்றன என்பதும் ரஷ்யாவின் குற்றச்சாட்டு. இந்த வகையில் ரஷ்யாவின் மீது அழுத்தம் செலுத்துவதற்கு தனக்கு ஏற்றதொரு நாடாக அமெரிக்கா ஜோர்ஜியாவைக் கருதி வருகின்றது.

கடந்த மாதம் 5 ஆம் திகதி அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சர் டொனல்ட் ரம்ஸ்பெல்ட் ஜோர்ஜியா சென்று அதன் புதிய தலைவர்களைச் சந்தித்து உரையாடினார். அமெரிக்க சிறப்புப் படைகள் ஜோர்ஜிய இராணுவத்திற்கு வழங்கிவரும் பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சித் திட்டம் அடுத்த ஆண்டுடன் முடிவடைகின்றது. இதை தொடர்ந்து நடத்துவதற்கான பேச்சுவார்த்தைகளையும் ரம்ஸ்பெல்ட் ஜோர்ஜியாவின் புதிய அமெரிக்கச் சார்பு தலைவர்களுடன் நடத்தியுள்ளார். இத்துடன் ஜோர்ஜிய இராணுவத்தை தமது ஆலோசனைகளின்படி முற்றாக மறுசீரமைப்பதற்கும் அமெரிக்கா முயன்று வருகின்றது. அமெரிக்காவினால் பயிற்றுவிக்கப்பட்ட படையினரே புதிய ஜோர்ஜிய இராணுவத்தின் அடித்தளமாகவும் வழிநடத்துபவர் களாகவும் அமைவர் என வொஷிங்டன் எதிர்பார்க்கின்றது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தனது அண்டை நாடான ஜோர்ஜியா இவ்வாறு அமெரிக்காவின் கைக்குள் செல்வதைப் பல்வேறு வழிகளிலும் ரஷ்யா தடுக்க முற்பட்டு வருகின்றது. ஜோர்ஜியாவை தனது முழுமையான பிடிக்குள் கொண்டுவருவதற்குத் தடையாக அந்நாட்டின் சுயநிர்ணய உரிமை கோரும் பிராந்தியங்கள் உள்ளன என்பதையும் இவற்றிற்கு ஆதரவு வழங்குவதன் மூலம் ஜோர்ஜியாவில்

பதவிக்கு வரும் எந்த அரசின் மீதும் ரஷ்யாவினால் தனக்குப் பாதகமான அழுத்தங்களை ஏற்படுத்த முடியும் என்பதை அமெரிக்கா உணர்கின்றது. இதன் காரணமாகவே ஜோர்ஜியாவின் பிராந்திய ஒருமைப்பாட்டை இறுக்கமாகப் பேணக்கூடிய ஒரு கைப்பொம்மை அரசை சாக்கஸ்விலியின் கீழ் உருவாக்க அமெரிக்கா தற்போது முனைந்து வருகின்றது. ஜோர்ஜியாவின் மத்திய அரசை ரஷ்யாவின் அழுத்தங்களுக்கு வளைந்து கொடுக்காததொன்றாக வலுப்படுத்தும் நோக்கில் சுயநிர்ணய உரிமை கோரும் அந்நாட்டின் பிராந்தியங்களை உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமது பிரச்சினையை தீர்த்துக் கொள்ளுமாறும் அப்படி அவை செய்வதற்குப் பிரதியீடாக பொருளாதார உதவி பெருமளவில் வழங்கலாமெனவும் அமெரிக்கா கூறி வருகின்றது.

மேற்கூறியவற்றிலிருந்து ஜோர்ஜியாவையும் இலங்கையையும் அமெரிக்கா தனது கேந்திர பொருளாதார நோக்கங்களின் அடிப்படையில் கையாள்வதில் உள்ள பொதுமைகளை நாம் தெளிவாக இனங்கண்டு கொள்ள வேண்டும். இலங்கையில் அமெரிக்கா உருவாக்கி வரும் சாக்கஸ்விலி யாரென்பது வெள்ளிடைமலை.

ஜோர்ஜியாவில் கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி செவர்நாட்சேயும் சிறி லங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் போல அமெரிக்கா ஆதரவாளராக இருந்தபொழுதும் ரஷ்யா மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றோடு பிணைப்புகளை ஏற்படுத்தியதன் மூலம் அமெரிக்காவின் ஒரு முழுமையான கைப்பொம்மையாக மாறாமல் செயற்பட்டதே அவருடைய வீழ்ச்சிக்குக் காரணமெனலாம். ஜோர்ஜியாவிற்கு ரஷ்யா போல் இலங்கைக்கு இந்தியா அமைந்துள்ளது. தமிழ் பேசும் மக்களுடைய சுயநிர்ணய உரிமைப் போராட்டமே சிறி லங்கா பகுக்கப்படாத இறைமையோடு அமெரிக்காவின் பிடிக்குள் செல்வதற்கு தடையாகவுள்ளது. தமிழர் போராட்டத்தின் அழுத்தம் இல்லாவிடின் அமெரிக்காவின் கைக்குள் சிறி லங்கா செல்வதைத் தடுப்பது கடினம் என்பதை இந்தியா நன்றாக உணர்ந்துள்ளது. எங்ஙனம் தெற்கு ஒசற்றியா, அப்காசியா

ஆகியவற்றின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்கள் ஜோர்ஜியா அமெரிக்காவின் கைக்குள் போவதைத் தடுப்பதற்கான அழுத்தக் கருவியாக உள்ளனவோ, அதேபோல் எமது போராட்டமும் இந்தியாவிற்கு ஒரு அழுத்தக் கருவியாக 1983 இலிருந்து இருந்து வருகின்றது. இதில் ஒரேயொரு வித்தியாசம் என்னவெனில் ரஷ்யாவிற்கு தெற்கோடு நேரடித் தொடர்புள்ளது.

ஆனால் 1987 இன் பின்னர் இந்தியாவிற்கும் தமிழீழத்திற்கும் நேரடித் தொடர்பு அற்றுப் போய்விட்டது. இது பல்வேறு வழிகளிலும் எமது போராட்டம் தெளிவான பாதையில் தமிழ் பேசும் மக்களின் தனி இறைமையை வலுப்படுத்தும் வகையில் வளர்ச்சியடையக் காரணமாயிற்று. தெற்கு ஒசற்றியா, அப்காசியா என்பன ஏறத்தாழ தனி நாடுகளாகவே இப்பொழுது இயங்கி வருகின்றபோதும் அவை முழு இறைமை பெற்ற சுதந்திர நாடுகளாக விடாமல் ரஷ்யா பார்த்துக் கொள்கின்றது. ஏனெனில் இவை தமது தனி இறைமையை நிலைநாட்டி ஜோர்ஜியாவிலிருந்து முற்றாகப் பிரிந்துவிட்டால் ரஷ்யாவிற்கு அந்நாட்டைக் கட்டுப்படுத்திட உதவும் அழுத்தக் கருவிகள் இல்லாமல் போய்விடும். இதனால் தெற்கு ஒசற்றியா, அப்காசியா என்பன திரிசங்கு நாடுகளாக தமது முழு இறைமையை அனுபவிக்க முடியாதவையாக இருந்து வருகின்றன. (அப்காசியா தனது சொந்தப் படைகளைக் கொண்டுள்ளது. அது ஜோர்ஜிய மத்திய அரசுக்கு எந்தவிதமான வரிகளையும் கொடுப்பதில்லை)

இவ்வாறுதான் தமது இறைமை சர்வதேச ரீதியாக, சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படுவதைத் தவிர்ந்த ஏனைய விடயங்களிலெல்லாம் தனியரசாகவே குர்திஸ்தான் ஈராக்கின் வடக்கு மூலையில் அமெரிக்காவின் ஆதரவுடன் இயங்கி வந்தது. சதாம் ஹூசைனின் அரசு மீது இராணுவ ரீதியாக அழுத்தம் கொடுக்கின்ற ஒரு கருவியாகவே அமெரிக்கா குர்திஸ்தானை பயன்படுத்தி வந்தது. (ஈராக்கின் எல்லைக்கு அப்பால் துருக்கியில் வாழும் குர்திஸ் மக்களை அந்நாட்டின் அமெரிக்கச் சார்பு அரசு அடக்கி ஒடுக்கி கொன்று குவித்து வருகின்றது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்)

இதைப்போல மியன்மாரில் சீனாவின் யூனான் மாகாண எல்லையையொட்டி அமைந்திருக்கும் ஷாண் அரசம் (Shan State) ஒரு திரிசங்கு நாடாகவேயுள்ளது. மியன்மார் மீது அழுத்தங்களைச் செலுத்துவதற்கான ஒரு கருவியாக ஷாண் அரசை சீனா கருதுகின்றது. திரிசங்கு நாடுகளைப் போலன்றி புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழீழப் பிராந்தியம் யாருக்கும் கைப்பாவையாகாமல் இருப்பதே அமெரிக்கா இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வகுக்கும் கேந்திர வியூகத்திற்கும் அதை முறியடிக்க இந்தியா எடுக்கும் முயற்சிகளுக்கும் சிக்கலைக் கொடுக்கிறது. சிறி லங்கா படைகளைத் தனது செல்வாக்கினுள் கொண்டு வருவதற்கும் பயங்கரவாதத்திற்கு எதிரான பயிற்சி என்ற போர்வையில் அவற்றோடு தொடர்ந்து இறுக்கமான உறவைப் பேணுவதற்கும் தனது வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் புலிகளை வைத்திருப்பது அமெரிக்காவிற்குக் கட்டாயத் தேவையாகின்றது. சிறி லங்கா இராணுவத்தை இப்போக்கிலிருந்து தடுத்து தனது கைக்குள் போட்டுக் கொள்வதற்கு இந்தியா அண்மையில் எடுத்து வருகின்ற முயற்சிகளின் ஒரு வெளிப்பாடே சிறி லங்கா படைத்தளபதி லெப். ஜெனரல் லயனல் பலேகல்லவின் தற்போதைய இந்தியச் சுற்றுலாவாகும்.

ஓஸ்லோ பிரகடனத்தின்படியே புலிகள் நடந்து கொள்ளவேண்டுமென அமெரிக்கா வற்புறுத்துவதும் இலங்கை இனப்பிரச்சினையின் தீர்வு எவ்வாறு அமைய வேண்டுமென வெளியார் தீர்க்க முடியாது. அது இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்குள்ளேயே தீர்மானிக்கப்பட வேண்டுமென இந்தியா அடிக்கடி வலியுறுத்துவதும் எமது போராட்டம் தற்போது எவ்வகையானதொரு சர்வதேச பரிமாணத்தினுள் இருக்கின்றது என்பதையே காட்டுகின்றது.

எமது உரிமைப் போராட்டத்தின் பிரதான முட்டுக்கட்டைகளாக வருங்காலத்தில் அமையப் போவது சிங்களப் பேரினவாதிகளோ சிறி லங்கா இராணுவமோ அல்ல. தத்தமது கேந்திர மற்றும் பொருளாதாரக் குறிக்கோள்களை அடைவதற்கு அமெரிக்கா, இந்தியா, சீனா, ஐரோப்பிய யூனியன்

என்பன இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வகுத்துக் கொண்டிருக்கின்ற வியூகங்களை அரசியல் ரீதியாகவும் போரியல் ரீதியாகவும் எதிர்கொண்டு எப்படி நாம் வரலாறு படைக்கப் போகின்றோம் என்பதே எம்முன் இன்றுள்ள சவாலாகும்.

14.12.2003



## -7- தமிழர் தம் இறைமையை விட்டுக் கொடுக்க இயலாது

போரால் பறிக்க முடியாமல் போன நாகலாந்தின் இறைமையை இன்று பேச்சுவார்த்தைகள் மூலம் மடக்கிப் போட முனைந்து வருகிறது இந்திய அரசு. அதாவது தமிழ் மக்கள் தமது இறைமையை சுதந்திர இலங்கையின் முதலாவது அரசுருவாக்கத்தில் இம்மியளவும் விட்டுக் கொடுக்கவில்லை.

ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சமூகமாக இயங்குவதாயின் விதிகள் அல்லது சட்டங்கள், அவற்றை நடைமுறைப்படுத்தும் அதிகாரங்கள் அவற்றின் அடிப்படையில் அமைந்த நீதி பரிபாலனம், அம்மக்கள் கூட்டம் உருவாக்கும் செல்வத்தில் ஒரு பகுதியைச் (உபரி) சேகரித்து சமூகத் தேவைக்கு பயன்படுத்துவதற்கான வழிமுறைகள், அம்மக்கள் கூட்டத்தின் உள்ளும் புறமும் அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் ஒழுங்குகளை ஏற்படுத்தல், மேற்கூறியவற்றை செய்வதற்கு உரியவர்களைத் தெரிவு செய்தல் என்பன அவசியமாகும்.

ஒரு புவியியல் பரப்பினுள் மேற்படி கூறப்பட்ட அனைத்தும் செய்யப்பட்டபொழுது அரசுகள் உருவாகின. இந்த வகையில் உலகின் மிகப் பழைய சமூக நிறுவனம் அரசே ஆகும். சமூக, அரச உருவாக்கத்திற்கான மேற்படி செயல்களை ஆற்றும் தகைமையையே நாம் இறைமை (Sovereignty)

என்கிறோம். மன்னர் ஆட்சிக் காலத்தில் மேற்படி செயல்கள் அனைத்தையும் செய்யும் தகைமை, உரிமை அரசனுக்கு மட்டுமே இருப்பதாக கொள்ளப்பட்டது. பல பழைய சமூகங்களில் இவ்விறைமை மன்னனுக்கு இறைவனால் கொடுக்கப்பட்டதாகவும் சில மக்கட் குழுமங்களில் இது மக்களாக உடன்பட்டு அரசனுக்கு வழங்கியதாகவும் பலவாறாக கருதப்பட்டது. முடியாட்சிகள் மக்களாட்சிகளாக மாறியபோது மேற்படி இறைமை ஒரு நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் உரியதாயிற்று.

ஒரு மக்கட் கூட்டம், தான் ஒரு சமூகமாக இயங்குவதற்கு என மேற்படி விடயங்களைச் செய்கையில் அது தன் இறைமையைச் செயற்படுத்துகின்றது எனக் கொள்ளப்படும். இவ்வாறு ஒரு சமூகம் தனது இறைமையை தன் சொந்த விருப்பின்படி பிரயோகிப்பதே அதன் சுயநிர்ணய உரிமை எனப்படுகிறது. ஒரு சமூகம் தான் சுமூகமாக இயங்குவதற்கும், தனது நலன்களைப் பேணி பாதுகாத்து நிலைநிறுத்துவதற்கும் ஏற்றவகையில் அது தனது இறைமையை எவ்வாறு செயல்படுத்துவது என்பதை விரிவாக வரையறுக்கும் ஆவணமே ஒரு அரசின் அரசியல் யாப்பாகும்.

இந்த வகையில் ஒரு மக்கட் குழுமம் தன் இறைமையை செயல்படுத்தி ஒரு அரசியல் யாப்பை அதாவது ஒரு அரசை ஏற்படுத்தலாம் அல்லது தனது சொந்த விருப்பின்பேரில் இன்னொரு சமூகத்துடன் இணைந்து அதைச் செய்யலாம் அல்லது இன்னொரு மக்கட் குழுமம் உருவாக்கும் அரசியல் யாப்பு, அரசு தனக்கு உகந்ததெனக் காணுகையில் தனது இறைமையை அந்த உருவாக்கத்திற்கு, தன் நலன்களை் பேணிடக்கூடிய நிபந்தனைகளோடு ஒப்புக் கொடுக்கலாம். வரலாற்றைப் பொறுத்தவரையில் தம்மைத் தனித்துவமான சமூகங்களாக கருதிய எல்லா மக்கட் குழுமங்களுக்கும் தமது இறைமையை தங்கு தடையின்றி செயல்படுத்திட முடிந்ததில்லை. வன்முறை மற்றும் அரசியல் வழிப்பட்ட மேலாதிக்க முறைகள் மூலம் அவை தமது இறைமையை முழுமையாகச் செயற்படுத்த முடியாதபடிக்கு

தடைகள் போடப்பட்டன. தன்னுடைய இறைமையை முழுமையாகச் செயல்படுத்தி அரசுருவாக்கத்தில் ஈடுபடும் ஒரு சமூகம் தனது அதிகாரத்தினுள் இன்னொரு சமூகத்தினை அதன் இறைமை ஒப்புதல் இன்றி வைத்திருப்பதையே நாம் காலனியாதிக்கம் என்கிறோம்.

ஒரு சமூகம் தனது ஆதிக்க எல்லைக்குள் வாழும் வேறு எந்த மக்கட் குழுமமும் தனது இறைமையை முழுமையாகச் செயல்படுத்த முடியாதபடி ஒரு அரசை உருவாக்கும்போது அது ஒற்றையாட்சி எனப்படுகிறது. இந்த வகையில் தன்னகத்தே இறைமையுள்ள வேறு சமூகங்களை உள்ளடக்கிய ஒற்றையாட்சிக்கும் காலனியாதிக்கத்துக்கும் பெரிய வேறுபாடு இல்லை. வரலாற்றில் இவ்வாறான சூழலில் அகப்பட்டுக் கொள்ளும் சமூகங்கள் ஒன்று, தமது இறைமையை எந்த அடக்குமுறைகளின் கீழும் விட்டுக் கொடுக்காது போராடுகின்றன. இரண்டு பகுதியாகவோ, முழுமையாகவோ தமது இறைமையை விட்டுக்கொடுத்து அதன் காரணமாக இழிநிலைக்குத் தள்ளப்படுகின்றன. மூன்று, தமது இறைமை முற்றாகப் பறிக்கப்பட்ட நிலையில் ஆதிக்க சமூகங்களினுள் கரைந்து போயின.

முதலாவது வகையில் நாம் இந்தியாவின் வட கிழக்கில் உள்ள நாகா இன மக்களையும் இந்தோனேஷியாவின் ஆச்சே மக்களையும் இலங்கைத் தமிழரையும் குறிப்பிடலாம். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை நாகலாந்து ஒரு தனியரசாக இருந்து வந்தது. அதை நீண்டகாலப் போருக்கு பின்னர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கைப்பற்றி தனது இந்திய காலனி அரசின் ஒரு அங்கமாக இணைந்தது. 1947 இல் இந்தியா சுதந்திரமடைந்தபோது நாகா இனத் தலைவர்கள் காந்தியைச் சந்தித்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் பறித்தெடுக்கப்பட்ட தமது மக்களின் இறைமையை மீள் நிலைநாட்டிடும் வகையில் தாம் மீண்டும் ஒரு சுதந்திர நாடாக செயல்படப் போவதாகக் கூறினார்கள். அவர்களை அப்படிச் செய்ய வேண்டாமெனவும் நாகலாந்து தற்காலிகமாக இந்தியாவுடன் பத்து வருடங்கள் இணைந்திருந்த பின் பிரிந்து போகலாம் எனவும் காந்தி விடுத்த

வேண்டுகோளை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். பத்து வருடங்களின் பின்னர் காந்தி கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் நாகலாந்து தனது சுதந்திரத்தை, இறைமையை நிலைநாட்ட முற்பட்டபோது இந்தியப் படைகள் அங்கு அனுப்பப்பட்டன. பெரும் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. எனினும் நாகா மக்கள் 50 வருடங்களிற்கு மேலாக தமது இறைமையை இம்மியளவும் விட்டுக் கொடுக்காமல் போராடினர். போரால் பறிக்க முடியாமல் போன நாகலாந்தின் இறைமையை இன்று பேச்சுவார்த்தைகள் மூலம் மடக்கிப் போட முனைந்து வருகிறது இந்திய அரசு.

ஆச்சே மக்களது இறைமையும் ஒல்லாந்தரால் பறிக்கப்பட்டது. பின்னர் ஆச்சே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு கையளிக்கப்பட்டது. இந்தோனேஷிய தீவுகளை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் விட்டுச் சென்றபோது ஆச்சே மக்கள் இந்தோனேஷிய பெரும்பான்மை அரசின்கீழ் கொண்டுவரப்பட்டனர். ஆயினும் அவர்கள் இன்றுவரை தமது இறைமையை விட்டுக் கொடுக்காது போராடி வருகின்றனர்.

'1947 இல் இலங்கைக்கு பிரித்தானியா சுதந்திரத்தை வழங்கியபோது உருவாக்கப்பட்ட சோல்பரி அரசியல் யாப்பு சிங்களப் பெரும்பான்மையின் இறைமைக்கு உரியதாக மட்டுமே உள்ளது. இதில் தமிழர்கள் ஒரு காலனியாதிக்க கீழ்நிலையிலேயே வாழவேண்டி வரும். இந்த யாப்பின் கீழ் அவர்கள் தமது இறைமையை இம்மியளவும் செயல்படுத்த முடியாது என்ற அடிப்படையில் தமிழர் அதை நிராகரிக்க வேண்டும்' எனக்கோரி தமிழ் காங்கிரஸ் இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டது. தமிழர் தாயகத்தில் அந்நேரம் இருந்த 13 தொகுதிகளில் 9 தொகுதிகளில் அது போட்டியிட்டு 7 இல் வெற்றி பெற்றது. சோல்பரி ஒற்றையாட்சி அரசியல் யாப்பை ஆதரித்த ஐக்கிய தேசியக் கட்சி வடக்கு கிழக்கில் எந்த ஒரு தொகுதியிலும் வெற்றி பெறவில்லை. இதனடிப்படையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேறு மாற்றுத் தீர்வு இல்லாததாலும் தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை பிரயோகிக்க அனுமதிக்கப்பட

வேண்டும் என தமிழ் காங்கிரஸ் பிரித்தானிய அரசைக் கேட்டுக் கொண்டது. இங்கு தெளிவாக நாம் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். அதாவது தமிழ் மக்கள் தமது இறைமையை சுதந்திர இலங்கையின் முதலாவது அரசுருவாக்கத்தில் இம்மியளவும் விட்டுக் கொடுக்கவில்லை என்பதே அதுவாகும். இதன் பின் வந்த சிங்கக் கொடி, தமிழர் தாயகத்தை அழித்திடும் சிங்களக் குடியேற்றங்கள், தனிச் சிங்களச் சட்டம், 1958 தமிழர் படுகொலை, வடக்கு கிழக்கில் நடைபெற்ற அமைதி வழி அரசியல் போராட்டங்களின் மீது சிங்களப் படைகள் ஏவப்பட்டமை ஆகியன தமிழர் தமது இறைமையை எந்த வகையிலும் சிங்கள பேரினவாத ஒற்றையாட்சியினுள் விட்டுக்கொடுக்க முடியாதென்பதை உறுதிப் படுத்தின.

1972 இல் சிங்கள தேசம் தனது முழு இறைமையை நிலைநாட்டும் வகையில் ஒரு சிங்கள மேலாதிக்க அரசியல் யாப்பை உருவாக்க முனைந்தது. இந்த முயற்சியில் தமிழருடைய இறைமை ஒரு பகுதியாகவேனும் உள்ளடக்கப்படாது விட்டால் தனது ஒற்றையாட்சி அமைப்பு அதனூடாக நாட்டின் தேசிய செல்வத்தையும் நிர்வாகத்தையும் தனது கைக்குள் மட்டுமே வைத்திருப்பதும் முழுமையாக நியாயப்படுத்த முடியாது போய் விடும் என்பதை சிங்கள மேலாண்மையாளர் உணர்ந்தனர். எனவே மறைந்த திரு.எம். திருச்செல்வம் அவர்களூடாக தந்தை செல்வாவை ஆசைகாட்டி புதிய அரசியல் யாப்பிற்கு உடன்பட வைக்கப் பார்த்தனர். ஆனால் அவர் மறுத்துவிட்டார்.

1972 இல் தந்தை செல்வா தனது நாடாளுமன்றப் பதவியை துறந்ததும் 1974 இல் மீண்டும் போட்டியிட்டதும் தமிழ் மக்கள் தமது இறைமையை தாமாகப் பிரயோகிப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியே இல்லை என்ற அடிப்படையிலேயாகும். இதையே வட்டுக்கோட்டைத் தீர்மானம் விரிவாக எடுத்தியம்பியது.

1978 இல் மிக மிக இறுக்கமான ஒற்றையாட்சி அரசியல் யாப்பை ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கியபோதும் அதில்

தமிழரை இணைக்கும் முயற்சி எள்ளளவேனும் எடுக்கப்படவில்லை. இதன் பின்னர் நடைபெற்ற அனைத்தும் (பயங்கரவாதத் தடைச் சட்டம், யாழ். நூலக எரிப்பு, 83 தமிழர் படுகொலை, இன்னோரன்ன) சிங்கள மேலாண்மை ஒற்றையாட்சியினுள் தமிழர் பாதுகாப்பாக வாழ்வதானால் தமது இறைமையைத் தாமாகவே செயல்படுத்துவதைவிட வேறு வழியில்லை என்பதை மிகத் தெளிவாக சுட்டிக் காட்டியுள்ளன. இந்த வகையில் தமது அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் நோக்கில் தமிழர் மேற்கொள்ளும் எந்தப் பேச்சுவார்த்தையும் அவர்களுடைய கைவிடப்படா முழு இறைமையின் அடித்தளத்தில் நின்றே செய்யப்பட வேண்டும் என்பதே வரலாற்றுக் கட்டாயமாகும்.

22.06.2003



## -8- நெருக்கடிக்குள் உள்ளதா தமிழ்த் தேசியம்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் பலதையும் பத்தையும் பற்றி ஒருமுறை பேசிக்கொண்டிருந்தபோது அவர் 'நான் எதுவந்தாலும் தேசியத்தின் பக்கந்தான். நாம் தேசியத்தை கடைசிவரை விட்டுக் கொடுக்க முடியாது' எனக் கூறினார். தேசியம் எனப் பேசும்போது நீங்கள் எதைக் கருதுகின்றீர்கள்? எதை விளங்கிக் கொள்கின்றீர்கள்? என அவரிடம் கேள்வி கேட்டு உரையாட அப்போது சூழ்நிலை அனுமதிக்கவில்லை. ஆயினும் அங்குமிங்குமாகத் தொடர்கின்ற பயணங்களின் தனிமையில் இக்கேள்வியை அசை போட்டபோது மேலும் சில கேள்விகளும், எண்ணங்களும் தோன்றின. தமிழ்த் தேசியம் பற்றிய ஒரு மறுபார்வையை வேண்டி மேற்படி கேள்விகளையும் எண்ணங்களையும் உங்களிடம் சமர்ப்பிக்கின்றேன்.

முதலாவது தமிழ்த் தேசியம் என்றால் புரிந்து கொள்ளப்படுவது என்ன? நான் மேற்குறிப்பிட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரைப் போல் தேசியம் பேசுகின்றவர்கள் அதற்கு ஏதாவது வரைவிலக்கணம் வைத்திருக்கின்றார்களா? தமிழ்த் தேசியம் என்பது ஒரு கருத்தியலா? அதாவது இதுதான் தமிழ்த் தேசியம் என நாம் அனைவரும் இனங்கண்டிடக் கூடிய கருத்துக்களின் தொகுப்பா? அல்லது அது தமிழராய் தம்மைக் கருதுகின்ற ஒவ்வொருவரிடமும் இருக்கக்கூடிய ஒரு சமூக உள்ளுணர்வா? அல்லது தமிழ் மொழியைத் தம் தாய்

மொழியாகக் கருதுகின்ற அனைவரிடமும் நாடு, மதம் எனும் பேதங்களை மேவி பரந்து கிடக்கின்ற ஒரு உளப்பாங்கு எனத் தமிழ்த் தேசியத்தை நாம் கூறலாமா?

இந்த உணர்வு அல்லது உளப்பாங்கு தமிழர் எனத் தம்மைத் கருதுகின்ற அனைவரிடமும் இன்று காணப்படுகிறதா? அன்றி இலங்கையின் வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் இன மக்களிடம் மட்டுமே ஒரு அரசியல் உந்துவிசையாக உள்ளதா? இப்படியான கேள்விகளை நான் அடுக்கிக்கொண்டு போவதற்குக் காரணமுண்டு. எமது உரிமைப் போராட்டத்தின் வெற்றிகளும் சரி, பின்னடைவுகளும் சரி, தோல்விகளும் சரி, தமிழ்த் தேசியத்தின் பல்வேறு விளைவுகளாகவே உள்ளன. உதாரணமாக தமிழ்த் தேசியம் பற்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை முன்னாள் சிறப்புத் தளபதி கருணாவிற்கு இருந்த புரிதலும் அவர் ஏற்படுத்திய குழப்பங்களுக்கு ஒரு முக்கிய காரணம் என்றே நாம் கொள்ள வேண்டியிருக்கிறது.

புலிகளால் துரோகிகள் எனக் கண்டிக்கப்படும் மாற்றியக்கத் தலைவர்கள் கூட செய்யாத ஒரு கைங்கரியத்தை அவர் செய்துள்ளார். இலங்கைத் தமிழ்த் தேசியத்தின் அடிப்படையே வடக்கு கிழக்கு ஆகிய சிறி லங்கா அரசின் நிர்வாக மாகாணங்கள் இணைந்த தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயக பூமி எனும் கருத்தாகும். இது இலங்கைத் தமிழ்த் தேசியத்தின் கேள்விக்குட்படுத்த முடியாத கருத்தாக, நம்பிக்கையாகக் கடந்த 56 ஆண்டுகளாக நிலைத்து வந்துள்ளது. நான் அறிந்தவரை சிறி லங்கா படைகளோடு இன்று முற்றாகச் சங்கமமாகிப் போய்விட்ட ராசீக் குழுவின் தலைவர் கூட தமிழ் பேசும் மக்களுடைய தாயக ஒருமைப்பாடு சிதைக்கப்பட வேண்டுமெனக் குரல் கொடுத்தது கிடையாது. (சிறி லங்காப் படைகளுடன் இவர் இணைந்து வேலை செய்த போது நடைமுறையில் அவரது செயல் தாயக ஒருமைப்பாட்டைச் சிதைப்பதற்கே உதவிற்று என ஒருசாரார் கூறலாம். ஆனால் இங்கு வலியுறுத்த முனையும் விடயத்திற்கு

ராசீக் கிழக்கைப் பிரி என அறிக்கை மேல் அறிக்கை விடவில்லை என்பது தான் முக்கியம்).

எம்மைப் போன்றவர்கள் ஒரு காலத்தில் மட்டக்களப்பிற்கெனத் தனி இயக்கம் தொடங்கிய போதும் அதை தமிழ் பேசும் மக்களது தாயக ஒருமைப்பாட்டை காக்கின்ற ஒரு விடுதலை அமைப்பாகவே கருதினோம். பின்னர் விடுதலைப் புலிகள் ஏனைய இயக்கங்களைத் தடை செய்து தாக்குதல்களில் ஈடுபட்டபோதும் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தைப் பிரி என்று யாரும் கிளம்பவில்லை. ஆனால் இன்று கிழக்கு தனியாக வேண்டும் என்ற கூச்சலோடு புறப்பட்டுள்ளார் புலிகளின் முந்நாள் தளபதி. தமிழ்த் தேசியத்தில் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியின் பிரதிபலிப்புத்தான் கருணா என்ற நபர். இது மட்டுமன்று இன்று சிங்கள மேலாண்மையாளரால் இனப் படுகொலையின் விளிம்பிற்குத் தள்ளப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தை அணிதிரட்டி மிக வெற்றிகரமான ஒரு ஆயுதப் போராட்டத்தை நடத்துவதற்கு தமிழ்த் தேசிய உணர்வும் அதன் வழிப்பட்ட கருத்தியலும் அடித்தளமாயிருந்தன என்ற உண்மை ஒரு புறம்.

அதேவேளை பிராந்தியம், மதம், வர்க்கம் என தமிழ் பேசும் தாயக மக்களை கூறுபோடக் கூடிய அக முரண்பாடுகளை தெளிவுடன் மேவி, இல்லாது செய்யக்கூடிய ஆற்றல்மிக்கதொரு கருத்தியலாக தமிழ்த் தேசியத்தை வளர்த்தெடுக்கத் தவறியதன் விளைவுகளை நாம் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாகச் சந்தித்து வந்துள்ளோம் என்ற உண்மையை நாம் மறுபுறம் நோக்கவேண்டும்.

முஸ்லிம் மக்களை அந்நியப்படுத்தி சிங்கள மேலாண்மையாளரின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு எமது போராட்டம் ஆட்படுவதற்கும் இன்று பிராந்தியப் பிரிவினை பேசும் ஒருவர் உருவாகியதற்கும் அடிப்படைக் காரணம் தமிழ்த் தேசியம் பற்றி எம்மிடையே நிலவி வரும் விமர்சனமற்ற அறிவியல் வரட்டுத்தனமே அன்றி வேறில்லை.

வெளியிலிருந்து இன அழிப்பை நோக்கிய ஒரு இராணுவ அச்சுறுத்தல் தோன்றும் போது அக முரண்பாடுகள் தாமாக மறைந்து போய் சாதி, மதம், பிராந்தியம், வர்க்கம் என்பவற்றை மேவிய ஒரு தமிழ்த் தேசிய ஒருமைப்பாடு இயல்பாகவும் தானாகவும் தோன்றி விடும் என்ற கருத்தையும் நாம் இங்கு நோக்க வேண்டும்.

எதிரி முட்டாளாக இருக்கும் வரைதான் இந்தக் கருத்து சரிப்படும். எம்மிடையே இருக்கின்ற அனைத்து அகமுரண்பாடுகளையும் சிங்கள மேலாண்மையாளர் சரியாகவும் நுணுக்கமாகவும் இனங்கண்டு அதனடிப்படையிலான போரியல் அணுகுமுறையை கைக்கொள்வார்களேயானால் நாம் பல நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிவரும். எமது அகமுரண்பாடுகள் போர் தொடங்கியவுடன் தாமாகவே மறைந்துவிடும் என்ற எடுகோளின் அடிப்படையில் யாரும் செயற்பட முடியாது. சிங்கள மேலாண்மையாளர் எமது அகமுரண்பாடுகளை நுணுகிக் கற்க இன்று முன்நிற்கின்றனர். கருணா புலிகளை விட்டுப் பிரிந்தபோது மட்டக்களப்பினுடைய சாதியமைப்பு, அதன் குடிமுறைகள், அவை யாழ்ப்பாணச் சமூக அமைப்பிலிருந்து எங்ஙனம் வேறுபடுகின்றன என்பதைப் பற்றி ஒரு ஆய்வரங்கு நடைபெற்றதை நாம் கவனிக்க வேண்டும். (ஆனால் அதில் உரையாற்றிய பேராசிரியர் கணநாத் ஒபயசேகர கூறிய முடிவுரை ஒழுங்கு செய்தவர்களுக்குப் பிடிக்கவில்லை என்பது வேறு விடயம்).

தமிழ்த் தேசியமானது தமிழ் பேசும் சமூகத்தின் அகமுரண்பாடுகளைத் தீர்த்து அதைச் சரியான அரசியல் பாதையில் அணிதிரட்டிடக்கூடிய ஒரு கருத்தியலாக வளர்த்தெடுக்கப்படாமல் அதன் பாட்டிலேயே விடப்படுமானால் சந்தர்ப்பவாதிகளின் நுனி நாவில் புரட்டப்படும் ஒரு வெற்றுச் சொற்றொடராக அது இருக்குமாயின் - எதிர்காலத்தில் மீண்டும் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏற்படபோகும் இன அழிப்புப்போர் அச்சுறுத்தல் கூட எமது சமூகத்தை ஒன்று திரட்டுவதற்கு போதாததாகிவிடும்.

1983 இலே நாம் மாபெரும் இன அழிப்பு முயற்சி ஒன்றை எதிர்கொண்டோம். சிங்கள மேலாண்மையாளரின் படைகள் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை அழிப்பதற்கு முனைப்புடன் நின்ற காலமது. நானும் எனது நண்பர் ஒருவரும் புத்தூர் பகுதியில் சிறி லங்காப் படையினரின் சுற்றி வளைப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள எண்ணி பற்றைக் காடும் கட்டாந்தரையுமாகக் கிடந்த ஒரு பக்கமாக ஒளித்து ஓடினோம். அங்கு ஒரு குக்கிராமம். பொழுது சற்றுச் சாய்ந்ததும் ஊருக்குள் சென்றோம். தண்ணீர் தாகம் எமக்கு. ஆனால் அங்கிருந்தவர்களுக்கு நாம் அவர்களிடமிருந்து நீர் அருந்துவோமா என்று சந்தேகம். வெளியூரவராகிய எமக்கு இது அதிசயமாகவிருந்தது.

எனவே அவ்வூர் மக்களைப் பற்றி அறியும் ஆவலிலும் அரசியல் கூட்டம் ஒன்றை நடத்தும் நோக்கிலும் நாம் அன்றிரவு அங்கேயே தங்கிவிட்டோம். பனி நிலவில் கோப்பாய் வெளியிலிருந்து வீசிய காற்றின் சரசரப்பில் அம்மக்கள் கூறிய கதை தேச விடுதலைக் கனவுகளையே நெஞ்சில் நிறைத்திருந்த எம்மைத் திடுக்கிட வைத்தது. அவர்கள் காணியற்ற விவசாயக் கூலிகள். தமிழ்ச் சமூகத்தின் பெரு விழுமியமெனப் போற்றப்படும் கல்வி அவர்களுக்கு மறுக்கப் பட்டிருந்தது. இதை மீறி அவர்களுக்காக அமைக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலைகள் எரிக்கப்பட்டன. இந்த வேளையில் தென்னிலங்கையிலிருந்து அங்கு ஒரு சிங்களப் பௌத்த பிக்கு சென்றார். க.பொ.த. சாதாரண தரம் வரை வகுப்புகள் கொண்ட கல்விக் கூடத்தை அவர் அங்கு நிறுவினார். பிக்குவின் செல்வாக்கிற்குப் பயந்த உயர் குடியினர் அதில் கை வைக்கவில்லை. அவ்வூர் மக்கள் பௌத்தத்தை தழுவினர். சிங்களம் கற்றனர். அவர்களுக்குத் தமிழ் தேசியம் பற்றித் தெரியாது. நாம் திகைத்தோம்.

எமது தேச விடுதலைப் போராட்டம் என்பது எங்கனம் ஒரு சமூக, சாதி ஒடுக்குமுறைகளை உடைத்தெறியும் குறிக்கோளையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பன போன்ற பல விடயங்களையும் விளங்கப்படுத்தி அவர்களைப் போன்று

இழப்பதற்கு ஒன்றுமில்லாத உழைக்கும் மக்களே ஒரு விடுதலைப் போரின் இறுதி வெற்றி வரை சமரசத்திற்கு இடங்கொடாது போராடுவர் என்பதையும் நாம் எடுத்துரைத்து அம்மக்களோடு அளவளாவி முடித்தபோது சாமக்கோழி கூவிவிட்டது. இப்படியாக யாழ்ப்பாணத்தில் பல ஊர்கள் தமிழ்தேசிய விடுதலைப் போராட்டத்தோடும் அதன் கருத்தியலோடும், படித்த தமிழ், நடுத்தர வர்க்கங்களிடையே அது அன்று ஏற்படுத்திய உணர்வலைகளோடும் எந்தத் தொடர்புமற்றிருந்தன.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்று, வன்னியின் சில பகுதிகளிலும் மட்டக்களப்பில் இரு இடங்களிலும் தமிழ் தேசிய எழுச்சியோடு எந்தத் தொடர்புமின்றி சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்ட மக்கள் இருந்த கதை பல தமிழ்த் தேசிய வாதிகளுக்கு அன்று தெரிந்திருக்கவில்லை. 1983 இல் சிங்கள மேலாண்மையாளர் எம் மண் மீது கட்டவிழ்த்து விட்ட இன அழிப்புப் போர் எம்மிடையே வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்களை இயல்பாகத் தமிழ்த் தேசியத்தின் பால் அணிதிரட்டிடவில்லை. மாறாக, தமிழ்த் தேசியம் என்பது அன்று கடுமையான மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. அதை ஒரு குறுகிய படித்த யாழ் நடுத்தர வர்க்கக் கருத்தியல் என்ற நிலையிலிருந்து மாற்றுவதற்கும், அதை அனைத்துத் தமிழ்பேசும் மக்களுக்கான கோட்பாடாக்குவதற்கும், அவர்களுடைய சமூகச் சிக்கல்களை எதிர்கொள்வதற்கு ஏற்றவகையிலும் பலர் தொடர் முயற்சிகளை மேற்கொண்டனர். இதன் விளைவாகவே எமது தாயகத்தின் மூலைமுடுக்குகளிலிருந்த மக்களையெல்லாம் சாதி, மத, பிராந்திய, வர்க்க வேறுபாடுகளுக்கப்பால் சிங்கள மேலாண்மையின் ஒடுக்குமுறைக்கெதிராக அணிதிரட்டக் கூடியதாயிற்று.

ஒரு சந்தர்ப்பவாதத் தலைமையின் கையிலிருந்து பறித்தெடுத்து அதன் வீச்செல்லைக்கு அதுகாலவரை உட்படாதிருந்த மக்களிடமும் அதைக் கொடுக்க எடுக்கப்பட்ட கருத்தியல் முயற்சிகள் இல்லாது இருந்திருந்தால் தமிழ்த் தேசியம் இன்று வரண்டு சுருங்கியிருக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் ஆட்சி பீடமேறிய போது தமிழ்த் தேசியம் வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைத்து விட்டதாக அறிஞர் அண்ணாத்துரையும் அவரது சீடர்களும் அன்று கூறினர். நடந்தது என்ன? அதன் பிறகுதான் தமிழகத்தின் பல பகுதிகளிலும் சாதி, வர்க்க ஒடுக்கு முறைகளுக்குகெதிரான கிளர்ச்சிகள் வெடித்தன. நக்சலைட்டுகளின் (ஆயுதமேந்திய இடதுசாரிப் புரட்சி அமைப்புகள்) தலைமையில் தமிழகத்தின் பெரும்பாலான வறிய விவசாயக் கிராமங்கள் அணிதிரண்டன. இது தி.மு.க. பேசிய தமிழ்த் தேசியத்தின் தோல்வியின் வெளிப்பாடே. இந்திய மத்திய அரசின் பார்வை எமது போராட்டத்தின் பக்கம் திரும்புவதற்கு முன்னர் இந்த நக்சலைட்டுகளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சமரசத் தமிழ் தேசிய வெற்றியை நிராகரித்த பெருஞ்சித்திரனார் போன்றவர்களுமே எம்மை தமிழகத்தில் ஆதரித்தவர்கள் என்பதை நாம் நோக்கவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தமிழ்த் தேசியத்திற்கு அடித்தளமாக இருந்த தமிழக நடுத்தர வர்க்கத்திற்கு இன்று தமிழ் மொழியும், பண்பாடும் தனது சமூக எழுச்சிக்கு தேவையற்றவையாகிவிட்டன. அது இன்று ஆங்கில மோகத்தில் மிகக் கேவலமாக உழல்கிறது.

அதன் உச்ச வெளிப்பாடாக சன் டி.வி. தமிழ் மொழியையும் தமிழ் அடையாளத்தையும் படுகொலை செய்து வருகிறது. இங்கு பழமை வாதிகள் போல 'ஐயகோ! நமது மொழியும் கலாசாரமும் அழிகின்றன' எனப் புலம்புவதில் பயனில்லை. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவில' என்பது நந்நூலாரின் கருத்து. ஆனால் தமிழ்த் தேசியம் என்பது இன்று அரசியல் கலாச்சார சமரச நிலைக்கு வந்துவிட்ட ஒரு நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தின் கையிற் சிக்குண்டு தனது போர்க்குணத்தையும் சாதி, மத, பிராந்திய பொருளாதார பேதங்களை மேவிய கருத்தியல் வீச்சையும் இழந்து பரிதவிப்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

உரிமைகளைப் பெறுவதை விட தாம் தற்போது அனுபவிக்கின்ற சலுகைகளைப் பாதுகாப்பதில் தீவிர

அக்கறையுள்ள ஒரு வர்க்கத்தின் கையில் தமிழ்த் தேசியக் கருத்தியல் இன்று சிக்கிக் கொண்டிருக்கிறது. இதன் ஒரு வெளிப்பாடுதான் கருணா என்ற மனிதன். சிங்கள மேலாண்மை மற்றும் மேலைத்தேய ஏகாதிபத்தியச் சுரண்டல் என்பவற்றுக்கெதிராக தனது அடையாளத்தையும், தனது மொழி, கலாசார, சுயமரியாதையையும் பேணுவதில் எந்த அக்கறையுமின்றிக் கிடக்கும் ஒரு படித்த நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தின் தயவில் தமிழ்த் தேசியக் கருத்தியல் தங்கியிருக்க நேரிடுமாயின் நமது கதி அதோகதியாகும். எதிர்காலத்தில் சிங்கள பௌத்த மேலாண்மையின் ஒடுக்கு முறையைச் சந்திக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது எமது மக்களை அணி திரட்டக் கூடிய வலுவை இன்று தமிழ்த் தேசியம் இழந்து வருகிறது.

மேல் நிலையாக்கமடைந்து வரும் நமது நடுத்தர வர்க்கங்கள் தமது குழந்தைகளுக்கு வைக்கும் கோமாளித்தனமான அர்த்தமற்ற பெயர்களும், சன் டி.வி. கலாசாரமும் தமிழ்த் தேசியத்தின் எதிர்கால நெருக்கடியை எதிர்வு கூறி நிற்கின்றன. இப்படியாக தமிழ்த் தேசியக் கருத்தியல் வலுவிழந்து வரும் சூழலில் சாதி, மதம், பிராந்தியம் போன்ற பிரிவுகள் தலைதூக்குகின்றன. (அண்மையில் புலிகளைச் சார்ந்த ஒருவர் வெளியிட்ட நூலொன்றில் அவருடைய சாதி பேசப்படுமளவிற்கு நிலைமை போயுள்ளது).

தமிழ்த் தேசியத்தை கடுமையான மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது. அதை நாம் செய்யாவிடின் வரலாறு எம்மைக் கவிழ்த்து விடும்.

10.04.2005

## –9– எரிக் சொல்ஹெய்மின் வருகைகளும் தமிழ்த் தேசியத்தின் நெருக்கடிகளும்

நோர்வேயின் சிறப்பு சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வருகிறார். போகிறார். அவர் வரும்போதும் போகும்போதும் தமிழ் ஊடக ஆரவாரம் ஒன்று கிளம்பும். அது மக்களிடையே ஏதோ நடக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்பை மீண்டும் ஏற்படுத்தும். அவர் வந்த வழியே திரும்பிப் போவார். ஊடக ஆரவாரங்கள் அடங்கும். பின்னர் வழமைபோல அது, இது என்று எமது வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கும். சொல்ஹெய்ம் ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு நல்ல மாற்றம் விரைவில் ஏற்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டாகக் கூடிய வகையில் அறிக்கை விடுகிறார் அல்லது செய்தியாளர்களுக்குக் கருத்துச் சொல்கிறார்.

இன்னும் சில கிழமைகளில் சுனாமிப் பொதுக் கட்டமைப்பு வந்து விடும் என அவர் இம்முறை இங்கு வருவதற்கு முன்னர் ஒரு வெளிநாட்டுச் செய்தி நிறுவனத்திற்குச் செவ்வி கொடுத்திருந்தார். அது மட்டுமன்றி புலிகளின் மட்டு – அம்பாறை படைத் தளபதி பானுவைச் சந்தித்த பின்னர் பொதுக் கட்டமைப்பொன்றை உருவாக்க வேண்டுமென்று சிறி லங்கா அரசும், விடுதலைப் புலிகளும் மிக ஆர்வத்துடன் இருப்பதாக அவர் அழுத்திக் கூறினார்.

பொதுக் கட்டமைப்பு கிடைக்கப் போவதில்லை.

ஒரு மண்ணாங்கட்டியும் கிடைக்கப் போவதில்லை என்பதுதான் சிறி லங்காவின் அரசியல் நுனிப்புல் மேய்ந்தவர்களுக்குக் கூட மிக மிக அப்பட்டமாகப் புரிந்திடக் கூடிய உண்மையாகும். இதில் யாருக்கும் இம்மியளவும் சந்தேகம் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக பொதுக் கட்டமைப்பு வழங்கப்பட்டால் தாம் சந்திரிகாவின் அரசிலிருந்து வெளியேறி விடுவோம் என ஜே.வி.பி. மிகத் தெளிவாக அமெரிக்கப் பிரதிநிதி கிறிஸ்ரினா ரொக்காவிடம் கூறிவிட்டது.

இங்கு நாம் சொல்ஹெய்ம்மைக் கடிந்து கொள்ள முடியாது. எம்மை இலவு காத்த கிளிகளாக்கும் நோக்குடன்தான் அவர் இங்கு வருகிறார் என்றோ, சந்திரிகா அரசு எமது காதில் வழமைபோல் பூச்சுற்றுவதற்கு அவர் மலர் கோத்துக் கொடுக்கிறார் என்றோ நாம் அவரைக் கண்டனம் பண்ண முடியாது. ஏனெனில், அவர் எமது உடன்பாட்டுடனேயே இலங்கையின் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான அனுசரணையாளராக அமர்த்தப்பட்டார். ஏதோ ஒரு தீர்வோ அல்லது அதை நோக்கிய முன்னேற்றமோ வருகிறது என்றுதான் அவர் சொல்வார். சொல்ல முடியும். அவருடைய கதையில் எடுபட்டு பேயராகுவதா இல்லையா என்பது எம்மைப் பொறுத்தது.

பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துமாறு பல வெளிநாடுகள் சிறி லங்கா அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. புலிகளின் தடையை நீடித்து வரும் அமெரிக்கா கூட இதையே வலியுறுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி பொதுக் கட்டமைப்பு சரிவராவிடின் புலிகளுக்கு நேரடியாகவே உதவி வழங்குவதற்கான ஏற்பாடொன்று உண்டாக்கப்பட வேண்டுமென சில நாடுகள் கருதத் தலைப்பட்டுள்ளன. இதைத் தடுப்பதற்கு சிறி லங்கா அரசிற்கு நேரடியான எந்த வழியும் தற்போது இல்லை. எனவே, இக்கட்டமைப்பு உண்டாக வேண்டும் என்பதில் தானும் அக்கறையாக இருக்கிறேன் என சிறி லங்கா அரசு அறிக்கை விடுகிறது. அக்கறையாக இருக்கிறோம். ஆனால் சில விடயங்களைப் பேசி முடிவெடுக்க வேண்டியிருக்கிறது எனக் கூறிக் கொண்டிருந்தால் காலம்

எப்படியாவது உருண்டோடிவிடும். அந்த ஓட்டத்தில் உதவி வழங்கும் நாடுகளும் புலிகளும், தமிழ் மக்களும் பொதுக் கட்டமைப்பு என்ற விடயத்தை வழமைபோல மறந்து விடுவார்கள் என சிறி லங்கா அரசு கணக்குப் போடுகிறது. சொல்ஹெய்மினுடைய வருகைகளும் கூற்றுகளும் இந்தக் கணக்கிற்கு மிகவும் வலுச் சேர்க்கின்றன.

வடக்குக் கிழக்கின் உடனடி மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றுவதற்கென ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது (SIHRN) உங்களுக்கு ஓரளவு ஞாபகம் இருக்கும். அதையும் அதன் பின் வந்த சில ஒழுங்குகளையும் சிறி லங்கா அரசு இப்படித்தான் பம்மாத்திற்று. அப்போதும் சொல்ஹெய்ம் வந்து போனார். இருதரப்பும் ஏதோவொரு உடன்பாட்டை அண்மித்துக் கொண்டிருப்பதாக அறிக்கை விட்டார். அவருடைய ஒவ்வொரு வருகையையும் விழுந்தடித்துக் கொண்டு எமது ஊடகங்கள் ஆரவாரப்படுத்தின. (இதில் தமிழ்நெற்றும் விதிவிலக்கல்ல) நடந்ததோ ஒன்றுமில்லை. மாறாக தமிழ் பேசும் மக்களை பேய்க்காட்டிக்கொண்டு அவர்களை ஒற்றையாட்சி அமைப்பிற்குள் வாழப் பழக்குவதற்கு சொல்ஹெய்மின் வருகைகளும், அதையொட்டி எழும் எதிர்ப்பார்ப்புக்களும் அரிய வாய்ப்பாக அமைந்தன, அமைகின்றன.

ஏலவே கூறியதுபோல இதில் நாம் நோர்வேயையோ அதன் சிறப்புத் தூதுவரையோ குற்றஞ்சாட்டவும் முடியாது. குறை கூறவும் முடியாது. அவர்கள் அப்படித்தான் செய்வார்கள். இதில் அவதானமாக இருக்கவேண்டியது நாங்களே. ஏன் அவதானமாக இருக்கவேண்டும் என்ற கேள்வி உடனே தோன்றும். முதலாவது சொல்ஹெய்மின் வருகையைச் சுற்றி உண்டாகும் ஊடக ஆரவாரத்தில் மக்கள் அறிந்திருக்க வேண்டிய சில அடிப்படை உண்மைகள் அடிப்பட்டு போகின்றன.

இந்த உண்மைகள் மறைந்து போவது நுட்பமாக செயற்படும் சிங்கள மேலாண்மையாளர்களுக்கு மிக வாய்ப்பாகிவிடுகிறது. ஏன்? பொதுக் கட்டமைப்பு விடயத்தை

எடுத்துக் கொள்வோம். வாழ்விட அழிவுகள், இடப்பெயர்வு, அகதிகள் என்பவற்றைப் பற்றியதே இந்தப் பொதுக் கட்டமைப்பாகும். இந்த மூன்றையும் எப்படி எதிர்கொள்வது, எப்படி இவற்றிற்குத் தீர்வு காண்பது என்பது பற்றியதாகவே புலிகளுக்கும் சிறி லங்கா அரசுக்குமிடையில் நடைபெற்ற ஆறு சுற்றுப் பேச்சுக்களும் அமைந்திருந்தன. நடந்ததென்ன? ஒன்றுமேயில்லை. வாழ்விட அழிவுகளைச் சரி செய்வது என்றாலோ, இடம்பெயர்ந்த மக்களைக் குடியமர்த்துவது என்றாலோ தேவைப்படுவது முதலில் நிலம். பின்னர் பணம். இவையிரண்டுமே சிறி லங்கா அரசின் அசைக்க முடியாத கட்டுப்பாட்டில் உள்ளன. நிலத்தையும் நிதியையும், இவையிரண்டையும் உரிய முறையில் பயன்படுத்துவதற்குத் தேவையான நிறைவேற்று அதிகாரத்தையும் (Executive Power) எந்தவொரு கட்டமைப்பிற்கும் பகிர்ந்தளிப்பதை சிறி லங்காவின் அரசியல் யாப்பு தடை செய்கிறது. இதனாலேயே போரில் அழிந்து போன எமது வாழ்விடங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கும், இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கும் எந்தவொரு வலுவானதொரு கட்டமைப்பை உருவாக்குவதில் புலிகளும் ரணில் அரசும் தோல்வி கண்டனர். இவ்வாறான ஒரு கட்டமைப்பு சிறி லங்காச் சட்டத்திற்கு முரணானதாக இருக்கும் என அப்போது சிங்களச் சட்ட வல்லுநர்கள் சுட்டிக் காட்டினர். அது மட்டுமன்றி, அப்படியொரு கட்டமைப்பு உருவாக்கப் பட்டால் அதை சிறி லங்காவின் உயர் நீதிமன்றம் செல்லுபடியற்றதாக்க வேண்டுமென சில சிங்கள மேலாண்மையாளர்கள் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாகவும் அச்சுறுத்தினர். இவையெல்லாம் ரணில் அரசுக்கு நல்ல சாட்டாகி விட்டன.

சுனாமிப் பொதுக்கட்டமைப்பு என்பதும் வாழ்விட அழிவுகள், இடப்பெயர்வு, அகதிகள் என்பவை பற்றியதே. எனவே அதை ஏற்படுத்துவதிலும் மேற்கூறிய அடிப்படை முட்டுக் கட்டைகள் உண்டாகுவதை எவ்வகையிலும் தடுக்க முடியாது. சுனாமிப் பொதுக் கட்டமைப்பு என்பது வெறுமனே வெளிநாட்டு உதவிப் பணத்தைப் பெறுவது மட்டுமல்ல. அது அடிப்படையில் நிலம் பற்றியதாகும். மக்கள் குடியமரும்

இடங்களுக்கு மின்சாரம், நீர் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பது பற்றியதாகும். இவற்றைவிட மேலாக மேற்படி அலுவல்களைச் செய்வதற்கான அதிகாரம் பற்றியதுமாகும் இந்த சுனாமிப் பொதுக் கட்டமைப்பு விடயம். சிறி லங்காவின் அரசியல் யாப்பு முற்றாகத் தூக்கியெறியப்படாமல் ஒரு வலுவுள்ள சுனாமிப் பொதுக் கட்டமைப்பு எப்படிச் சாத்தியம் என்பது கேள்விக்குறி. இதனாலேயே சிறி லங்கா அரசு சுனாமிப் பொதுக் கட்டமைப்பு விடயத்திலும் மிக நுட்பமாகப் பம்மாத்து விடத் தொடங்கிவிட்டது. இந்தப் பேய்க்காட்டலுக்கு சொல்ஹெய்மின் வருகைகளும் அறிக்கைகளும் வலுச்சேர்க்கின்றன என்பதுதான் இங்கு மீண்டும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இதில் இருக்கும் ஒரு பேராபத்தைப் பலரும் கவனிக்கத் தவறுகின்றனர். 1976 இலேயே நாம் தனித் தமிழ் ஈழமே எமது சிக்கலுக்கு ஒரே தீர்வு என்ற நிலைக்குத் தள்ளப்படுவதற்கு அன்று எமக்கிருந்த காரணங்களைவிட இன்று 29 ஆண்டுகள் கழித்து மிக வலுவான காரணங்கள் காணப்படுகின்றன. ஆனால் அப்போதிருந்த அரசியல் ஒருமைப்பாடு, வெகுசன எழுச்சி, முனைப்பு என்பன இன்று மழுங்கிக் காணப்படுகின்றன. அது மட்டுமன்றி அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் எமது மக்களிடையே இருந்த அரசியல் முனைப்பும் எழுச்சியும் கூட மழுங்கிப் போவதை நாம் காண்கிறோம். இதற்குப் பல காரணங்கள் உள்ளன. காலத்திற்குக் காலம் ஏதோ ஒரு தீர்வு வரப்போகிறது என ஏற்படுத்தப்படும் எதிர்பார்ப்புகளும் இதில் ஒன்று என்பதுதான் உண்மை. நாங்கள் பேயராக்கப்படுகிறோம் என்ற தன்மான உணர்வு மக்களிடையே கூர்மையடைந்தமையாலேயே எமது போராட்டம் எழுச்சியடைந்தது. அந்த அரசியல் எழுச்சியும் முனைப்புமே எமது போராட்டம் தடம்புரளாமல் இருக்க உதவின. இவை மழுங்கிப் போகுமாயின் நாம் சலுகைகளுக்காகச் சோரம் போகின்ற கேவலமானதொரு கூட்டமாகி விடுவோம். எந்த ஒரு அரசும் அரசியல் ஒருமைப்பாடும் அறிவுமுள்ள ஒரு சமூகத்தை ஏமாற்றும்போது அந்த அரசுக்கும் அந்த மக்களுக்கும் முரண்பாடு கூர்மையடைவது தவிர்க்க முடியாது. இவ்வாறான

முரண்பாடுகள் ஒரு கட்டத்தை அடையும் போது அவை தமக்கெதிரான போராட்டங்களாக வெடிக்காமல் இருக்க அரசுகள் பல வழிகளைக் கையாள்கின்றன. அவற்றில் ஒன்று மாய எதிர்பார்ப்புகளை உண்டாக்குவதாகும்.

கருணா குழுவின் சாட்டில் சிறி லங்காப் படைகள் கிழக்கில் கெடுபிடிகளை அதிகரித்து வருகின்றன. பொருளாதார வளர்ச்சியும் வேலைவாய்ப்புகளுமின்றி வடக்கு – கிழக்கில் எமது மக்கள் இன்னமும் வாழ்கின்றனர். போர் அழிவுகள் இன்னமும் மாறாது உள்ளன. யாழ்ப்பாணத்தில் தமது காணிகளையும், வீடுகளையும், ஊர்களையும் சிறி லங்காப் படைகளிடம் பறிகொடுத்த பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்னமும் நாதியற்றுக் கிடக்கின்றனர். தமிழ்மொழிப் புறக்கணிப்பு இன்னமும் தொடர்கிறது. இப்படியே பல இன்னல்களைக் கூறிச் செல்லலாம்.

இவற்றையெல்லாம்விட சுனாமியும் பேரழிவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. இன்றுவரை எதற்கும் தீர்வில்லை. ஆனால், இவையெல்லாம் எமது மக்களிடையே எந்தவிதமான அரசியல் கோபத்தையும் உண்டாக்கவில்லை. இந்த இன்னல்கள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு எதிராக அவர்கள் அணி திரளவில்லை. திரட்டப்படுவதிலும் அதிகம் நாட்டம் காட்டுவதில்லை. யாழ்ப்பாணத்திலோ, மன்னாரிலோ, வவுனியாவிலோ, மட்டக்களப்பிலோ அரசியல் பேரணிகளுக்கு வருகின்ற மக்களின் தொகை வீழ்ச்சியடைந்துள்ளது என்பது மறைக்கமுடியாத உண்மை. அவர்களிடம் விடுதலை உணர்வு இருக்கின்றது. ஆனால், அது அரசியல் ரீதியாக அணி திரளும் அளவுக்கு எழுச்சியுள்ளதாக இல்லை.

எரிக் சொல்ஹெய்ம் வருகிறார். அவரைப் புலிகள் சந்திக்கிறார்கள். சிரித்துக் கொண்டே கைகுலுக்குகிறார்கள். எல்லாம் சுமுகமாகப் போகிறது என்பதுபோல் மகிழ்ச்சியாகப் பேசுகிறார்கள். இப்படியான செய்திப் பிம்பங்களை பொதுமக்கள் திரும்பத் திரும்பக் காணும்போது அவர்களை அறியாமல் உளவியல் தாக்கம் ஒன்று ஏற்படுவது இயல்பு. விரைவில் எமக்கு தீர்வு கிடைக்கப் போகிறது என்ற உளப்பாங்கை இந்தப்

பிம்பங்கள் மக்களிடம் உண்டாக்குகின்றன. அதை மேலும் வலுப்படுத்தும் வகையில் சொல்ஹெய்மின் கூற்றுக்களும் அமைந்துவிடுகின்றன. இவையெல்லாம் நமது மக்களிடையே எழக்கூடிய அரசியல் சூட்சுமங்களைத் தணிக்கின்றன. 'ஏதோவொரு தீர்வு அண்மித்துவிட்டது. எனவே நாம் எமது பாட்டில் இருப்போம்' என்ற அரசியல் மலட்டுத்தனம் அவர்களிடையே பரவுகிறது. புதிய மக்கள் படை (New People Army – NPA) என்பது எண்பதுகளில் உலகின் மிகப்பெரிய கெரில்லா இயக்கங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது. பிலிப்பைன்ஸ் நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அது போராடி வந்தது. கடந்த பல ஆண்டுகளாக NPA நோர்வேயின் அனுசரணையோடு பிலிப்பைன்ஸ் அரசுடன் அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகிறது. (அமெரிக்காவின் பின்னணியிலேயே நோர்வே அங்கும் அனுசரணையாளராக அமர்த்தப்பட்டது) NPA ஐ ஒரு பயங்கரவாத இயக்கமாக ஏலவே அமெரிக்கா தடைசெய்திருந்தது. அமைதிப் பேச்சுக்களில் குறிப்பிட்ட காலம் ஈடுபட்டு வந்தால் தன் மீதான தடையை அமெரிக்கா நீக்கும் எனவும், தனக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்குமெனவும் NPA எதிர்பார்த்திருந்தது. ஆனால், NPA இன் வளர்ச்சிக்கு அடித்தளமாக இருந்த பிலிப்பைன்ஸின் கிராமப்புற ஏழை மக்களிடம் காணப்பட்ட அரசியல் முனைப்பும் எழுச்சியும் பேச்சுக்கள் நடந்த காலத்தில் படிப்படியாக வீழ்ச்சியடையலாயின. இன்று NPA வலுவிழந்த ஒரு அமைப்பாக காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறது. NPA ஐ புலிகளோடு ஒப்பிடமுடியாதென சிலர் கூறலாம். படைபலத்தில் புலிகள் NPA ஐ விட பலநூறு மடங்கு வலுவுள்ளவர்களாக இருப்பது உண்மையாயினும், மக்களின் அரசியல் முனைப்பு வீழ்ச்சியடைவது பற்றிய யதார்த்தத்தை நாம் எதிர்கொண்டே ஆகவேண்டும்.

எமது போராட்ட எழுச்சி மக்களிடையே மழுங்கடிக்கப்படாமல் இருக்கவேண்டுமாயின், நாம் சில வேலைகளைச் செய்தல் நல்லது. முதலாவது நமது கையில் திட்டவட்டமாக எதுவும் கிடைக்கும்வரை நாம் அதுபற்றிய ஊடக ஆரவாரத்தைச் சற்றேனும் குறைக்க வேண்டும்.

பிழையான எதிர்ப்பார்ப்புக்களை மக்களிடம் ஏற்படுத்தும் செய்திப் பிம்பங்களை கூடியளவு தவிர்க்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக சிறி லங்கா அரசு எமக்கு எதையுமே தரப்போவதில்லை என்ற உண்மையை மக்களிடம் மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டும். அதிலும் குறிப்பாக சொல்ஹெய்ம் வந்துசெல்லும் ஒவ்வொரு முறையும் அதை நாம் உரத்துக் கூற வேண்டும்.

24.04.2005



## -10- தமிழரை அடக்க தமது இறைமையை அடகுவைக்கும் சிங்களத் தலைமைகள்

1977 பொதுத் தேர்தலில் தமிழீழத் தனியரசை நிறுவ மக்களிடம் ஆணை கேட்டுப் பெற்றது தமிழர் விடுதலைக் கூட்டணி. 1979 இல் மாவட்ட சபைகள் அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகளை அது சிறி லங்கா அரசுடன் ஆரம்பித்தது. இது தொடர்பான சட்ட விடயங்களை கலாநிதி நீலன் திருச்செல்வமும், தந்தை செல்வாவின் மருமகனான பேராசிரியர் ஜெயரட்ணம் வில்சனும் கையாண்டனர்.

தமிழரை ஏமாற்ற சிறி லங்கா அரசு பேச்சுவார்த்தைகளை மீண்டும் பயன்படுத்துகிறது. அவற்றை நீடிப்பதன் மூலம் தமிழ் இளைஞர்களைக் கொடூரமாக அடக்குவதற்கு வழிகோலுகிறது எனவும் கருதிய பேராசிரியர் வில்சன் தனிநாட்டுக்கான போராட்டத்தில் முழுமையாகக் குதிக்கும்படி கூட்டணியை வேண்டினார். (திரு. அமிர்தலிங்கமும் கலாநிதி நீலனும் அவருடைய அறிவுரையைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை என்பது வேறு விடயம்).

இதுமட்டுமன்றி அவர் சில முக்கிய வெளிநாட்டுத் தூதுவர்களிடம் தமிழரின் நிலைமையை எடுத்துரைத்தார். இதன்போது கொழும்பிலுள்ள சீனத்தூதுவரை சந்தித்து தனித் தமிழ் ஈழம் உருவாக்கப்பட்டால் அதனை அவரது நாடு எங்கனம் நோக்கும் என பேராசிரியர் வில்சன் வினவினார்.

தமிழீழம் உருவானால் அது சோவியத் யூனியனின் செல்வாக்கிற்கு உட்படவே வாய்ப்பு உண்டு எனவும் அதன் காரணமாக எண்ணெய் உற்பத்தி செய்யும் வளைகுடா நாடுகளுடனும், தனக்குச் சார்பான ஆபிரிக்க நாடுகளுடனும் தொடர்புகளைப் பேணுவது சீனாவிற்கு கடினமாகிவிடும் எனவும் சீனத் தூதுவர் தன்னிடம் தெரிவித்ததாக பேராசிரியர் வில்சன் கூறுகிறார். இக்கூற்றின் கேந்திர (Strategic) பெறுமானங்களை பகுத்தறிய வேண்டிய தேவை அப்போது பேராசிரியர் வில்சனுக்கோ, அவர் சார்ந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிக்கோ இருக்கவில்லை. ஆனால் இன்று எமது போராட்டம் முழுக்க முழுக்க ஒரு சர்வதேச பரிமாணத்தினுள்ளேயே தனது எதிர்காலத்தைக் கணக்கெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. தனது படைகளைக் கொண்டு புலிகளை அழித்து, தமிழரைத் தனது சிங்கள பௌத்த மேலாண்மையாட்சியினுள் மீண்டும் அமுக்கி, சோரம் போக இம்மியளவும் தயங்காத சூழலில் ஊறிப்போன மலையகத் தமிழ் அமைச்சர்கள் போன்ற தலைமைகளை எம்மிடையே உருவாக்கி எம்மை அடிமைப்படுத்தி ஆளலாம் என்ற நம்பிக்கையை சிறி லங்கா அரசு கணிசமாக இன்று இழந்துவிட்டது.

இதேவேளை சிறி லங்காவின் ஒற்றையாட்சி முறையை எந்த வகையிலும் மாற்றிட முடியாது, கூடாது என்பதையும் சிங்கள மேலாண்மை ஆட்சியாளர் அறிவர். ஆனால், தற்போதுள்ள சூழ்நிலையில் தமிழரை கடந்த அரை நூற்றாண்டு செய்தது போல் ஒரேயடியாகப் பேய்க்காட்டிட முடியாதென்பதையும் அவர்கள் உணர்கின்றனர். இவையனைத்தையும் வகுத்துக் தொகுத்துப் பார்க்கையில் தமிழரைக் கையாள்வதற்கு வெளிநாடுகளின் உதவியை நாடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. வரலாற்று நோக்கில் பார்க்கையில் இதைச் செய்வதற்காக சிங்கள மேலாண்மையாளர் சிறி லங்காவின் இறைமையை முற்றாக விட்டுக் கொடுப்பதற்குக் கூடத் தயங்கிட மாட்டார்கள் என்பது தெளிவாகப் புரியும்.

உலகின் வல்லரசுகளுக்கும், வல்லரசு நிலையை அடைய முனையும் நாடுகளுக்கும் இந்து மாகடல் எவ்வளவு முக்கியமானதென்பதும், அதனூடு செல்லும் பொருளாதார மற்றும் போரியல் முதன்மை வாய்ந்த கடற்பாதைகளின் சரி நடுவண் அமைந்துள்ள இலங்கை அவற்றின் தவிர்க்க முடியாத கணிப்புக்குரியதென்பதும் சிங்கள மேலாண்மையாளருக்கு நீண்டகாலமாகவே தெரியும். இதை அவர்கள் தேவை ஏற்படும் போதெல்லாம் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியே வந்துள்ளனர்.

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த நேரம் பெரும் விடுதலைக் கிளர்ச்சிகள் நடைபெற்று வந்த தனது காலனிகளை தொடர்ந்து வைத்திருப்பது பொருளாதார வகையில் பயனற்றது எனப் பிரித்தானிய ஏகாதிபத்தியம் உணரத் தொடங்கியிருந்த காலமது. அதேவேளை இக் காலனியாதிக்கத்துக்கு எதிரான விடுதலைப் போராட்டங்கள் தனது பொருளாதார மற்றும் போரியல் நலன்களைப் பாதிக்கக்கூடிய வகையில் வெற்றி பெற்றுவிடக் கூடாது என்பதிலும் அது அக்கறையாயிருந்தது. அதாவது தனது பெரும்பாக நலன்களைத் தொடர்ந்துபேண உடன்படும் தலைமைகளிடம், தான் கைவிட வேண்டிய காலனி நாடுகளின் ஆட்சியைக் கொடுக்க அது எண்ணிற்று. இதன் காரணமாகவே இந்தியாவில் ஜெர்மனிக்குச் சார்பாகவும் சோவியத் யூனியனுக்குச் சார்பாகவும் செயற்படுகிறார்கள் எனக் கருதப்பட்ட தேசிய விடுதலைக் கோட்பாட்டாளர்களையும், கிளர்ச்சிக்காரர்களையும் ஓரங்கட்டுமுகமாக காந்தியையும் நேருவையும் முதன்மைப்படுத்தி அவர்களிடமே பிரித்தானியா ஆட்சியையும் கையளித்தது.

ஆசியாவில் பிரித்தானியாவின் கடல் மேலாதிக்கத்திற்கு அன்று இலங்கை அடித்தளமாக இருந்தது. இரண்டாம் உலகப் போரின்போது தென்கிழக்காசியாவினூடாக ஜப்பான் தென்னாசியாவை நோக்கி மேற்கொண்ட பெரும் படையெடுப்பை எதிர்கொள்ளவென நிறுவப்பட்ட பிரித்தானிய அமெரிக்க கூட்டுக் கடற்படைத் தலைமையகம் திருமலையிலேயே அமைந்திருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

தென்கிழக்காசியாவின் வளங்கள், கடற்பிராந்தியங்கள் பாதைகள் என்பவற்றின் மீதும் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகியவற்றின் மீதும் தனது பிடியை வைத்திருப்பதற்கு இலங்கையில் தனது படைத்தளங்களும் பெரும் எரிபொருட் களஞ்சியங்களும் தொடர்ந்து பேணப்பட வேண்டும் என்பதில் பிரித்தானியா கவனமாக இருந்தது. இதன் காரணமாக இலங்கையைத் தனது காலனியாதிக்கத் தளையினின்றும் விடுவிப்பதாயின் அதற்கு முழு இறைமையைக் கொடுப்பதில்லை என்பதிலும் பிரித்தானிய ஏகாதிபத்தியம் உறுதியாயிருந்தது.

இதன் காரணமாக இலங்கைக்கு பகுதித் தன்னாட்சி வழங்கும் வகையில் செய்யப்படவிருந்த அரசியல் யாப்பு வரைபு முயற்சிகளுக்கு இன்றியமையாத அடித்தள நிபந்தனைகளாக பாதுகாப்பு வெளி அலுவல்கள் என்பவற்றை வரையறுத்து 1943 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் நாள் பிரித்தானியாவின் இராஜாங்க அமைச்சர் (Secretary of State) ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். 1943, இரண்டாம் உலகப் போர் மிக உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம். பிரித்தானிய அமெரிக்க ஆதிக்கத்தை முறியடித்து கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் ஜப்பானியப் படைகள் தென்னாசியாவை நோக்கி விரைவாக முன்னேறிக் கொண்டிருந்தன. எனவே இலங்கையில் தனது ஆதிக்கத்திற்குச் சவாலாக அமைந்திடக்கூடிய எவருடைய கையிலும் அரசியல் அதிகாரம் குறுங்காலத்திலோ நீண்டகாலத்திலோ போய்விடக் கூடாது என்பதில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் அப்போது கவனமாக இருந்ததில் வியப்பில்லை.

இலங்கையில் பிரித்தானிய காலனியாதிக்கத்தை முற்றாக ஒழித்திட வேண்டும் என அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மாத்திரமே குரலெழுப்பப்பட்டது. தென்னிலங்கையில் தீவிர இடதுசாரிகள் மாத்திரமே இக்கருத்தைக் கொண்டிருந்தனர். 1927 இலிருந்து குடாநாடெங்கும் கிளைவிட்டுப் பரவிய யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை இலங்கையிலிருந்து முற்றாக விரட்டியடித்து இலங்கையில் முழு இறைமையுள்ள தன்னாட்சி நிறுவப்பட வேண்டுமென தீவிரமாகச் செயலில்

இறங்கிற்று. 1930 ஆம் ஆண்டு இலங்கையில் அன்று எவரும் செய்யப் பயந்து நடுங்கிய ஒரு செயலை அது செய்தது. அவ்வாண்டு ஜூன் மாதம் பிரித்தானிய மன்னரின் பிறந்த நாள். இலங்கையிலுள்ள குடிமக்கள் அனைவரும் அதைக் கொண்டாடி தமது அரச விசுவாசத்தை வெளிப்படுத்திடும் நாளாகும்.

அன்று யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் பிரித்தானியக் கொடியைப் பொதுவிடத்தில் போட்டெரித்தனர். இதன் பின்னர் 1931 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இளைஞர் காங்கிரஸின் மாநாட்டில் இலங்கைக்கு முழுமையான தன்னாட்சி கிடைப்பதற்கு தம் உயிர்களைத் தியாகம் செய்தாயினும் நாட்டிலுள்ள அனைவரும் போராட வேண்டுமென அறை கூவல் விடுக்கப்பட்டது. அவ்வாண்டு பிரித்தானியர் அறிமுகப்படுத்திய டொனமூர் அரசியல் யாப்பு ஏகாதிபத்தியத்தின் பிடியை இலங்கையில் நீடிப்பதற்கான ஒரு சதியெனவும் அதனடிப்படையில் அமைக்கப்பட்ட அரசவையை (State Council) அனைவரும் புறக்கணிக்க வேண்டுமெனவும் யாழ் இளைஞர் காங்கிரஸ் கூறியது. இதற்கென குடாநாட்டில் அது செய்த பெரும் பரப்புரை முயற்சி வெற்றி பெற்றது. பிரித்தானியாவின் ஆதிக்கத்திற்கு இலங்கையில் விடுக்கப்பட்ட பெரும் சவால் அம்முக்கியமான காலகட்டத்தில் இதுவேயாகும். தென்னிலங்கையில் இளைஞர் காங்கிரஸின் விடுதலை அறைகூவலுக்கு ஆதரவு கிடைக்கவில்லை.

இது இப்படியிருக்க பிரித்தானியாவின் நலன்களை நன்கு புரிந்து கொண்ட சிங்கள மேலாண்மையாளரின் தலைவர் டி.எஸ். சேனநாயக்கா இரண்டாம் உலகப்போர் முடியும் தறுவாயில் இங்கிலாந்து சென்றார். தன்னிடமும் தனது சிங்கள மேலாண்மைச் சகபாடிகளிடமும் இலங்கையின் ஆட்சி கையளிக்கப்படுமாயின், தான் ஒரு விரிவான பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு உடன்பட முடியுமெனவும் அதற்கு வரக்கூடிய எதிர்ப்புக்களைச் சமாளித்து ஆட்சியைக் கொண்டு நடத்த முடியுமெனவும் உறுதியளித்தார். 1915 ஆம் ஆண்டு

முஸ்லிம்களுக்கு எதிராகச் சிங்களவரைத் தூண்டிவிட்ட ஒரு சிக்கலுக்குரிய பேர்வழியாக பல காலம் டி.எஸ். சேனநாயக்காவை கருதிவந்த பிரித்தானியா ஏகாதிபத்தியம் இப்போது அவரை அரவணைக்கலாயிற்று.

தனது ஏகாதிபத்திய விசுவாசத்தை மேலும் வெளிப்படுத்திடுவதற்காக 1943 இல் இலங்கைத் தேசிய காங்கிரஸினுள் இடதுசாரிகள் அனுமதிக்கப்பட்டதை எதிர்த்து டி.எஸ். சேனநாயக்கா அதிலிருந்து வெளியேறினார். இது அவர் மேற்கொண்ட நன்கு கணக்கிடப்பட்ட ஒரு செயலாகும் என சிங்கள வரலாற்றுப் பேராசிரியர் கே.எம்.டி. சில்வா கூறுகிறார். இலங்கையின் இடதுசாரிகளும் அந்நேரத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து முழுமையான தன்னாட்சி வேண்டும் எனக் கோரி வந்தனர். ஆனால், அவர்கள் யாழ். இளைஞர் காங்கிரஸ் போல் இதில் தீவிரமாக இருக்கவில்லை. சிங்கள இடதுசாரித் தலைவர்கள் அறைகூவலைப் புறக்கணித்து அரசவைத் தேர்தலில் நின்றனர்.

இடதுசாரிகளின் எதிரியாக தன்னை இவ்வாறு காட்டிக் கொண்டதன் மூலமும் ‘சிங்கள தேசத்தின் தந்தை’ தன்னை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் தவிர்க்க முடியாத விசுவாசியாக உருவாக்கிக் கொண்டார்.

பிரித்தானியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்வது தொடர்பாக டி.எஸ். சேனநாயக்காவும் அவரது நண்பர்களும் இங்கிலாந்து சென்று அரச அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். பிரித்தானியாவின் ஆசிய மேலாதிக்கத்தைப் பேணுவதற்கு வேண்டிய தளங்களையும் துறைமுகங்களையும் அத்துடன் இலங்கையினுடைய வெளிநாட்டு அலுவல்களையும் பிரித்தானியாவின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து வைத்திருப் பதற்கான ஒப்பந்தத்தை முழுமையாக ஏற்றுக் கொள்வதற்கு தானும் தன்னைச் சார்ந்த சிங்கள மேலாண்மைத் தலைவர்களும் தயாராயிருப்பதாக இங்கிலாந்தின் ஏகாதிபத்திய உயர் அதிகாரிகளை நம்பவைத்தார்.

இந்த அடிப்படையிலேயே இலங்கைக்கு தன்னாட்சி வழங்கப்பட்டபோது பிரித்தானியாவுடன் மேற்படி பாதுகாப்பு ஒப்பந்தமும் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் தன்னுடைய தேவைக்கு ஏற்ற படைகளையும் போர்த் தளபாடங்களையும் இலங்கையில் பிரித்தானியா வைத்திருக்கலாம் எனவும் அதற்கு உகந்த வகையில் இந்நாட்டின் கடல் மற்றும் வான் படைதளங்களையும் தொலைத் தொடர்பு வசதிகளையும் பயன்படுத்தலாம் எனவும் இவ்வொப்பந்தத்தின் கீழ் வரையறுக்கப்பட்டது. இதன்படி திருகோணமலை பிரித்தானிய கடற்படையின் தேவைகளுக்கும் கட்டுநாயக்க விமான நிலையம் பிரித்தானிய வான்படையின் பாவனைக்கும் விடப்பட்டது.

இலங்கையின் இறைமையை பிரித்தானியாவுக்கு இங்ஙனம் தாரைவார்த்ததற்கு எதிராக எழுந்த விமர்சனங்களுக்கு டி.எஸ். சேனநாயக்கா அவர்களும் அவருடைய சகபாடிகளும் பின்வருமாறு விளக்கமளித்தனர். 'இலங்கை ஒரு சிறிய நாடு, அதன் மீது இந்தியா மற்றும் சோவியத் யூனியன் படையெடுத்திடக்கூடிய வாய்ப்பு உண்டு. அதைத் தடுக்க பிரித்தானியாவுடன் மேற்படி பாதுகாப்பு ஒப்பந்தம் கட்டாயமாகத் தேவை' என அவர்கள் சாட்டுகின்றனர்.

மேற்படி ஒப்பந்தம் இலங்கையினுடைய இறைமையை இல்லாமல் செய்கிறது என்ற காரணத்தைக் காட்டி சோவியத் யூனியன் 1955 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் கிடைப்பதை தடை செய்து வந்தது. 1956 இல் ஆட்சிக்கு வந்த திரு. பண்டாரநாயக்க அவர்கள் தன்னுடைய ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோட்பாட்டை நிலைநாட்டுமுகமாக இவ்வொப்பந்தம் செல்லுபடியாகாது என்ற நிலைப்பாட்டை எடுத்தார். இக்காலகட்டத்தில் பிரித்தானியாவின் கையில் இருந்து சுயஸ் கால்வாய் பறிபோயிருந்தது. இதன் காரணமாக பிரித்தானியாவில் இருந்து மத்திய தரைக்கடல், செங்கடல், அரபிக் கடல் என்பவற்றின் ஊடாக செல்கின்ற கடற்பாதை மீதான பிரித்தானியாவின் பிடி அற்றுப்போனது.

இதனால் அந்நாடு இலங்கையில் தளங்களையும் படைகளையும் வைத்திருக்க வேண்டிய கட்டாயமும் இல்லாது போயிற்று. எனவே பண்டாரநாயக்க பாதுகாப்பு ஒப்பந்தத்தை உதாசீனம் செய்ததை பிரித்தானியா பெரிதுபடுத்த வேண்டிய தேவை ஏற்படவில்லை. எனினும் 1983 ஆம் ஆண்டிலே தமிழர்களுடைய போராட்டம் முனைப்பு பெறும் என்ற நிலையிலும் இதையொட்டி இந்தியாவின் தலையீடு ஏற்படலாம் என்ற அச்சத்திலும் அன்றைய சிறி லங்கா ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் பிரித்தானியாவினுடனான மேற்படி பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்ந்து செல்லுபடியாகும் எனவும் பிரித்தானியா அவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கைக்கு போர்உதவி செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

இவ்வளவு வரலாறும் ஏன் தேவையென்று ஒரு கட்டத்தில் நீங்கள் வினவலாம்.

ஒன்று பிரித்தானிய இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்தின் அடித்தளமான விடயங்களை இதுவரை இங்கு போட்டு வரும் பிராந்திய மற்றும் வல்லரசுத் தலையீடுகளுக்கு காரணமாகவுள்ளது என்பது.

இரண்டு மேற்படி விடயங்களே சோழர் கடல் கடந்த படையெடுப்புகளுக்கும் அவர்கள் இலங்கைத் தீவின் மீதும் கொண்டிருந்த மேலாதிக்கத்திற்கும் சீனா அன்றும் இன்றும் இந்நாட்டின் கீழ் கொண்டிருக்கும் அக்கறைக்கும் தற்போது இந்தியாவும் அமெரிக்காவும் ஜப்பானும் இங்கு காட்டும் கரிசனைக்கும் அடிப்படை என்பது.

மூன்றாவதும், முக்கியமானதுமாக நாம் இவற்றில் கவனிக்க வேண்டியது எமது விட்டுக்கொடுக்கப்படாத இறைமையாகும். இலங்கையில் அவ் உருவாக்கம் நடைபெற்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் (1947, 1972, 1978) நாம் எமது இறைமையை விட்டுக் கொடுக்கவில்லை. இதனுடைய அர்த்தம் என்னவெனில் சிங்கள தேசம் தமது இறைமையை விட்டுக் கொடுத்துச் செய்துகொண்ட, செய்ய முனைகின்ற எந்தவொரு பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கும் நாம் கட்டுப்பட வேண்டியவர்கள்

அல்ல என்பதாகும். இதன் காரணமாகவே எமது இறைமையைப் பேணும் உறுதியைக் குலைப்பதற்காக பல புல்லுருவிகளும் கயவர்களும் எம்மிடையே ஏவப்படுகின்றார்கள். இவர்களை நாம் இனங்கண்டு எமது இறைமையை இம்மியளவும் விட்டுக் கொடாதவர்களாக தன்மானத்துடன் வாழ வேண்டும்.

29.06.2003





## –11– சர்வதேச காப்பு வலை ஒரு போரியல் வலை

புலிகள் டோக்கியோ மாநாட்டிற்குப் போயிருந்தால் அது தமிழரின் நியாயமான அரசியல் எதிர்பார்ப்புகளுக்கு சிறி லங்கா அரசு நல்லதோர் தீர்வைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறது என்ற பொய்மையை மேலும் வலுவாகப் பரப்புவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அவரது சகபாடிகளுக்கும் நல்லதோர் வாய்ப்பாக அமைந்திருக்கும். எந்தவொரு தீர்வையும் தந்திட சிறி லங்கா அரசு தயாரில்லை. மாறாக பாலஸ்தீன மக்களை ஒரு சர்வதேச கெடுபிடிக்குள் மாட்டி வைப்பதற்கும் அதன்மூலம் அந்த மக்களின் போராட்டத்தை அழித்தொழிப்பதற்கு நோர்வேயின் உதவியோடு நடைபெற்ற அமைதிப் பேச்சுக்களை எவ்வாறு இஸ்ரேல் பயன்படுத்தியதோ அதே பாணியில் ரணில் விக்கிரமசிங்க அரசு வேலை பார்க்கிறது என்ற உண்மை அம்பலமாவதற்கு மேலும் பல மாதங்களாகியிருக்கும்.

புலிகள் ஜப்பான் போகாததால் அவர்களை மீண்டும் வழிக்கு கொண்டு வந்திடவே முன்னர் சொல்லப்பட்டதை விட கூடுதல் நிதி வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டது என்பதையும் நிர்வாகத்தின் நோக்கம் அரசியல் மற்றும் நிதி வழிப்பட்ட அழுத்தங்களின் ஊடாக வன்முறையை புலிகள் அரசியல் கருவியாகப் பயன்படுத்துவதை ஒரேயடியாக முடிவுக்கு கொண்டு வருவதேயாகும் என அமெரிக்க துணை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஆர்மிரேஜ் TBS-TV

தொலைக்காட்சிக்கு கூறியுள்ளதையும் நாம் கவனிக்க வேண்டும்.

மேற்படி நிதி வழிப்பட்ட அழுத்தம் என ஆர்மிரேஜ் குறிப்பிடுவது உண்மையில் நமது நியாயமான உரிமைகளை விட்டுக் கொடுத்து சிறி லங்காவின் சிங்கள மேலாண்மை அரசியல் யாப்பிற்குள் முடங்கிப் போவதற்கான கையூட்டே (இலஞ்சம்) ஆகும். நோர்வேயின் உதவியோடு இப்படித்தான் அமெரிக்காவும் இஸ்ரேலும் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத்தை மடக்கின. (அதன் கொடூரமான விளைவுகள் என்ன என்பதை நீங்கள் நாளாந்தம் செய்தியேடுகளில் காண்கிறீர்கள்) புலிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் பேச்சுவார்த்தைக்குத் திரும்பாவிட்டால் ஜப்பானில் உறுதியளிக்கப்பட்ட தொகையில் 80 விழுக்காட்டிற்கு மேல் சிறி லங்காவிற்கு வந்து சேராது என்பதையும் இதன் காரணமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தமது சர்வதேச காப்புவலையை மேலும் தமிழரின் குரல்வளையைச் சுற்றி இறுக்க முடியாது போகும் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

பொருளாதார ரீதியாகக் கவிழும் நிலையிலிருந்த சிறி லங்கா அரசை நிமிர வைக்க புலிகளின் ஒரு தலைப்பட்சமான போர்நிறுத்த அறிவிப்பே உதவியது எனவும் பேச்சுவார்த்தைக்கு ஒரு உறுதியான அடித்தளத்தை வழங்கும் வகையில் புலிகள் உள்ளக சுய நிர்ணய உரிமையையும் ஒஸ்லோ பிரகடனத்தின் மூலம் சமஷ்டியாட்சி முறையையும் ஏற்றுக் கொண்டனர் எனவும் ஆனால் பிரதமர் ரணில் இதற்கு கைமாறாக சரியான அரசியல் நடவடிக்கைகளை எடுத்து அவர்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதை விடுத்து சர்வதேச வலையொன்றை விரிப்பதிலேயே கவனமாக இருக்கிறார், இது அமைதிக்கு நல்லதல்ல என அரசியல் விஞ்ஞான பேராசிரியரும், சிங்கள தேசத்தின் நன்கறியப்பட்ட கருத்தாளர்களில் ஒருவருமான பேராசிரியர் ஜயதேவ உயங்கொட அண்மையில் எழுதியிருந்தார்.

உண்மை இப்படியாக இருக்க சில புலித் தலைவர்கள் ஏன் பிரதமர் ரணில் நல்லவர், நம்பிக்கையானவர் எனக் கூறத்

தலைப்பட்டனர் எனவும் அவர் ஒரு நியாயமான கேள்வியையும் எழுப்புகிறார். இந்நிலையில் நமது நியாயமான அரசியல் உரிமைகளையும் எதிர்பார்ப்புக்களையும் சிதைவடையாமல் பார்த்துக் கொள்வதற்கும் போரால் அழிந்து கிடக்கும் நமது தாயகத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் இப் பேச்சுவார்த்தைகளின் சில அடிப்படைகள் திட்டவட்டமாக மறுசீரமைக்கப்பட வேண்டும். அத்துடன் எந்த நோர்வேயூடாக பிரதமர் ரணிலும், மிலிந்த மொறகொடவும் அமெரிக்காவும் எமது நியாயமான அரசியல் பொருளாதார எதிர்பார்ப்புக்களை முடக்கிப் போடுவதற்கான வலையை எம்மைச் சுற்றி இறுக்கி வருகிறார்களோ அதே நோர்வேயிடம் தனது இடையீட்டுப் பணியை இனியும் தொடர்வதாயின் அது மேற்படி வலைச்சுற்றலை செய்வதற்கான மறைமுகத் தரகர் வேலையை முற்றாக கைவிடும்படி வலியுறுத்தப்பட வேண்டும். இனி சிறி லங்கா பிரதமர் ரணில் விரித்துள்ள சர்வதேச காப்பு வலை என்பது என்ன என்பதையும் அது ஏன் அவருக்கு இன்றியமையாதபடி தேவைப்படுகிறது என்பதையும் பார்ப்போம்.

தத்தமது நலன்களை இலங்கையில் வளர்த்தெடுப்பதற்கு இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் ஜப்பானுக்கும் இங்கு போர் தற்காலிகமாகவேனும் ஓய வேண்டும் என்ற தேவை கடந்த பல ஆண்டுகளாக மிக வெளிப்படையாக இருந்து வருகிறது.

அமெரிக்காவிற்கு இங்கு தளம் அமைப்பதற்கு வாய்ப்பாக ஒப்பந்தம் கைச்சாத்திடுவதும் இந்தியாவிற்கு தனது மூலதனப் பரம்பலை விரிவாக்குவதோடு இலங்கையை தன் நலனுக்குக் குந்தமாக வேறு நாடுகள் பயன்படுத்தக் கூடாது என்பதும் ஜப்பானுக்குத் தன் மூலதனத்தினதும் பிராந்திய அரசியல் செல்வாக்கினதும் ஒரு முக்கிய தளமாக இலங்கையை மாற்றிட வேண்டும் என்பதும் குறிக்கோளாக உள்ளன என்பதை பல ஆண்டுகளாக ஐக்கிய தேசிய கட்சி சரியாகவே புரிந்து வைத்திருந்தது.

அத்தோடு இந்நாடுகள் தத்தமது குறிக்கோள்களை அடைந்திடவும் அவற்றின் நன்மைகளை நீண்ட காலத்தில்

வலுப்படுத்திடவும் புலிகள் போரில் ஈடுபடாதவாறு அமைதிப் பேச்சு வட்டத்தினுள் கட்டுண்டு கிடந்திட வேண்டும் என்பதையும் ஐ.தே.க தலைவர் ரணில் உணர்ந்திருந்தார். எனவே புலிகளோடு பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்த கையோடு மேற்படி நாடுகள் இங்கு பெரிய அளவில் தமது மூலதனங்களை கொண்டுவருவதற்கான வேலைகளில் அவர் ஈடுபடலாயினார்.

அவருடைய செயலின் பின்னனியில் இருந்த தர்க்கம் மிக இலகுவானது. அதாவது உலக மற்றும் பிராந்திய வல்லரசுகளின் பொருளாதார மற்றும் கேந்திர நலன்கள் எந்தளவிற்கு பரவி வேரூன்றுகின்றனவோ அந்தளவிற்கு அந்த நாடுகள் புலிகள் மீண்டும் போருக்குப் போகாமல் பார்த்துக் கொள்ளும் என்பதே அது. இதனாலேயே அவர் ஒருபக்கம் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் இங்கு விரைந்து காலூன்றி விடுவதற்கான அவசரப் பேச்சுவார்த்தைகளையும் மறுபுறம் அமெரிக்க அரசுடன் ACSA ஒப்பந்தம் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் என்பவற்றை செய்து கொள்வதற்கு அமைச்சர் மிலிந்த மொறகொடவை துரிதப்படுத்திக் கொண்டிருந்தார்.

சிறி லங்கா அரசியல் தமிழருக்கு எந்த வகையான தீர்வையும் வழங்கிட முடியாது. தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி, வரதராஜப் பெருமாளின் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்பவற்றின் வரிசையில் புலிகளையும் தன் முயற்சியில் சற்றும் சளைக்காத விக்கிரமாதித்தனைப் போல் சிறி லங்கா அரசு ஏமாற்றுகிறது என்ற உண்மை மிக உறுதியாக வெளிப்படும் காலத்தில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளில் கேந்திர மற்றும் பொருளாதார முதலீடுகள் கணிசமாகப் பெருகிவிடும் என்பது ஐக்கிய தேசிய கட்சித் தலைமையின் கணிப்பு. அதாவது எந்தத் தீர்வும் கிடைக்காத நிலையில் புலிகள் மீண்டும் போருக்குப் போக முற்பட்டால் அதன் விளைவு தமது முதலீடுகள் மீது பொறுக்க முடியாத பாதிப்பை ஏற்படுத்தும் என்ற உந்துதலில் மேற்படி நாடுகள் அவர்களை எவ்வழிப்பட்டும் தடுத்திடும் என்பது திட்டம். இதனையே சர்வதேச காப்பு வலை (International Safty Net) என பெருமிதத்துடன் கடந்த

ஆண்டு புலிகளுடன் கவனமாக அலுவல் பார்க்க வேண்டும் என அவரை எச்சரித்த பலரிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விளக்கினார்.

மேலைத்தேய போரியலாளர் கூறும் கட்டுக்குள் பேணும் தந்திரோபாயம் (Containment Strategy) என்பதன் ஒரு வடிவமே பிரதமர் ரணிலின் சர்வதேச காப்பு வலைத் திட்டமாகும். சிறி லங்கா படைத்துறையின் தீச்சுவாலை நடவடிக்கையை புலிகள் முறியடித்த கையோடு சிறி லங்கா அரசினதும் அதன் அமெரிக்க பிரித்தானிய படைத்துறை மதியுரைஞர்களதும் போரியற் கோட்பாட்டுக் களஞ்சியத்துள் எஞ்சியிருந்தது இந்தக் கட்டுக்குள் வைத்திருக்கும் திட்டமே. தீச்சுவாலை நடவடிக்கையை முறியடித்த பின்னர் புலிகள் திருமலை மீது குறிவைக்க ஏற்பாடு செய்கிறார்கள் என்ற அச்சம் அமெரிக்க படைத்துறையினருக்கு உண்டாகலாயிற்று. மட்டக்களப்பில் தளபதி கருணாவின் கீழ் கணிசமான படைகள் ஒரு பெரிய நடவடிக்கைக்குத் தயாராகின்றன என்ற தகவலும் திருமலைத் துறைமுகம் அமைந்துள்ள கொட்டியாரக்குடாவின் தென் பகுதியான மூதூர் கிழக்குப் பிராந்தியத்தில் தளபதி பதுமனின் படைகளும் போருக்குத் திரள்கின்றன என்ற செய்தியும் மேற்படி அச்சத்தைத் தோற்றுவித்தன.

தளபதி கருணாவின் படைகள் மட்டக்களப்பின் வடக்குப் பகுதியில் தயாராகிக் கொண்டிருந்ததால் அவை அநேகமாக மூதூரை நோக்கி முன்னேறி தளபதி பதுமனின் படைகளுடன் இணைப்பேற்படுத்திக் கொண்டு (Link up) திருமலையின் சுற்றுப்புறத்தையும் அதை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் பாதைகளையும் கைப்பற்ற முனையலாம் எனவும் இதேவேளை வவுனியாவை அச்சுறுத்தும் வகையில் புலிகள் ஒரு படையெடுப்பைத் தொடங்கினால் சிறி லங்கா அரசால் அதன் கிழக்குத் துறைமுகத்தை பாதுகாக்க முடியாது போய்விடும் எனவும் 2001 இன் நடுப்பகுதியில் அமெரிக்க படைத்துறை மதிப்பீடு செய்தது. இது நடைபெற்றால் சிறி லங்காவின் கடற்படை மற்றும் வான்படைத் தளங்களை கையகப்படுத்தும் தனது ACSA ஒப்பந்தம் அர்த்தமற்றதாகி

விடும் எனவும் அது கவலை கொள்ளலாயிற்று. இந்த விடயம் சந்திரிகா அரசின் இந்தியச் சார்பாளர் சிலரால் டெல்லியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. திருமலையிலுள்ள எமது நலன்களில் கைவைக்காத வரை புலிகள் அங்கு என்ன படையெடுத்தாலும் எமக்கு அக்கறை இல்லை என்று மட்டும் அப்போது இந்திய வெளியுறவு அலுவலர் ஒருவர் தெரிவித்தார். (இது என்ன நோக்கில் கூறப்பட்டது என அப்போது தெளிவாகத் தெரிந்திருக்கவில்லை)

இந்த வகையில் புலிகளுக்கு கிடைத்திடக் கூடிய ஒவ்வொரு வெற்றியும் சிறி லங்காவின் இறைமையைக் குறைக்கும் எனவும் இதன் காரணமாக அதனுடன் கைச்சாத்திடக்கூடிய ACSA மற்றும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் என்பவை வலுவற்றதாகி விடும் எனவும் அமெரிக்கா கரிசனை கொள்ளலாயிற்று. இந்த நிலையில் புலிகளுக்குச் சாதகமாக இலங்கைத்தீவில் போர்ச் சமநிலை விரைவாக மாறிச்செல்வதைத் தடுப்பதற்கு சிறி லங்கா அரசிற்கு இருந்த ஒரே வழி மேற்படி கட்டுக்குள் முடக்கி வைத்திருக்கும் தந்திரோபாயமே.

இப்போரியற் கோட்பாட்டின் முதலாவதும் முக்கியமானதுமான அடித்தளம் அமைதிப் பேச்சுக்களேயாகும். அதாவது அமைதியைக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தை என்பது வேறு, போரிடல் திட்டமிடலின் ஒரு வெளிப்பாடாக நடைமுறைப்படுத்தப்படும் பேச்சுவார்த்தை என்பது வேறு. எனவே 2001 இன் நடுப்பகுதியில் காணப்பட்ட போர்ச் சமநிலையைக் கருத்திற் கொண்டு அப்போது சர்வதேச மட்டத்தில் அமெரிக்கா மற்றும் இந்தியா என்பவற்றின் பின்னணியோடு அமைதிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க எடுக்கப்பட்டு வந்த முயற்சிகள் போரியற் தந்திரோபாயத்தின் வெளிப்பாடாகவே அன்றி வேறு வகையில் அமைந்திட முடியாது என நான் எழுதியிருந்தேன்.

ஏனெனில், இந்தக் காலத்தில் அமெரிக்க சார்பு கொலம்பிய அரசுக்கெதிரான ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தையும் இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர்

பாலஸ்தீன மக்களின் போராட்டத்தையும் கட்டுக்குள் போட எடுக்கப்பட்ட முயற்சிகளின் அதே சாயல்கள் இங்கும் தென் படத் தொடங்கியிருந்தன. 1997 இல் கொலம்பிய படைகளை முறியடித்து அந்நாட்டின் அரசைக் கவிழ்க்கக்கூடிய நிலையில் அங்குள்ள பார்க் (FARC) இயக்கம் பெரு வளர்ச்சியடைந் துள்ளது எனவும் இது தடுத்து நிறுத்தப்படாவிட்டால் அமெரிக்காவின் பின்புலத்தில் பேராபத்துத் தோன்றி விடும் எனவும் அமெரிக்கப் படைத்துறை கூறியது.

எனினும், கொலம்பியாவின் உள்நாட்டுப் போரில் சிக்கிடவும் அமெரிக்கா தயாராக இருக்கவில்லை. ஆகவே கொலம்பிய அரசின் மீது கடும் அழுத்தத்தைக் கொடுத்து தாமதமின்றி போராளிகளுடன் அமைதிப் பேச்சுவார்த்தைகளை உடன் தொடங்குமாறு வற்புறுத்திற்று. அமைதிப் பேச்சுக்களும் பல திரைமறைவு வேலைகளின் பின்னர் 2000 ஆம் ஆண்டளவில் ஆரம்பமாயின. ஆரம்பத்தில் அனைத்தும் மிகச் சுமுகமாகவே இருந்தன. போராளிகளின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த கொலம்பியாவின் 40 விழுக்காடு நிலப்பரப்பு அவர்களின் கட்டுப்பாட்டினுள் இருக்கலாம் என உடன்பாடு காணப்பட்டது.

ஆனால், காலப்போக்கில் கொலம்பிய அரச அமைப்பின் உயர்வர்க்க மேலாதிக்க அம்சங்களை மாற்றுவதில் இழுபறிகள் தோன்றலாயின. ஆனால் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற காலப்பகுதியில் கொலம்பியாவின் படைகளை வலுப்படுத்து வதற்காக அமெரிக்கா கோடிக்கணக்கான டொலர்களை அங்கு கொட்டியது. சண்டைகள் இல்லாதிருந்ததால் கொலம்பியப் படைகளைப் பயிற்றுவிப்பதற்கும் புலனாய்வு வேலைகளை விரிவாக்குவதற்கும் அமைதிப் பேச்சுக்கள் அமெரிக்காவிற்கு ஒரு பெருவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தன. அத்துடன் கொலம்பிய அரசியலில் முழுமையாகத் தனது சொற்படி நடக்கக்கூடிய வலதுசாரி கடும்போக்காளரான அவ்வாரே உரிபே என்பவரை அமெரிக்கா வலுப்படுத்தி கடந்த ஆண்டு அந்நாட்டு ஜனாதிபதியாக்கிற்று. அமைதிப் பேச்சுக்கள் அமெரிக்காவின் தேவைகளுக்கேற்ப கொலம்பிய அரசால் நகர்த்தப்படுவதை காலம் பிந்தி உணர்ந்து கொண்ட பார்க் இயக்கம் தன்னை

நிலைப்படுத்திட முயற்சி எடுக்க முன்னர் அந்நாட்டுப் படைகள் நடவடிக்கைகளில் இறங்கின.

பார்க் இயக்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த நிலப்பரப்பின் பெரும் பகுதியும் அதன் தலைநகரமும் கொலம்பியப் படைகளிடம் கையகப்பட்டன. ஆயுதங்களைக் கீழே போடும் வரை இனி பார்க் மற்றும் ஏனைய போராளி இயக்கங்களுடன் பேச்சுக்கே இடமில்லை என உரிபே அறிவித்து விட்டார். இவ்வாறாகக் கொலம்பிய அரசு பார்க் அமைப்புடனான அமைதிப் பேச்சுக்களை தனது பெரும்பாக போராட்டத்தின் ஒரு இன்றியமையாத அங்கமாகவே அமெரிக்காவின் உதவியோடு வடிவமைத்து செயற்படுத்தியது. கொலம்பியாவின் அரசமைப்பை இடதுசாரிப் போராளிகள் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அந்நாட்டின் வறிய மக்களுக்குச் சார்பாக மாற்றினால் அது தனது மூலதன இராணுவ நலன்களையே முதன்மையாகப் பாதிக்கும் என்பது அமெரிக்காவிற்கு நன்கு தெரியும்.

தமது இருப்பிற்கு அமெரிக்காவை நம்பியிருந்த கொலம்பிய ஆளும் வர்க்கங்களும் அந்நாட்டின் அரசியலமைப்பை மாற்றுவதில்லை என இரகசிய உறுதிப்பாட்டுடனே போராளிகளுடன் அமைதிப் பேச்சுக்களில் இறங்கின. எனவே அந்தப் பேச்சுக்களில் கொலம்பிய அரசிற்கு ஒரேயொரு குறிக்கோள் மட்டுமே இருந்தது. அதாவது தனக்குச் சாதகமான முறையில் பார்க் இயக்கத்தை கட்டுக்குள் முடக்கி நீண்டகாலம் வைத்திருப்பதே அது. இது இப்படியிருக்க 2001 ஜூலை மாதம் அமெரிக்கத் தலைநகரிலுள்ள சர்வதேச மற்றும் கேந்திர ஆய்வுகளுக்கான மையத்தில் கொலம்பிய இலங்கை போர் நிலவரங்களை ஒப்பிட்டு இலங்கையில் அரசியல் யாப்பை மாற்றிட எந்தவழியுமின்மையால் அங்கு அமைதிப் பேச்சு வார்த்தை நடைபெறும் பட்சத்தில் அதை புலிகளை மடக்கிப்போடும் ஒரு பெரும்பாக போர்த்திட்டத்தின் வெளிப்பாடாகவே சிறி லங்கா அரசு கையாள முனைவது தவிர்க்க முடியாதது என ஆற்றிய உரையைச் செவிமடுத்த அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு, அமெரிக்க கூட்டுப்படைத்

தலைமையகம், வெளியுறவுத் திணைக்களம் போன்றவற்றின் அதிகாரிகள் கேட்ட கேள்விகளும் தெரிவித்த கருத்துகளும் எனது மேற்படி ஒப்பீடும் எடுகோளும் சரியாகவே இருக்கலாம் என்பதைக் கோடிட்டுக் காட்டின.

கொலம்பியாவைப்போல் இங்கும் அரசியல் யாப்பை மாற்றிடும் எண்ணம் அரசுக்கு இல்லை. இங்கும் வருங்காலங்களில் தனது ஒப்பந்தங்களை நிலைப்படுத்திட சிறி லங்காவின் ஒற்றையாட்சியே அமெரிக்காவுக்குச் சாதகமாக உள்ளது. சமஷ்டி ஆட்சி ஏற்பட்டு வடக்குக் கிழக்கில் ஏதோ ஒரு கட்டத்தில் தனக்குச் சாதகமற்ற ஒரு ஆட்சி அமைந்தால் அது தனது ஒப்பந்த நலன்களைப் பாதிக்கும் என்பது அமெரிக்காவின் கருத்து. இதனாலேயே பிரித்தானியா, நோர்வே என்பவற்றின் செல்வாக்குகளைப் பயன்படுத்தி புலிகளை உள்ளக சுயநிர்ணய உரிமை, மரபுவழி வதிவிடங்கள் என ஒற்றையாட்சியை நோக்கி ஆரம்ப கட்டத்திலேயே இறங்கி வர வைத்தது. இது இந்தியாவிற்கும் சாதகமாயிற்று.

இவையனைத்தையும் கருத்திற் கொண்டே பேச்சுவார்த்தையை ஒரு பெரும்பாகப் போரியல் பொறியாக அமெரிக்கா ஆரம்பத்திலிருந்து கருதி வருகிறது என நாம் ஆணித்தரமாகக் கருத வேண்டியுள்ளது. இதை நன்றாகப் புரிந்து கொண்டே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது சர்வதேச காப்பு வலையை பேச்சுக்கள் ஆரம்பமான காலத்திலிருந்து அமெரிக்கா, இந்தியா ஆகியவற்றின் உதவியுடன் விரித்து வருகிறார்.

ஆனால் இதைச் செய்வதற்கான கால அட்டவணைத் திட்டத்தை டோக்கியோ போகாததன் மூலமாக புலிகள் குழப்பி விட்டார்கள். அமெரிக்க, இந்திய மற்றும் ஜப்பானிய நலன்கள் இங்கு சரியாக வேரூன்ற இன்னும் காலம் தேவை.

அதுவரை இந்நாடுகள் எதுவுமே பிரதமர் ரணிலுக்குச் சார்பாக புலிகளை மடக்கக்கூடிய நேரடி அழுத்தங்களைச் செலுத்திட முடியாது.

1983 இலிருந்து 87 வரை நடக்கின்ற உண்மை என்ன என்பதைப் புரிந்து கொள்ள நாம் முயற்சி எடுக்காததால் இந்தியாவின் கால அட்டவணைத் திட்டப்படியெல்லாம் ஆடி கடைசியாக பெரும் சிக்கலில் மாட்டினோம். இனியும் அப்பிழையை நாம் விடமுடியாது, கூடாது.

இதை நாம் செய்வதற்கு முதற்படி தமிழ் மக்கள் மீண்டும் ஒரு சரியான உறுதியான அரசியல் அடித்தளத்தில் காலூன்றி நிற்பதேயாகும். எனவேதான் மீண்டும் கூறுகிறேன் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தேடுங்கள், படியுங்கள்.

15.06.2003



## –12– போரியலின் புதிய பரிமாணம் செய்மதி தொலைக்காட்சி

செய்மதித் தொலைக்காட்சி இன்று போரியலின் ஒரு புதிய பரிமாணமாகக் கொள்ளப்படுகிறது. பெரும் படையெடுப்புகளுக்கான திட்டமிடலின் இன்றியமையாத அங்கமாக இதை மேலைத்தேயப் போரியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

1991 இல் அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் ஈராக்கின் மீது படையெடுத்த காலத்திலிருந்து இவ்விடயம் தொடர்பாக நிரம்ப ஆய்வுகள் வெளிவந்த வண்ணமுள்ளன. போரியலின் இப்புதிய பரிமாணத்தை சி.என்.என். விளைவு (C.N.N. Effect) என அழைப்பர். சி.என்.என். என்பது கடந்த பதினைந்து ஆண்டுகளில் துரித வளர்ச்சி கண்ட ஒரு அமெரிக்க தொலைக்காட்சி ஒளிபரப்பு. (Cable Television Network என்பதன் சுருக்கம்) இதை 24/7 வகைத் தொலைக்காட்சி என்பர். அதாவது, ஒரு நாளில் 24 மணித்தியாலங்களும் கிழமையில் ஏழு நாளும் இடையறாது இயங்குகின்ற சர்வதேசத் தொலைக்காட்சிச் சேவை. 'சி.என்.என். விளைவு' எனில் என்ன? ஒரு சிறு உதாரணத்தின் மூலம் அதை உங்களுக்குப் புரிய வைக்கலாம் என எண்ணுகின்றேன்.

1993 ஆம் ஆண்டு கிளாலித் துறையைக் கைப்பற்றுவதற்காக ஒரு பெரும் நடவடிக்கையில் சிறி லங்காப் படைத்துறை இறங்கிற்று. இதற்கு 'யாழ் தேவி' எனப் பெயருமிட்டனர். ஆனையிறவிலிருந்து தொடங்கி யாழ் கடல் நீரேரிக்

கரையோரமாக நகர்ந்து கிளாலியைக் கைப்பற்றிவிட்டால் குடா நாட்டுக்கும் வன்னிக்குமிடையிலான தொடர்பை முற்றாகத் துண்டித்து விடலாம் என்பது சிறி லங்காப் படைத்துறையின் திட்டம். ஆனால், புலோப்பளை என்னுமிடத்தில் வைத்து தளபதி பால்ராஜின் தலைமையில் புலிகள் இப்படையெடுப்பை முறியடித்தனர்.

அப்போது சிறி லங்காப் படைத்துறை வட்டாரங்களிலிருந்து துண்டும் துணியுமாகக் கசிந்த தகவல்களிலிருந்து மேற்படி நடவடிக்கை பிழைத்து விட்டது எனத் தெரிய வந்தது. அதை வைத்துக் கொண்டு நான் ஒரு கோணத்திலும் இலங்கையின் முன்னணிப் படைத்துறைச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் ஒரு கோணத்திலும் கட்டுரை வரைந்தோம். புலிகளின் குரல் ஒலிபரப்பிலிருந்து தெளிவான தகவல் எதுவும் இல்லை. (பல சந்தர்ப்பங்களில் களமுனையில் என்ன நடக்கிறதென்று கொழும்பிலிருந்து எங்களுக்குக் கிடைத்த அளவிற்குக் கூடப் புலிகளின் குரலுக்குத் தெரிந்திருக்கவில்லை) சுருங்கக் கூறின் போரினை வழிநடத்திய சிங்கள அரசியல் தலைமைகளுக்கோ, சிங்கள மக்களுக்கோ, அதன் அழிவுகளை எதிர்கொண்ட தமிழ் மக்களுக்கோ, இலங்கையின் இன முரண்பாட்டைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்த வெளிநாட்டவருக்கோ 'யாழ் தேவி' படை நடவடிக்கை பற்றிக் கிடைத்த தகவல்கள் அனைத்துமே இரண்டாங்கை மூன்றாங்கையாக இரண்டு மூன்று நாட்கள் படிப்படியாகக் கசிந்து எழுத்துருவில் வந்தவையே. அதுவும் செய்தித் தாள்களை, குறிப்பாக ஆங்கிலச் செய்தியேடுகளை வாங்கி இக்பால் அத்தாஸ் மற்றும் எனது கட்டுரைகளைப் படித்தபோது ஒரு குறிப்பிட்ட வாசகர் கூட்டத்திற்கு மட்டுமே கிடைத்திருக்கக் கூடிய 'மூளை வழிபுரிதலுக்கான தகவல்களே' அன்று 'யாழ் தேவி' நடவடிக்கை பற்றிக் கிடைக்கக் கூடியதாக இருந்தது.

இந்தப் படை நடவடிக்கை கிளப்பிய செய்திப் புழுதி அடங்கி ஓராண்டின்பின் நான் யாழ்ப்பாணம் போயிருந்தேன். 'யாழ் தேவி' நடவடிக்கையின்போது யாழ்ப்பாணத்தில் புலிகளோடு தங்கியிருந்தவர் 'ராவய' சிங்கள அரசியல்

கிழமையேட்டின் செய்தியாளர் நந்தன வீரரட்ண என்பவர். அவரும் என்னுடன் கூட வந்திருந்தார். பயணத்தின்போது புலோப்பளை முறியடிப்புச் சண்டையின்போது தான் கண்ட காட்சிகளைக் கூறிவந்த அவர் தான் சொன்னவற்றை எமக்கு நிறுவிடும் நோக்கில் ஒரு ஒளிப் பேழையை (Video Cassette) புலிகளிடம் பெற்று அதை எமக்குப் போட்டுக் காட்டினார். அதில் ஒரு காட்சி. புலிகளின் தாக்குதலில் ஒரு போர்த் தாங்கி பற்றியெரிகிறது. புலிகள் சுட்டபடி முன் செல்கிறார்கள். சிறி லங்காப் படையாட்கள் பலர் அந்தக் களமுனையிலிருந்து ஓட்டம் பிடிக்கிறார்கள். இதை நானும் வேறு செய்தியாளரும் கண்டது அந்தச் சண்டை நடந்து ஓராண்டின் பின்னர். அந்நேரத்தில் அது புலிகளின் சண்டையிடும் திறனை எமக்கு எடுத்தியம்பிய ஒரு வரலாற்று ஆவணம் மட்டுமே. அதற்கப்பால் அக்காட்சிக்குப் பெறுமானம் இருக்கவில்லை.

ஆனால் இந்தக் காட்சியைப் புலிகள் செய்மதித் தொலைக்காட்சி வழியாகச் சண்டை நடந்த அன்றே ஒளிபரப்பினர் என வைத்துக் கொள்வோம். என்ன நடந்திருக்கும்? சிங்கள மக்களுக்கு தமது படைகள் மீதான நம்பிக்கை கடும் ஆட்டம் கண்டிருக்கும். சிங்கள அரசியல் தலைமைகள் அன்று போர் மீது வைத்திருந்த பற்றுறுதி சிதைந்திருக்கும். அவ்வசையும் பிம்பங்களின் அதிர்வலைகள் சிறி லங்கா படைகளின் ஒரு குறிப்பிட்ட களமுனைப் பின்னடைவை மாறாக் களங்கமான ஒரு படுதோல்வி என மாற்றியிருக்கும்.

இலங்கையின் இன முரண்பாட்டை அக்காலத்தில் கூர்ந்து அவதானித்து வந்த பல நாடுகள் இங்கு சிறி லங்கா படைகளின் கையே தவிர்க்க முடியாதபடி மேலோங்கும் எனக் கூறி வந்தன.

சிங்கள மக்கள் தனிப் பெரும்பான்மையாக இருப்பதால் அவர்களுக்கு எப்போதும் தமிழரைவிட படைபலம் கூடுதலாகவே இருக்குமெனவும், அதன் காரணமாகத் தமிழரது விடுதலைப் போராட்டம் என்றும் ஒரு தேக்க நிலையிலேயே இருக்குமெனவும் அந்நாட்டுப் போரியல் வல்லுநர்கள் கூறி

வந்தனர். இது தவறு என அந்த நேரத்தில் அமெரிக்க மற்றும் பிரித்தானியப் படைத்துறைத் தலைமையகங்களுக்குச் சென்ற வேளைகளில் நான் வாதிட்டதுண்டு. ஆனால், எனது வாதங்களை விடவும், எனது ஆயிரம் போரியல் ஆய்வுக் கட்டுரைகளை விடவும் புலோப்பளைச் சண்டையின் அக்காட்சி அவர்களுடைய எண்ணத்தை மாற்றியிருக்கும். இதை நான் நிச்சயமாகக் கூற முடியும்.

ஏனெனில், ஆனையிறவுச் சண்டை நடந்து கொண்டிருந்த நேரத்தில் எனக்குப் பழக்கமான ஒரு மேலைத்தேய படையதிகாரிக்கு புலோப்பளைச் சண்டைக் காட்சியைப் போட்டுக் காட்டினேன். இதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் தான் அவர் ஆனையிறவுக்குச் சென்று சுற்றிப் பார்த்துவிட்டு வந்து அது ஒரு அசைக்க முடியாத கோட்டை என என்னிடம் கூறியிருந்தார். இத்தாவிலில் நிலை கொண்டிருந்த பால்ராஜின் படையோடு 53 டிவிசனின் சிறப்புப் படைகளைத் திரும்பத் திரும்ப மோதவிட்டு அவற்றின் ஆள்வலுவை சிறி லங்கா படைத்தளபதிகள் கண்மூடித் தனமாகச் சிதைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என அவர் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். (அச்சிறப்புப் படைகளை வளர்த்தெடுக்க அவரது நாடு கணிசமான முதலீடு செய்திருந்தது) இந்தப் பின்னணியில்தான் பால்ராஜின் சண்டைத் திறனைக் காட்டக்கூடிய புலோப்பளைச் சண்டை ஒளிப்பேழையை அவருக்குக் காட்ட வேண்டியதாயிற்று. பார்த்தார். ''பிழையான குதிரையின் வாலில் பணத்தைக் கட்டிவிட்டோம் போலிருக்கிறது'' என அந்த ஒளிப்பேழை ஓடி முடியக் கூறினார். அவர் சிறி லங்காவுக்கு வந்த இரண்டாண்டுகளில் எனது உரையாடல்களோ, கட்டுரைகளோ ஏற்படுத்தாத தாக்கத்தை அந்தப் புலோப்பளைச் சண்டைக் காட்சி ஏற்படுத்திற்று.

ஆயிரம் சொற்களைவிட ஒரு படம் ஏற்படுத்தும் தாக்கம் அதிகம் என்பர். ஆனால், பத்தாயிரம் சொற்களைவிட உடனடியாக ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி பிம்பத்தொகுதி

யொன்று உண்டாக்கும் விளைவு மிகப் பெரிது என நாம் கூறலாம். இதுவே 'சி.என்.என். விளைவு' எனப்படுகிறது.

ஒரு போரைக் கொண்டு நடத்துவதற்கு மிக மிக அடித்தளமாகத் தேவைப்படுவது அதன் பின் நிற்கின்ற மக்களின் கூட்டு உள வலுவாகும். (Morale) அந்தப் போரை முன்னெடுப்பதற்கான அரசியல் ஒருமைப்பாடு, ஆள்வலு என்பன இக்கூட்டு உளவலுவிலிருந்தே பெறப்படுகின்றன. ஒரு போரின் வெற்றியை ஆயுதங்கள் தீர்மானிப்பதில்லை. இந்தக் கூட்டு உளவலுவே தீர்மானிக்கிறது. சோவியத் யூனியன் மீது ஹிட்லர் படையெடுத்த போது சமூக விடுதலைக் கருத்தியலின் அடித்தளத்தில் எழுந்த ரஷ்யத் தேசியம் உருவாக்கிய கூட்டு உள வலுவே வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது. 'சி.என்.என். விளைவு' இந்தக் கூட்டு உளவலுவை சாதகமாகவோ பாதகமாகவோ அசைக்கக் கூடியது. இதனாலேயே, இன்றைய படைத் துறைத் திட்டமிடலாளர்கள் தாம் வழி நடத்தப் போகும் ஒரு போர் அல்லது சண்டை 24/7 தொலைக்காட்சிகளில் எங்ஙனம் காட்டப்படலாம் என்பதைப் பற்றி நிறையவே எண்ணுகின்றனர்.

சோமாலியாவில் அமெரிக்காவின் தலையீட்டை எடுத்துக் கொள்வோம். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த செங்கடலும் இந்துமா கடலும் சந்திக்குமிடமான ஆபிரிக்காவின் கொம்பு (Horn of Africa) பகுதியில் அமைந்துள்ள சோமாலியா முன்னர் சோவியத் யூனியனின் செல்வாக்குக்குட்பட்ட நாடாகவிருந்தது. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் அதைத் தன் கையகப்படுத்த எண்ணியது அமெரிக்கா. உதவிக்குக் கிடைத்தது சி.என்.என். தொலைக்காட்சி.

சோமாலியாவில் கடும் பஞ்சமும் கட்டுக்கடங்கா அராஜகமும் நிலவுவது போன்ற பிம்பங்கள் தொடர்ச்சியாக சி.என்.என். இல் ஒளிபரப்பாயின. 'சோமாலியாப் பஞ்சத்தில் அடிபட்டவன் போல' என நாம் கூறுமளவிற்கு சி.என்.என். பிம்பங்கள் தாக்கத்தை ஏற்படுத்தின. யாராவது சோமாலியாவில் தலையிடா விட்டால் அங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள்

அழியப் போகின்றனர் என்ற மாயையை சி.என்.என். ஏற்படுத்திற்று.

இதே காலப்பகுதியில் சோமாலியாவை விடப் பெரும் அழிவுகளைச் சந்தித்துக் கொண்டிருந்த அங்கோலா, கொங்கோ போன்ற வேறு ஆபிரிக்க நாடுகளை சி.என்.என். கண்டு கொள்ளவில்லை. சோமாலியாவைப் பற்றி சி.என்.என். மற்றும் பல்வேறு அமெரிக்க சார்பு 24/7 தொலைக்காட்சிகள் ஏற்படுத்திய சர்வதேசச் சூழலைப் பயன்படுத்தி அமெரிக்கா அங்கே தன் படைகளை அனுப்பி வைத்தது. நிரந்தரமாக அங்கு தளம் அமைக்கவும் முயற்சிகள் தொடங்கின. இதற்கெதிராகச் சில இயக்கங்கள் சண்டையில் இறங்கின. இதைப் பொருட்படுத்தாது அமெரிக்கா தான் விரும்பிய காலம் வரை சோமாலியாவில் இருந்திருக்கலாம். ஆனால், எந்த சி.என்.என். விளைவு அமெரிக்கப் படைகள் அங்கு செல்ல வழிவகுத்ததோ அதுவே அவை அங்கிருந்து வெளியேறவும் காரணமாயிற்று.

1993 இல் சி.என்.என். இலும் வேறு சர்வதேசத் தொலைக்காட்சி ஒளிபரப்புகளிலும் ஒரு காட்சி வெளியாகியது.

சோமாலியப் போராளிக் குழுக்களின் ஒட்டு மொத்த ஆயுதபலம் எத்தனை ஆண்டு சென்றும் ஏற்படுத்த முடியாத தாக்கத்தை அந்த ஒரு காட்சி ஏற்படுத்திற்று. சோமாலியாவின் மொகடிஷு நகரில் நடந்த சண்டையொன்றில் கொல்லப்பட்ட ஒரு அமெரிக்கப் படையாளின் சடலத்தை அங்குள்ள போராளிகள் கட்டியிழுத்துத் திரிந்ததையும் அதைக் கண்டு அந்நகர மக்கள் வெற்றியாரவாரம் செய்ததையும் அமெரிக்க தொலைக்காட்சிகள் ஒளிபரப்பின.

சோமாலியாவிற்கு தமது படைகள் மனிதாபிமானப் பணிக்குப் போயிருந்தால் அவற்றின் மீது அங்கு இப்படியான வெறுப்பு ஏற்பட்டிருக்காது என்ற உண்மை ஒரு புறமாகவும், அந்தக் காட்சி ஏற்படுத்திய பயங்கரம் ஒரு புறமாகவும் அமெரிக்க மக்களை அந்த ஒளிபரப்பு தாக்கிற்று. செய்தித்தாளில் எத்தனை நூறு கட்டுரை எழுதியிருந்தாலும் இது போன்ற தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க முடியாது. அமெரிக்க

மக்களிடம் இக்காட்சி ஏற்படுத்திய உணர்வலைகளுக்குத் தலைவணங்கி அப்போது ஜனாதிபதியாக இருந்த கிளின்டன் சோமாலியாவிலிருந்து அமெரிக்கப் படைகளை வெளியெடுக்க முடிவு செய்ய வேண்டியதாயிற்று. இதன் காரணமாக இப்போது ஈராக்கில் சி.என்.என். விளைவு பற்றி அமெரிக்கப் படைகள் மிகக் கவனமாக நடந்து கொள்கின்றன. ஈராக் போராளிகளுடன் தற்போது நடைபெறும் போரில் தமக்குப் பாதகமான காட்சிகள் வெளிவந்துவிடக் கூடாது என்பதில் அமெரிக்கத் தளபதிகள் மிக அவதானமாக நடந்து கொள்கின்றனர்.

இது மட்டுமின்றி மேலைத்தேய படைத்துறை அதிகாரிகளுக்கான பயிற்சித் திட்டங்களில் சி.என்.என். விளைவு பற்றிய படிப்பும் நடைமுறையும் இன்றியமையாத அங்கமாகவுள்ளன. (இப்படியான அதிகாரிகள் பயிற்சியொன்றை பிரித்தானியாவின் தலைமைப் படைத்துறைக் கல்லூரியில் நேரடியாக அவதானிக்கும் வாய்ப்பு 1997 இல் கிடைத்தது) அமெரிக்காவின் போர்களில் சி.என்.என். விளைவு பற்றி இன்னும் அடுக்கிச் செல்லலாம். விரிவஞ்சி விடுகிறேன்.

புலிகள் இப்போது ஒரு செய்மதி தொலைக்காட்சியை ஆரம்பித்திருக்கின்றார்கள். இது ஒரு சராசரி அரச தொலைக்காட்சிச் சேவையைப் போல் முடங்கிவிடப் போகிறதா அல்லது துடிப்புள்ள ஓர் ஊடகமாக புதிய தடம் பதிக்கப் போகின்றதா என்பது தமிழ்த் தேசியப் போராட்டத்தின் எதிர்காலப் பரிமாணத்தைத் தீர்மானிக்கும்.

17.04.2005

## –13– ஒஸ்லோ பிரகடனம் ஒரு பொறி, அது கிழித்தெறியப்பட வேண்டும்

வட கிழக்குத் தமிழ் பேசும் மக்களுடைய இன்னல்களுக்கான தீர்வு ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையிலேயே காணப்பட வேண்டும். அதற்கமையவே புலிகள் தமது தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகள் மிக ஆணித்தரமாகக் கூறிவருகின்றன.

சிறி லங்காப் பிரதமர் அமெரிக்கா சென்றிருந்த வேளையில் அந்நாட்டின் பிரதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் றிச்சேட் ஆர்மிரேஜ் ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படைகள் என்ன என்பதை தெட்டத்தெளிவாக வலியுறுத்தியிருந்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவரைக் காணப் புறப்படுவதற்கு முதல் நாள் கொழும்பிலுள்ள சர்வதேசக் கற்கைகளுக்கான நிறுவனத்தில் உரையாற்றியபோது கிறிஸ் பற்றனும் ஒஸ்லோப் பிரகடனத்தின்படியே புலிகள் இனச்சிக்கலுக்கான தீர்வு பற்றிய தமது முன்னெடுப்புகளைச் செய்ய வேண்டும் எனக்கூறியது மட்டுமன்றி, ஒருபடி மேற்சென்று அவர்கள் தயாரித்திருக்கும் சமஷ்டித் தீர்வு பிரிந்து செல்லும் உரிமை எனும் சற்றே திறந்த கதவிடுக்கினுள் காலை வைத்துக்கொண்டு முன்வைக்கப்படுவதாக இருக்கக்கூடாது என மிக அழுத்தமாக வலியுறுத்தினார்.

அதாவது ஒஸ்லோப் பிரகடனத்தின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களுடைய இன்னல்களுக்கு ஒரு சமஷ்டித்

தீர்வை புலிகள் முன்வைப்பதாயின் அதனுள் எமது சுயநிர்ண உரிமை பற்றிய பேச்சுக்கு இடமேயில்லை என்பதே கிறிஸ் பற்றனுடைய கூற்றின் சாராம்சம். அமெரிக்க பிரதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஆர்மிரேஜ் இதை வேறுவிதமாக வலியுறுத்தியிருந்தார்.

புலிகள் மிகக் கவனமாக ஆராய்ந்து தயாரித்துச் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை பற்றிய வரைவு ஒஸ்லோப் பிரகடனத்தின் வரையறைகளை மீறும் வகையில் அமைந்துள்ளது. ஆகவே அது ஏற்கக் கூடியதல்ல என்பதே அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளின் திட்டவட்டமான நிலைப்பாடு என்பதை கிடைக்கும் சந்தர்ப்பங்களின் போதெல்லாம் அவை இப்போது வலியுறுத்தி வருகின்றன.

இலங்கையின் ஒருமைப்பாட்டினுள் (Unity) உள்ளக சுயநிர்ணய உரிமை என்பதன் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் சிக்கலுக்கு தகுந்த சமஷ்டித் தீர்வொன்றினைத் தேடுவதென 2002 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி ஒஸ்லோவில் சிறி லங்கா அரசும் விடுதலைப் புலிகளும் பிரகடனம் செய்தனர்.

இப்பிரகடனமே இனி தமிழ்பேசும் மக்களுடைய எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற எந்தவொரு அரசியல் தீர்வுத் திட்டத்தினதும் பேச்சுவார்த்தைகளினதும் கோட்பாட்டு அடிச்சட்டமாக இருக்கவேண்டும் என்பதே அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து ஆகிய நாடுகளின் திட்டவட்டமான நிலைப்பாடாகும்.

இந்த வகையில் ஒஸ்லோ பிரகடனம் என்பது எமது நியாயமான போராட்டத்தை முடக்கவும், எமது மக்களின் உண்மையான அரசியற் பாரம்பரியத்தை தமது நோக்கங்களுக்குச் சாதகமான ஒரு பொய்மைத்தளத்திற்கு மாற்றவும் அமெரிக்கா மற்றும் அதைச் சார்ந்த நாடுகளினால் உருவாக்கப்பட்ட ஒரு பொறி என்பதை நாம் கவனிக்க வேண்டும். அதாவது சிறி லங்கா அரசு தனது அரசியல் யாப்பை

மாற்றி தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு தீர்வை முன்வைக்காமல் அல்லது நாம் முன்வைப்பதை ஏற்றுக்கொள்ளாமல் பேசிப் பேசியே எமது இன்னொரு தலைமுறையை வீணடித்துக் கொண்டு போனாலும் நாம் எமது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிப்பதற்கான எந்த நடைமுறையிலும் இறங்காமல் நல்ல பிள்ளைகளாக இருக்க வேண்டும் என்பதே அந்நாடுகளின் நோக்கமாகும்.

பிரித்தானியா இலங்கைத் தீவை விட்டுச் சென்ற பின்னர் நாம் தேடிய அரசியல் முதுசத்தை கைவிடப்பண்ணும் நோக்கில் தயாரிக்கப்பட்ட பொறியே ஒஸ்லோ பிரகடனமாகும். 1972 இல் சிங்கள பௌத்த மேலாதிக்க அரசியல் யாப்பை நாம் நிராகரித்தமையும், 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானமும், 1977 இல் எமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டிட எமது மக்கள் ஜனநாயக ரீதியாக வழங்கிய ஆணையும், அதைக் கோட்பாட்டு அடிப்படையில் மீளுறுதி செய்த திம்புப் பிரகடனமுமே எமது கைவிடப்படமுடியாத அரசியல் முதுசமாகும்.

எம்மை இவ் அரசியல் முதுசத்தைக் கைவிடச் செய்து சிறி லங்காவின் ஒற்றையாட்சிச் சகதிக்குள் மாட்டவைப்பதற்கு 1987 இல் இந்திய - சிறி லங்கா ஒப்பந்தத்தின் கீழ் எடுக்கப்பட்ட முயற்சியைத் தோற்கடித்த நாம் ஒஸ்லோ பிரகடனம் என்ற பொறிக்குள் எப்படிச் சிக்குண்டோம்?

எமது போராட்டத்தைச் சுற்றி வலைவிரிக்கும் சர்வதேசச் சக்திகளையும் அவற்றினுடைய கேந்திர உள்நோக்கங்களையும் உலகில் நடைபெற்ற வேறு விடுதலைப் போராட்டங்களின் இதுபோன்ற அனுபவங்களையும் கவனமாகக் கற்று அலசி ஆராய்ந்து நாம் செயற்படவேண்டிய அவசியத்தையே இது காட்டுகிறது. இது எமது மக்களின் பிரச்சினை.

தமது உரிமைப் போராட்டங்களின் அரசியல் முதுசங்களைக் கைவிட்டவர்கள் இவ்வாறான பொறிகளுக்குள் சிக்கி தமது மக்களை படுகுழிக்குள் வீழ்த்திய கதைகள் பல உண்டு.

1964 ஆம் ஆண்டின் பாலஸ்தீன விடுதலை அமைப்புகள் அனைத்துமாக இணைந்து பாலஸ்தீன விடுதலையின் அடிப்படைக் கோட்பாடுகளை ஒரு பிரகடனமாக்கின. இது Palestinian Charter என அறியப்படுகின்றது. பாலஸ்தீன மக்களின் பாரம்பரியத் தாயகத்திலிருந்து அவர்களை அகதிகளாக விரட்டியடித்துவிட்டு அங்கு சட்டவிரோதமாக இஸ்ரேல் நிறுவப்பட்ட அடிப்படை உண்மையின் தளத்தில் பாலஸ்தீனச் சாட்டர் பிரகடனப் படுத்தப்பட்டது. இஸ்ரேலின் படைபலம் அமெரிக்க உதவியுடன் பல்கிப்பெருகிய போதும் பாலஸ்தீனச் சாட்டரின் மேற்படி அடிப்படை அரசியல் மற்றும் சட்டரீதியாக அந்நாட்டிற்கு ஒரு பெரும் சவாலாகவே இருந்து வந்தது.

1990 களில் நோர்வேயின் அனுசரணையோடு பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இஸ்ரேலிய அரசுக்குமிடையில் நடைபெற்ற முன்னோட்டத் திரைமறைவுப் பேச்சுக்களின்போது யாசீர் அரபாத்தின் சில முக்கிய ஆலோசகர்கள் 'வளைத்துப்' போடப்பட்டனர். இஸ்ரேலுக்குச் சார்பாக பேச்சுக்களின் பின்னணியில் செயற்பட்ட அமெரிக்க மற்றும் நோர்வேஜிய சக்திகளின் வேலைப்பாடுகளால் மேற்படி மதியுரைஞர்கள் அரபாத்தையும் திசைமாற்றினர்.

அவர்கள் அதைச் செய்வதற்கு எந்தத் தடங்கலும் இருக்கவில்லை. ஏனெனில் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஊழலில் ஊறிய ஒரு அரசியற் சந்தர்ப்பவாதி. இப்படியான ஆலோசனைகளின் விளைவாக அமெரிக்காவும் இஸ்ரேலும் பாலஸ்தீன மக்களின் போராட்டத்தை தமக்குச் சாதகமாகப் பின்தள்ளும் விடயத்தில் ஒரு பெரும் வெற்றியை ஈட்டின. 1993 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி இஸ்ரேல் அரசும் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் நோர்வேயின் தலைநகரம் ஒஸ்லோவில் வைத்து ஒரு பிரகடனத்தை வெளியிட்டன.

இதுவும் ஒஸ்லோப் பிரகடனம் என்றே அறியப்படுகிறது. இப்பிரகடனத்தில் பாலஸ்தீன மக்களின் முழுச் சுயநிர்ணய

உரிமை, அவர்களது பாரம்பரியத் தாயக உரிமை, பாலஸ்தீனத் தனியாட்சி ஆகிய அடிப்படைகள் என்பன குறிப்பிடப்படவில்லை.

அரபாத்தினுடைய ஆலோசகர்களையும் அவர்களூடாக அவரையும் வளைத்துப் போட்டதால் அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்கும் கிடைத்த வெற்றியே அந்த ஒஸ்லோப் பிரகடனமாகும்.

நீண்டகாலமாகப் பொருட்செலவு மிகுந்த போரினால் சாதிக்க முடியாமற் போனதை ஒஸ்லோப் பிரகடனத்தின் ஊடாக இஸ்ரேல் சாதித்தது எனக் கூறின் மிகையாகாது. பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் அடிப்படை அரசியல் ஆவணமான பாலஸ்தீன சாட்டர் கைவிடப்பட்டது.

இங்ஙனம் அரபாத்தும் அவருடைய ஆலோசகர்களும் ஒஸ்லோப் பிரகடன விடயத்தில் சோரம் போனதை கடுமையாகக் கண்டித்து எழுதிய போராசிரியர் எட்வேர்ட் சயீட் போன்றவர்கள் சமாதானத்தின் விரோதிகளாக காட்டப்பட்டனர். பாலஸ்தீனத் தரப்பு நியாயங்களையும் தரவுகளையும் ஆழமாக ஆராய்ந்து, சேகரித்து அவற்றின் அடிப்படையில் பேச்சுவார்த்தை யின்போது இஸ்ரேலின் சூழ்ச்சிகளை முறியடிப்பதில் அரபாத்தினுடைய ஆலோசகர்கள் எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை என பேராசிரியர் எட்வர்ட் சயீட் கூறுகிறார்.

பாலஸ்தீன சாட்டரின் அடிப்படைக் கோட்பாடுகளை அரபாத்தின் ஆலோசகர்கள் கைவிட்டதன் காரணமாக இன்று பாலஸ்தீன மக்களின் போராட்டத் திசை தடுமாறுகிறது. இவ்வகையான ஒரு தந்திரோபாயத்தின் அடிப்படையிலேயே பிரித்தானிய அரசு வட அயர்லாந்துப் போராட்டத்தை அரசியல் ரீதியாக மடக்கிப்போட முனைந்தது.

வட அயர்லாந்தின் பிரச்சினை அங்கு வாழும் கத்தோலிக்கருக்கும் புரட்டஸ்தாந்திகளுக்கும் இடையிலான முரண்பாட்டைத் தணிக்கும் அதிகாரப் பரவலாக்கல், வன்முனையை அனைவரும் முற்றாகக் கைவிடல் போன்றவற்றின் அடிப்படையில் வரையறை செய்யப்பட

வேண்டும் என்பது பிரித்தானியாவின் நிலைப்பாடு. இந்த அடிப்படையிலேயே 1996 இலிருந்து வடஅயர்லாந்து சமாதானப் பேச்சுக்களை அது முன்னெடுக்க விரும்பியது.

இதன் உள்நோக்கத்தை தெளிவாக இனங்கண்டு கொண்ட ஜரிஷ் விடுதலை இயக்கம் தனது போராட்டத்தின் அடிப்படைக் கோட்பாட்டை மீண்டும் மீண்டும் மிகத்தெளிவாகப் பிரகடனப் படுத்தியது. வடஅயர்லாந்தை பிரித்தானியா ஆக்கிரமித்திருப்பதே பிரச்சினையின் அடிப்படை என்பதை ஜரிஷ் விடுதலை இயக்கம் கைவிடவில்லை. அதை கைவிடப் பண்ணுவதற்கு பிரித்தானியா எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டன.

இவற்றையெல்லாம் இங்கு கூறுகையில் ஒரு ஆட்சேபனை எழலாம். மேற்படி உதாரணங்கள் எதுவும் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினையுடன் ஒப்பிடக் கூடியவையல்ல. ஏனெனில் இங்கு புலிகளிடம் பெரும் படைவலு இருக்கிறது என்பதே அது. ஒரு மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் அவர்களிடமுள்ள படைவலு என்பது அவர்களுடைய முழு இறைமை என்ற அரசியல் குறிக்கோளை அடையும் ஒரு கருவியாகவே தொழிற்படுகிறது.

எனவே முழுச் சுயநிர்ணய உரிமை என்ற எமது அரசியல் முதுசத்தை நாம் கை கழுவிவிட்டு, இலங்கையின் ஒருமைப்பாட்டிற்குள் உள்ளக சுயநிர்ணய உரிமை என்ற ஒஸ்லோ பிரகடனத்தின்பாற்பட்டு ஒழுகுவதாயின் அக் குறிக்கோளை அடைந்திட புலிகளின் படைவலு தேவையற்றது என்ற எண்ணம் மக்களின் உள்ளத்தில் உண்டாகலாம். ‘அறுகம் புல்லைத்தான் வெட்டப் போகிறோம் என்று முடிவெடுத்த பின் கோடாலி எதற்கு’ என்ற எண்ணத்தை காலப்போக்கில் எமது மக்களிடம் தோற்றுவிக்கலாம் என ஒஸ்லோப் பிரகடனத்தின் சூத்திரதாரிகள் கருதுகின்றனர்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைவின் முன்னுரையில் புலிகள் ஒஸ்லோப் பிரகடனத்தை தூக்கி ஒருபுறம் வைத்துவிட்டு எமது போராட்டத்தின் சரியான அரசியல்

அடித்தளத்தை தெளிவாக இனங்காட்ட முற்பட்டுள்ளனர். ஒஸ்லோப் பிரகடனத்தைக் கிழித்தெறிந்து அதை ஒரு கெட்ட கனவாய் மறந்து அடுத்த கட்டத்தில் நாம் காலடியெடுத்து வைக்கவேண்டும்.

07.12.2003



## -14- இலங்கையின் தேசிய செல்வத்தை பங்கிட மறுக்கும் சிங்கள தேசம்

உலகின் வரையறுக்கப்பட்ட வளங்களுக்காக மனிதர்கள் போட்டியிடுகின்றார்கள். இந்தப் போட்டி அரசியல் முரண்பாடுகளுக்கும் பெரும் போர்களுக்கும் காரணமாகிறது. மனித குலத்தின் அனைத்து முரண்பாடுகளும் சண்டைகளும் வரையறுக்கப்பட்ட வளங்களுக்கான இந்தப் போட்டாபோட்டியில் இருந்தே தோன்றுகின்றன எனச் சிலர் கூறுவர். இலங்கை இனப்பிரச்சினையையும் நாம் இந்த அடிப்படையில் நோக்கலாம்.

கடந்த வியாழக்கிழமை (18.11.2004) ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினுடைய முதலாவது வரவு செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் தமிழருக்கு எந்த நன்மையுமில்லையென சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசியுள்ளனர். வரவு செலவுத்திட்டம் என்பது உண்மையில் என்ன? 'ஒரு நாட்டின் திரட்டிய தேசிய செல்வத்தை எதற்கு எவ்வாறு செலவிடுவது எனத் தீர்மானிப்பதே' வரவு செலவுத்திட்டம் எனப்படுகிறது.

இந்த அடிப்படையில் பார்த்தால் இலங்கைத் தீவின் அனைத்து மக்களிடமிருந்தும் வரியாகவும் தீர்வைகளாகவும் இன்ன பிற வழிகளிலும் திரட்டப்படும் தேசிய செல்வத்தை எவ்வாறு செலவு செய்வது, எதற்கு ஒதுக்கீடு செய்வது என்ற ஏகபோக உரிமை சிறி லங்கா அரசியல் யாப்பின் 148 ஆவது பிரிவின் கீழ் நாடாளுமன்றத்துக்கே வழங்கப்பட்டுள்ளது.

யார்தான் மாறி மாறி ஆட்சிக்கு வந்தாலும் சிறி லங்கா நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக இருக்கப்போவது சிங்கள அரசியலாளரே. இதன் அர்த்தம் என்ன? சிங்கள மக்களுடைய மேம்பாட்டை நோக்கியே இலங்கையின் திரட்டிய தேசிய செல்வத்தை அவர்கள் செலவிட முனைவர் என்பதே யதார்த்தம். இலங்கையின் தேசிய செல்வம் என்பது தமிழராலும் உருவாக்கப்படுவதாகும். ஆனால் அதை எவ்வாறு தமது சமூக நன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் செலவிடுவதென்ற உரிமை அவர்களுக்கில்லை. இலங்கைத் தீவிலிருந்து பிரித்தானியர் காலத்திலிருந்து இன்றுவரை தமிழ்ச் சமூகம் எதிர்கொண்டு வரும் பல சிக்கல்களுக்கு இதுவே காரணமாகும்.

தமிழ் சிங்கள மேட்டுக்குடிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைப்பார்கள், அவர்கள் இனபேதமின்றி இலங்கையின் தேசிய செல்வத்தைக் கையாள்வார்கள் என இலங்கைக்கு ஒற்றையாட்சியை வழங்கிச் சென்றபோது பிரித்தானியர் எதிர்பார்த்தனர். அந்நேரத்தில் சில தமிழ்த் தலைவர்களும் இதே கருத்தைக் கொண்டிருந்தமையால் தேசியசெல்வத்தின் மீது நாடாளுமன்றத்திற்கிருந்த ஏகபோகத்தை, தனியுரிமையை எதிர்க்கத் தவறிவிட்டார்கள். சிங்களப் பெரும்பான்மை நாட்டில் அதன் நாடாளுமன்றத்தை சிங்கள அரசியலாளரே கட்டுப்படுத்துவார்கள் எனவும் அதனால் இலங்கையின் தேசிய செல்வமும் அவர்களின் தனியுரிமையாகிவிடும் எனவும் சில தமிழ் அரசியலாளரும், அறிஞர்களும் அன்று எழுப்பிய குரல் எடுபடாமல் போயிற்று.

அது மட்டுமன்றி ஒரு நாட்டின் தேசிய செல்வத்தின் மீதான ஏகபோக உரிமையை அனுபவிப்பவர்கள் தமது ஏனைய அரசியல் ஏகபோகங்களையும் இலகுவில் விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்பது உலக அரசியல் வரலாறு தரும் பாடமாகும். அதாவது இலங்கையின் திரட்டிய தேசிய செல்வத்தை விகிதாசாரப்படி தமிழருக்குப் பங்கிட்டுக் கொடுப்பதற்கும், அதை அவர்கள் எவ்வாறு செலவிடுவது என்பதற்கான அரசியல் நிருவாக ஒழுங்கை ஏற்படுத்துவதற்கும் பிரித்தானியர் ஆவன செய்திருந்தால் இன முரண்பாடு

இந்தளவிற்கு வளர்ந்திருக்காது எனச் சிலர் கூறுவர். பழையதைப் பேசிப் பயனில்லை.

இந்தவகையில் தமிழருக்கேற்பட்ட பெரும்பாலான இன்னல்களையும் அவர்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளையும் இலங்கையின் வளங்கள் மீது சிங்கள தேசம் கொண்டுள்ள ஏகபோக உரிமையின் அடிப்படையில் விளங்கிக் கொள்ள முடியும். இலங்கையின் தேசிய செல்வத்தின் பெரும்பகுதி சிங்கள தேசத்தை விருத்திசெய்யச் செலவிடப்பட்டதாலும், தமிழ், முஸ்லிம் மக்களினுடைய பல வாழ்வாதாரப் பிரதேசங்கள் சிங்கள மக்களின் ஏற்றம் கருதி உருவாக்கப்பட்ட பெருநீர்ப்பாசனத் திட்டங்களால் கையகப்படுத்தப்பட்டதாலும் தமிழர் தாயகத்திற்குள்ளேயே போட்டிகளும், பிரதேச முரண்பாடுகளும் ஏற்படலாயின.

அதாவது ஒரு குறிப்பிட்ட ஆண்டில் இலங்கையின் திரட்டிய தேசிய செல்வம் ஆயிரம் ரூபாய் என வைத்துக் கொள்வோம். அதில் தமிழருக்குச் சேரவேண்டியது குறைந்தபட்சம் நூற்றியிருபது ரூபாயாகும். ஆனால், இந்த நூற்றியிருபது ரூபாயில் பெரும் பகுதி நாடாளுமன்றத்திற்கூடாக சிங்கள மக்களின் நன்மைக்குச் செலவிடப்படுமாயின் தமிழ் மக்களிடையே எஞ்சுகின்ற ஒருசில ரூபாய்களுக்கான போட்டியும் முரண்பாடும் அதிகரிக்கும். இவ்வாறு வரையறுக்கப்படும் வளங்கள் காரணமாக தமிழருக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் முரண்பாடேற்படுவதும் தவிர்க்க முடியாததாகின்றது.

வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களில் கணிசமான சிங்களவர்கள் இருக்கின்ற அம்பாறை, திருமலை மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு சிறி லங்கா அரசு கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாக குறிப்பிடத்தக்க எந்த நிதி ஒதுக்கீடும் செய்யவில்லை. இதைத்தான் யாழ் மாவட்ட அபிவிருத்திக்கு சிறி லங்கா அரசு ஒரு சதமேனும் தரவில்லையென யாழ் அரச அதிபர் ஒருமுறை குறிப்பிட்டார். வட கிழக்கின் பெரும்பான்மையான மாவட்டங்களிலுள்ள நகர

அபிவிருத்தி அதிகாரசபை, நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை போன்றவையும் சிறி லங்கா அரசின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளில் எதுவும் பெறாமல் அலுவலகங்களை மட்டும் பெயருக்கு நீண்டகாலம் பேணிவந்தன.

சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் தொடங்குவதற்கான நிதியொதுக்கீடுகளோ கடன்களோ வட கிழக்கில் மூன்று வருட அமைதிக்குப் பின்னர்கூட கொடுக்கப்படுவதில்லை. வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் பெருங் கைத்தொழில்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை. இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். இவற்றின் ஒட்டுமொத்த விளைவாக தமிழர் தாயகத்தில் இன்று வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகிச் செல்கின்றன. இவற்றை தமிழ் அரசியலாளர் கேள்வி கேட்காமலிருப்பதற்கு பரவலாக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு என்ற பெயரில் ஆளுக்கு ஐம்பது லட்சம் என்று சிறு எலும்புத் துண்டுகள் போடப்படுகின்றன. அதையெப்படி கோயில்களுக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கும் வழங்கி தமது அரசியல் ஆதரவுகளைத் தக்கவைத்துக் கொள்வது என்பதிலேயே நமது தமிழ் அரசியலாளர் கவனங்கொண்டு திரிவர். ஆனால் உண்மை என்ன? இலங்கையிலேயே வங்கிகளில் அதிக பணத்தைச் சேமிப்பவர்கள் தமிழர்கள். மிகவும் நெருக்கடியான போர்க்காலத்திலேயே இவர்களுடைய சேமிப்பு எப்படி கணிசமாக இருந்தது என தேசிய சேமிப்பு வங்கிப் பணிப்பாளரே ஒரு முறை குறிப்பிட்டுள்ளார்.

வங்கிச் சேமிப்புகளே தென்னிலங்கையில் பெருங் கைத்தொழில்கள் தொடங்குவதற்கும் அபிவிருத்திகள் செய்வதற்கும் பல்வேறு வகைக் கடன்களாக வழங்கப்படுகின்றன. வரவு செலவுத் திட்ட துண்டு விழும் தொகையை ஈடுசெய்வதற்கும் சிறி லங்கா அரசு இந்தச் சேமிப்புக்களை நம்பியே வங்கிகளிடம் கடன்வாங்குகின்றது. இந்தவகையில் தமிழரின் சேமிப்புகளும் அவர்களிடமிருந்து அறவிடப்பட்ட பல்வேறு வரிகளும் அவர்கள் மீதே போர்தொடுக்கப் பயன்படுத்தப்பட்டன என்ற உண்மையை

நாங்கள் கவனிக்க வேண்டும். சிங்கள மேலாண்மையாளரால் நாம் எந்தளவிற்கு முட்டாளாக்கப்பட்டோம், இன்னும் ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணிப்பார்க்க இன்று பலருக்கு நேரமில்லை. 56 ஆண்டுகளாக இலங்கையின் தேசிய செல்வத்தின் மீது சிங்கள தேசம் கொண்டிருந்த ஏகபோக உரிமையின் காரணமாக ஏற்பட்ட அழிவுகளையும் தீமைகளையும் கருத்தில் கொண்டுதான் தமிழர் தாயகத்தின் புனரமைப்பு, மீள் கட்டுமானம் என்பவற்றைச் செய்வதற்கு ஒரு தனிக் கட்டமைப்பினையும் அதற்கான நிதியையும் புலிகள் கோரினர். அதாவது இலங்கையின் தேசிய செல்வத்தில் தமிழருக்கு நியாயமாக உரிய பங்கில் ஒரு பகுதியைத்தானும் எவ்வாறு செலவிடுவதென தமிழரே தீர்மானிப்பதற்கான ஒரு கட்டமைப்பைப் பற்றியே புலிகள் பேசினர்.

ஆனால், இது சிறி லங்கா அரசியல் யாப்பின் 148 ஆவது பிரிவின் கீழ் இலங்கையின் தேசிய செல்வத்தின் மீது நாடாளுமன்றத்திற்குள்ள ஏகபோக உரிமைக்கு முரணானதால் சட்டவிரோதமானதென சிங்கள அரசியலாளர் தட்டிக்கழித்து விட்டனர். அதாவது தமிழ் மக்கள் உருவாக்கும் செல்வத்தை எவ்வாறு, எதற்கு பயன்படுத்துவதென்ற தனியுரிமையை சிறு துளிகூட விட்டுக்கொடுக்க சிங்கள மேலாண்மையாளர் தயாரில்லை என்பதையே இது மீண்டும் நிறுவியது.

வரதராஜபெருமாள் மாகாணசபை மூலமாக செயற்பட முற்பட்டபோது அதற்கும் இது போன்றதொரு தடையைப் போட்டனர் சிங்கள மேலாண்மையாளர். மாகாண சபைகளுக்கு திரட்டிய தேசிய செல்வத்தின் ஒரு பங்கைக் கொடுப்பதற்கு நிதி ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென 13 ஆவது திருத்தச்சட்டத்தில் கூறப்பட்டது. இந்த ஆணைக் குழுவை நடைமுறைப்படுத்தி அதன் மூலம் தேசிய செல்வத்தில் தமிழருக்குரிய ஒரு பங்கையாவது சிங்கள தேசத்திடமிருந்து பெற்றுவிடலாமென எதிர்பார்த்தார் பெருமாள். கடைசிவரை முடியவில்லை. எனவே தமிழீழந்தான் ஒரே வழியெனப் பிரகடனப்படுத்தி அவர் இந்தியாவிற்கு ஓடிவிட்டார். மாகாணசபைகள் இயங்கத் தொடங்கி பதினாறு வருடங்கள்

ஆகியும் இன்றுவரை இந்த நிதி ஆணைக்குழு பற்றிய பேச்சையே எடுக்காமல் இருக்கிறார்கள் சிங்கள மேலாண்மை யாளர். ஒழுங்கான மாநில சுயாட்சியென்பது ஒரு நாட்டின் தேசிய செல்வத்தை நீதியான முறையில் பங்கிடுவதற்கான அரசியல் நிருவாகக் கட்டமைப்பைக் கொண்டதாகும்.

உள்நாட்டுப் போர் நடைபெற்ற, நடைபெற்றுவரும் பலநாடுகளில் தேசிய செல்வத்தையும் வளங்களையும் எவ்வாறு பங்கிடுவதென்பது ஒரு மிக முக்கியமான அம்சமாகக் காணப்படுகின்றது. சூடானில் 1983 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்றுவரும் உள்நாட்டுப்போரை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு கடந்த பல ஆண்டுகளாக நடந்துவந்த பேச்சுக்களில் அந்நாட்டின் எண்ணெய் மற்றும் அரபிப் பசை என்பவற்றிலிருந்து கிடைக்கும் வருவாயை எவ்வாறு சமனாகப் பங்கிடுவது என்ற விடயம் மிக அடிப்படையாயிருந்தது.

எண்ணெய் வளம் நிரம்பிய நைஜீரியா நாட்டில் பல இனங்கள் காணப்படுகின்றன. 1960, 1963 இல் இந்த இனங்கள் இணைந்து உருவாக்கிய சமஷ்டி அரசியல் யாப்பில் நைஜீரியாவின் தேசிய செல்வத்தை எவ்வாறு நீதியாகப் பங்கிடுவதென்பது மிக முக்கியமான அம்சமாக வரையப்பட்டுள்ளது.

தமிழர் தாயகத்தின் ஒரு மிக முக்கிய இயற்கை வளமான இல்மனைட் மண்ணை விற்று கோடிக்கணக்கில் சம்பாதித்தது சிங்கள தேசம். அதிலொரு சிறுபங்கைக் கேட்டாலும் சட்டப் புத்தகத்தைக் காட்டுகிறார்கள்.

இந்தியாவின் தேசிய செல்வத்தை அதன் மாநிலங்களுக்கு உரிய முறையில் பங்கிட்டுக் கொடுப்பதற்கென அந்நாட்டின் அரசியல் யாப்பின் கீழ் நிதி ஆணைக்குழு ஒன்று இயங்குகிறது. நீண்ட காலமாக இந்தியாவின் தேசிய செல்வத்தை இந்தி மொழி பேசும் வட மாநிலங்களே ஆண்டனுபவிக்கின்றன என தமிழ்நாடு போன்ற தென் மாநிலங்கள் குறைபட்டு வந்தன. இந்தியாவில் முழுமையான சமஷ்டியாட்சி முறை இல்லாமையே இதற்குக் காரணமாகும்.

எனினும் தேசிய செல்வத்தை நீதியான முறையில் பிரித்திட வேண்டுமென்பது கொள்கை அளவிலாவது அங்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் இது பற்றிய பேச்சையெடுக்கவே மறுக்கிறது சிங்கள தேசம். இத் தீவின் அனைத்து பாகங்களிலுமுள்ள வளங்கள் மீதும் அங்கு உருவாக்கப்படும் செல்வத்தின் மீதும் தனக்கே ஏகபோக உரிமையுண்டு என்பதில் சிங்கள தேசம் மிகமிக உறுதியாகவுள்ளது. இதை மாற்றலாமென்று யாரும் கனவு காண வேண்டாம்.

21.11.2004



## –15– இராணுவத் தீர்வின் மீது மீண்டும் ஆசைகொள்ளும் சிங்கள தேசம்

சிங்கள அரசியல்வாதிகள், கருத்தியலாளர்கள், பத்தி எழுத்தாளர்கள் எனப் பலரும் தற்போது உலகின் அரசியல் இராணுவச் சூழல் புலிகளுக்கு எதிரானதாகவே காணப்படுகிறது. எனவே அவர்கள் (புலிகள்) கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனப் பரவலாக எழுதியும் பேசியும் வருகிறார்கள். அண்மைக் காலங்களில் எந்தவொரு கிழமையிலும் சிங்கள, ஆங்கில செய்தித்தாள்களைப் புரட்டிப் பார்த்தால் புலிகள் மீது சிறி லங்கா அரசு கடும் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும், கருணா குழுவின் செயற்பாடுகளால் புலிகள் பலவீனப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் எனவும், எந்தப் போரியல் நகர்வையும் மேற்கொள்ள முடியாதபடி புலிகள் சர்வதேச ரீதியாக முடக்கப்பட்டுள்ளார்கள் என்பன போன்ற பல கருத்துக்கள் மாறி மாறி வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு ஆதாரங்களுடன் கட்டுரைகளாகவும், ஆய்வுகளாகவும், ஆசிரியர் தலையங்கங்கள் ஆகவும் வெளிவந்த வண்ணமிருப்பதைக் காணலாம்.

இவற்றிலிருந்து மிகத் தெளிவாக ஒன்றை நாம் கண்டுகொள்ளலாம். அதாவது இலங்கையின் இன முரண்பாட்டை தீர்ப்பதற்கு அரசியல் தீர்வைத் தவிர்ந்த ஏனைய வழிமுறைகளிலேயே சிங்கள தேசம் கூடிய நாட்டமும் பற்றும் காட்டி வருகின்றது என்பதே அந்த உண்மையாகும். நாட்கள் செல்லச் செல்ல அரசியல் தீர்வு தவிர்ந்த ஏனைய வழிமுறைகளின் மூலம் புலிகளை நிரந்தரமாக முடக்கிப் போட்டு

காலப்போக்கில் அவர்களை வலுவிழக்கச் செய்யலாம் என்ற எண்ணம் சிங்கள தேசத்தில் மிக மேலோங்கி வருகிறது. நியாயமான அரசியல் தீர்வொன்றை தமிழ் மக்களுக்கு வழங்கி அதன் மூலம் இலங்கையின் ஒட்டுமொத்த சமூகத்தையும் பீடித்து அழித்துவருகின்ற இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதைவிட கருணாவிற்கு ஆதரவு வழங்கி அதன் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டும் என்பதில் சிங்கள தேசம் பேரார்வம் காட்டி வருவதையே நீங்கள் காண்கிறீர்கள்.

இன்று சிறி லங்கா அரச தரப்பிலும் சரி, சிங்கள எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையிலும் சரி, பேச்சுவார்த்தையில் சாட்டுப் போக்கிற்காகவே நாட்டங் காட்டப்படுகின்றது என்பது வெள்ளிடைமலை. தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வொன்றைக் கொடுக்காமல் காலவரையறையின்றி தாம் இழுத்தடித்துக் கொண்டு போனாலும், தம்மீது வெளிநாடுகள் எந்த அழுத்தத்தையும் கொடுக்கமாட்டா எனச் சிங்கள மேலாண்மையாளர் இன்று திடமாக நம்புகின்றனர். அவர்களுடைய நம்பிக்கைக்கு அடிப்படை இல்லாமலில்லை. டோக்கியோ பிரகடனத்துக்கு எதிராக இலங்கை விடயத்தில் அண்மைக் காலமாக அமெரிக்கா செயற்பட்டு வருவதாகவும், இது சிறி லங்கா அரசுக்கு தவறான சமிக்ஞைகளைக் கொடுக்கின்றது எனவும் சில மாதங்களுக்கு முன்னர் ஐரோப்பாவில் நான் சந்தித்த வெளிநாட்டலுவல்கள் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையில் புலிகளையும் சிறி லங்கா அரசையும் அமைதிப் பேச்சுக்களை நோக்கி நகர்த்துவதற்கு சர்வதேச நிதியுதவியை ஓர் அழுத்தக் கருவியாகப் பயன்படுத்துவது என டோக்கியோ மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. அதாவது நிதி நெருக்கடியில் இருக்கின்ற சிறி லங்கா அரசு அமைதிப் பேச்சுக்களை காத்திரமாக முன்னெடுக்கும் பட்சத்திலேயே 450 கோடி அமெரிக்க டொலர்கள் பேச்சின் முன்னேற்றத்தைப் பொறுத்து படிப்படியாக வழங்கப்படும் என்பதே டோக்கியோ பிரகடனத்தின் உட்கிடையாகும்.

நிதித்தேவை என்ற அழுத்தத்திற்கு சிங்கள தேசம் ஆட்பட்டு பேச்சுகள் மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணும் பாதையில் பயணிக்க நிர்ப்பந்திக்கப்படும் என டோக்கியோ மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் - குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் - எதிர்பார்த்தன.

ஆனால் தனது மிலேனியம் கணக்கில் பங்குபெற தகுதிவாய்ந்த உலகின் சில நாடுகளில் ஒன்றாக சிறி லங்காவை பிரகடனப்படுத்தியதன் மூலம் அமெரிக்கா, டோக்கியோ பிரகடனத்தின் அடிப்படை நோக்கத்திற்கு எதிராகச் செயற்பட்டது என்பதே மேற்குறிப்பிட்ட ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் சிலர் என்னிடம் தெரிவித்த கருத்தாகும். இதன் விளக்கம் என்ன? அமைதிப் பேச்சுக்களை முன்னெடுத்தா லென்ன, முன்னெடுக்காவிட்டாலென்ன நமக்கு எங்கிருந்தோ நமது நாட்டைக் கொண்டு நடத்துவதற்கு உதவி கிடைக்கும் என்ற உளப்பாங்கை சிங்கள மேலாண்மையாளரிடம் அமெரிக்கா ஏற்படுத்தியுள்ளது.

புலிகளுடன் பேசி காத்திரமான ஓர் அரசியல் தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்கிட வேண்டும் என்ற அழுத்தத்தை சிங்கள மேலாண்மையாளரிடம் ஏற்படுத்தும் நோக்கில் வரையப்பட்ட டோக்கியோ பிரகடனம் அமெரிக்காவின் செயலால் அர்த்தமற்றுப் போகிறது என ஐரோப்பிய ஒன்றியத்தின் அமெரிக்கச் சார்பற்ற சில நாடுகள் வெளிப்படையாகவே விசனப்படுவதை கேட்கமுடிகிறது. இது விடயத்தில் அமெரிக்கா ஒரு குறிப்பிட்ட சுயநல நோக்கில் இங்கு செயற்படுகின்றது என்பதை இவ்வாரம் ஆசிய அபிவிருத்தி வங்கி சிறி லங்காவிற்கு 570 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்குவதாக செய்த அறிவிப்பிலிருந்து தெளிவாக அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்க வேண்டும் எனச் சிறி லங்கா அரசையும், சிங்கள மேலாண்மையாளர்களையும் நெருக்குவதற்கு போடப்பட்ட ஒரேயொரு சர்வதேச அழுத்தமும் இன்று அமெரிக்காவின் செயலால் நீக்கப்பட்டு விட்டது.

எனவேதான் சிங்களதேசம் இன்று முன்னரைவிட முனைப்புடன் அரசியல் தீர்வு தவிர்ந்த ஏனைய வழிமுறைகள் மூலம் எமது நியாயமான உரிமைகளை வழங்காமல் சிங்கள பௌத்த ஒற்றையாட்சியினுள் எம்மை மீண்டும் மடக்கி ஒடுக்கி வைக்க ஆவன செய்து வருகிறது. இந்த நிலையில் சிங்கள தேசத்தை நியாயமான அரசியல் தீர்வை நோக்கி நகர வைத்திட நாம் கொடுக்கக்கூடிய அழுத்தம் என்ன என்ற கேள்வி தவிர்க்க முடியாதபடி எழுகிறது. பிரித்தானியர் இலங்கைத் தீவை விட்டகன்று 35 வருடங்கள் வரை (1948 - 1983) அகிம்சை வழியில் நாம் எத்தனையோ அழுத்தங்களைக் கொடுத்துப் பார்த்துவிட்டோம். சில சந்தர்ப்பங்களில் எம்மவர்கள் அழுத்தங் கொடுப்பதற்குப் பதிலாக சிங்கள அரசுகளோடு கூடிக் குலாவியும் பார்த்தனர். கண்ட பயன் ஒன்றுமில்லை.

மீண்டும் போரில் இறங்குவதற்கு புலிகளை சர்வதேச சமூகம் அனுமதிக்காது என்ற திடமான நம்பிக்கை ஒருபுறமும், அரசியல் தீர்வைக் கொடுப்பதற்கு தம்மீது டோக்கியோப் பிரகடனத்தின் மூலம் போடப்பட்ட அழுத்தத்தை அமெரிக்கா நீக்கிவிட்டது என்ற உற்சாகம் மறுபுறமுமாக சிங்கள தேசத்தை மீண்டும் படிப்படியாக இராணுவத் தீர்வு என்ற பாதையை நோக்கித் துரிதமாகத் தள்ளி வருகின்றன.

சர்வகட்சி ஆலோசனைக் குழுவொன்றையும் பேச்சுக்கான நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றையும் அமைத்து மீண்டும் புலிகளுடன் பேசப் போகிறேன் என சிறி லங்கா ஜனாதிபதி கூறியிருப்பது சுத்த அபத்தமானது. அரசுகள் சிக்கலான ஒரு விடயத்தை நைசாக குப்பைத் தொட்டியில் போடுவதற்கு காலங்காலமாக பயன்படுத்தி வரும் முறைதான் ஆணைக்குழு, சர்வகட்சிக்குழு, தெரிவுக்குழு போன்றவற்றை அமைத்தலாகும். சன்சோனி ஆணைக்குழுவிலிருந்து மங்கள முனசிங்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு வரை நடந்த பம்மாத்துகளை அறிந்தவர்கள் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைச் சபை எதற்காக சிறி லங்கா ஜனாதிபதியால் நிறுவப்படப் போகின்றது என்பதை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள்.

தமிழருக்கு நியாயமான அரசியல் தீர்வை வழங்கியே ஆக வேண்டும் என்ற சர்வதேச அழுத்தங்கள் இல்லாமல் போய்விட்ட நிலையில், சிங்கள தேசம் எம்மை மீண்டும் போருக்கு இழுத்து வெளிநாட்டு இராணுவத் தலையீட்டை இங்கு ஏற்படுத்தி எமது உரிமைகளையும் அந்த உரிமைகளைக் கேட்டுப் போராடுவதற்குத் தேவையான எமது படை வலுவையும் ஒரேயடியாக நசுக்கிவிடுவதற்குத் தருணம் பார்த்திருக்கிறது. அரசியல் தீர்வை இழுத்தடித்துக் கொண்டு தமிழர் தரப்பை பல்வேறு வழிகளில் சீண்டி வந்தால் புலிகள் தாமாகவே போரைத் தொடங்க வேண்டி நிர்ப்பந்திக்கப்படுவர். இப்படியான நிர்ப்பந்தத்திற்கு அவர்கள் ஆளாகும்போது நேரடி வெளிநாட்டுப் படையுதவி கிடைப்பதற்கு முயற்சி செய்து அந்த முயற்சியில் வெற்றியும் காணலாம் என சிங்கள மேலாண்மையாளர் இன்று நம்பத் தலைப்பட்டுள்ளனர். சிங்கள தேசத்தின் மீது எமக்கு ஓர் அரசியல் தீர்வைத் தருவதற்கான சர்வதேச அரசியல் அழுத்தங்கள் அற்றுப்போன நிலையில் மீண்டும் நாமே அந்த அழுத்தத்தை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் விரைவில் தோன்றும். இது தவிர்க்க முடியாதது. ஆகவேதான் நாம் வெளிநாட்டு இராணுவத் தலையீட்டின் சாத்தியப்பாடுகளையும் அதை முன்தடுக்கும் வழிவகைகளையும் ஆராய வேண்டியுள்ளது.

இதில் முதலாவதாக நாம் இந்தியாவைப் பார்ப்போம். யாழ்ப்பாணம் 2000 ஆம் ஆண்டு புலிகளால் கைப்பற்றப்படவிருந்த வேளையில், இந்தியா தமது உதவிக்கு வரவில்லை என்ற ஆதங்கமும், அதன் காரணமாக வருங்காலத்திலும் இந்தியா புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு நேரடியாக உதவாமல் விடலாம் என்ற சந்தேகமும் சிங்கள மேலாண்மையாளரிடம் உண்டு. ஆயினும் நாம் இந்திய இராணுவத் தலையீடு இனி இருக்காது என்று வாளாவிருப்பதைவிட அதன் சாத்தியப்பாட்டை ஆராய்வது அவசியமாகும்.

1987 ஆம் ஆண்டில் இந்தியா தனது படையை இங்கு அனுப்பியபோது பின்வரும் விடயங்கள் தனக்குச் சாதகமாக

இருக்கின்றனவா என்பதைக் கருத்திற்கொண்டே அதைச் செய்தது. முதலாவது தமிழ் மக்கள் ஓரளவாயினும் திருப்திப்படக்கூடிய சுயாட்சி, இரண்டாவது, பெரும்பான்மை யான தமிழ் இயக்கங்கள், அரசியல் கட்சிகள் என்பவற்றின் ஆதரவு, மூன்றாவது, தமிழர் தாயகத்தில் புலனாய்வு ஆதிக்கம். இந்தியப் படைகளை இங்கு வழிநடத்திய அனைத்துத் தளபதிகளும் தமது அனுபவங்களையும் தாம் கற்ற பாடங்களையும், நூல்களாகவும், ஆய்வுரைகளாகவும், கட்டுரைகளாகவும் வெளியிட்டுள்ளனர். இவை எல்லாவற்றிலும் அவர்கள் ஒன்றை முக்கியமாகக் குறிப்பிட்டுள்ளனர். அதாவது தமிழ் மக்களுக்கு முறையான சுயாட்சி கொடுக்கப்படாமையால் அவர்களை புலிகளிடமிருந்து அந்நியப் படுத்துமளவிற்கு திருப்திப்படுத்த முடியவில்லை.

இதனால் எதிர் கெரில்லா போரியலின் (Counter Insurgency) அடித்தளமான மக்களை வென்றெடுக்கும் மூலோபாயம் முழுமையாக வெற்றி பெறவில்லை எனவும், இதன் காரணமாக மக்கள் ஆதரவுடன் புலிகள் தொடர்ந்து இந்தியப் படைகளுக்கெதிராக போராடக் கூடியதாக இருந்தது எனவும் அவர்கள் கூறுகின்றனர். மக்களைத் திருப்திப் படுத்தாமலும் அந்த மக்களுக்குள்ளிருந்து உள்ளூர் படைகளை உருவாக்காமலும் ஓர் எதிர் கெரில்லாப் போரை வெற்றிகரமாகக் கொண்டு நடத்த முடியாது என்பது அனைத்துப் போரியல் அறிஞர்களதும் ஒருமித்த கருத்தாகும். இதனாலேயே ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் பொம்மை அரசுகளை ஏற்படுத்தி அவற்றின் மூலம் உள்ளூர்ப் படைகளை உருவாக்கி அவற்றின் துணையோடு அவ்விரு நாடுகளிலும் தனக்கெதிராக நடைபெறும் கெரில்லாப் போரை முறியடிக்க அமெரிக்கா முயல்வதை நாம் காண்கின்றோம்.

இதேபோல் பல உதாரணங்களை நாம் காட்டலாம். ராஜீவ் காந்தி கொலை விசாரணையைப் பற்றி அவ்விசாரணையை நடாத்திய தலைமை அதிகாரி கார்த்திகேயன் ஒரு நூல் எழுதியுள்ளார். அதன் பின்னுரையாக அவர் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகின்றார். 1989 ஆம் ஆண்டு

இந்திய அமைச்சரவையின் தலைமைச் செயலாளர் தன்னைத் திடீரென அழைத்து இலங்கை சென்று, அங்கு இந்தியப் படைகள் புலிகளுக்கு எதிரான போரில் ஏன் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றன என்பதையும் அதோடு தொடர்புபட்ட வேறு விடயங்களையும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இங்கு அனுப்பி வைத்ததாகவும் கூறுகிறார்.

தான் வடகிழக்கிற்குச் சென்று சாதாரண இந்தியப் படை வீரர்கள் தொடக்கம் கட்டளைத் தளபதிகள் வரை நூற்றுக் கணக்கானவர்களுடன் பேசியதில் இருந்தும் EPRLF, ENDLF, TELO, கூட்டணி, தமிழ்ப் பொதுமக்கள் போன்றோரிடமிருந்து அறிந்து கொண்டவற்றிலிருந்தும் மிகத் தெளிவாக ஒன்றைப் புரிந்து கொண்டதாகக் கார்த்திகேயன் கூறுகிறார். அதாவது தமிழருக்குக் கொடுக்கப்பட்ட சுயாட்சி அரைகுறையாக இருந்ததெனவும், அதைக்கூட சிங்களப் பேரினவாத அரச அதிகாரிகள் பல்வேறு வழிகளில் கொடுக்கவிடாமல் தடுத்து வந்தனரெனவும் கூறுகின்றார். இதன் காரணமாக வடகிழக்கு மாகாண சபையாலும், அதைக் கொண்டு நடத்திய இயக்கங்களாலும் புலிகளுக்கு மாற்றீடான ஒரு பாதையை தமிழ் மக்களுக்கு காட்ட முடியாதுள்ளது எனவும், இதனால் புலிகளின் அரசியல் செல்வாக்கு வீழ்ச்சியடையாமல் இருந்தது எனவும் எழுதுகின்றார். இந்தியப் படைகளால் அவர்களை ஓரங்கட்ட முடியாமல் இருப்பதற்கும் போர் முடிவின்றி இழுபட்டு வருவதற்கும் இதுவே அடிப்படைக் காரணம் என்று இந்திய அரசுக்கு தான் சமர்ப்பித்த அறிக்கையில் ஆணித்தரமாக எடுத்துரைத்ததாக கார்த்திகேயன் தனது நூலில் கூறுகின்றார்.

இந்த வகையில் இந்தியா மீண்டும் தனது படைகளை புலிகளுக்கு எதிராக வருங்காலத்தில் அனுப்புவதாயின் அதற்குத் தேவையான மேற்படி முக்கியமான அடிப்படை இன்று அறவே இல்லை. அடுத்தது சிங்களப் பேரினவாதிகளின் சார்பில் புலிகளுக்கு எதிராக தனது படைகளை அனுப்பி இந்தியா இங்கு சாதிக்கப் போவதென்ன? ஒன்றுமில்லை. இலங்கையில் தனக்கு எது தேவையோ அதை 1987 ஆம் ஆண்டு

கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் ஊடாக இந்தியா பெற்றுக் கொண்டது.

அடுத்தது 1987 இலே புலிகளுக்கு எதிராக இந்தியா படை நடவடிக்கை எடுக்க முற்பட்டபோது, இயக்கத்தில் இருந்தவர்கள் 2000 இற்கு உட்பட்டவர்களே. அப்போது புலிகளிடமிருந்த மிகப்பெரிய ஆயுதம் 50 கலிபர் பார இயந்திரத் துப்பாக்கியாகும். அன்று EPRLF, ENDLF, TELO, PLOTE ஆகிய புலி எதிர்ப்பு இயக்கங்களில் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் இருந்தார்கள். இந்திய வெளிநாட்டு உளவுத்துறைக்கு இயக்கங்களுடன் நேரடிப் பழக்கம் இருந்தது. அநேகமான புலிகளின் தலைவர்களை அவர்களுக்குத் தெரிந்திருந்தது. இவை எதுவுமே இன்று இல்லை. இப்படியான சூழலில் இந்தியப் படைகள் தமிழர் தாயகத்தினுள் கால் வைப்பதென்பது முடிவற்ற பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைக் கூற இந்திய இராணுவத் தளபதிகள் தேவையில்லை. இதுமட்டுமன்றி புலிகளுடன் நேரடியாக தான் சண்டையில் இறங்கினால் அதைப் பயன்படுத்தி தனக்குப் பெரும் சேதத்தையும் களங்கத்தையும் ஏற்படுத்தும் நோக்கில் தனக்கு எதிரான சர்வதேசச் சக்திகள் இங்கு புகுந்து விளையாடும் என்பதை இந்தியா நன்குணரும்.

இங்கு இன்னொன்றையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். கடந்த 10 ஆண்டுகளாக சீனாவின் பாதையைப் பின்பற்றி அமைதியான வழியில் உலக வல்லரசாக உயர்வதற்கேதுவாக பொருளாதார வளர்ச்சியில் குறியாக இந்தியா செயற்பட்டு வருகிறது. சீனாவைப்போல் உலகப் பெரு மூலதனத்தை தன்பால் ஈர்ப்பதற்கு தனது எல்லைகளுக்குள்ளும் சுற்றுப் பிராந்தியத்திலும் அமைதி கட்டாயம் வேண்டும் என்ற அடிப்படையில் தனது நீண்டகால எதிரியான பாகிஸ்தானுடன் நல்லுறவை வளர்த்து முரண்நிலையைத் தவிர்ப்பதற்கு அண்மைக் காலத்தில் கடும் முயற்சி செய்து வருகிறது.

அதேபோல நீண்டகாலமாக தான் முரண்பட்டு வந்த சீனா, மியன்மார் ஆகிய நாடுகளுடனும் இந்தியா புத்துறவை

ஏற்படுத்தியுள்ளது. இதேவேளையில் நாகலாந்து, காஷ்மீர் ஆகிய உள்நாட்டுப் போர்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அரசியல் வேலைகளை துரிதப்படுத்தியுள்ளது. நாகலாந்தில் 97 இலிருந்து ஒரு போர் நிறுத்தம் நிலவி வருவதை நீங்கள் அறிவீர்கள். அதாவது தென்னாசியப் பிராந்தியத்தை எந்தளவிற்கு அமைதிப்படுத்த முடியுமோ அந்தளவிற்கு அமைதிப்படுத்தி உலக மூலதனம் பெருமளவில் நாடிடக் கூடிய ஒரு நாடாக தன்னை மாற்றிக் கொள்வதையே தனது முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இந்தியா இன்று செயற்பட்டு வருகின்றது. இந்தியாவினுடைய பெரும்பான்மையான வெளியுறவுக் கொள்கை முடிவுகள் இந்த அடிப்படையிலேயே எடுக்கப்படுகின்றன.

இப்படியாக முரண்தணிப்பு, முரண்பாட்டுச் சூழல்களிலிருந்து விலகல் (Disengagement) மோதல் தவிர்ப்பு என இன்று செயற்படும் இந்தியா புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை என்று இறங்குவதற்கான சாத்தியங்கள் மிக அரிதாகவே உள்ளன. இந்தப் பின்னணியில்தான் புலிகளை மீண்டும் போருக்குத் தள்ளக்கூடிய சூழ்நிலைகள் இலங்கையில் தோன்றக் கூடாது என்பதில் இந்தியா கவனம் காட்டுகிறது. இந்திய பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தத்தை சிங்கள தேசத்துடன் செய்து கொண்டால் இலங்கையின் படைவலுச் சமநிலை தம் பக்கம் திரும்பிவிட்டதாக சிங்கள மேலாண்மையாளர் கருதி, இன முரண்பாட்டை மீண்டும் கிளர்ந்து விட்டெரியச் செய்வர் என்ற ஓர் எண்ணமும் டெல்லியில் காணப்படுகின்றது. இந்த பாதுகாப்பு ஒப்பந்தம் இழுபட்டுக் கொண்டிருப்பதற்கு இதுவுமொரு காரணம் எனக் கொள்ள இடமுண்டு.

அடுத்ததாக வரையறுக்கப்பட்ட இரகசிய படை நடவடிக்கைகளை புலிகளுக்கு எதிராக மேற்கொள்ள இந்தியா தமக்கு உதவவேண்டும் என ஒரு கட்டத்தில் சில சிங்கள பேரினவாதிகளும் அவர்களை அண்டிப் பிழைக்கின்ற சில தமிழ்க் கோஷ்டிகளும் முயற்சி செய்து பார்த்தனர். அதாவது தமிழகத்தில் இருக்கின்ற அகதி முகாம்களில் சேர்க்கப்பட்ட

இளைஞர்களுக்கும் இங்கிருந்து கொண்டு செல்லப்படும் மாற்று இயக்கத்தவர்களுக்கும் இந்தியா இராணுவப் பயிற்சியும் ஆயுதங்களும் கொடுக்கவேண்டும் எனவும், அவர்கள் பின்னர் தமிழகத்திலிருந்து வடபகுதிக்குள் ஊடுருவி புலிகளைப் பலவீனப்படுத்தும் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் எனவும், இதற்கு சிறி லங்கா இராணுவமும் உதவி வழங்கும் எனவும் ஒரு திட்டத்தை அவர்கள் இந்தியாவின் ஒரு சில மட்டங்களில் பேசிப் பார்த்தனர். அது எடுபடவில்லை. என்ன காரணம்? புலிகளை இராணுவ ரீதியாக உடைப்பதென்பது இந்தியாவைப் பொறுத்தவரையில் குளவிக் கூட்டின் மீது கல்லெறிவதைப் போன்றதாகும்.

புலிகள் இயக்கம் சிதறிப் போகின்றது என வைத்துக் கொள்வோம். என்ன நடக்கும் பல்லாயிரக்கணக்கான ஆயுதங்கள் யாருடைய கட்டுப்பாடுமின்றி வடகிழக்கில் உலவுகின்ற சூழல் ஏற்படும். தன்னுடைய எல்லையிலிருந்து 22 கிலோமீற்றர் தூரத்தில் இப்படியான ஒரு நிலை காணப்படுவது மிக ஆபத்தானது என இந்தியா கருதுகிறது. அது மட்டுமன்றி புலிகள் இயக்கம் உடைந்தால் பயிற்சிபெற்ற பல்லாயிரக் கணக்கான போராளிகள் கட்டுப்பாடின்றித் திரிவர். தனக்கெதிரான வெளிநாட்டுச் சக்திகள் தென்னிந்தியாவில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கும் அங்குள்ள தனது அணு மற்றும் ஏவுகணை ஆய்வு மையங்களை தாக்குவதற்கும் அவர்களைப் பயன்படுத்தலாம் எனவும் இந்தியா கவனம் கொள்கிறது. பாகிஸ்தானின் ஊடுருவலுக்கு அஞ்சியே இந்தியா தனது முக்கிய ஏவுகணை மற்றும் அணுவாயுத ஆய்வு அபிவிருத்தித் தளங்களை தென்னிந்தியாவில் நிறுவியது. ஆனால், அண்மைக் காலங்களில் இலங்கையையும் மாலைதீவையும் தளமாகப் பயன்படுத்தி பாகிஸ்தானின் புலனாய்வு நிறுவனங்கள் தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களை ஊடுருவுகின்றன என்பதை அறிந்து, இந்தியா பல மாற்று நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனாலேயே இந்தியப் பிரஜைகள் இலங்கைக்கு வருவதானால் விசா தேவையில்லை என்ற ஒழுங்கிருக்கின்ற அதேவேளை இலங்கையர்கள் இந்தியா செல்வதானால் விசா கட்டாயம்

எடுத்தே ஆகவேண்டும் என்ற நடைமுறை உள்ளது. விசா இல்லாவிட்டால் பாகிஸ்தான் புலனாய்வுத் துறையினர் இலங்கையிலிருந்து இலகுவாக தென்னிந்தியாவுக்குள் ஊடுருவி விடுவார்கள் என்பதையே மேற்படி விசா நடைமுறைக்காக காரணமாக இந்தியா சொல்கிறது.

இது மட்டுமன்றி 2002 ஆம் ஆண்டு மே, ஜூன் மாதங்களில் பாகிஸ்தான் புலனாய்வுத்துறைக் குழுவொன்று யாழ் குடாநாட்டில் இந்தியர் என்ற போர்வையில் நடமாடித் திரிந்து சில கேந்திர ஆய்வுகளை செய்த விடயம் தெரியவந்த பின்னர் இது விடயத்தில் இந்தியா மேலும் அவதானமாகவே உள்ளது. தனது தென்பகுதியை ஊடுருவுவதற்கு பாகிஸ்தான் இவ்வாறான கடும் முயற்சிகளை எடுத்துவரும் ஒரு சூழலில் புலிகள் இயக்கம் உடைவது தனக்குப் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும் என இந்தியா நினைக்கிறது. அடுத்ததாக புலிகளை உடைத்து ஒரேயடியாகப் பலவீனப்படுத்திவிட்டால் சிங்கள தேசத்தை தன் பக்கம் சாய்த்து வைத்துக் கொள்வதற்கு எந்த அழுத்தமும் இல்லாமல் போய்விடும் எனவும் புலிகளின் படைவலு என்ற அழுத்தமும் அச்சுறுத்தலும் இல்லாவிடின் சீனாவுடனும் அமெரிக்காவுடனும் சிங்கள தேசம் தனது உறவை நன்றாகப் பிணைத்துக்கொண்டு இந்தியாவை ஓரங்கட்டிவிடும் என்பதையும் டெல்லியிலுள்ள வெளியுறவு திட்டமிடலாளர்கள் உணர்கின்றர். (புலிகளை ஊடுருவி உடைப்பது கடினமான விடயம் என்பதை இந்திய வெளிநாட்டுப் புலனாய்வுத் துறை 1993 ஆம் ஆண்டு நன்குணர்ந்து கொண்டது என்பது வேறுவிடயம்)

மேற்கூறிய அனைத்தையும் கருத்திற் கொண்டு பார்க்கும்போது, சிங்கள தேசம் எந்த முயற்சி எடுத்தாலும் இந்தியாவைப் புலிகளுக்கு எதிரான நேரடி இராணுவ நடவடிக்கையில் இறக்குவது மிகக் கடினம் என்ற முடிவு பெறப்படும். இது சிங்கள மேலாண்மையாளருக்கும் புரிகிறது. அதனாலேயே அவர்கள் தற்போது அமெரிக்காவை நாடத் தலைப்பட்டுள்ளனர்.

12.09.2004

## -16- முப்படைகளுக்கும் மரபு வழி போர்த்தகைமை உண்டா?

கால் நுற்றாண்டுக்கு மேலாக சிறி லங்காவின் முப்படைகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக நடவடிக்கைகளிலீடுபட்டு வந்துள்ளபோதும், அவை பற்றிய விரிவான வரலாற்று ஆய்வுகள் அரிதாகவேயுள்ளன. தனது ஜம்பதாண்டு நிறைவையொட்டி (1949 - 1999) சிறி லங்கா படைத்துறை ஆறாண்டுகளுக்கு முன்னர் வெளியிட்ட சிறப்பு நூல்தான் நானறிந்தவரை ஓரளவு விரிவான தகவல் களஞ்சியமாகவுள்ளது. எனினும், சிறி லங்கா முப்படைகளின் வரலாறு போரியல் கண்ணோட்டத்தில் இதுவரை எழுதப்படாமலிருப்பது ஒரு பெரும் குறைபாடாகும்.

சிறி லங்காவின் முப்படைகளை உருவாக்குவதற்கும் பயிற்றுவிப்பதற்கும் நீண்ட காலம் உறுதுணை செய்த பிரித்தானியப் படைத்துறைகூட இவ்வாறானதொரு ஆய்வைச் செய்யவில்லை என்பதுதான் வியப்பிற்குரிய விடயம். பிரித்தானியாவின் அதியுயர் படைத்துறைக் கல்லூரியான Sandhurst Royal Military Academy இன் நூலகத்தில் கூட சிறி லங்கா முப்படைகளைப்பற்றி துண்டும் துணியுமாகத்தான் போரியல் ஆய்வு நோக்கிலான தகவல்கள் காணப்படுகின்றன. இது பற்றி நான் கேட்டபோது, தமது படைத்துறைக் கண்ணோட்டத்தில் இலங்கை நீண்ட காலமாக முக்கியத்துவம் அற்றிருந்தமையே இதன் காரணமாக இருக்கலாமென அங்கெனக்குத் துணைவந்த அதிகாரி கூறினார்.

அமெரிக்கப் படைத்துறைப் புலனாய்வு அதிகாரியாகவும் அமெரிக்கப் படைத்துறைப் பல்கலைக் கழகத் துணைப் பேராசிரியராகவும் பணியாற்றிவரும் பிறையன் புளொஜட் (Brian Blodgett) சிறி லங்கா முப்படைகளின் செயல் நோக்கம் பற்றி அண்மையில் எழுதி வெளியிட்டுள்ள கைந்நூல் (Sri Lanka's Military: The Search For A Mission, 1949-2004) இந்த வகையில் முக்கியமானது.

சிறி லங்காவின் முப்படைகளைப் பற்றிப் பலகாலமாக இந்திய, அமெரிக்க மற்றும் பிரித்தானியப் போரியல் ஆய்வாளர்கள் அங்குமிங்குமாக கூறிவந்த ஒரு விடயத்தை புளொஜட் வகுத்துத் தொகுத்து எழுதியுள்ளார்.

வெளிப் படையெடுப்புகளிலிருந்து தமது நாட்டைப் பாதுகாப்பதும், தமது நாட்டின் இருப்பிற்கு இன்றியமையாத மூலவளங்கள், மற்றும் அவற்றைக் கொண்டு வருவதற்கான பாதைகள் என்பவற்றிற்கு அச்சுறுத்தலேற்படும் போது அதை முறியடிப்பதும், தமது நாட்டின் தேசிய நலன்களுக்கு ஆயுதரீதியான ஆபத்து உண்டாகும் போது அதை எதிர்கொள்வதுமே ஒரு நாட்டினது படைகளுக்குரிய அடிப்படைச் செயல் நோக்கமாக இருக்க வேண்டும். ஆனால் சிறி லங்காவின் முப்படைகள் இச்செயல் நோக்கத்தில் இருந்து நீண்ட காலமாக வழுவி நடந்து வருவதால், அவை உண்மையான மரபுவழிப் போரியல் தன்மையற்றவையாக உள்ளன என்பதே மேற்படியார் சுட்டிக்காட்டி வந்த விடயமாகும்.

இதனாலேயே உள்ளூர்க் குழப்பங்கள், கெரில்லாப் போர்கள் போன்றவற்றைத் தொடர்ச்சியாகக் கையாள்வதற்குத் தமது படைகளை அனுமதிக்கப் பெரிய நாடுகள் தயங்குகின்றன. அதாவது காவல்துறையே ஒரு நாட்டின் சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்கென உருவாக்கப்படுகின்ற அமைப்பாகும். வன்முறைசார் உள்நாட்டுச் சிக்கல்களைக் கையாள்வதற்கோ அல்லது எதிர்கொள்வதற்கோ போரியல் ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகள் தமது காவல்துறைகளையும்

இவற்றால் இயலாதவிடத்து விசேட துணையமைப்புகளையும் பயன்படுத்துகின்றன.

உள்ளூர்க் கலகங்கள், குழப்பங்கள் என்பவற்றை எதிர்கொள்ள மரபுவழிப் படைகளைப் பயன்படுத்தும் போது எழக்கூடிய அரசியல் மற்றும் போரியல் சிக்கல்களைக் கருத்திற் கொண்டே பெரிய நாடுகள் இதில் கவனமாக நடந்து கொள்கின்றன. முதலாவதாக, ஓர் உள்நாட்டுச் சிக்கலென்பது அந்நாட்டின் படைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிக்கக் கூடிய அரசியல் பரிமாணம் கொண்டிருப்பது நிச்சயம். எனவே ஓர் உள்நாட்டுக் கலகத்தையோ அல்லது ஆயுதக் கிளர்ச்சியையோ எதிர்கொள்வதற்கு ஒரு நாட்டின் தேசியப்படைகள் ஈடுபடுத்தப்படும்போது, அவற்றுள் அந்தச் சிக்கலுக்குக் காரணமான அரசியல் அல்லது சமூக முரண்பாடு ஏதோ ஒருவகையில் உட்புகுவது தவிர்க்க முடியாது. அப்படியாகும் போது, அந்த மரபுவழிப் படையின் கட்டளை ஒருமைப்பாடு சிதைய இடமுண்டு. சீக்கியரின் பொற்கோவிலுக்குள் இந்தியப் படைகளை, பிரதமர் இந்திரா காந்தி அனுப்பியபோது இந்திய இராணுவத்தின் சீக்கியப் படையணிகளில் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டன.

ஒரு மரபுவழிப் படையின் அடிப்படைச் செயல்நோக்கம் இன்னொரு மரபுவழிப் படையை எவ்வாறு முறியடிப்பது என்பது பற்றியதாகவே இருக்க வேண்டும். இத்தகைமையில்லாத ஒரு நாட்டின் படை அந்த நாட்டின் இறைமையையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் வெளி அச்சுறுத்தலிலிருந்து ஒருபோதும் பாதுகாக்க முடியாது. உள்நாட்டுக் கிளர்ச்சிகளையோ கலகங்களையோ அடக்குவதற்கு ஒரு நாட்டின் மரபுவழிப்படை தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுமேயானால், அது தனது மரபுவழிப் போரியல் தகைமையை இழந்துவிடும். இதனாலேயே காஷ்மீர், நாகலாந்து போன்ற பிரிவினைக் கிளர்ச்சிகள் தொடருமிடங்களில் கூட இந்தியா தனது மரபுவழிப் படைகளை வரையறுக்கப்பட்ட முறையிலேயே ஈடுபடுத்தி வருகிறது.

உள்நாட்டுக் கிளர்ச்சிகளிலோ கலகங்களிலோ எதிரி நாட்டுப்படையைச் சிக்கவைத்து அதன் மூலம் அப்படையின்

அடிப்படைச் செயல் நோக்கத்தைக் குழப்பிவிடுவதனூடாக அதன் மரபுவழிப் போரிடும் திறனை மழுங்கடிப்பதென்பது நீண்ட காலமாகப் பல பெரிய நாடுகள் கையாண்டுவரும் போரியல் தந்திரோபாயமாகும்.

இந்தியப்படைகளின் மரபுவழிப் போரிலீடுபடும் கவனக் குவிப்பைச் சிதைப்பதற்கும் அவற்றின் மரபுவழித் தயார் நிலையைக் குழப்புவதற்குமாகவே பாகிஸ்தான் உள்நாட்டுக் கிளர்ச்சிகளை இந்தியாவின் பல முனைகளிலும் கிளறிவருகிறது என டெல்லியிலுள்ள போரியலாய்வாளர்கள் அனைவரும் ஒருமித்துக் கூறுவர்.

வியட்னாமின் உள்நாட்டுப்போரில் சிக்குண்டு மூக்குடைபட்டதாலேயே அமெரிக்கப் படை நீண்ட காலம் தனது மரபுவழிச் செயல்நோக்கத்தில் குழம்பிப் போயிருந்ததெனவும் அது மாற்றப்பட வேண்டுமெனவும் அமெரிக்கப் படைத்துறை ஆய்வாளர்கள் கூறிவந்தனர். அடையவேண்டிய அரசியல் நோக்கம் தெளிவாக வரையறை செய்யப்பட்ட மரபுவழிப் போரிலேயே மரபுவழிப் படையொன்று இறக்கப்பட வேண்டும் என்பதே இவர்களது கருத்து. இதற்கு இவர்கள் மேலைத்தேயப் போரியல் விஞ்ஞானத்தின் பிதாமகரெனக் கருதப்படும் கார்ள் வொன் குளோசவிட்ஸ் (Carl Von Clausewitz) சொன்ன கோட்பாடுகளைத் தூக்கிப் பிடித்தனர். இக்கோட்பாட்டு மாற்றத்தின் விளைவை நாம் சதாமுக்கெதிரான முதலாம் வளைகுடாப் போரில் கண்டோம். இதனடிப்படையிலேயே ஈராக் மீது இரண்டாம் முறையாகப் படையெடுத்தபோது அடிப்பது, முடிப்பது என்ற தெளிவான வரையறையோடு அமெரிக்கப்படை அனுப்பப்பட்டது. (ஆனால் எதிர்பாராத விதமாக மாட்டிவிட்டார்கள்.)

இதனாலேயே ஈராக்கில் மிகத் துரிதமாக உள்ளூர்ப் படையொன்றையும், காவல்துறையையும் உருவாக்கிடவும், கிளர்ச்சியெதிர்ப்பு நடவடிக்கைகளிலிருந்து தம்மை விரைவாகக் கழற்றிக் கொள்ளவும் அமெரிக்கப் படைகள் கடும் முயற்சி செய்கின்றன.

இந்தப் பின்னணியில்தான் புளொஜட் செய்துள்ள ஆய்வின் முக்கியத்துவத்தை நாம் நோக்க வேண்டும். அமெரிக்கப் படைத்துறை உலகின் பல்வேறு நாடுகளுக்குள் செல்வது இன்று அதிகரித்து வருவதாகவும் ஆகவே அந்நாடுகளின் படைகளையும் அவற்றின் செயல் நோக்கங்களையும் கற்றிருப்பது அவசியமென்றும் அதற்கு உறுதுணை செய்யும் வகையிலேயே தான் நூலை எழுதியதாகவும் அவர் கூறுகிறார்.

புளொஜட்டின் நோக்கம் இதுவாக இருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில் அவரது நுலின் மையக்கருத்தை நாம் சிறி லங்காப் படைகளைப் பற்றிய வேறு வரலாற்றுத் தகவல்களின் அடிப்படையில் நோக்கும்போது சில உண்மைகள் வெளிப்படுகின்றன எனக் கருதுகிறேன்.

சிறி லங்காப் படைகளுக்கு ஆரம்பத்திலிருந்தே மரபுவழி அடிப்படையிலான தெளிவான செயல் நோக்கமிருக்கவில்லை. காலத்துக்குக் காலம் அது குழப்பமானதாகவே இருந்து வந்துள்ளது என்பதே புளொஜட்டின் மையக் கருத்தாகும். இது எப்படியென்பதைப் பார்ப்போம்.

1949 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி சுதந்திர சிறி லங்காவின் இராணுவம் உருவாக்கப்பட்டது. இதை ஆரம்பத்தில் கட்டியெழுப்ப முன்னின்றவர் சிறி லங்கா படைத்துறை அமைச்சின் முதலாவது நிரந்தரச் செயலரான சேர். கந்தையா வைத்தியநாதனாவார். சிறி லங்கா இராணுவத்தின் முதலாவது படைத்தளத்துக்கான இடத்தை பனாகொடையில் தெரிவுசெய்து அங்கு அதை நிறுவிட அடிகோலியவரும் இவரே.

இந்தியாவினாலேயே சுதந்திர சிறி லங்காவிற்கு இராணுவ அச்சுறுத்தல் ஏற்படுமென முதலாவது பிரதமரான டி.எஸ். சேனநாயக்கா அப்போது திடமாக நம்பினார். இப்படிப் பயப்படத் தேவையில்லை என இந்தியப் பிரதமர் நேரு கூறியதைக்கூட அவர் நம்பத் தயாராக இருக்கவில்லை. இந்தியா இலங்கைமீது படையெடுத்து அதைத் தன்னுடைய

இன்னொரு மாகாணமாக இணைத்துவிடுமோ என்ற பயம் அவருக்கு. இதன் காரணமாகவே அவர் பிரித்தானியாவுடன் கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். இதன்படி வெளிநாட்டுப் படை அச்சுறுத்தல் சிறி லங்காவிற்கு ஏற்படும் பட்சத்தில் பிரித்தானியப் படைகள் அதன் உதவிக்கு வருமென உடன்பாடானது.

எனவே வெளிநாட்டுப் படையெடுப்பொன்றை எதிர்கொள்வது என்பதே புதிதாக உருவாக்கப்பட்ட சிறி லங்காப் படைகளின் செயல் நோக்கமாக வரையறுக்கப்பட்டது. அதாவது பிரித்தானியப் படையுதவி வந்து சேரும் வரை இந்தியப் படையெடுப்பொன்றை வரையறுக்கப்பட்ட வழிகளிலேனும் எதிர்கொள்வதெப்படி என்பதன் அடிப்படையில் சிறி லங்கா படையின் திட்டமிடல் அப்போது அமைந்திருந்தது.

இதைத் தவிர வெளிநாட்டுப் படையெடுப்பொன்றை எதிர்கொள்வதுபற்றி சிறி லங்கா அரசு எண்ணிய சந்தர்ப்பம் ஒன்றுதான். 1963 இல் இலங்கைத் தீவில் வலுமிக்க வெளிநாட்டுப் படையொன்று உட்புகுந்தால், அதற்கெதிராகக் காடுகளிலிருந்து ஒரு கெரில்லாப் போரை நடத்துவது எங்ஙனம் என்ற பயிற்சியில் சிறி லங்காப் படைகள் ஈடுபட்டன. இதற்கு முந்திய ஆண்டு சிறி லங்காவின் ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் ஓர் இராணுவச் சதிப்புரட்சி முறியடிக்கப்பட்டது. அதே காலகட்டத்தில் இடதுசாரிகளால் முன்னெடுக்கப்பட்ட பெரும் வேலைநிறுத்தப் போராட்டங்களும் அரசை ஆட்டங்காண வைத்துக் கொண்டிருந்தன. இவற்றின் பின்னணியிலேயே வெளிநாட்டுப் படையெடுப்பொன்று நிகழலாம் என்ற அச்சத்தின் அடிப்படையில் சிறி லங்கா இராணுவம் தனது செயல் நோக்கத்தை கெரில்லாப் போரென மாற்றிக்கொண்டது.

இதற்கான விசேட பயிற்சி பெற சிறி லங்கா படையதிகாரிகள் சிங்கப்பூர், மலேசியா, யூகோஸ்லாவியா, பிரித்தானியா ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். தற்போது கையில் கிடைக்கும் ஆவணங்களைக் கொண்டு பார்க்கும் போது எந்த நாட்டின் அச்சுறுத்தலை மனதில் கொண்டு இந்த ஒழுங்குகள் செய்யப்பட்டன என்பதைக் கூறுவது

கடினமாகவுள்ளது. (எனினும் இது சோவியத் யூனியனாக இருக்கலாமென ஊகிக்க இடமுண்டு).

மேற்கூறிய இரு சந்தர்ப்பங்களைத் தவிர சிறி லங்காப் படைகளினுடைய செயல் நோக்கம் தமது நாட்டிற்கு ஏற்படக்கூடிய வெளியச்சுறுத்தல் பற்றியதாகவோ இன்னொரு நாட்டின் மரபுவழிப் படையை எதிர்கொள்வது சம்பந்தப்பட்டதாகவோ இன்றுவரை அமையவில்லை என்பதே வரலாறு தரும் உண்மை. இந்த மரபுவழிப்படைச் செயல் நோக்கம் பற்றிய குழப்பமே சிறி லங்கா இராணுவத்தின் திட்டமிடலையும் நடைமுறையையும் ஆரம்பத்திலிருந்து பீடித்து வந்துள்ளது.

இதன் விளைவுகளைப் பற்றி நாம் நோக்கும் முன்னர், இச்செயல் நோக்கக் குழப்பத்தின் வரலாற்றைச் சற்று நோக்குவோம். 1949 இல் இலங்கைக்கென ஒரு படையை உருவாக்குவதற்கென கொண்டுவரப்பட்ட சட்டத்தைத் தயாரிக்கும் போதே உள்நாட்டு சிவில் விடயங்களிலும் அதை ஈடுபடுத்துவதற்கான அடித்தளத்தை டி.எஸ். சேனநாயக்காவும் சேர். கந்தையா வைத்தியநாதனும் போட்டுவிட்டனர். மேற்படி சட்டத்தின் 23 ஆவது பிரிவின்படி இலங்கைக் குடிமக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, நீர், எரிபொருள் என்பவற்றின் விநியோகத்தில் இடைஞ்சல் உண்டானாலோ போக்குவரத்து, தொலைத்தொடர்பு, மின்சாரம் என்பன தடைப்பட்டாலோ அதைச் சரிசெய்ய சிறி லங்கா இராணுவம் கடமையில் ஈடுபடுத்தப்படலாம். இந்தப் பிரிவு சிறி லங்காப் படைகளின் போரியல் கோட்பாட்டு வளர்ச்சியையும் சிந்தனையையும் தன்னடையாளத்தையும் மிகவும் பாதித்தது. ‘எதிர்காலத்தில் உள்நாட்டை நோக்கிய கவனக்குவிப்பேயன்றி வெளிப்பார்வையற்ற ஒரு படை உருவாகுவதற்கு இது மேடையமைத்தது’ என புளொஜட் குறிப்பிடுகின்றார்.

காவல்துறைக்கு உதவியாகச் செயல்படுவதே தமது முக்கிய கடமையெனப் பல ஆரம்பகால சிறி லங்காப் படைத்தளபதிகள் எண்ணத் தலைப்பட்டனர். அதாவது ஆயுதங்களும் பயிற்சிகளும் கூடுதலாகக் கொண்ட ஒரு

சிறப்புக் காவல்துறையாக சிறி லங்கா இராணுவம் தன்னை ஆரம்பத்திலிருந்தே கருதத் தலைப்பட்டுவிட்டது. இதற்கேற்ப ஐம்பதுகளில் சிங்கள ஆளும் வர்க்கம் தனக்குப் பெரும் சவால்களென எண்ணிய மூன்று விடயங்கள் அமைந்துவிட்டன. முதலாவது தொழிலாளர் கிளர்ச்சிகள் இரண்டாவது தமிழ் பேசும் மக்களின் போராட்டங்கள் மூன்றாவது மன்னார், யாழ்ப்பாணக் கரையோரங்களுடாகத் தமிழகத்திலிருந்து குடியேற வந்த மக்களின் பிரச்சினை.

மரபுவழிப் போரொன்றை நடத்துவதற்கான தகைமையையும் நாட்டைக் காப்பதற்கான திட்டமிடல் திறனையும் வளர்த்தெடுப்பதை விடுத்து சிறி லங்கா இராணுவம் மேற்படி உள்ளூர் விடயங்களில் தன் கவனத்தைச் செலவிடலாயிற்று. 1950 இருந்து 1960 வரையான பத்தாண்டுகளில் ஏழு நடவடிக்கைகளில் சிறி லங்கா இராணுவம் ஈடுபட்டது.

முதலாவது மொண்டி நடவடிக்கை (Operation Monty). 1952 ஆம் ஆண்டு இந்த நடவடிக்கை தமிழகத்திலிருந்து குடியேறவந்தவர்களுக்கு எதிராக மன்னார்ப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு நீண்ட காலம் தொடர்ந்து நடைபெற்றது. இரண்டாவது 53 இல் நடைபெற்ற பெரும் தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தை முறியடிப்பதற்கான நடவடிக்கை. மூன்றாவது 56 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மட்டக்களப்பின் தென்மேற்கு எல்லைப்பகுதிகளில் அரச ஆதரவுடன் நடைபெற்ற சிங்களக் காடையர் குடியேற்றத்திற்கு எதிராகக் கிளர்ச்சியில் இறங்கிய துறைநீலாவணை விவசாயிகளை ஒடுக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை. நான்காவது தனிச் சிங்களச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு காவல்துறைக்குத் துணையாக செய்யப்பட்ட நடவடிக்கை. ஐந்தாவது 1957 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரு வெள்ளத்தின்போது நிவாரண வேலை. ஆறாவது 58 ஆம் ஆண்டு தமிழருக்கெதிரான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டபோது காவல்துறையோடு இணைந்த சட்டம், ஒழுங்கு நடவடிக்கை.

ஏழாவது சட்டவிரோத கஞ்சாத் தோட்டங்களைத் தேடியழிக்கும் நடவடிக்கை.

சிறி லங்கா இராணுவம் ஆரம்பிக்கப்பட்ட பத்தாண்டுகளில் அதன் நடவடிக்கைகள் எவையுமே அதையொரு மரபுவழிப் படையாக புடம்போடுவதற்கு வாய்ப்பளிக்கவேயில்லை. சுதந்திரமடைந்த சிறி லங்காவின் படைத்தளபதியாகிய முதலாவது இலங்கையர் பிரிகேடியர் அன்ரன் முத்துக்குமாரு (இவர் தமிழர்) தயாரித்த கட்டளைப்பிரிவுத் திட்டமும் இதற்கேற்றாற்போல அமைந்திருந்தது. அதாவது சிறி லங்கா படைகள் எதிர்கொள்ளவேண்டிய அச்சுறுத்தல் உள்நாட்டில் இருந்தே ஏற்படும் என்பது அவருடைய பார்வை.

சிறி லங்கா இராணுவம் மூன்று கட்டளைப் பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட வேண்டுமெனவும், இதில் முதலாவது வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களை உள்ளடக்கியதாகும் எனவும் இங்கு பிரதான பாதுகாப்புச் சிக்கல் தமிழர் தரப்பேயெனவும் முத்துக்குமாரு கூறுகிறார்.

அடுத்த கட்டளைப் பிராந்தியம் மத்திய மாகாணம், ஊவா, சப்பிரகமுவ ஆகியவற்றிற்கானது. 'இப்பிராந்தியத்தில் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்ற இந்தியத் தமிழர்களிடமிருந்து வரக்கூடும். இதன் மையத்திலமைந்துள்ள தியத்தலாவையில் ஒரு காலாட்படை அணியை நிறுத்தி வைக்கலாம் என நான் திட்டம் வகுத்தேன்' எனச் சொல்கிறார் தளபதி முத்துக்குமாரு.

மூன்றாவது பிராந்தியம் வடமேல் மாகாணம், மேல்மாகாணம், தென்மாகாணம் ஆகியவற்றிற்கானது. இங்கு சிறி லங்காப் படைகளுக்குப் பிரதான அச்சுறுத்தல் தொழிற் சங்கங்களால் ஏற்படுமென அவர் தனது நினைவுகளில் எழுதிச் சென்றுள்ளார்.

இவ்வாறாக இன்றுவரை சிறி லங்காவின் முப்படைகள் உள்நாட்டுச் சிக்கல்களைச் சுற்றியே வளர்ச்சியடைந்துள்ளன. (நான் முன்னர் குறிப்பிட்ட இரு சந்தர்ப்பங்களைத் தவிர) இதனால் ஆரம்பத்திலிருந்தே அவற்றின் செயல் நோக்கம், கொள்கை வகுப்பு, திட்டமிடல், ஆயுதக் கொள்வனவு என அனைத்துமே ஒரு முறையான மரபுவழிப் படைக்குரிய பண்பைக் கொண்டிருக்கவில்லை. சிறி லங்கா முப்படைகளின் மரபுவழிப் போர்த் தகைமைகளை 1949 இலிருந்து இன்று வரைக்குமான ஒவ்வொரு பத்தாண்டு அடிப்படையில் புளொஜட் மதிப்பீடு செய்துள்ளார். இந்த மதிப்பீடு ஒவ்வொன்றிலுமே சிறி லங்காவின் படைகள் வெளியச்சுறுத்தலை எதிர்கொள்ளக் கூடிய தகைமை அற்றவையாகவே உள்ளன என அவர் வலியுறுத்தியுள்ளார். (புலிகளுடன் அமைதிப் பேச்சு நீடித்து, நிரந்தத் தீர்வொன்று ஏற்படும் பட்சத்தில் இந்த நிலை மாற வாய்ப்புண்டு எனக் கூறுகிறார்)

1987 இல் இந்திய வான்படை சிறி லங்காவின் வான்பரப்பினுள் புகுந்த போதும் அதையொட்டி இந்தியப் படையெடுப்பெனும் அச்சுறுத்தல் தோன்றிய போதும் சிறி லங்கா முப்படைகள் செயலிழந்து இருந்தமை இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

மரபுவழிப் படையாக புலிகள் வளர்ச்சிபெற்ற போது, அதை எதிர்கொள்வதில் சிறி லங்காவின் முப்படைகளுக்கு ஏற்பட்ட சிக்கல்கள் இந்த அடிப்படையிலேயே நோக்கப்பட வேண்டும். ஓர் ஒழுங்கான மரபுவழிப் படையாகச் சிந்திப்பதற்கும் செயல்படுவதற்கும் அவற்றின் வளர்ச்சி முறையே பெருந்தடைக் கல்லாயுள்ளது. பீரங்கிகள், போர்ப்படகுகள், வானூர்திகள் ஆகியவற்றைக் கொண்ட உள்ளூர்க் காவற்படையாக சிறி லங்கா இராணுவத்தை வளர்த்துவிட்டதற்கு சிங்கள ஆளும் வர்க்கங்களின் குறுகிய நலன்களே காரணமெனில் மிகையாகாது.

27.03.2005

## –17 – அந்நிய இராணுவத் தலையீட்டை விரும்பும் சிங்கள தேசம்

இலங்கையின் படைவலுச் சமநிலை பற்றி கடந்த வாரம் பார்த்ததில் ஒரு முக்கியமான கேள்வி தோன்றுகிறது. அதாவது புலிகள் எவ்வளவுதான் தமது படைவலுவை சிறி லங்கா இராணுவத்திற்குச் சமனானதாகப் பேணி வந்தாலும் எமக்குச் சார்பற்ற எந்தவொரு சிறு வெளிநாட்டுப் போர்த் தலையீடும் அதை இலகுவாக மாற்றிவிட வாய்ப்பிருக்கிறதே என்ற கேள்வி போனகிழமைக் கட்டுரையை கவனமாகப் படித்த எவருக்கும் கட்டாயம் தோன்றியிருக்கும். இந்தச் சிக்கல் அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் பலமுறை சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றது.

இலங்கையில் தற்போது நிலவும் அமைதிச் சூழலுக்கு அடிப்படையாக புலிகளுக்கும் சிறி லங்கா அரசுக்குமிடையிலான போர் நிறுத்த ஒப்பந்தமே அமைந்துள்ளது. இந்த ஒப்பந்தத்திற்கு அத்திவாரமாக இருதரப்பிற்கும் இடையிலான போர்வலுச் சமநிலையே இருக்கின்றது. எனவே இச்சமநிலை பாதிக்கப்பட்டால் போர்நிறுத்த ஒப்பந்தம் நிலைப்பது கடினமாகிவிடும். இந்த வகையில் சிறி லங்கா அரசு புலிகளுடன் பேசி ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு முன்னர் வெளிநாடுகளோடு அது செய்து கொள்ளக்கூடிய எந்தவொரு நேரடிப் படைத்துறை ஒப்பந்தமும் (Defence Treaty)

இலங்கையின் படைவலுச் சமநிலையை பாதிக்கும். இதனாலேயே புலிகளோடு ஒருபுறம் அமைதிப் பேச்சுக்களை நடத்திக்கொண்டு மறுபுறம் அமெரிக்காவோடும் இந்தியாவோடும் படைத்துறை ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட கடும் பிரயத்தனங்கள் இலங்கையின் படைவலுச் சமநிலையையும் அதன் காரணமாக போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் பாதிக்குமென அந்நேரத்தில் புலிகள் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர்.

புலிகளுக்கும் தனக்குமிடையில் படைவலுச் சமநிலை காணப்படுவதாலேயே சிறி லங்கா அரசு தமிழ் மக்கள் மீது ஒரு இராணுவத் தீர்வைத் திணிக்கலாம் என்ற தனது பாரம்பரிய எண்ணத்தை கைவிட்டு அரசியல் தீர்வில் நாட்டங்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படுகின்றது என்ற கருத்து இந்தியா உட்பட பல நாடுகளைச் சேர்ந்த இலங்கை அவதானிகளிடம் காணப்படுகிறது. இலங்கையின் படைவலுச் சமநிலை தமக்குச் சார்பாக இருக்கின்றது என சிறி லங்கா அரசும் அதன் பின்னிற்கும் சிங்கள பௌத்த மேலாண்மையாளரும் திடமாக நம்புவார்களேயானால் அவர்கள் தமிழ் மக்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அரசியல் தீர்வைக் காண பின்னடிப்பார்கள் என்ற உண்மையையும் சில நாடுகள் உணரத் தவறவில்லை.

அமெரிக்காவோடு Access and Cross Servicing Agreement என்ற பாரதூரமான படைத்துறை ஒப்பந்தத்தை செய்துகொள்ள ஐக்கிய தேசியக் கட்சி காட்டிய அவசரமும் வேகமும் அதே காலத்தில் பேச்சுவார்த்தையில் காட்டவில்லை என்ற உண்மையை நாம் கவனிக்க வேண்டும். அதேபோலத் தான் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு இந்தியாவுடன் படைத்துறை கூட்டுறவு ஒப்பந்தத்தைச் செய்ய பெருமுனைப்புடன் செயற்பட்டது. மேற்படி முயற்சிகளை சந்திரிகா அரசும் தொடர்வதை நீங்கள் அறிவீர்கள்.

இத்தீவின் படைவலுச் சமநிலையை தமது சொந்த முயற்சியில் உள்நாட்டிலேயே தனக்குச் சாதகமாக

திருப்பமுடியாது என்பதை தீச்சுவாலை நடவடிக்கையின் தோல்வியோடு நன்றாக உணர்ந்துகொண்ட சிங்களதேசம், வெளிநாட்டுத் தலையீடு மட்டுமே இனி புலிகளின் படைவலுவைக் குறைக்க உதவும் என திடமாக நம்பிச் செயற்படுகின்றது. அதாவது வெளிநாடுகளோடு செய்கின்ற படைத்துறை ஒப்பந்தங்கள் மூலம் தமக்குச் சாதகமாக இலங்கையின் படைவலுச் சமநிலையை மாற்றவேண்டும் என்பதில் சிங்களத் தலைமைகளுக்கு உள்ள ஆர்வம், அரசியல் தீர்வை நோக்கிச் செயற்படுவதில் இல்லை என்ற உண்மைபற்றி தமிழருக்கு எவ்விதமான மயக்கமும் இருத்தலாகாது.

வெளிநாட்டு இராணுவத் தலையீடு மட்டுமே தமது கையை மீண்டும் மேலோங்க வைக்கும் எனச் சிங்கள தேசம் நம்புவதால் இவ்வாறான சிக்கல் எதிர்காலத்தில் தோன்ற வாய்ப்புண்டா என்பதையும் அவ்வாறு ஏற்படக்கூடிய ஒரு தலையீட்டை நாம் முன்தடுக்க முடியுமா என்பதையும் ஆராய்ந்தறிய வேண்டிய கட்டாயம் எமது சமூகத்திற்கு இன்றுண்டு. இவ்விடத்தில் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். பிரித்தானியர் இத்தீவை விட்டகன்ற பின்னர் இன்றுவரையிலான 56 ஆண்டுகளில் சிறி லங்கா அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தச்சட்டமே தமிழ் மக்களுக்கு அரைகுறைச் சுயாட்சியை வழங்கவேனும் சிங்கள அரசியற் தலைமையால் கொண்டுவரப்பட்ட ஒரேயொரு சட்டமாகும்.

இதுவொரு உப்புச் சப்பற்ற பம்மாத்துச் சுயாட்சியையே தந்ததாயினும் இதை நடைமுறைப் படுத்துவதற்குக் கூட தமிழீழ விடுதலை இயக்கங்களின் போரியல் அழுத்தங்களுக்கு மேலாக இந்தியாவின் நேரடி வான்படை அச்சுறுத்தலும் தேவைப்பட்டது என்ற வரலாற்று உண்மையை நாம் ஆராய்வோமேயானால் படைவலுச் சமநிலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம்.

மேலும் பாடசாலைகள், வைத்தியசாலைகள், ஆலயங்கள், தனியார் வீடுகள், வயல்கள், தோட்டங்கள் என்பவற்றிலிருந்து கொள்கையளவில் வெளியேறவும் தமிழ் மக்களை கால் நூற்றாண்டு காலமாகச் சீரழித்த பயங்கரவாதத்

தடைச்சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தவும் சிறி லங்கா அரசு உடன்பட்டதற்கு ஒரேயொரு காரணம் 2001 ஏப்ரல் மாதம் தோன்றிய படைவலுச் சமநிலையே என்ற விடயத்தை மேற்குறிப்பிட்ட வரலாற்று உண்மையோடு தொகுத்துப் பார்க்க வேண்டும்.

அங்ஙனம் பார்க்கையில் இலங்கையின் படைவலுச் சமநிலை தமிழருக்குச் சார்பாக மேலோங்கினால்தான் இனி சிங்கள தேசம் ஒரு நியாயமான தீர்வை எம்முடன் பேசி நடைமுறைப்படுத்த முன்வரக்கூடும் என்ற தரவு பெறப்படுகிறது. அதாவது ஏப்ரல் 2001 இலிருந்து தோன்றிய படைவலுச் சமநிலை இராணுவ வழிமுறைகளின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்ற சிங்கள தேசத்தின் நம்பிக்கையை சற்று வலுவிழக்கச் செய்துள்ளதே தவிர நியாயமான அரசியல் தீர்வொன்றைத் தமிழ்பேசும் மக்களுக்கு வழங்கவேண்டும் என்ற எண்ணத்தை அது சற்றேனும் ஏற்படுத்தவில்லை என்ற மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையே போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை வெளிப்பட்டு நிற்கின்றது.

எனவே தமிழ் மக்களுக்கு ஏற்புடைய ஓர் அரசியல் தீர்வை வழங்கியே ஆகவேண்டும் என்ற ஒரு நிலைப்பாட்டை சிங்களதேசத்தில் ஏற்படுத்துவதானால் இலங்கையின் படைவலுச் சமநிலையில் தமிழ்த் தரப்பின் கை இன்னும் கணிசமான அளவு மேலோங்க வேண்டிய கட்டாயம் உள்ளது என்ற விடயம் வருங்காலங்களில் இன்னும் தெளிவாகத் தென்படும் என்பதில் ஐயமில்லை. தமிழர் தரப்புப் படைவலு இனி கணிசமாக - அதாவது சிங்களதேசத்தை ஓர் அரசியல் தீர்வை நோக்கி அழுத்தக்கூடிய வகையில் - மேலோங்க வேண்டுமாயின் புலிகளின் கட்டுப்பாட்டில் தற்போதுள்ள தமிழர் தாயகப் பரப்பு மேலும் விரிவடைய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அரசியல் தீர்வை நோக்கிய முன்னெடுப்புகளை காலவரையறையின்றி இழுத்தடித்தால் மேற்படி கட்டாயத்திற்கு புலிகள் ஆட்படுவர். அப்படி அவர்கள் ஆட்பட்டால் அதை சாட்டாக வைத்து முழுமையான அல்லது வரையறுக்கப்பட்ட

வெளிநாட்டு இராணுவத் தலையீட்டை ஏற்படுத்தி இலங்கையின் படைவலுச் சமநிலையை நிரந்தரமாக தம்பக்கம் திருப்பிக் கொள்ளலாம் என பல சிங்கள பௌத்த மேலாண்மையாளர் இன்று கணக்குப் போடத் தொடங்கியுள்ளனர்.


இங்கு ஒரு வரலாற்றுத் திருப்புமுனையான கேள்வியை அல்லது இருதலையை (Dilemma) தமிழர் தேசம் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அதாவது சிங்கள தேசத்தை ஒரு நியாயமான அரசியல் தீர்வை நோக்கி அசைப்பதற்கு இலங்கையின் படைவலுச் சமநிலை எமக்குச் சார்பாக திரும்பவேண்டும் என்ற நிலைப்பாட்டை நடைமுறைப் படுத்துவதானால் அதையே சிங்கள மேலாண்மையாளர் எமக்கெதிரான ஒரு பொறியாகப் பயன்படுத்தி விடுவார்கள் என்பதே நாம் இன்று எதிர்கொள்ளும் இருதலை. எமக்கு தவிர்க்க முடியாதபடி ஏற்படக்கூடிய வரலாற்றுக் கட்டாயத்தைப் பயன்படுத்தி வெளிநாட்டு இராணுவத் தலையீடு இங்கு ஏற்படவும் அதன் மூலம் எமது உரிமைப் போராட்டம் பலவருடங்கள் பின்தள்ளப்பட்டு எமது அரசியல் பேரம்பேசும் வலு ஒரேயடியாக முடக்கப்படவும் ஆவன செய்ய சிங்கள மேலாண்மையாளர் தவறமாட்டார்கள் என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

தற்போது அமைதிப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை சிங்கள தேசம் காலவரையறையின்றி தொடரப் போகின்றது என்பதற்கான அறிகுறிகளே நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது வீதம் காணப்படுகின்றது. இந்த நிலையில் நாம் மேற்கூறிய அரசியல் இராணுவப் பொறியை எவ்வாறு சரியாகப் புரிந்துகொண்டு தகர்க்கப் போகிறோம் என்பது நாம் ஒவ்வொருவரும் ஆராய வேண்டிய விடயமாகும். ஏனெனில் எதிர்காலத்தில் இது நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் நேரடியாகவும் பயங்கரமாகவும் பாதிக்கக் கூடிய விடயம் என்பதை நாம் உணர வேண்டும்.

இது சம்பந்தமாக மூன்று விடயங்களை விரிவாக ஆராய வேண்டியுள்ளது. ஒன்று - தமிழ்த் தரப்பிற்குச் சார்பாக இலங்கையின் படைவலுச் சமநிலை கணிசமான அளவு

திரும்புகின்ற ஒருநிலை ஏற்படும்போது இந்தியா அதைத் தடுக்க எந்தளவிற்கு இராணுவ ரீதியாகத் தலையிடத் தயாராகவுள்ளது என்ற விடயம். இரண்டு - மேற்படி நிலை ஏற்படும் போது இந்தியா தலையிடாவிடின் அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் சிறி லங்கா அரசின் சார்பாக தலையிட எந்தளவு வாய்ப்புண்டு என்பது. மூன்று - எந்தவொரு வெளிநாடும் இங்கு இராணுவ ரீதியாகத் தலையிட முற்றாகத் தயங்குமளவிற்கு தமிழர் தரப்பிடம் சமச்சீரற்ற முன்தடுப்பு வலு (Asymmetrical Deterrence Capability) எந்தளவிற்கு உள்ளது என்ற விடயமாகும்.

05.09.2004



## -18- அந்தரத்தில் தொங்கும் இலங்கையின் படைவலுச் சமநிலை

கடற்புலிகளை வாகரைக்கு வராமல் சிறி லங்கா அரசு தடுத்திருந்தால் கருணா மட்டக்களப்பை விட்டு ஓடவேண்டி வந்திருக்காது எனவும் வாகரைப் பகுதியிலிருந்து வாழைச்சேனை - பொலன்னறுவை நெடுஞ்சாலையைக் கடந்து செல்வதற்கு ரமேஷின் கீழ் வந்த படைகளை அனுமதிக்காமல் சிறி லங்கா படையினர் தடுத்து நிறுத்தியிருந்தால் கருணாவை அசைத்திருக்க முடியாது எனவும் ஒரு சிலர் இன்னும் நம்புகின்றனர்.

சிறி லங்கா அரசு வெளிப்படையாக கருணா விவகாரத்தில் ஏன் தலையிடத் தயங்கியது என்பதும் அந்தக் காலகட்டத்தில் ஏன் சில மேற்கு நாட்டுத் தூதுவர்கள் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளுக்குரிய அங்கீகாரத்தை தொடர்ந்து வழங்க முற்பட்டனர் என்பதும் சிலருக்கு இன்னும் கேள்விக்குறியாகவே காணப்படுகிறது. விடுதலைப் புலிகள் சிறி லங்கா கடற்படையினருக்கு பெரியதொரு இலஞ்சத் தொகையைக் கொடுத்ததாலேயே அவர்களுடைய சண்டைப் படகுகள் வாகரை செல்ல அனுமதிக்கப்பட்டன என்று வெளிநாட்டுப் புலனாய்வுத் துறையொன்றின் பின்னணியோடு இயங்கும் 'ஏசியன் ரிரிபியூன்' இணையச் சஞ்சிகை குற்றஞ்சாட்டுமளவுக்கு மேற்படி விடயத்தில் புலிகளின் சில தமிழ் எதிரிகளும் சிங்களப் பேரினவாதிகளும் குழம்பிப்போய் இருக்கிறார்கள்.

இவர்கள் குழம்புவதாலோ கலங்குவதாலோ யாருக்கும் நட்டமில்லை. ஆனால், எமது மக்களிடையே ஆங்காங்கு காணப்படும் சில 'எருமைகள்' இப்படியான கேள்விகளை இன்னும் தொடுத்து வருகின்றன. எனவேதான் கருணாவின் பிரச்சினையின்போது ஏன் சிறி லங்கா அரசு வெளிப்படையாகத் தலையிடத் தயங்கியது என்பதை நாம் இங்கு ஆராய வேண்டியுள்ளது. இதற்கு அடிப்படையாக நாம் படைவலுச் சமநிலை (Military Balance) என்ற போரியல் கருத்தை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையின் போர்நிறுத்த ஒப்பந்தம் மேற்படி படைவலுச் சமநிலையிலேயே தங்கியுள்ளது எனவும் விடுதலைப் புலிகளுக்கும் சிறி லங்கா அரசுக்குமிடையே 2001 ஆம் ஆண்டளவில் படைவலுச் சமநிலை ஒன்று ஏற்பட்டதனாலேயே இரு தரப்பும் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு முன்வந்தன எனவும் ஈழப்போர்களை ஆராய்ந்து வரும் மேலைத்தேய போரியல் அறிஞர் சிலர் கூறுவர்.

இதையே இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் தனது அடிப்படை விளக்கக் கோட்பாடாகக் கொண்டு இயங்கி வருகிறது. இருநாடுகளுக்கிடையில் படைவலுச் சமநிலை ஏற்பட்டால் அவை தம்மிடையே போரிடுவதை தவிர்த்துக் கொள்ளும் என நவீன போரியலின் முன்தடுப்புக் கோட்பாடு (Deterrence Theory) கூறுகின்றது. மேற்படி கோட்பாடு இரண்டாம் உலகப்போரின் பின்னர் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் நிலவிய உலகளாவிய பனிப்போரின் (Cold War) இராணுவப் பரிமாணத்தை விளக்க உருவாக்கப்பட்ட ஒன்றாகும். சோவியத் யூனியனிடமிருந்த அணுவாயுதங்களின் எண்ணிக்கை காரணமாகவே அமெரிக்கா அதன்மீது போர் தொடுக்காமல் இருந்ததென்றும் அதேபோல அமெரிக்காவின் அணுவாயுதக் களஞ்சியத்தின் காரணமாகவே சோவியத் யூனியன் மூன்றாம் உலகப் போரை துண்டிவிடாமல் இருந்தது எனவும் முன் தடுப்புக் கோட்பாட்டாளர்கள் கூறினர். இதன் காரணமாகவே அமெரிக்காவும் சோவியத் யூனியனும் ஏட்டிக்குப் போட்டியாகத் தத்தமது அணுவாயுதக்

களஞ்சியங்களைப் பெருக்கி உலக படைவலுச் சமநிலையை தமக்குச் சாதகமாகத் திருப்பமுயன்று வந்தன.

படைவலுச் சமநிலை இரு தரப்பினரிடையே காணப்படும்போது அவர்கள் தம்மிடையே போரிடுவதால் ஏற்படும் சமனான அழிவைக் கருத்திற்கொண்டு நிரந்தரமான அமைதி காக்கவே விரும்புவர் என்ற அடிப்படையில் போரியல் அறிஞர்கள் பல்வேறு நாடுகளுக்கிடையிலான படைவலுச் சமநிலையை காலத்துக்குக் காலம் அளவிட்டு மதிப்பீடு செய்து வருகின்றனர். இங்கிலாந்திலுள்ள சர்வதேச கேந்திரக் கற்கைகளுக்கான நிறுவனம் ஆண்டுதோறும் உலக நாடுகளின் படைவலுச் சமநிலைகளை கணிப்பிட்டு இராணுவச் சமநிலை (Military Balance) என்கின்ற ஒரு ஆய்வு நூலை வெளியிட்டு வருகின்றது. இரு நாடுகளுக்கிடையிலான படைவலுச் சமநிலையை நாம் அவற்றிடம் இருக்கும் அணுவாயுத ஏவுகணைகள், பீரங்கிகள், டாங்கிகள், படையணிகள், போர்க் கப்பல்கள், குண்டு வீச்சு விமானங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையைக் கொண்டு கணிப்பிடலாம். ஆனால் எந்த அடிப்படையில் நாம் புலிகளுக்கும் சிறி லங்கா அரசுக்குமிடையில் இராணுவச் சமநிலை உள்ளதெனக் கூறமுடியும்? சிறி லங்காவின் படைவலுவை அளவிட முடியும்? நான் முன்னர் குறிப்பிட்ட போரியல் ஆய்வு வெளியீடும் ஜேன்ஸ் (Janes) போன்ற வேறு சர்வதேச படைத்துறை வெளியீடுகளும் ஆண்டுதோறும் சிறி லங்காவின் படைவலுவை மதிப்பிட்டு வருகின்றன. ஆனால் புலிகளின் உண்மையான படைவலு என்ன என்பது யாருக்கும் திட்டவட்டமாகத் தெரியாது. எனவேதான் புலிகளுக்கும் சிறி லங்கா அரசுக்கும் இடையில் படைவலுச் சமநிலை உள்ளது என நாம் எந்த அடிப்படையில் கூறமுடியும் என்ற கேள்வி எழுகிறது.

இதைப்பற்றிப் பார்ப்பதற்கு முன்னர் நாம் சிறி லங்கா படைகளின் வலு என்ன என்பதைப் பார்ப்போம். மேலைத்தேய படைக் கட்டமைப்பு முறையின் கீழ் ஒரு நாட்டின் படையில் மிகப்பெரிய அலகு ஒரு கோ (Corp) ஆகும். இதற்கு அடுத்த அளவிலுள்ளது ஒரு டிவிசன் (Division). அதற்கடுத்தது பிரிகேட்

(Brigade). இவ்வாறு 'செக்ஷன்' வரை அலகுகள் சிறிதாகிச் செல்லும். ஓவ்வொரு அலகின் அளவும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. (நாடுகளுக்கிடையில் பெரும்போர்கள் நடைபெறும்போது இரண்டு அல்லது மூன்று கோக்களை இணைத்து ஒரு படை – Army உருவாக்கப்படுகின்றது. ஒரு Army இற்கு கட்டளைத் தளபதியாக Field Marshall தரத்திலுள்ளவரே நியமிக்கப்படுவார்.

சிறி லங்காப் படைகளின் மிகப்பெரிய அலகாக டிவிசனே காணப்படுகிறது. இலங்கை பின்பற்றிய பிரித்தானியப் படைக்கட்டமைப்பு முறையின் கீழ் ஒரு டிவிசனில் அண்ணளவாக 8 ஆயிரம் படையாட்கள் இருக்கவேண்டும். ஒரு டிவிசனில் வழமையாக மூன்று பிரிகேட் அணிகள் காணப்படும். சிறி லங்கா படைகளில் களத்தில் இறக்கப்படக் கூடிய டிவிசன்களாக 21, 22, 23, 51, 52, 53, 54, 55, 56 என்பவை காணப்படுகின்றன. இருபது ஆண்டுகள் தொடர்ச்சியாகப் போரில் ஈடுபட்டு வந்ததாலும் தொடர்ச்சியாக படைகளிலிருந்து படையாட்கள் ஓடியதாலும் மேற்படி டிவிசன்களின் அளவு சுருங்கியே காணப்படுகின்றது. உதாரணமாக ஆனையிறவை புலிகள் தாக்கிய பின்னர் அங்கிருந்து தப்பி ஓடிய 54 ஆவது டிவிசன் ஆயிரத்துக்குக் குறைந்த படையாட்களுடனேயே காணப்பட்டது. (இது தற்போது மறுசீரமைக்கப்பட்டு வருகிறது.) இதுபோல விசேட படைகள், கமாண்டோக்கள் ஆகியவற்றாலான 53 டிவிசனும் புலிகளிடம் தொடர்ந்து அடிவாங்கியதாலும் படையாட்கள் ஓடியதாலும் அளவில் மிகச் சுருங்கியே காணப்படுகின்றது.

இருநாடுகளுக்கிடையிலான படைவலுச் சமநிலை என்பது அவற்றின் பீரங்கிகள், படையணிகள் போன்றவற்றின் எண்ணிக்கையின் அடிப்படையில் மட்டும் நாம் மதிப்பிட முடியாது. அவை எவ்வாறு எதிரியை நோக்கி ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கின்றன என்பதும் படைவலுச் சமநிலையை ஆராய்வதற்கு முக்கிய அடிப்படையாகிறது.

உதாரணமாக, இந்தியா தனது படைவலுவின் பெரும்பகுதியை தமிழ்நாட்டில் குவித்து வைத்திருக்கின்றது என எடுத்துக் கொள்வோம். இந்த நிலையில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் படைவலுச் சமநிலை உள்ளது என நாம் கூறமுடியாது. ஏன்? பாகிஸ்தானுக்குச் சமனான அல்லது கூடிய படைவலு இந்தியாவிடம் இருந்தபோதும் அது பஞ்சாப், ராஜஸ்தான், காஷ்மீர் ஆகிய எல்லைப்புறங்களை நோக்கிய நிலையில் இல்லாவிடின் அங்கு பாகிஸ்தானின் கையே சமநிலையில் மேலோங்கிக் காணப்படும். படைகளை உரிய இடத்தில் நகர்த்தி வைத்திராவிட்டால் ஒரு நாட்டிடம் எவ்வளவு படைவலு இருப்பினும் அது தன்னைவிடப் பலம் குறைந்த ஒரு எதிரியை எதிர்கொள்ள முடியாது போய்விடும். எனவேதான் இருநாடுகளுக்கிடையில் காணப்படும் படைவலு மட்டுமல்லாது அப் படைவலு எவ்வாறு எதிரியை நோக்கி ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கிறது என்பதும் அவற்றுக்கு இடையிலான படைவலுச் சமநிலையைக் கணிக்கத் தேவையாகிறது. இந்தவகையில், சிறி லங்கா அரசுக்கும் புலிகளுக்குமிடையில் படைவலுச் சமநிலை உள்ளது எனக் கூறும்போது முதலில் நாம் சிறி லங்கா அரசு எவ்வாறு தன் படையணிகளை புலிகளை நோக்கி அணிவகுத்துள்ளது என்பதைப் பார்க்க வேண்டும்.

வடக்குத் தெற்காக முகமாலை, ஓமந்தை ஆகியவற்றுக்கிடையிலும் கிழக்கு மேற்காக முல்லைத்தீவு, மன்னார் ஆகியவற்றின் கரையோரங்களுக்கு இடையிலும் அமைந்துள்ள பெரும் நிலப்பரப்பு புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதைச்சுற்றி இதன் வடபாகத்தில் 51, 52, 54 ஆகிய டிவிசன்களும் 55 இன் ஒரு பகுதியும் இதன் தென்பாகத்தில் மன்னாரிலிருந்து மணலாறுவரை 21, 56 மற்றும் 22 டிவிசனின் ஒரு பகுதியும் நிலைகொண்டு உள்ளன. இவற்றோடு இந்த டிவிசன்களுக்குரிய ஆதரவணிகளாக பீரங்கி, கவசவாகன மற்றும் வழங்கல் போன்ற பல பிரிவுகளும் உள்ளன. இவற்றோடு 53 டிவிசனும் வடக்கை நோக்கியதாகவே உள்ளது. கிழக்கில் மணலாறுக்குத் தெற்காக திருமலையில் 22 டிவிசனின் ஒரு பகுதியும் மட்டக்களப்பு வடக்கு அதன் பின்புலமான மின்னேரியா ஆகிய பகுதிகளில் 23 டிவிசனும்

அண்மைக்காலத்தில் 55 டிவிசனின் ஒரு பகுதியும் நிலை கொண்டுள்ளன. (நீங்கள் சில இடங்களில் சிறி லங்கா படைமுகாம்கள் 23-2 அல்லது 51 -2 போன்ற இலக்கங்களைக் கண்டிருப்பீர்கள். இதில் முன்பகுதி டிவிசனையும் பின்பகுதி அதன் பிரிகேட் இலக்கத்தையும் குறிப்பிடுகின்றன.)

இதைப் பார்க்கும்போது உங்களுக்கு விளங்குவது என்ன? அதாவது, வடக்கில் புலிகள் கட்டுப்படுத்தும் பகுதியை நோக்கி சிறி லங்கா அரசு தனது ஒன்பது களமிறக்கக் கூடிய டிவிசன்களில் ஏழு டிவிசன்களை ஒழுங்குபடுத்தியுள்ளது என்ற உண்மை அடிப்படைக் கணக்குத் தெரிந்த யாருக்கும் இலகுவாகப் புரியும். இதன் காரணம் என்ன? 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வடக்கில் தன்னிடமிருந்த படைவலுவின் சாரத்தை ஒன்றுதிரட்டி முகமாலையிலிருந்து பளையை நோக்கி சிறி லங்கா இராணுவம் தீச்சுவாலை நடவடிக்கையை மேற்கொண்டது. இதை முறியடித்த அதேவேளை வடக்கின் வேறு எந்த முனையிலிருந்தும் சிறி லங்காப் படையினர் சமகாலத்தில் வேறு தாக்குதலை தொடுக்கமுடியாதபடி தடுக்குமளவிற்கு புலிகளின் படைபலம் காணப்பட்டது. வடக்கில் இருதரப்பிற்குமிடையில் படைவலுச் சமநிலை ஏற்பட்டுவிட்டதையே இது காட்டிற்று. அதாவது சிறி லங்காப் படைகளின் ஏழரை டிவிசன்களுக்கு (அந்நேரத்தில் 55 டிவிசன் முழுமையாக வடக்கிலேயே இருந்தது) சமனான படைவலு புலிகளிடம் காணப்பட்டதாலேயே மேற்படி நிலை தோன்றிற்று. இன்னொரு வகையில் சொல்லப்போனால் சிறி லங்காப் படைகளின் 83 சதவீத வலுவிற்குச் சமனான பலம் வன்னியில் புலிகளிடம் உள்ளது என்பதையே தீச்சுவாலை நடவடிக்கையின் தோல்வி மிகத் தெளிவாகக் காட்டிற்று. இதை இந்திய, பிரித்தானிய மற்றும் அமெரிக்க போரியல் அறிஞர்கள் மிகத் தெளிவாக உணர்ந்து கொண்டனர்.

இலங்கையில் இவ்வாறாகத் தோன்றிய படைவலுச் சமநிலை புலிகளின் பக்கம் சரியப் போகிறது என்பது கட்டுநாயக்க வான்படைத் தளத்திற்கு விழுந்த அடியோடு சிறி லங்கா அரசின் பின்னின்ற நாடுகளுக்கு மிகத் தெளிவாகப்

புரிந்தது. இந்தப் படைவலுச் சமநிலையை புலிகளுக்குச் சார்பாக தளம்ப விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டிய கட்டாயம் சிறி லங்கா அரசுக்கும் அதற்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்த நாடுகளுக்கும் 2001 ஏப்ரலுக்குப் பின்னர் ஏற்பட்டது. இலங்கையின் படைவலுச் சமநிலை புலிகளுக்குச் சார்பாக சரிந்தால் இத்தீவின் இராணுவ மேலாண்மை அவர்களின் கைக்குப் போய்விடும் எனவும் அப்படிப்போனால் இங்கு தாம் எண்ணியதை செய்யமுடியாதளவிற்கு சிறி லங்கா அரசுக்கு தற்றுணிவு அற்றுப்போகும் எனவும் அந்நாடுகள் எண்ணின.

அதுமட்டுமன்றி, இப்படைவலுச் சமநிலையில் புலிகளின் தரப்பு இராணுவ வளங்களில் சிலவற்றை தம்மால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ கட்டுப்படுத்த முடியாது என்பதையும் அந்நாடுகள் உணர்ந்தன. புலிகளிடம் எத்தனை பீரங்கிகள் உள்ளன, டிவிசன்கள் உள்ளன, சண்டைப் படகுகள் உள்ளன என்பதுபோன்ற விடயங்கள் சமச்சீரான படைவலு சம்பந்தப்பட்டவையாகும். இவற்றைக் கொண்டு சமநிலையைக் கணிப்பிடுவது இலகுவாகும். ஆனால், புலிகளிடம் காணப்படும் கரும்புலிப்படையும் கொழும்பைத் தாக்கும் வலுவும் சமச்சீரற்றவையாகவும் (Asymmetrical) அதனால் சரியாக அளவிடப்பட முடியாதவையாகவும் காணப்படுகின்றது. உதாரணமாக ஒரு பீரங்கியால் எத்தனை முறை சுடமுடியும் என்பதை கணக்கிடலாம். ஆனால், ஒரு கரும்புலி அணியின் தாக்கம் எவ்வாறு அமையும் என்பதை அளவிடமுடியாது. ஆகவே, இலங்கையில் சிறி லங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இன்று நிலவும் படைவலுச் சமநிலையில் கரும்புலிகளும் புலிகளின் கொழும்பைத் தாக்கும் வலுவும் அளவிட முடியாத அம்சங்களாக இருப்பதும் வெளிநாடுகளுக்கு அச்சத்தைத் தோற்றுவிக்கின்றன. இதனாலேயே புலிகளை பேச்சுவார்த்தை என்ற கூட்டுக்குள் நிரந்தரமாக மடக்கி வைத்திருக்க அவை முயற்சி எடுக்கின்றன.

இனித் தொடங்கிய இடத்துக்கு வருவோம். கருணாமீது மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கையில் சிறி லங்காப் படையினர் தலையிட்டால் மறுபேச்சுக்கு இடமின்றி அடிவிழும்

என்பது சந்திரிகா அரசுக்கு அந்நேரத்தில் மிகத் தெளிவாகத் தெரிந்திருந்தது. சண்டை மீண்டும் ஆரம்பித்தால் வடக்கில் இருதரப்புக்குமிடையிலான படைவலுச் சமநிலையைப் பேணமுடியாது என்பது சந்திரிகா அரசுக்கும் சிறி லங்காப் படைத்தளபதிகளுக்கும் நன்றாகவே தெரிந்திருந்தது. வடக்கில் உள்ள சிறி லங்கா இராணுவத்தின் ஏழு டிவிசன்களில் பெரும்பாலானவை போர் மூளும்போது பாதிப்புக்குள்ளாகும் என்பது அவர்களுக்குத் தெரியும். வடக்கில் உள்ள டிவிசன்களுக்கு ஏற்படக்கூடிய சிறிய பாதிப்பும் இலங்கையின் படைவலுச் சமநிலையை புலிகளுக்குச் சார்பாக சரித்துவிடும் என்பது கிழக்கிலுள்ள சில போரியல் பேதைகளுக்கு புரியாவிட்டாலும் சிறி லங்கா படைத்தளபதிகளுக்கும் வெளிநாட்டு படைத்துறை வல்லுநர்களுக்கும் நன்றாகவே தெரிந்திருந்தது.

இதைவிட இன்னொரு முக்கிய விடயத்தையும் அவர்கள் கருத்திற்கொள்ள வேண்டியிருந்தது. உங்களை ஒருவர் திடீரெனத் தாக்கவந்தால் நீங்கள் முதலில் உங்கள் உடம்பில் படக்கூடாத இடங்களில் அடிவிழாமல் தடுக்கவே முயற்சிப்பீர்கள். அதுபோலவே ஒருநாட்டின்மீது இன்னொரு நாடு போர் தொடுக்க முற்பட்டால் முதலாவது நாடு தன்னுடைய கேந்திர மற்றும் போரியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் காப்பாற்றும் வகையிலேயே தன்னுடைய படைவளங்களை பிரித்துக் குவிக்க முற்படும். உதாரணமாக இந்தியா மீது பாகிஸ்தான் போர்தொடுத்தால் இந்தியா தனது படைவளங்களைக் கொண்டு போய் முதலில் தமிழ்நாட்டில் குவிக்காது. அது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த எல்லைப்புற பகுதிகளை நோக்கியே தனது படைகளை நகர்த்தும். போர் நிறுத்தம் ஏற்பட்ட பின்னர் புலிகள் தமது படைகளை வடமுனை, மேற்குமுனை, கிழக்கு முனை, தென்கிழக்குமுனை ஆகிய கட்டளைத் தலைமையகங்களின் கீழ் மறுசீரமைத்திருக்கிறார்கள். புலிகளின் மேற்குமுனைப் படைகள் தள்ளாடி, மன்னார் ஆகியவற்றை நோக்கியபடியும், தென்கிழக்குமுனைப் படைகள் மணலாறு, திருமலை வடக்கு ஆகியவற்றை நோக்கியவாறும் நிறுத்தப்பட்டுள்ளன. புலிகளின்

வடமுனைப் படைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் சிறி லங்கா இராணுவம் குவித்து வைத்துள்ள பெரும் படைவளங்களை நோக்கியவாறு நிறுத்தப்பட்டுள்ளன.

கிழக்கில் கருணா மீது புலிகளின் இராணுவ ஒழுக்காற்று நடவடிக்கையில் சிறி லங்காப் படையினர் நேரடியாகத் தலையிட்டதால் போர் தொடங்கிற்று என வைத்துக் கொள்வோம். சிறி லங்கா அரசும் அதன் படைத் தளபதிகளும் முதலில் எதைப்பற்றி அக்கறைப்பட்டிருப்பார்கள் என நீங்கள் நினைக்கிறீர்கள்? புலிகளின் தென்கிழக்கு முனைப் படைகள் மணலாற்றிலுள்ள சிறி லங்கா இராணுவத்தின் அரண்களை உடைத்தால் திருமலை வடக்கும் அதன் காரணமாக திருமலைத் துறைமுகத்தின் இருப்பும் அச்சுறுத்தலுக்கு உள்ளகும். புலிகளின் மேற்குமுனைப் படைகள் தள்ளாடியை உடைத்தால் புத்தளத்திற்கும் மன்னாருக்கும் இடையில் வேறு பெரும் தடைகள் இல்லை. இதனால் புத்தளமும் இலங்கையின் பொருளாதார இயங்குதளமான மேற்குக் கரையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும். புலிகளின் வடமுனைப் படைகள் குடாநாட்டில் எந்தவொரு உடைப்பை ஏற்படுத்தினாலும் அங்குள்ள சிறி லங்கா இராணுவத்தின் பெரும் படைவளங்கள் (பீரங்கிகள், கவசவாகனங்கள், எறிகணைகள், இன்னோரன்ன) அச்சுறுத்தலுக்குள்ளாகும். ஏனெனில் இவை எவற்றையும் அங்கிருந்து வெளியெடுக்க முடியாது. மேற்படி மூன்று முனைகளில் ஒன்றைப் புலிகள் உடைத்தாலும் அதை காப்பாற்றுவதற்காகவே சிறி லங்கா அரசு தனது இராணுவ வளங்களை பயன்படுத்தும். இது இயல்பு. இதற்காக போரியல், கேந்திர அல்லது பொருளாதார முக்கியத்துவமற்ற இடங்களிலிருந்து படைகளை வெளியெடுத்து அவற்றை மேற்படி முனைகளை பாதுகாக்க அனுப்பிவைக்கும். இது போரியலின் அடிப்படைப் பாடம்.

போரைத் தொடங்கினால் ஆபத்து வடக்கில் தான் இருக்கின்றது என்பது சிறி லங்கா படைத் தளபதிகளுக்கு நன்றாகவே தெரியும். மேற்படி மூன்று முனைகளில் எதற்கு ஆபத்து ஏற்பட்டாலும் அதைச் சமாளிக்க படைகளை

வெளியெடுக்கக்கூடிய இடம் வடக்குக் கிழக்கில் ஒன்றே ஒன்று தான். அது மட்டக்களப்பு. ஏனெனில் ஈழப்போரின் இராணுவப் புவியியல் சமநிலையில் மட்டக்களப்பிற்கு கேந்திர, போரியல் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் எதுவும் கிடையாது. புத்தளத்தைக் காப்பாற்றுவதா, மட்டக்களப்பைக் காப்பாற்றுவதா? அல்லது திருமலைத் துறைமுகத்தைக் காப்பாற்றுவதா, மட்டக்களப்பை காப்பாற்றுவதா? அல்லது குடாநாட்டில் குவிக்கப்பட்டுள்ள தமது பாரிய இராணுவ வளங்களைக் காப்பாற்றுவதா, மட்டக்களப்பைக் காப்பாற்றுவதா? என்ற கேள்விகள் எழும்போது சிறி லங்கா அரசு என்ன முடிவு எடுக்கும் என்பதை நான் உங்களுக்கு விரிவாக விளக்கும அளவிற்கு நீங்கள் மடையரல்ல. மட்டக்களப்பு விவகாரத்தில் தலையிட்டு அந்தரத்தில் இருக்கும் இலங்கைத் தீவின் படைவலுச் சமநிலையை புலிகளின் பக்கம் சாய்க்க இதன் காரணமாகவே யாரும் முன் வரவில்லை.

29.08.2003



## -19- சுயநிர்ணய உரிமை, ஒட்டுப்படைகள் கிழக்குத் தீமோர் தரும் பாடம்

இலங்கையில் இன்று நிரந்தர அமைதி ஏற்படுமா, இல்லையா என்பதற்கு புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டம் ஒரு வரலாற்று உரைகல்லாக அமைந்துள்ளது. இதில் காணப்படும் தமிழர் சுயநிர்ணய உரிமை பற்றிய அடிப்படைக் கருத்தையே சிங்கள தேசம் பெரும் அச்சுறுத்தலாகவும் நசுக்கப்படவேண்டிய சவாலாகவும் கருதிச் செயற்படுகின்றது. இலங்கைத் தீவை விட்டு பிரித்தானிய ஏகாதிபத்தியம் வெளியேறிய கணத்திலிருந்து இன்றுவரை இத்தீவின் வடக்கு – கிழக்கில் வாழும் தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையைச் சிங்கள தேசத்திடம் ஒப்புக் கொடுக்கவில்லை என்ற வரலாற்று உண்மையின் அடித்தளத்திலேயே வட்டுக்கோட்டைத் தீர்மானமும் (1976), சுதந்திரத் தமிழீழ அரசை அமைப்பதற்கான சர்வஜன வாக்காக தமிழர் தாயகத்தில் 1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலும், 1985 ஆம் ஆண்டு கூட்டணியும் அனைத்து ஈழ விடுதலை இயக்கங்களும் ஒருமித்துப் பிரகடனப்படுத்திய திம்புக் கோட்பாடுகளும், புலிகள் இன்று முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டமும் அமைந்துள்ளன.

எமது சுயநிர்ணய உரிமை சரியாக அங்கீகரிக்கப்படாத எந்த ஒரு அரசியல் தீர்வும் எம்முடைய சமூகத்தின் வேலையில்லாப் பிரச்சினை தொடக்கம் நிலப் பயன்பாட்டுச்

சிக்கல்கள் வரை எதையுமே தீர்க்கக்கூடிய நிரந்தர அடிப்படையாக இருக்க முடியாது என்ற உண்மையை பல படித்த தமிழர்கள் கூட புரிந்து கொள்ளாது உளறித் திரிகின்றனர். எமது சுயநிர்ணய உரிமை என்பது சிங்கள தேசம் கற்பனை செய்வதுபோல இலகுவாகத் தூக்கியெறிந்து விடக்கூடிய விடயமல்ல. ஏனெனில், சர்வதேச சமூகம் அண்மைக் காலங்களில் சுயநிர்ணய உரிமையைப் புறக்கணிக்க முடியாத ஒரு அரசியல் நடைமுறையாக ஏற்கத் தலைப்பட்டுள்ளது.

கிழக்குத் தீமோரின் சுயநிர்ணய உரிமைக்கான வரலாற்றுக் காரணங்களைப்போல எமக்கும் ஆணித்தரமான காரணங்கள் உண்டு என்பதை அரசியல்வாதிகள் எமது மக்களுக்குத் தெளிவுபடுத்தக் கூடிய வகையில் களத்தில் இறங்கிச் செயற்பட வேண்டும். கிழக்குத் தீமோருக்கு அவுஸ்திரேலியாவைப் போல இந்தியா எமக்கு அமைந்துள்ளது. இதில் நாம் கற்கவேண்டிய பாடங்கள் பல. எமது அடிப்படை உரிமைகளை நாம் வென்றெடுப்பதைத் தடுக்க பாசிச அரசுகள் அமெரிக்கா, பிரித்தானிய ஆகியவற்றின் துணையோடு கைக்கூலிகளையும் ஒட்டுப்படைகளையும் (Para Militaries) எவ்வாறு கட்டவிழ்த்து விடுகின்றன என்பதையும் கிழக்குத் தீமோர் எமக்குக் கற்றுத் தருகின்றது. மேற்கத்தேய நாடுகள் பேசும் மனித உரிமை, ஜனநாயகம், நல்லாட்சி எல்லாவற்றையும்விட அவற்றிற்கு எண்ணெய் மற்றும் கனிமவளங்கள், கடற்பாதைகள் என்பவையே முக்கியமானவை என்ற பாடத்தையும் நாம் கிழக்குத் தீமோரிலிருந்து தெளிவாகக் கற்றுக் கொள்ளலாம்.

தீமோர் அவுஸ்திரேலியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையில் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீவாகும். அவுஸ்திரேலியா தனது பாதுகாப்புக்கு இன்றியமையாத ஒரு இடமாக தீமோரைக் கருதி வருகின்றது. அது மட்டுமின்றி இருநாடுகளுக்குமிடைப்பட்ட கடற்பகுதியில் இருக்கின்ற பெரும் எண்ணெய் வளத்தைத் தனதாக்கிக் கொள்வதிலும் அவுஸ்திரேலியா குறியாக இருக்கின்றது.

கிழக்குத் தீமோரின் விடுதலைப் போராட்டம் அவுஸ்திரேலியாவினுடைய இவ்விரு நலன்களின் அடிப்படையில் பல இன்னல்களைச் சந்தித்தது. சுதந்திர கிழக்குத் தீமோருடைய இறைமையை இந்த அடிப்படையிலேயே அவுஸ்திரேலியா மட்டுப்படுத்த முனைகின்றது.

13 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தீமோரின் வரலாறு பற்றி அறியப்படவில்லை. சீன வர்த்தகர்களும் தமிழரும் பண்டைக்காலத்தில் அங்கு கிடைக்கப்பெறும் சந்தன மரங்கள், தேன், மெழுகு ஆகியவற்றைப் பெறுவதற்கு தீமோருக்குச் சென்று வந்தனர். தீமோர் தீவில் பல்வேறு மொழிகளைப் பேசும் பழங்குடிகள் வாழுகின்றனர். அந்நாட்டில் பெரும் பகுதி மலைப்பாங்கான பிரதேசமாகும். பெரும்பான்மையான மக்கள் சேனைப் பயிர்ச்செய்கை விவசாயம் ஆகியவற்றிலே ஈடுபட்டிருக்கின்றனர். கரையோரப் பகுதியிலுள்ள சிலர் மீன்பிடியிலும் ஈடுபட்டுள்ளனர். பெரும்பான்மையான மக்கள் எழுத்தறிவு இல்லாதவர்களாகவும் புராதன மதங்களைப் பின்பற்றுபவர்களாகவும் உள்ளனர்.

போர்த்துக்கேய வர்த்தகர்கள் தீமோர் தீவில் 1509 ஆம் ஆண்டு காலடி வைத்தனர். இதன் பின்னர் 1556 இல் அவர்கள் அங்கு தமது ஆதிக்கத்தினை நிலைநாட்டினர். இந்தோனேசியா வில் 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் ஒல்லாந்தர் கால் வைத்த பின்னர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களான ஆச்சே மற்றும் தீமோர் தொடர்பாக போர்த்துக்கேயர்களுக்கும் அவர்களுக்குமிடையில் தொடர்ந்து இழுபறி நிலவி வந்தது. இதன் இறுதியில் 1859 ஆம் ஆண்டு இருநாடுகளும் ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீமோர் தீவை கிழக்கு மேற்கு என பிரித்து எடுத்துக் கொண்டன. இதன் பின்னர் 1975 ஆம் ஆண்டு வரை கிழக்குத் தீமோர் போர்த்துக்கலின் இறைமைக்கு உட்பட்ட ஒரு பிராந்தியமாக இருந்து வந்தது.

இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானியர் தீமோர் தீவைக் கைப்பற்றினார். அவுஸ்திரேலியாவின் மீது படையெடுத்து அந்நாட்டைக் கைப்பற்றுவதற்கான ஒரு முன்தளமாக அவர்கள் தீமோரில் போர்த் தயாரிப்புகளைச்

செய்யலாயினர். இதை முறியடிக்க அவுஸ்திரேலியா தனது விசேட படையினர் 250 பேரை அனுப்பி அங்கு ஜப்பானியருக்கு எதிரான கெரில்லாப் போரொன்றைத் தொடங்கியது. இதன் மூலம் தமது நாட்டின் மீது ஜப்பான் திட்டமிட்டபடி உரியநேரத்தில் படையெடுக்காது தாமதமடைய வைக்கலாம் என அவுஸ்திரேலியர் எதிர்பார்த்தனர். ஜப்பானியருக்கு எதிரான கெரில்லாப் போரில் அவுஸ்திரேலியருக்குத் துணையாக பல்லாயிரக் கணக்கான கிழக்குத் தீமோர் மக்களும் இணைந்து போராடினர். இதில் அறுபதாயிரம் கிழக்குத் தீமோர் மக்கள் உயிரிழந்தனர்.

1974 ஆம் ஆண்டு போர்த்துக்கல் நாட்டில் ஒரு இராணுவச் சதிப்புரட்சி நடைபெற்றது. இதன் காரணமாக அந்நாடு அங்கோலா போன்ற தனது காலனிகளில் வைத்திருந்த பிடி தளரத் தொடங்கிற்று. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கிழக்குத் தீமோரிலும் அதன் சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டும் நோக்குடன் படித்த இடதுசாரி இளைஞர்கள் ‘பிரேட்டிலின்’ என்ற அரசியல் அமைப்பை உருவாக்கினார்கள். அதே காலப்பகுதியில் தீமோர் ஜனநாயக யூனியன் என்ற கட்சியும் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் தாம் கிழக்குத் தீமோரை தனிநாடாக பிரகடனப் படுத்தப்போவதாகவும் ஆனால், இந்தோனேசியாவின் பாதுகாப்புக்குக் குந்தகம் இல்லாத வகையிலும் அதன் கேந்திர மற்றும் பொருளாதார நலன்களுக்கு ஏற்ற வகையிலும் தமது நாடு தனது வெளியுறவுக் கொள்கையை வகுத்துக் கொள்ளும் என இந்தோனேசிய அரசுடன் கிழக்குத் தீமோர் விடுதலை இயக்கங்கள் பேச்சுவார்த்தை நடத்திப் பார்த்தன. சரியான பதில் கிடைக்காத நிலையில் பிரேட்டிலின் அமைப்பு தேசங்களின் சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் கிழக்குத் தீமோரை ஒரு தனி நாடாக 1975 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் பிரகடனப்படுத்திற்று.

இதைத் தொடர்ந்து அவ்வமைப்புக்கும் இந்தோனேசிய உளவுத் துறையின் பின்னணியில் இயங்கிய ஒரு குழுவுக்குமிடையில் ஏற்பட்ட மோதலைச் சாட்டாக வைத்து 1975 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தோனேசியப் படைகள்

கிழக்குத் தீமோர் மீது படையெடுத்தன. 1976 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கிழக்குத் தீமோர் இந்தோனேசியாவின் 27 ஆவது மாகாணமாக பிரகடப்படுத்தப் பட்டது. இந்தக் காலகட்டத்தில் கிழக்குத் தீமோரில் தனக்கு எதிரான சக்திகள் அனைத்தையும் பூண்டோடு அழிக்கும் நோக்கில் இந்தோனேசிய இராணுவம் ஒரு இலட்சம் மக்களுக்கு மேல் கொன்று குவித்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டனர். மேலும் பல்லாயிரம் மக்கள் அகதிகளாகி வீடு வாசல்களை விட்டு மேற்குத் தீமோரில் தஞ்சம் புகுந்தனர்.

இந்தோனேசியப் படைகளுக்கு எதிராக ஆரம்பத்தில் பிரேட்டிலின் விடுதலை அமைப்பின் படைப்பிரிவான 'பலின்ரின்' வெற்றிகரமான கெரில்லாத் தாக்குதல்களை நடத்தியது. இதற்கு எந்தவித வெளி உதவிகளும் இருக்கவில்லை. கிழக்குத் தீமோர் விடுதலை இயக்கத்தின் இராணுவப் பிரிவை போர்த்துக்கீச இராணுவத்தில் பணியாற்றி வெளியேறிய பல அதிகாரிகள் இணைந்து உருவாக்கினர். போர்த்துக்கீச இராணுவம் ஆங்காங்கே விட்டுச் சென்ற மற்றும் களவாடப்பட்ட ரைபிள்களைக் கொண்டே விடுதலை இயக்கத்தின் இராணுவம் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டது. அத்துடன் மரபுவழி இராணுவத்திற்குரிய பயிற்சிகளின் அடிப்படையிலேயே விடுதலைப் போராளிகள் உருவாக்கப்பட்டனர். ஆனால், இந்தப் போராட்டத்தை இந்தோனேசியப் படைகள் அமெரிக்க, பிரித்தானிய மற்றும் அவுஸ்திரேலிய சிறப்புப் படைகளின் ஆலோசனைக்கு இணங்க மிகக் கொடூரமான முறைகளின் மூலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தன. கிழக்குத் தீமோர் கெரில்லாக்கள் பலமாக இருந்த மலைப்பிராந்தியங்களில் அவர்களைத் தனிமைப்படுத்தி அழிப்பதற்காக இந்தோனேசிய இராணுவம் உணவு, மருந்து ஆகியவை உட்பட்ட முற்று முழுதான பொருளாதாரத் தடையை போட்டது. 'கால்களின் வேலி' என அழைக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையில மலைச் சாரல்களில் இருந்த பல நூற்றுக்கணக்கான கிராமங்களில் இருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்தோனேசியப் படையினரால் இரவோடிரவாக வெளியேற்றப்பட்டனர். இவர்கள்

கம்பியால் அடைக்கப்பட்ட இராணுவ வலையங்களுக்கு உட்பட்ட அகதி முகாம்களில் அடைக்கப்பட்டனர்.

'தேச, வர்க்க விடுதலைக்காக போராடும் கெரில்லாக்கள் தமது மக்களிடையே கடலில் மீன்கள் வாழ்வதைப் போன்று செயற்படவேண்டும்' என சீனப் புரட்சித் தலைவர் மாசேதுங் கூறுகிறார். எனவே, 'தண்ணியை இறைத்துவிட்டால் அதில் வாழும் மீன்கள் இறந்து விடும்' என்ற அமெரிக்க, பிரித்தானிய எதிர் கெரில்லா போரியல் கோட்பாட்டின் அடிப்படையிலேயே இவ்வகையான கொடூரமான நடவடிக்கைகளை இந்தோனேசிய இராணுவம் மேற்கொண்டது. இந்தோனேசியப் படைகளுக்கு அமெரிக்க, பிரித்தானிய மற்றும் அவுஸ்திரேலிய சிறப்புப் படைகள் நவீன எதிர் கெரில்லாப் போரியல்முறைகளில் தொடர் பயிற்சி வழங்கின என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயம். கிழக்குத் தீமோர் மக்களிடையே காணப்பட்ட பல்வேறு வட்டார மற்றும் மொழி, மத பிரிவுகளையும் முரண்பாடுகளையும் இந்தோனேசிய இராணுவம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பல மோசமான ஒட்டுப்படைகளையும் கைக்கூலிகளையும் உருவாக்கியது. இந்த ஒட்டுப்படைகள் தாம் விரும்பியபடி அட்டூழியங்களில் ஈடுபட்டன.

கிழக்குத் தீமோர் சமுகத்தில் காணப்பட்ட மேற்படி முரண்பாடுகளை இந்தோனேசிய இராணுவம் மிக நுட்பமாகப் பயன்படுத்தியதன் மூலம் அந்நாட்டின் சுயநிர்ணய உரிமை பற்றிய ஒருமித்த கருத்தை பிரேட்டிலின் அமைப்பு அரசியல் ரீதியாகக் கட்டியெழுப்ப விடாமல் பார்த்துக் கொண்டது. (கிழக்குத் தீமோர் விடுதலைப் போராட்டத்தில் கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த பலர் முக்கிய பங்காற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கது). கிழக்குத் தீமோரில் இந்தோனேசிய இராணுவம் 1975 ஆம் ஆண்டின் பின் செய்த மிகமோசமான படுகொலைகள், சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள் என்பது போன்ற அப்பட்டமான அடிப்படை மனித உரிமை மீறல்கள் பற்றி மேலைத்தேய ஊடகங்கள் அந்த நேரத்தில் கண்டு கொள்ளவில்லை. இதற்குக் காரணம் தென்கிழக்கு

ஆசியாவில் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புத் தேசிய விடுதலைப் போராட்டங்கள் பரவுவதை தடுப்பதற்கு அக்காலகட்டத்தில் அமெரிக்காவிற்கு இருந்த மிக முக்கியமான கூட்டாளி நாடாக இந்தோனேசியா அமைந்திருந்ததே ஆகும். அத்துடன் மாக்சீய இயக்கமான கிழக்குத் தீமோர் விடுதலை இயக்கம் வெற்றி பெற்றால் அவுஸ்திரேலியாவின் பாதுகாப்புக்கு இன்றியமையாதெனக் கருதப்பட்ட ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம் சோவியத் யூனியனின் கைக்குள் போய்விடும்.

எனவே கிழக்குத் தீமோரை இந்தோனேசியாவின் மிகக் கொடூரமான பிடிக்குள் வைத்திருப்பதையே அமெரிக்காவும் அதன் கூட்டு நாடான அவுஸ்திரேலியாவும் விரும்பின. இதன் காரணமாக கிழக்குத் தீமோர் விடுதலைப் போராட்டத்தையும் அந்தப் போராட்டத்தையொட்டி இந்தோனேசிய இராணுவம் அங்கு செய்த பயங்கரமான செயல்களையும் மேற்கத்திய ஊடகங்கள் கண்டு கொள்ளவில்லை. 1985 ஆம் ஆண்டளவில் தீமோர் விடுதலை இயக்கம் தனது மாக்சீய நிலைப்பாட்டில் இருந்து விலகி முழுமையான தேசிய விடுதலைக் கோட்பாட்டினைக் கொண்ட ஒரு அமைப்பாகத் தன்னை இனங்காட்டிக் கொண்டது. இதன் மூலம் கிழக்குத் தீமோர் விடுதலை தொடர்பாக அவுஸ்திரேலியாவுக்கும் அதன் மேற்குலக கூட்டு நாடுகளுக்கும் இருந்த அச்சங்களை அகற்றலாமென அது எண்ணிற்று. 1990 ஆம் ஆண்டில் சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்ததோடு உலக அரசியல் நிலமைகள் முற்றாக மாறின. சோவியத் யூனியன் தென் கிழக்காசியாவில் காலூன்றுவதைத் தடுத்திடுவதற்கான ஒரு தளமாக இந்தோனேசியா பேணப்படுவதற்கான தேவை அமெரிக்காவிற்கு இல்லாமல் போனது. அத்தோடு இந்தோனேசியாவின் அமெரிக்கச் சார்பு சர்வாதிகாரியான சுகார்த்தோவும் பதவி இறங்க வேண்டியதாயிற்று. இக்காலகட்டத்திலேயே கிழக்குத் தீமோர் விடுதலைப் போராட்டத்தைப் பற்றி மேலைத்தேய ஊடகங்கள் கவனமெடுக்கத் தொடங்கின. 1991 ஆம் ஆண்டு அங்கு ஓர் ஆர்ப்பாட்டத்தின்போது இந்தோனேசிய இராணுவம் செய்த படுகொலையொன்று பெரியளவில் மேலைத்தேய ஊடகங்களில்

பேசப்பட்டது. இந்நிலையில் 1993 ஆம் ஆண்டு கிழக்குத் தீமோர் விடுதலை இயக்கத் தலைவரை இந்தோனேசியப் படைகள் கைது செய்து 20 வருட சிறைத் தண்டனை வழங்கின.

1998 ஆம் ஆண்டு சுகார்த்தோவை அடுத்துப் பதவிக்கு வந்த இந்தோனேசிய ஜனாதிபதி கபீப் கிழக்குத் தீமோரில் அதன் சுயநிர்ணய உரிமையை தீர்மானிப்பதற்கான ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படலாம் என அறிவித்தார். இதன் பின்னணியில் அவுஸ்திரேலியா செயற்பட்டதாகக் கருத இடமுண்டு. அதாவது கிழக்குத் தீமோருக்கு வரையறுக்கப்பட்ட சுதந்திரத்தைக் கொடுத்து அந்நாட்டையும் அதன் கடலில் காணப்படும் எண்ணெய் வளங்களையும் நிரந்தரமாகவே தன் கைக்குள் வைத்துக் கொள்ளலாம் என அவுஸ்திரேலியா கருதியதாலேயே அது கிழக்குத் தீமோர் சுயநிர்ணய உரிமைக்கான வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென இந்தோனேசிய அரசின் மீது அழுத்தம் கொடுத்தது. அதாவது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாக இருந்த சுகார்த்தோவின் வீழ்ச்சிக்குப் பிறகு பதவிக்கு வந்த அரசுகள் கிழக்குத் தீமோரின் வளங்களை அவுஸ்திரேலியா பயன்படுத்துவதற்கு முட்டுக்கட்டை போடலாம் என அவுஸ்திரேலியா பயந்ததும் இதற்கு முக்கிய காரணமாகும்.

1999 ஆம் ஆண்டு மே மாதம் கிழக்குத் தீமோரின் சுயநிர்ணய உரிமையை வழங்குவது தொடர்பான ஒரு ஒப்பந்தத்தில் போர்த்துக்கலும் இந்தோனேசியாவும் கைச்சாத்திட்டன. அதன் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபை சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இவ்வொப்பந்தத்தின் ஒரு முக்கிய அம்சமாக கிழக்குத் தீமோரில் இந்தோனேசிய இராணுவத்துடன் செயற்பட்டு வந்த ஒட்டுப்படைகள் அனைத்தும் வாக்கெடுப்புக்கு முன்னர் கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும் இணங்கப்பட்டது. எனினும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த ஐக்கிய நாடுகள் சபை முற்பட்ட வேளையில் இந்தோனேசியப் படைகளின் உதவியோடு ஒட்டுப்படைகள் கிழக்குத் தீமோரில்

பயங்கர அழிவு நடவடிக்கைகளில் இறங்கின. இதனிடையிலும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் எண்பது சதவீதமான கிழக்குத் தீமோர் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு வாக்களித்தனர். இதைத்தொடர்ந்து மேற்படி ஒட்டுப்படைகள் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீ வைப்பு நடவடிக்கைகளில் இறங்கியதால் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இவ்வொட்டுப் படைகளால் படுகொலை செய்யப்பட்டனர். கிழக்குத் தீமோரின் தலைநகரமான டிலி நாசமாக்கப்பட்டது. ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப் பட்டனர். இந்த நிலைமைகளைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக 99 செப்ரெம்பர் மாதம் அவுஸ்திரேலியாவின் தலைமையில் ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையொன்று கிழக்குத் தீமோரில் சென்று இறங்கியது. இதன் பின்னர் அங்கு ஒழுங்கு ஓரளவு நிலைநாட்டப்பட்டது.

ஆனால் கிழக்குத் தீமோர் விடுதலைப் படை நடவடிக்கைகள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அது ஆயுதங்களைக் களையவேண்டும் என்ற நிபந்தனையும் போடப்பட்டது. இதை அதன் சில தளபதிகள் எதிர்த்தபோதும் எதுவும் செய்ய முடியாது இருக்கின்றனர். 1999 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் கிழக்குத் தீமோருக்கான இடைக்கால நிருவாகமொன்று அமைக்கப் பட்டது. 2002 ஆம் ஆண்டு முதலாவது பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. அதில் கிழக்குத் தீமோர் விடுதலை இயக்கத் தலைவர் சனானா குஸ்மாவோ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். தற்போது கிழக்குத் தீமோரின் எண்ணெய் வளங்களை தான் பயன்படுத்துவதற்கும் அந்நாட்டின் அரசியலையும் பாதுகாப்பையும் தன்கைக்குள் வைத்திருப்ப-தற்கும் அவுஸ்திரேலியா முயற்சி செய்து வருகின்றது.

15.08.2004

## -20- தெற்கில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ள ஜனாதிபதியின் அறிவிப்பு

சிறி லங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பது எப்படி என்ற எண்ணத்தில்தான் தற்போது மூழ்கியிருக்கிறார். சுனாமி மீள்கட்டமைப்பு, அமைதிப் பேச்சு என்பவை எல்லாம் அவருடைய மூளையின் ஏதோ மூலையில் கிடக்கின்றன. இன்றுள்ள சிறி லங்கா சட்டதிட்டங்களின்படி அவர் இவ்வாண்டுடன் ஜனாதிபதிப் பதவியிலிருந்து நிரந்தரமாக ஓய்வுபெற வேண்டும். அதாவது அமெரிக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையைப் போல இங்கும் ஒருவர் இரு தடவைக்கு மேல் ஜனாதிபதியாக இருக்க முடியாது என சிறி லங்காவின் அரசியல் யாப்பு கூறுகிறது.

இப்படித்தான் 1988 இலே அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா மூன்றாவது முறையும் தானே ஆட்சிக்குவரத் திட்டம் தீட்டுகிறார் எனவும் தான் சாகும் வரை பதவியில் இருப்பதே அவருடைய நோக்கம் என்றெல்லாம் ஊடகங்களிலும் கொழும்பின் அரசியல் வட்டாரங்களிலும் கதைகள் உலாவின. ஆனால், அவர் 1988 தேர்தலில் பிரேமதாசாவை ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டுவிட்டு தனது நீண்ட அரசியல் வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். ஜே.ஆர். எப்படியான ஒரு மகா திருவன் பேர்வழி என்பது நீங்கள் அறிந்த விடயம். ஆனால் அந்த ஆளே இது போதும் என ஒதுங்கிக் கொண்டார்.

ஆனால் நமது சந்திரிகாவோ அப்படியல்ல. கடந்த பத்தாண்டுகளாக அனுபவித்த அதிகாரத்தையும் செல்வாக்கையும் கைவிட அவர் விரும்பவில்லை. சந்திரிகாவின் இந்த உள் ஆவல் அல்லது உந்துதல் இரண்டு விடயங்களில் மிக வெளிப்பட்டு நிற்கிறது. இந்த ஆண்டு இறுதியில் நடக்க வேண்டிய ஜனாதிபதி தேர்தலை 2006 இற்கு பிற்போட்டிருக்கிறார். இதற்கு ஒரு முடச்சாட்டு கூறப்படுகிறது. இதை நீங்கள் செய்தித் தாள்களில் படித்திருப்பீர்கள். இதற்கடுத்து ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கான ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்துவது பற்றித் தான் எண்ணியுள்ளதாக அண்மையில் நடந்த ஒரு கூட்டத்தில் சந்திரிகா ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார். அவருடைய இந்த அறிவிப்பு எனக்கோ உங்களுக்கோ ஒரு அரசியற் பேரிடியல்ல. தென்னிலங்கையில் இராவணன் ஆண்டாலென்ன இராமன் ஆண்டாலென்ன அவனோடு கூட வந்த குரங்கு ஆண்டாலென்ன. நமக்கு ஆகப்போவது ஒன்றுமில்லை. ஆனால் சந்திரிகாவின் அறிவிப்பு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலையிலும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் தலையிலும் பேரிடியாக இறங்கியுள்ளது. இவ்விருவரும் நீண்ட காலமாக சிறி லங்காவின் ஜனாதிபதியாகிவிட வேண்டும் என கனவு கண்டு வருகின்றனர்.

ஆகவே இவர்களுடைய எழுத்துலக ஆதரவாளர்கள், பற்றாளர்கள் எனப் பலரும் சந்திரிகாவின் அறிவிப்பினைக் கேட்டுக் கலகலத்துப் போயினர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து சிறி லங்காவின் தேர்தல் முறையை மாற்றியமைத்தால் என்ன விளைவுகள் ஏற்படும் எனப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து அவர்கள் எழுதலாயினர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு மக்கள் ஆணையைக் கோரி சந்திரிகா ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தி வெற்றிபெற்றால் அதனடிப்படையில் நாடாளுமன்றில் சட்டத் திருத்தங்களைச் செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தலையாட்ட வேண்டிய

தார்மீகக் கட்டாயம் ஏற்படும். இது ஐ.தே.க. தலைவரின் அச்சம். அதைவிடப் பயங்கரம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டால் அதற்கு மாற்றாக வரப்போவது நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் முறையாகும். இது நடைமுறையானால் மகிந்த ராஜபக்ஷ கடைசிவரை பதவிக்கு வருவது சாத்தியமில்லை. ஏனெனில் புதிய நடைமுறையின் கீழ் சந்திரிகாவே நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமராக சிறி லங்கா சுதந்திரக் கட்சியால் நியமிக்கப்படுவார் அல்லது அதனடிப்படையில் தேர்தல் நடாத்தப்படுமானால் சந்திரிகாவே தலைமை வேட்பாளராக முடியும். இது மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலத்தை குழிதோண்டிப் புதைத்துவிடும்.

இது விடயத்தில் சந்திரிகா ஒரு ‘‘தூஸ்ரா’’ பந்து வீசி விட்டார் என கொழும்பில் ஒரு அரசியல் நோக்கர் கருத்துரைக்கலானார். சிறி லங்கா அரசியலில் எதையும் எப்படியும் விளையாடலாம் என்ற நம்பிக்கையில் சந்திரிகா செயற்படுவதற்கு மக்களின் குறுகிய ஞாபக வளமும் ஒரு முக்கிய காரணமாகும். 1994 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட சந்திரிகா ஜே.வி.பி.யின் ஆதரவை நாடினார். அதற்கு அக்கட்சி விதித்த அடிப்படை நிபந்தனை அவர் ஆட்சிக்கு வந்தால் உடனடியாக ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க வேண்டும் என்பதாகும்.

சிறி லங்கா பட்ட பல துன்பங்களுக்கு நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையே அடிப்படைக் காரணமெனவும் எனவே அதற்கு முடிவு கட்டுவதென்றே தானும் உறுதியாயிருப்பதாகவும் ஜே.வி.பி.யின் நிபந்தனையை உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதாகவும் சந்திரிகா அன்று சொன்னார். அவருடைய பேச்சை நம்பி ஜே.வி.பி.யும் 1994 ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கவிருந்த தனது வேட்பாளரை பின்வாங்கிக் கொண்டது. அந்தக்கட்சி வேட்பாளர் போட்டிக்கு நின்றால் சிங்கள இளைய தலைமுறை இடதுசாரி வாக்குகள் தனக்குக் கிடைக்காது போய்விடும் என்பது சந்திரிகாவின் கணக்கு. ஜனாதிபதி ஆட்சி முறையை 1995 ஜூன் மாதம் 15

ஆம் திகதிக்கு முன்னர் இல்லாது செய்ய நாடாளுமன்றில் சட்ட மாற்றம் கொண்டு வருவதாகவும் அவர் ஜே.வி.பி.க்கு உறுதியளித்தார். வென்றார். ஜனாதிபதியானார் நிறைவேற்று அதிகாரம் தந்த சுகம் அவரது தலைக்கேறிற்று ஆனால் ஊடகங்களிலெல்லாம் பிரபலப்படுத்தி ஜே.வி.பி.க்கு அவர் வழங்கிய உறுதிமொழியை என்ன செய்வது என்ற சங்கடம் 95 ஜூன் நெருங்க நெருங்க அவருக்கு ஏற்படலாயிற்று.

இந்த நேரத்தில் சந்திரிகாவிற்கு தப்ப ஒரு நல்ல வழி சொல்லிக் கொடுத்தார். அப்போது அவரோடிருந்த பேராசிரியர் ஜி.எல். பீரிஸ். இதனடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணியோடு ஒரு இரகசியப் பேரம் பேசப்பட்டது. நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது பற்றிய விடயம் நாடாளுமன்றில் எடுக்கப்படும்போது இன முரண்பாட்டுத் தீர்வும் அதோடு இணைத்துப் பேசப்பட வேண்டும் என்ற கோரிக்கையை த.வி.கூ. முன் வைக்க வேண்டும் என்பதே பேராசிரியர் ஜி.எல். பீரிசின் வேண்டுகோள். அதாவது ஜனாதிபதி ஆட்சியை ஒழிக்க அரசியல் யாப்பை மாற்ற வேண்டும். அப்படிச் செய்யும்போது அது இன முரண்பாட்டிற்குத் தீர்வு காண்பதற்கான அரசியல் யாப்பு மாற்றத்தோடு இணைந்ததாக இருக்கும் பட்சத்திலேயே த.வி.கூ. ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பிற்கு ஒத்துழைப்பை வழங்க முடியும் என்ற நிலைப்பாட்டை தமிழ் தலைவர்கள் சிலர் முன்மொழிந்தனர்.

அதாவது ஜனாதிபதி முறையை ஒழிப்பதையும் இனமுரண்பாட்டிற்கு அரசியல் தீர்வு காண்பதையும் உள்ளடக்கிய பொது அரசியல் யாப்யு மாற்றத்தைப் பற்றிப் பேசவேண்டும் என்ற கருத்தை ஜே.வி.பி. உட்பட யாரும் புறந்தள்ள முடியாது. ஆனால், தமிழ் பேசும் மக்களின் அரசியல் சிக்கலுக்குத் தீர்வு என்பதைப் பற்றி சந்திரிகாவின் பூட்டப் பிள்ளைகளின் காலத்தைக் கடந்தும் பேசிக் கொண்டே இருக்கலாம். ஆகவே ஜனாதிபதி முறையை மாற்றுவதற்கான அரசியல் யாப்பு மாற்ற வேலையும் அதோடு சேர்ந்து காலவரையின்றி இழுபடும். இழுபட்டால் தான் விரும்பியவரை ஜனாதிபதியாக இருக்கலாம் என அப்போது ஜி.எல் - சந்திரிகா

போட்ட திட்டம் நிறைவேறிற்று. வழமை போல் பகடைகளாயினர் தமிழர். சந்திரிகா தனது ஜனாதிபதி ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதற்கும் ஜே.வி.பி.யின் காதில் பூச்சுற்றுவதற்கும் நம்மிடையே சிலர் துணை போயினர்.

(நாம் அதைக் கொள்கையின் அடிப்படையில் தான் செய்தோம் என யாராவது கூட்டணிகாரர் என் கூற்றுக்கெதிராக இப்போது கிளம்பலாம். ஆனால் மனச்சாட்சி என்று ஒன்றிருக்கிறதே!)

தனது அதிகாரத்தைப் பேணுவதற்கு சந்திரிகாவிற்கு அன்று ஜனாதிபதி முறை தேவைப்பட்டது. இன்று ஆட்சியில் தொடர்வதற்கு ஜனாதிபதி ஆட்சியை ஒழிக்க அவர் வழி தேடுகிறார். இதுதான் சந்திரிகா. ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாது செய்து நிறைவேற்று அதிகாரமுள்ள சிறி லங்காவின் பிரதமராக தனது அரசியல் வாழ்வைத் தொடரும் நோக்கில் சந்திரிகா குளத்தில் எறிந்திருக்கும் ஒரு கல்தான் இந்த அபிப்பிராய வாக்கெடுப்பு பற்றிய அறிவிப்பு. அது தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் எப்படியான அலைகளை எழுப்புகிறது என்பதைப் பார்த்து அடுத்த காய் நகர்த்தலைச் செய்ய எண்ணுகிறார் அவர்.

ஜனாதிபதி முறையை ஒழிக்க அபிப்பிராய வாக்கெடுப்பு என்ற கதையைக் கேட்டவுடன் ஐ.தே.க. சார்பில் தனது பழைய சித்து விளையாட்டைக் காட்டியிருக்கிறார் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ். இனமுரண்பாட்டுக்கான அரசியற் தீர்வோடு இணைந்த விடயமாகவே ஜனாதிபதி முறை ஒழிப்பிற்கான அரசியல் யாப்பு மாற்றம் அமையவேண்டும் என போன கிழமை செய்தியாளர் மாநாட்டில் அவர் கூறியுள்ளார் கேட்பவர்கள் எல்லாருமே ஞாபக மறதியால் பீடிக்கப்பட்டவர்கள், காதில் பூச்சுற்றியவர்கள் என பேராசிரியர் எண்ணுகிறார் போலும்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சியை மாற்றியமைக்க அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்துவதும் அதனடிப்படையில் அரசியல் யாப்பை திருத்துவதும் சிறி லங்கா சட்டத்தின் அடிப்படையில் எந்தளவு சாத்தியம்?

தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என சிறி லங்கா ஜனாதிபதி கருதும் ஒரு விடயத்தை அவர் சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடலாம் என சிறி லங்கா அரசியல் யாப்பின் 86 ஆவது பிரிவு கூறுகிறது. ஆனால் அந்த விடயம் அரசியல் யாப்பில் உள்ள 'அடியூன்றிய' (Entrenched) பிரிவுகளை மாற்றுவதோ நீக்குவதோ சம்பந்தப்பட்டதாக இருக்கக்கூடாது என 86 ஆவது பிரிவு கூறுகிறது. சிறி லங்காவின் ஒற்றையாட்சி இறைமை அந்த இறைமை மக்களிடம் பிரிக்க முடியாதபடி இருத்தல் அந்த இறைமையை குடிமக்கள் நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள் அடிப்படை உரிமைகள் பற்றிய பிரிவுகளும் சிறி லங்காவின் அரச மதம் பௌத்தமே எனக்கூறும் அரசியல் யாப்பின் 9 ஆவது பிரிவும் மாற்றப்பட வேண்டுமாயின் அல்லது நீக்கப்பட வேண்டுமாயின் அதற்கு நாடாளுமன்றில் உள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவும் அபிப்பிராய வாக்கெடுப்பொன்றில் பெரும்பான்மையான மக்கள் ஆதரவும் தேவை. சிறி லங்கா அரசியல் யாப்பின் மேற்படி பிரிவுகளே 'அடியூன்றிய' பிரிவுகளென அழைக்கப் படுகின்றன.

சந்திரிகா ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்துவதாயின் அது மேற்படி 'அடியூன்றிய' பிரிவுகளில் ஒன்றையோ பலவற்றையோ மாற்றுவது சம்பந்தப்பட்டதாக இருக்கக்கூடாது என யாப்பின் 86 ஆவது பிரிவு கூறுகிறது. அதாவது அது 'அடியூன்றிய' பிரிவுகள் சம்பந்தமானதாயின் அந்த அபிப்பிராய வாக்கெடுப்புக்கு முன்னர் நாடாளுமன்றில் யாப்பு மாற்றத்திற்கான பிரேரணை முன் வைக்கப்பட்டு அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்க வேண்டும்.

ஆகவே ஜனாதிபதி ஆட்சியை இல்லாமல் செய்வதற்கான அபிப்பிராய வாக்கெடுப்பு மேற்படி 'அடியூன்றிய' பிரிவுகள் சம்பந்தப்பட்டதல்ல என உயர் நீதிமன்றம் கருத்து வழங்கினாலேயே அது நடத்தப்பட முடியும். சந்திரிகாவிற்கு இதில் ஒரு சிக்கல் உண்டு.

ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் (2003 பிற்பகுதி) ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தில் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட சில அம்சங்களை தனது படைத்துறை அமைச்சருக்குக் கொடுப்பதற்கு ஒரு சட்டமூலத்தை அக்கட்சி கொண்டு வந்தது. ஆனால் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரமென்பது எந்த வகையிலும் எந்த அளவிலும் பிரிக்கப்பட முடியாதது எனவும் அப்படிச் செய்தால் அது மக்களிடம் பிரிக்கப்பட முடியாதபடி உள்ள இறைமையை அவர்கள் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தினூடாக நடைமுறைப் படுத்துவதற்கு முரணான விடயமாகிவிடும் எனவும் அப்போது உயர் நீதிமன்றம் கருத்து வழங்கியது.

அதாவது ஐ.தே.க. தான் செய்ய நினைத்ததை செய்வதற்கு நாடாளுமன்றில் சாதாரண பெரும்பான்மை மட்டும் போதாது. அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் அபிப்பிராய வாக்கெடுப்பில் மக்களாதரவும் தேவை என்பதே உயர்நீதிமன்றின் கருத்தில் பெறப்பட்டதாகும். இதன் காரணமாக ஐ.தே.க. அந்த சட்டமூலத்தை கைவிட வேண்டியதாயிற்று. (இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு நிறைவேற்று அதிகாரம் தங்குதடையின்றியும் முழுமையாகவும் வழங்கப்பட வேண்டுமென்பதே புலிகளின் நிலைப்பாடு)

இதே அடிப்படையின் ஜனாதிபதி முறை ஒழிப்பென்பதும் மக்கள் தமது இறைமையை நிறைவேற்று அதிகாரமாக செயற்படுத்த யாப்பில் கூறப்பட்டுள்ள வழிமுறைக்கு முரணாகிறது. இதன் அர்த்தம் சிறி லங்கா அரசியல் யாப்பின் நான்காவது பிரிவு மாற்றப்பட்டாலே ஜனாதிபதி ஆட்சி இல்லாமல் செய்யப்படலாம். ஆனால் நான்காவது பிரிவு ஒரு ‘அடியூன்றிய’ பிரிவாகும். இந்த அடிப்படையில் உயர்நீதிமன்றம் சந்திரிகாவின் அபிப்பிராய வாக்கெடுப்புத் திட்டத்தை நோக்குமாயின் அது அதனை நிராகரிக்க வேண்டிவரும் என்பதில் ஐயமில்லை. இதையெல்லாம் மீறி ஜனாதிபதி முறையை ஒழிக்கவென சந்திரிகா அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தி வெல்கிறார் என வைத்துக் கொள்வோம்.

அதன் மூலம் நாடாளுமன்றத்தின் மீது ஒரு தார்மீக அழுத்தத்தை ஏற்படுத்தி தான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமராவதற்கு சந்திரிகாவிற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் மீண்டும் ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பில் வெற்றியும் வேண்டும். இது சுண்டைக்காய் காப்பணம் சுமை கூலி முக்கால் பணம் என்ற கதையாகத் தான் முடியும்.

தன் அரசியல் அதிகாரத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதற்கு சந்திரிகாவிற்கு இன்னொரு வழியுண்டு. இதையும் அவர் செய்யத் தயங்கமாட்டார் என எண்ணுகிறேன். 1982 இல் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினார் (86 ஆவது பிரிவின் கீழ்) சிறி லங்கா நாடாளுமன்றம் தனது ஆயுட்காலத்தை மேலும் ஏழு ஆண்டுகளுக்கு நீடிக்கலாமா? என்பதே அவர் நடத்திய சர்வஜன வாக்கெடுப்பின் முக்கிய கேள்வியாகும். இதில் அவருக்கு வெற்றி கிட்டியது. இதன் காரணமாக 1982 இல் கலைய வேண்டிய சிறி லங்கா நாடாளுமன்றம் 1989 வரை நீடித்தது. இதுபோல சந்திரிகாவும் தனது பதவிக் காலத்தை இன்னும் பல ஆண்டுகள் நீடிக்க மக்கள் ஆணை கோரி ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தவும் வழியுண்டு.

இவையெல்லாவற்றையும் விட சிறி லங்காவிற்கு ஒரு புதிய அரசியல் யாப்பை ஏற்படுத்துவதற்கான ஆணையைக் கேட்டு சந்திரிகா ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தலாம். (இப்படிச் செய்வது சிறி லங்கா சட்டத்திற்கு முரணானது என்பதைப் புறக்கணித்து) அதில் வெற்றி பெற்று அதனடிப்படையில் ஒரு அரசியல் நிர்ணய சபையை உருவாக்கி அதன் மூலம் ஒரு புதிய அரசியல் யாப்பைத் தயாரித்து அவர் தன்னை இலங்கையின் ஆயுட்கால பிரதமராகவோ, ஜனாதிபதியாகவோ நியமித்துக் கொள்ளலாம். பதவியில் இருப்பதற்கு எதையும் செய்யத் தயாராயிருக்கிறார் சந்திரிகா.

## -21- ஜனாதிபதி தேர்தல் வியூகத்திற்குள் பலியாகப்போகும் சமாதானம்

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தைத் தொட்டாலே மகா பாவம் என சிங்கள தேசத்தில் நாளாந்தம் புதுப்புதுப் பரப்புரைகள் செய்யப்படுகின்றன. பல சிங்கள மேலாண்மைக் கருத்தியலாளர்கள் புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை வரைவைப் படிக்காமலேயே அது கிழித்தெறியப்பட வேண்டுமென காரசாரமாக எழுதி வருகின்றனர்.

புலிகள் கேட்பது போல இந்த வரைபின் அடிப்படையில் அமைதிப் பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதற்குப் பதிலாக தமது மாற்று வரைபொன்றைப் பற்றியும் சமாந்தரமாகப் பேசலாம் என சந்திரிகா அரசு கூறிவருகிறது. ஆனால், சிங்கள தேசத்தில் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை பற்றிக் கிளப்பப்பட்டு வரும் அனைத்துப் பூச்சாண்டிகளும் அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் சூடுபிடிக்கத் தொடங்கும் போது தாமாகவே மறைந்துவிடும் என்பதே உண்மை. எமது பிரச்சினையைத் தீர்த்து வைப்பதைவிட சிங்கள அரசியல் தலைமைகளுக்கு வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் எப்படி வெல்வது, எப்படி வியூகம் வகுப்பது என்பன பற்றிய கவலைகளும் அக்கறைகளுமே மேலோங்கியுள்ளன. இது விடயத்தில் நாம் அனைவரும் தெளிவாயிருக்க வேண்டும். அதைவிடுத்து நேரத்துக்கு நேரம் வெளியாகும் சந்திரிகா அரசின் அறிக்கைகளையும் ஐக்கிய தேசியக் கட்சியின் பசப்பு

வார்த்தைகளையும் கண்டு மயங்கி மீண்டும் இலவு காத்த மடக்கிளிகளாவதை நாம் தவிர்க்க வேண்டும். புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபின் அடிப்படையில் தாம் பேசத் தயார் என ஐக்கிய தேசியக் கட்சி தற்போது கூறத் தலைப்பட்டுள்ளமையும் ஒரு நயவஞ்சக நாடகமே. ஏன்? ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள வாக்குகளை மட்டுமே நம்பி வெல்லக்கூடிய வாய்ப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கோ சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்கோ தற்போது இல்லை.

ஹெல உறுமய, ஜே.வி.பி. எப்படியான நிலைப்பாடு எடுத்தாலும் சிறி லங்காவின் ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள தேசத்தின் வாக்கு பிரிவது தவிர்க்க முடியாது. இதற்கு முக்கிய காரணம் துரிதமாக உயர்ந்து செல்லும் வாழ்க்கைச்செலவு சந்திரிகா அரசு மீது சிங்கள மக்களிடையே ஏற்படுத்திவரும் வெறுப்பாகும்.

இதேவேளை சந்திரிகா – ஜே.வி.பி. அரசின் மீது உள்ள வெறுப்பால் தன்பக்கம் திரும்பக்கூடிய சிங்கள வாக்குகளை மட்டும் நம்பி ஜனாதிபதித் தேர்தலை வெல்லமுடியாது என்பது ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெளிவாகத் தெரிகிறது.

ஆகவே தற்போது இரு பெரும் சிங்களக் கட்சிகளும் ‘பிரேமதாசா சூத்திரத்தின்’ மீது நாட்டம் கொள்கின்றன. 1988 ஆம் ஆண்டிலே அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக ஜே.வி.பி.யும் சிறி லங்கா சுதந்திரக் கட்சியுமாக சிங்கள மக்களிடையே பெரும் அரசியல் கிளர்ச்சியொன்றைக் கிளப்பிக் கொண்டிருந்தன. இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் மூலம் சிங்கள தேசத்தை ஐக்கிய தேசியக்கட்சி இந்தியாவிற்கு விற்றுவிட்டது என அவர்கள் பரப்புரை செய்தனர். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களுக்கு ஜே.வி.பி. தடைவிதித்தது. அவற்றை மீறி விற்ற ஒரு சில வர்த்தகர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இப்படியாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக மாபெரும் வெறுப்பலையொன்று வீசிக்கொண்டிருந்த நேரத்தில்தான் பிரேமதாசா அதன் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டார். பிரிந்த சிங்கள வாக்கின் ஒரு பகுதியோடு பிரிபடாத வடக்குக் கிழக்கு தமிழ் வாக்குகளையும் முஸ்லிம் வாக்குகளையும் இணைத்தால் ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்குத் தேவையான மொத்த வாக்கின் 50 சதவீதத்துக்கு மேல் பெறலாம் என்பது அப்போது பிரேமதாசா போட்ட கணக்கு. இதையே சிறி லங்காவின் ஜனாதிபதித் தேர்தலை வெல்வதற்கான பிரேமதாசா சூத்திரம் என அந்நேரத்தில் சில சிங்கள அரசியல் ஆய்வாளர்கள் அழைத்தனர்.

சிங்கள தேசத்தில் எப்படியான எதிர்ப்பலைகள் கிளம்பினாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தென்னிலங்கையில் அடிப்படையில் மாறா வாக்கு வங்கியொன்று இருக்கின்றது. மொத்த வாக்காளர் தொகையில் இது 30 – 35 சதவீதம் எனக் கருதப்படுகிறது. இதோடு பிளவுபடாத தமிழர் தாயக மற்றும் முஸ்லிம் வாக்குகளை பெற்றால் ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள தேசத்தில் ஏற்படக்கூடிய தனக்கெதிரான எந்த அலையையும் மேவி ஜனாதிபதித் தேர்தலில் வெல்லலாம் என பிரேமதாசா சூத்திரம் கூறுகிறது.

1988 ஆம் ஆண்டிலே சிங்கள தேசத்தில் வீசிக்கொண்டிருந்த இந்திய வெறுப்பலைக்கு மத்தியில் பிரேமதாசாவும் அவருடைய அரசியல் மதியுரைஞர்களும் இரகசியமாக இந்தியத் தூதரகத்தை அணுகினர். வடக்குக் கிழக்கின் பிரிபடாத தமிழ் வாக்கு மொத்தமாக ஜனாதிபதி வேட்பாளர் பிரேமதாசாவுக்கு விழுவதற்கு அப்போது தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்திருந்த இந்திய இராணுவம் ஆவன செய்யவேண்டுமென அன்றைய இந்தியத் தூதுவர் ஜே.என். தீட்சித்திற்கு சில தூதுகள் அனுப்பப்பட்டன. வடக்குக் கிழக்கில் விழப்போகும் வாக்குகள் பிரேமதாசாவுக்கு வெற்றியை நிச்சயம் பெற்றுக் கொடுக்குமெனவும் இதன் காரணமாக 'அவர் இந்தியாவிற்கு என்றும் நன்றியுடையவராக இருப்பார்' ("He

would be eternally grateful to India") எனவும் அன்றைய இந்தியத் தூதுவர் ஜே.என். தீட்சித் ஒரு முறை 1988 ஜனாதிபதித் தேர்தலைப்பற்றி காரசாரமாக உரையாடிக் கொண்டிருந்தபோது குறிப்பிட்டார். அவர் கூறியது போலவே அந்த ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாசாவுக்கு வடக்கு கிழக்கில் அமோசமான வாக்குகள் கிடைத்தன.

இந்தியப் படைகள் பெட்டி பெட்டியாகத் திணித்த இந்த வாக்குகளே அவருடைய வெற்றியைத் தீர்மானித்தன. இது முடிந்த கையோடு கொழும்பில் நான் தற்செயலாக வரதராஜப் பெருமாளைச் சந்திக்க நேர்ந்த போது அவரும் பிரேமதாசாவைப் பற்றி தீட்சித் சொன்ன அதே வசனத்தைச் சொன்னார். தேர்தலில் வெற்றிபெற உதவியதற்குக் கைமாற்றாக பிரேமதாசா மாகாணசபை திறம்பட இயங்க தனக்கு ஆவன செய்வார் என வரதாராஜப் பெருமாள் சொன்னார்.

இதையொட்டித்தான் அந்த நேரத்தில் 'நினைத்ததை முடிப்பவர் பிரேமதாசா' ("Premadasa is a go getter") என அவருக்கு பெருமாள் புகழாரம் சூட்டினார். தனது நன்றிக்கடனை நிறைவேற்ற வடகிழக்கு மாகாண சபைக்கு பிரேமதாசா வாரி வழங்கிடுவார் என கனவு கண்டார் பெருமாள். அந்த உற்சாகத்தில் தமிழர் தலைநகர் திருமலையில் சிங்கக் கொடியை ஏற்றி அவர் 'சாதனை' படைத்தார். ஆனால் நடந்ததென்ன? தனது மாகாண சபைக்கு கொடுக்கப்பட்ட எள்ளளவு அதிகாரங்களைக் கூட பிரேமதாசாவின் ஆட்சி கபளீகரம் செய்துவிட்டதென அவர் புலம்பியதும் இனித் தமிழீழம் அமைப்பதைவிட வேறு வழியில்லை என்று பிரகடனம் செய்து இந்தியாவிற்கு ஓடியதும் நாம் யாவரும் அறிந்த வரலாறு. 'ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி கடந்த பின்னே நீ யாரோ, நான் யாரோ?' என்ற கதையை சிங்கள தேசம் அன்று மீண்டுமொருமுறை அரங்கேற்றியது.

அந்தப் பிரேமதாசா சூத்திரத்தை மீண்டும் தூசுதட்டி கையிலெடுக்க வேண்டிய கட்டாயம் இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்கும் தோன்றியுள்ளது.

அது எப்படியென்று பார்ப்போம். ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல வேண்டுமானால் இலங்கையின் மொத்த வாக்குகளில் 50 சதவீதத்துக்கு மேலான தொகையை ஒரு வேட்பாளர் பெறவேண்டும். இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பார்த்தால் வெற்றி வாய்ப்பு யாருக்கென்பதை நாம் கணக்கிட்டுப் பார்க்கலாம்.

இந்தத் தேர்தலில் சிறி லங்கா சுதந்திரக் கட்சி — ஜே.வி.பி. கூட்டு பெற்ற மொத்த வாக்கு 4,223,970 அதாவது 45.60 சதவீதம். ஐக்கிய தேசியக் கட்சி 3,504,200 அதாவது 37.83 சதவீதம். ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கா வெல்வதென்றால் மேலும் 12.17 சதவீத வாக்குகளைப் பெறவேண்டும். விலைவாசி ஏற்றத்தால் சந்திரிகா அரசு மீது ஏற்பட்டுள்ள வெறுப்பின் காரணமாக சராசரி 5 — 6 சதவீதமான வாக்கு ஐக்கியதேசியக் கட்சியின் பக்கம் தற்போது சாய்ந்துள்ளது எனக் கொண்டாலும் இன்னும் 6 - 7 சதவீத வாக்குகளைத் தேட வேண்டிய கட்டாயம் ரணில் விக்கிரமசிங்காவிற்கு உண்டு. 2004 ஏப்ரல் தேர்தலில் தமிழரசுக் கட்சி பெற்ற மொத்த வாக்கு 633,654 அதாவது 6.84 சதவீதம்.

இது பிரிபடாத மொத்த வாக்காக இருக்கிறது. இதைக் கபளீகரம் செய்யாமல் ஜனாதிபதித் தேர்தலில் வெல்வது கடினம் என ஐக்கிய தேசியக் கட்சி கவலை கொள்கிறது. ஆகவே அது புலிகளை வசப்படுத்தும் நோக்கத்தில் பல வேலைகளைச் செய்யவும் ஆசைவார்த்தை பேசவும் இப்போதே தொடங்கிவிட்டது. ஏதோ ஒரு வகையில் புலிகளுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கிவிட்டால் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பின் வாக்கு தனக்கே கிடைக்குமென சிறி லங்கா சுதந்திரக் கட்சி கணக்குப் பண்ணுகிறது. இவையெல்லாம் இறுதியில் ஆற்றைக்கடந்த கதையாகத்தான் இருக்குமென்பதில் யாரும் எந்தச் சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை.

31.10.2004

## -22- இந்திய கடற் பாதுகாப்பு வலயத்தில் சிறி லங்கா

இந்திய உபகண்டத்தை புவியியல் ரீதியாக இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று இந்தியப் பெருநிலப்பரப்பு, மற்றது இந்தியக் குடாநாடு (Peninsular India).

இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து வடபாலுள்ள பெருநிலப் பரப்பின் எல்லைகளையே டெல்லி ஆட்சியாளர் தமது நாட்டின் பாதுகாப்பிற்கு இன்றியமையாதபடி வலுப்படுத்திட வேண்டிய பிராந்தியமாகக் கருதி வந்தனர். பெருநிலப்பரப்பின் மேற்கிலும் கிழக்கிலும் பாகிஸ்தான் (இன்றைய பங்களாதேஷ் அன்றைய கிழக்குப் பாகிஸ்தான்) வடக்கிலும் கிழக்கிலும் சீனா என இந்தியாவுடன் கடுமையாக முரண்பட்ட இருநாடுகள் அமைந்திருந்தன. பிரித்தானியர் தன்னாட்சி கொடுத்துச்சென்ற கையோடு காஷ்மீரை கைப்பற்றுவதற்காக இந்தியாவும் பாகிஸ்தானும் போரிட்டன. பின்னர் எல்லைச்சிக்கல் காரணமாக இந்தியாவிற்கும் சீனாவிற்கும் போர் மூண்டது. இதில் இந்தியப் படைகளை சீன இராணுவம் தோற்கடித்தது.

இந்தியப் பெருநிலப்பரப்பில் இங்ஙனமாக போர்களும், உரசல்களும், கடும் முரண்பாடுகளும் நீண்டகாலமாகத் தொடர்ந்தன.

இதனால் தவிர்க்க முடியாதபடி இந்தியாவின் பாதுகாப்பு பற்றிய கவனம் பெருமளவு தனது பெருநிலப் பரப்பின் வடக்கு, மேற்கு, கிழக்கு எல்லைகளிலேயே குவிந்திருந்தது. பெருநிலப்பரப்பிற்கிருந்த நேரடி அச்சுறுத்தல்கள் காரணமாக தனது தரைப்படைகள், வான்படை என்பவற்றின் வளர்ச்சியிலேயே இந்தியா ஆரம்பத்தில் அதிக நாட்டம் செலுத்திற்று.

ஆனால் இந்தியாவின் பெருநிலப்பரப்புப் போலன்றி அதன் குடாநாடு எதுவித நேரடி அச்சுறுத்தலையும் கொண்டிருக்கவில்லை. அதன் கிழக்குப் புறம் வங்காள விரிகுடா, மேற்காக அரபிக் கடல் தென்புறம் பாக்குநீரிணை, இலங்கை, மாலைதீவு என்பன அமைந்துள்ளன. இதில் வங்காள விரிகுடாவில் தோன்றக்கூடிய எந்த அச்சுறுத்தலையும் கண்காணிக்கவும் அதனூடாகச் செல்லும் கடற்பாதைகளைக் கண்காணிக்கவும் மிக ஏதுவான அந்தமான், நிக்கோபார் தீவுகள் இந்தியாவின் கையில் உள்ளன.

மேற்குப்புறமாக அரபிக் கடலில் உள்ள இலட்சத் தீவுகளும் இந்தியாவின் கையிலேயே உள்ளன. இவ்விரு இடங்களையும் போரியல் நோக்கில் அது பேணி வந்துள்ளது. இந்த இரு இயற்கையான பாதுகாப்பு அரண்களும் இந்தியக் குடாநாட்டின் பாதுகாப்பிற்குப் போதுமென்ற கருத்தே ஆரம்பத்திலிருந்து டெல்லி ஆட்சியாளர் மற்றும் கேந்திரத் திட்டமிடலாளர் ஆகியோரின் எண்ணமாக நிலவிற்று. இதற்கு மாறாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு பரந்துபட்ட இந்து சமுத்திரப் பிராந்தியம் அனைத்திலும் அது ஆதிக்கம் செலுத்திடக்கூடிய முறையில் வளர்ச்சியடைவது இன்றியமையாததாகும் என கே.எம். பணிக்கர் என்ற தென்னிந்திய அறிஞர் வலியுறுத்தினார்.

1945 இல் சுதந்திர இந்தியாவின் கடற்பலம் எங்ஙனம் அமைய வேண்டும் என அவர் எழுதிய நூலில் மொறிசியஸ்தீவு, சிங்கப்பூர், செங்கடலின் நுழைவாயிலில் அமைந்துள்ள ஏடன் (Aden) துறைமுக நகரம் மற்றும் சொக்கோட்ரா தீவு (Socotra) என்பன இந்தியாவின் பிடிக்குள் இருப்பதும், பர்மா (தற்போதைய

மியன்மார்) இலங்கை என்பவற்றை இந்தியாவின் அரசியற் செல்வாக்கிற்குட்பட்ட நாடுகளாக்குவதும் அதன் வருங்காலப் பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் அவசியம் என வாதிட்டார். 16 ஆம் நூற்றாண்டில் கடல் மீது தன் ஆதிக்கத்தை இந்தியா இழக்கும் வரை அது தன் சுதந்திரத்தை இழக்கவில்லை எனப் பணிக்கர் எழுதினார்.

16 ஆம் நூற்றாண்டில் இந்தியக் கடலின் அதிபதிகளாக இருந்தவர்கள் சாமூதிரிகள் என்ற கேரளக் கரையோரத்தை ஆண்ட சேரமன்னர் வழிவந்த அரசர்கள் என்பதும், வட இந்திய உயர்சாதிகளிடையே கப்பலேறுவது, கடல் கடப்பது என்பன செய்யப்படத்தகாத பாவமாகக் கருதப்பட்டன என்பதும் பணிக்கர் தனது இந்தியத் தேசிய விடுதலை உணர்வு காரணமாக கூறாது விட்ட விடயங்களாகும்.

(புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய சங்க நூல் ஏடுகளைத் தேடிப் பதிப்பிக்க முற்பட்ட வேளையில் பண்டைய சேர மன்னர் சிலர் கடலோட்டிய, கடல் பிறக்கோட்டிய என்ற பட்டங்களுடன் குறிப்பிடப் பட்டிருந்ததாகவும் சாமூதிரி மன்னர்கள் பற்றி தனது கேரள நண்பர் ஒருவரூடாகத் தெரிய வந்தபோது இது என்ன என்பது பற்றித் தனக்குத் தெளிவு ஏற்பட்டதாகவும் உ.வே. சாமிநாதய்யர் அவருடைய வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிடுகிறார்)

இந்தியாவின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமாயின் இந்து சமுத்திரப் பிராந்தியம் எங்கும் அதன் கடலாதிக்கம் நிலை நிறுத்தப்பட வேண்டும் என கே.எம். பணிக்கர் கூறிய கருத்து பெருநிலப்பரப்பு மையப்பட்ட வட இந்திய கேந்திரத் திட்டமிடலாளரிடம் நீண்டகாலம் பெரிதாக எடுபடாமலேயே போயிற்று.

இந்தியா தனது கடல் எல்லைகளை வரையறுப்பதற்கும் அவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதற்குமான தேவை முதன் முதலில் 1965 இல் ஏற்பட்டது. இவ்வாண்டு இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் போர் மூண்டபோது இந்தோனேசிய அரசு பாகிஸ்தானுக்கு ஆரவாக தனது

கடற்படையை அனுப்ப முனைந்ததோடு மட்டுமல்லாமல் இந்தியப் படைத்தலைமையை திசை திருப்பிடும் நோக்கில் அந்தமான் நிக்கோபர் தீவுகள் மீது படையெடுக்கப் போவதாகவும் சைகை காட்டிற்று. அத்துடன் பாகிஸ்தானுக்கு சில சண்டை வானூர்திகளை அனுப்புவதற்கு ஏதுவாக இலங்கையின் வான்படைத் தளங்களை பயன்படுத்த இந்தோனேசிய அரசு அனுமதி கோரிற்று. இந்து மாகடலின் பெயரை இந்தோனேசிய சமுத்திரம் என மாற்றவேண்டும் என்றும் அது கூறிற்று. இந்தோனேசியாவின் இந்தச் செயலே இந்திய ஆட்சியாளரை முதன் முறையாக வங்கக்கடலில், குறிப்பாகத் தென்கிழக்காசியாவின் நுழைவாயில் பிராந்தியமான அந்தமான், நிக்கோபர் தீவுகளையும் தனது கிழக்குக் கரையை அண்டிய ஆழ்கடலையும், பலப்படுத்திடக் கூடிய கடற்படை விரிவாக்கத்தைப் பற்றி எண்ண வைத்தது எனலாம். ஆயினும் அதே ஆண்டிலேயே இந்தோனேசியாவில் இராணுவப் புரட்சி மூலம் பதவிக்கு வந்த அரசு இந்திய விரோதப் போக்கை கைவிட்டதால் டெல்லி ஆட்சியாளர் இந்தியப் பெருநிலப்பரப்பின் பாதுகாப்பு சிக்கல்களில் மீண்டும் தம் கவனத்தை குவிக்கலாயினர்.

ஆனால் இப்போக்கு 1971 இந்திய – பாகிஸ்தான் போர் காரணமாக முற்றாக மாறிற்று. அப்போரில் கிழக்குப் பாகிஸ்தானில் (பங்களாதேஷ்) அந்நாட்டின் படைகளை முறியடிக்க இந்தியாவிற்கு உதவிய முக்கியமான விடயம் அதன் கடற்படைப் பலமே. ''அந்தமான், நிக்கோபார் தீவுகள் எமது கையில் இருந்தமையாலேயே நாம் கிழக்குப் பாகிஸ்தான் படைகளை தனிமைப்படுத்தி அவற்றின் மூலாதாரமாக இருந்த கடல்வழி வழங்கற் பாதைகளை முற்றாக துண்டிக்கக் கூடியதாயிற்று'' என அப்போரில் பங்குபற்றிய இந்திய கடற்படைத் தளபதி கூறுகிறார். இப்போரின்போது வங்காள விரிகுடாவினுள் அமெரிக்கா பாகிஸ்தானுக்குச் சார்பாக தனது விமானந்தாங்கிக் கப்பலொன்றை அச்சுறுத்தலாக அனுப்பிவைத்த சம்பவமும் வங்காள விரிகுடாப் பிராந்தியத்தில் தனது நிலையை போரியல் ரீதியாகவும், பொருளாதார

ரீதியாகவும் வரையறுத்து வலுப்படுத்திட இந்தியாவைத் தூண்டிற்று.

1971 இந்திய - பாகிஸ்தான் போரின்போது கிழக்குப் பாகிஸ்தான் மீது இந்திய கடற்படை கடற்தடை (Naval Blockade) போட்டபோது பாகிஸ்தான் வான்படை இங்கு வந்து எரிபொருள் நிரப்பிச்செல்ல சிறி லங்கா அனுமதித்தது. இது டெல்லிக்கு பெரும் கடுப்பை உண்டாக்கிற்று. அதுமட்டுமன்றி பங்களாதேஷ் போருக்குப் பின்னர் இந்தியாவின் படைத்துறை வளர்ச்சி மற்றும் கடலாதிக்கம் என்பவற்றை கண்டு கவனங்கொண்ட சிறி லங்காவின் வெளியுறவுக் கோட்பாட்டாளர் சீனாவுடன் கடற்படை சார் உறவுகளை வளர்த்தெடுக்கத் தலைப்பட்டனர். வங்காள விரிகுடாவில் 1971 இன் பின்னர் இந்தியா எடுக்க முனைந்த கடலாதிக்கப் போக்கினை தனது கடற்பிராந்தியத்தில் ஓரளவாயினும் சமநிலைப் படுத்தும் உள்விருப்பில் சிறி லங்கா சீனாவிடம் கடற்படைக் கலங்களை வாங்கிற்று. இந்தியாவின் கடல் விரிவாக்க நோக்கங்கள் பற்றி சிறி லங்கா ஆட்சியாளர் கொண்டிருந்த சஞ்சலங்களை சீனா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தவறவில்லை.

1971 பங்களாதேஷ் போரின்போது பாகிஸ்தான் வான்படைக்கு எரிபொருள் நிரப்பிக் கொண்டு களமுனை செல்ல சிறி லங்கா அனுமதித்தமை டெல்லிக்கு எரிச்சலூட்டிய போதும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசு அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோட்பாட்டைக் கடைப்பிடித்தமை யாலும் அவருக்கும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, உயர் டெல்லி அதிகாரிகள் ஆகியோருக்குமிடையில் நெருங்கிய உறவு இருந்தமையாலும் இந்து சமுத்திரப் பிராந்தியம் சம்பந்தப்பட்ட பொதுவிடயங்களில் இரு நாடுகளுக்குமிடையில் உடன்பாடு நிலவியது.

இக்காலகட்டத்தில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் கடலாதிக்க வளர்ச்சி பற்றியே இந்தியாவும் அதன் நேசநாடான சோவியத் யூனியனும் பெரும் அக்கறை கொண்டிருந்தன. அமெரிக்கா டியூகோ கார்சியா தீவில் அணு

ஆயுதங்களையும், அணுவாயுதக் கப்பல்களையும் நிறுத்தி வைப்பதற்கான தளத்தை நிறுவியது. இது இந்தியாவுக்கு பெரும் அச்சுறுத்தலை அக்கால கட்டத்தில் ஏற்படுத்திற்று. இதனாலேயே சிறி லங்காவை அமெரிக்க எதிர்ப்பணியில் தன்னோடு அணைத்துச் செல்வதிலும் சிற்சில விட்டுக்கொடுப்புகள் மூலம் அதற்குத் தன்பால் சில கடப்பாடுகளை ஏற்படுத்துவதிலும் அப்போது இந்தியா கவனமாக இருந்தது.

இதுவரை காலமும் தனது பெருநிலப்பரப்பின் பாதுகாப்பு வலயத்திலேயே குறியாக இருந்த இந்தியாவின் பார்வை இக்காலப்பகுதியில்தான் தனது தெற்குத் கடலெல்லைப் பக்கம் திரும்பிற்று. இதன் விளைவாகவே இந்து சமுத்திரச் சமாதானப் பிராந்தியம் என்ற கோட்பாட்டை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தீர்மானமாக நிறைவேற்றிட இந்தியாவும் சோவியத் யூனியனும் முனைந்தன. இந்தத் திட்டத்தினுள் அவை சிறி லங்காவை வெற்றிகரமாக உள்வாங்கின.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்கக் கடலாதிக்கத்திற்கெதிரான மேற்படி தீர்மானம் சிறி லங்காவினால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதை மேலும் வலுவூட்டும் வகையில் 1976 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற அணி சேரா நாடுகளின் உச்சிமாநாட்டின்போது சிறி லங்கா, இந்தியா என்பவற்றின் முயற்சிகாரணமாக டியூகோ கார்சியா தீவில் அமெரிக்காவின் படைத்தளம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் இறைமைக்கும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக ஒரு கடுமையான அமெரிக்க எதிர்ப்புக் கண்டனம் நிறைவேற்றப்பட்டது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்க அணு ஆயுதத்தளம் அமைக்கப்பட்டமையும் 1971 இந்திய பாகிஸ்தான் (பங்களாதேஷ்) போரும் இந்தியாவிற்கு தன் கடற்பாதுகாப்பு வலயம் பற்றிய பெரும் அக்கறையை உண்டாக்கின என ஏலவே கண்டோம். இந்த அக்கறையின் முக்கிய வெளிப்பாடாக

வங்காள விரிகுடாவில் குறிப்பாக இலங்கையைச் சுற்றிய கடற்பிராந்தியத்தில், தனது எல்லைகளை இந்தியா சட்டரீதியாகவும் பாதுகாப்பு நோக்கிலும் வரையறுத்துக் கொண்டது.

இதன் முதற்படியாக 1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் திகதி கொழும்பிலும் 28 ஆம் திகதி டெல்லியிலும் இலங்கை - இந்தியக் கடல் எல்லை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதில் கச்சதீவை விட்டுக்கொடுத்ததன் மூலம் இலங்கையை தன்பால் நிரந்தர கடப்பாடு கொள்ளவைத்தது இந்தியா. அமெரிக்கா, சீனா ஆகியவற்றின் பக்கம் சிறி லங்கா சாய்ந்திடாமல் இருக்க இந்தியா சிங்கள ஆட்சியாளர்களுக்கு வழங்கிய ஒரு வகை நிரந்தர கையூட்டுதான் கச்சதீவு எனலாம். இதையடுத்து 1976 இல் மன்னார் வளைகுடா, பாக்குநீரிணை, இராமர் அணை (தீடை) ஆகிய கடற்பகுதிகளில் எல்லைகள் மிக விரிவாக வகுக்கப்பட்டன. (இவ்வொப்பந்தத்தில் இவை பாகைகளில் வரையறுக்கப்படுகின்றன) 1976 நவம்பர் மாதம் மன்னார் வளைகுடாவில் இந்தியா, இலங்கை, மாலைதீவு ஆகிய மூன்றுக்குமான ஒரு முச்சந்திப் பொது எல்லையை வரையறுக்கும் ஒப்பந்தமும் கைச்சாத்தாகிற்று (Tri- junction agreement) 1976 இந்திய இலங்கை கடல் எல்லை ஒப்பந்தத்தைச் சட்டமாக்கும் வகையில் சிறி லங்கா அரசு கடற் பிராந்தியச் சட்டம் இல 22 என்பதை ஏற்படுத்தியது. இதில் வெளிநாட்டுப் போர்க்கப்பல்கள் இலங்கையின் முன்அனுமதியின்றி அதன் கடல் எல்லைக்குள் பயணிக்க முடியாது எனக் கூறப்பட்டது.

இவ்வாறாக இலங்கையை தனது தென் கடல் மற்றும் வங்காள விரிகுடா சார்ந்த பாதுகாப்பு வலயத்தினுள் கொண்டுவந்து அமெரிக்காவின் இந்து சமுத்திர மேலாதிக்கத்தை மட்டுப்படுத்திடலாம் என்ற இந்தியாவின் எண்ணத்தில் மண்விழ நீண்ட காலம் எடுக்கவில்லை.

04.01.2004

## -23- இந்து சமுத்திர வல்லாதிக்க போட்டியில் தமிழீழம்

இலங்கையின் வடக்குக் கிழக்கில் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியத் தாயகத்தின் எதிர்காலம் என்பதை நாம் ஆராய்வதானால் அதற்கு இன்றியமையாத பல விடயங்கள் உள்ளன. அதில் தலையாயது இந்து சமூத்திரப் பிராந்தியத்தில் இந்தியா தன் போரியல் மற்றும் பொருளாதார நலன்களை நிலைநாட்டவும் விரிவாக்கவும் அன்றும் இன்றும் எடுத்துவரும் முயற்சிகளேயாகும். இதற்கடுத்தபடியாக நாம் கருத்திற்கொள்ள வேண்டியது இந்தியாவின் மேற்படி முயற்சிகளுக்கு எதிராக அல்லது அதனை மட்டுப்படுத்திடும் வகையில் சீனாவும் அமெரிக்காவும் அதன் நேசநாடுகளான ஜப்பான், பிரித்தானியா என்பனவும் அன்றும் இன்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைத்துவரும் வியூகங்களாகும். 1970 களின் பிற்கூற்றில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது வல்லாதிக்கத்தை விரிவாக்கிட அமெரிக்கா செய்த காய் நகர்த்தல்களில் சிறி லங்கா தொடர்புபட்டிருந்ததாலேயே இந்தியா தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கு ஆயுதமும் பயிற்சியும், புகலிடமும் கொடுத்து அதன் மூலம் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு மீது அழுத்தத்தை ஏற்படுத்தி இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை செய்து கொண்டது என்பது எமது விடுதலைப் போராட்டம் புறக்கணிக்க முடியாத உண்மை.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்காவோ, சீனாவோ, பாகிஸ்தானோ அல்லது இந்தியாவின்

பாதுகாப்பிற்குக் குந்தகமான எந்தச் சக்தியோ இலங்கையில் தனது படைகளை வைத்திருக்க முடியாது. திருமலைத் துறைமுகத்தையோ இலங்கையிலுள்ள வேறு தளங்களையோ பயன்படுத்த முடியாது என அந்த ஒப்பந்தம் சிறி லங்காவை எக்காலத்துக்கும் பிணைத்து விட்டது என்பது அடுத்த உண்மை. இலங்கை அமைதிப்பேச்சுகளின் செல்திசையை அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் முற்றாக ஆக்கிரமிக்க முற்படுவதை மட்டுப்படுத்த இந்தியா எடுத்துவரும் மறைமுக முயற்சிகளின் விளைவாகவே இன்று சிறி லங்காவின் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் கெடுபிடி ஏற்பட்டு பேச்சுவார்த்தைகள் திரிசங்கு நிலையில் கிடக்கின்றன என்று சில சிங்கள ஆய்வாளர் கூறுவதும் நாம் இலகுவில் தட்டிக்கழித்திட முடியாத அடுத்த விடயம். இலங்கையின் துறைமுகங்களையும், வான்படைத் தளங்களையும் தங்கு தடையின்றிப் பயன்படுத்திட வழிவகுக்கும் ACSA என்ற ஒப்பந்தத்தை சிறி லங்கா அரசுடன் கைச்சாத்திட அமெரிக்கா 2002 இல் தயாராக இருந்ததென்பதையும் அதை இந்தியா தலையிட்டுத் தடுத்துவிட்டதென்பதும் அடுத்த உண்மை.

இதுமட்டுமன்று தனித் தமிழீழ அரசு நிறுவப்படுகின்றது என வைத்துக் கொள்வோம். அதன் இருப்பிற்கு வங்காள விரிகுடா ஊடாகவும், மன்னார் வளைகுடாவின் ஊடாகவும் செல்லும் கடற்பாதைகள் இன்றியமையாத உயிர் நாளங்களாக அமையும். இவற்றில் பெரும்பாலானவை இந்தியாவின் கையிலிருக்கும் அந்தமான், நிக்கோபார் தீவுகளுக்கிடைப்பட்ட 10 பாகை கடலோடை வழியாகவே தென்கிழக்காசியா, சீனா, ஜப்பான் என்பவற்றை நோக்கிச் செல்கின்றன என்பதும், தமிழீழத்தின் மீது நேரடியாகப் பாதைகளை நசுக்கியும், கடற்தடைகளைப் போட்டும் அதன் இருப்பை கேள்விக்குறியாக்கவே இந்தியா முயன்றிடும் என்பதும் தமிழீழ விடுதலைப் பற்றாளர் அனைவரும் அலசிப்பார்க்க மறுத்திட முடியாத விடயங்களாகும். தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கும் எம்மைச் சூழவுள்ள கடலுக்கும் உள்ள தொடர்பு அரசியல் ரீதியாகவும் போரியல் ரீதியாகவும் புறக்கணிக்கப்பட முடியாதது.

இந்தியாவின் பாதுகாப்புப் பற்றிய அக்கறைகள் நடைமுறைகள் என்பன எங்ஙனம் அதன் பெருநிலப்பரப்பு மையப்பட்டதாக ஆரம்பத்திலிருந்து அமைந்திருந்தன என்பதையும், 1971 ஆம் ஆண்டு பங்காளதேஷ் போருக்குப் பின்னர் இந்தியாவின் பாதுகாப்பு வியூகங்கள் ஏன் எங்ஙனம் வங்காள விரிகுடா, அரபிக் கடல், இலங்கையைச் சுற்றிய கடற்பரப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டு வந்துள்ளன என்பதையும் கண்டோம். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்க ஏகாதிபத்திய போரியல் விரிவாக்க நடவடிக்கைகளுக்கு இலங்கை துணைபோகாமல் இருக்க வேண்டும் என்பதில் இந்தியா கொண்ட அக்கறையின் விளைவாக 1974, 76 ஆகிய ஆண்டுகளில் சிறி லங்கா அரசுடன் அது இரு கடல்எல்லை ஒப்பந்தங்களைச் செய்து கொண்டது.

இக்காலகட்டத்தில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தளம் அமைத்து தனது கடலாதிக்கத்தை விரிவாக்க எடுத்த முயற்சியை சோவியத் யூனியன், இந்தியா ஆகியவற்றின் பக்கம் நின்று சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அப்போதைய அரசு எதிர்த்து வந்தது. இது இந்தியாவிற்குத் தனது தென்புலக் கடற் பாதுகாப்புப் பற்றிய திருப்தியை ஏற்படுத்திற்று.

சிறி லங்கா அரசின் அனுமதியின்றி அதன் கடற்பரப்பில் வெளிநாட்டுப் போர்க்கப்பல்கள் பயணிக்க முடியாது என 1977 ஆம் ஆண்டு ஜனவரி மாத இலங்கைக் கடற் சட்டப் பிரகடனத்தில் கூறப்பட்டிருந்தமையும் இதற்கு வலுவூட்டியது. ஆனால் இந்நிலை ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சி 1977 இல் ஆட்சிக்கு வந்த போது மாறிற்று.

1981 ஆம் ஆண்டு அணி சேரா நாடுகளின் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. அதில் அமெரிக்க ஏகாதிபத்தியம் டியூகோ கார்சியா தீவில் அமைத்திருந்த அணு ஆயுதக் கடற்படைத்தளம் இந்து சமுத்திரப் பிராந்தியத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது என்ற தீர்மானத்தை இந்தியா கொண்டுவர முனைந்தது. இத்தீர்மானத்தை மாற்றியமைத்திட சிறி லங்கா அரசு அங்கு கடும் முயற்சி எடுத்து அதில் டியூகோ

கார்சியா பற்றி குறிப்பிடப்பட்டதை நீக்குவதில் வெற்றியும் கண்டது. அமெரிக்காவிற்குச் சார்பாகவே சிறி லங்கா அரசு இதைச் செய்தது என்ற விடயம் இந்தியாவிற்கு எரிச்சலை ஏற்படுத்திற்று. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கம் நிறுவப்படுவதையும், விரிவடைவதையும் ஜே.ஆர். அரசு விரும்புவதையே அதன் மேற்படி நடவடிக்கை காட்டுகிறது என இந்திய வெளிவிவகார மற்றும் புலனாய்வுத்துறை அதிகாரிகள் உஷாரடைந்தனர்.

அதை மேலும் வலுப்படுத்தும் வகையில் அதே ஆண்டு சிறி லங்கா அரசு திருமலை எண்ணெய்க் குதங்களை 'கோஸ்டல் கோப்பரேஷன்' என்ற அமெரிக்க எண்ணெய் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விட முடிவெடுத்தது. இந்நிறுவனத்தின் பின்னணி மிகச் சந்தேகத்திற்கு இடமாகவுள்ளதாக இந்தியா சிறி லங்கா அரசிடம் கூறி இதைத் தடுத்துவிட்டது. இதன் பின்னர் டெல்லிக்கும் சிறி லங்காவின் தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலிக்குமிடையில் நடந்த பேச்சுகளின் விளைவாக திருமலை எண்ணெய்க் குதங்களை சர்வதேச ஒப்பந்தக் கேள்வி அடிப்படையில் கொடுப்பதாக உடன்பாடு காணப்பட்டது.

இந்தியாவின் பாதுகாப்பு பற்றிய அறிவுறுத்தல்களுக்கு இணங்க இலங்கை எண்ணெய்க் கூட்டுத்தாபனம் 1982 ஏப்ரல் மாதம் வெளியிட்ட சர்வதேசக் கேள்விப் பத்திரத்தில் 'எந்தவொரு இராணுவத்திற்கும் உரிய எரிபொருள் திருமலைக் குதங்களில் வைக்கப்பட மாட்டாது' என்ற அறிவித்தலையும் வெளியிட்டது. இதனடிப்படையில் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனமும் திருமலைக் குதங்களைக் குத்தகைக்கு எடுப்பதற்கான கேள்விப் பத்திரம் சமர்ப்பித்தது. வழங்கப்பட்ட அனைத்திலும் இதுவே இலாபகரமானதாக இருந்தபோதும் சிறி லங்கா அரசு அதைக் கிடப்பில் போட்டுவிட்டு சிங்கப்பூரில் அமெரிக்கப் பின்னணியுடன் இயங்குவதாகச் சந்தேகிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிற்கு திருமலைக் குதங்களை வழங்க ஏற்பாடு செய்யலாயிற்று.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் அணுவாயுதத் தளத்தை ஆதரிக்கவும், திருமலையில் அமெரிக்கா மறைமுகமாகக் காலூன்ற உதவவும் சிறி லங்கா முயற்சி எடுத்தவேளையில்தான் இந்தியப் புலனாய்வுத்துறை இலங்கைத் தமிழ் இளைஞர் சிலருக்குப் பயிற்சி அளிக்க முனைந்தது. (1981-82 காலப்பகுதியில் அந்த இளைஞர்களுக்கு கொடுக்கப்பட்ட பயிற்சி இராணுவப் பயிற்சி அல்ல. திருமலைத் துறைமுகப் பகுதியை எங்ஙனம் வேவு பார்ப்பது. பல்வேறு வகைக் கப்பல்களை எப்படி அடையாளங் காண்பது என்பதாகவே அப்பயிற்சி அமைந்திருந்தது.) மேற்படி இளைஞர்களுக்கும் விடுதலை அமைப்புகளுக்கும் தொடர்பிருக்கவில்லை.

இவையனைத்துக்கும் மகுடம் சூட்டியது போல் 1983 டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி அமெரிக்காவின் குரல் (Voice of America) வானொலி நிலையத்தை புத்தளம் மாவட்டத்தில் 1000 ஏக்கர் நிலைப்பரப்பில் நிறுவி நடத்திட 20 ஆண்டுகளுக்கு அனுமதியளிக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. இதன்படி ஒப்பந்தம் முடிந்து அதையடுத்து வரும் ஒவ்வொரு 10 ஆண்டும் அது புதுப்பிக்கப்படலாம் எனவும் உடன்பாடானது.

இந்து சமுத்திரத்தினுள் திரியும் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பற்படையுடன் தொடர்பைப் பேணுவதற்குத் தேவையான அதிநுண்ணலைப் பிறப்பாக்கியையும் மேற்படி வானொலி நிலையம் கொண்டிருக்கிறது என இந்தியாவும் சோவியத் யூனியனும் குற்றஞ் சாட்டின. இந்த அதி நுண்ணலைத் தொலைத்தொடர்பு நிலையத்தை நிறுவுவதற்கான இடப்பரப்பு டியூகோ கார்சியாத் தீவில் இல்லையெனவும் அரபிக் கடலைப் பார்த்தவாறு அமைந்துள்ள இரணவிலப் பகுதியே அதற்கு வசதியாக அமைந்திருக்கிறது எனவும் இந்திய போரியல் ஆய்வாளர் ஜஸ்ஜீத் சிங் அப்போது கருத்து வெளியிட்டார். இதுமட்டுமன்றி தன்மீதும் தனது நேசநாடுகள் மீது உளவியற்போரைத் தொடுக்கவே இந்த வானொலி நிலையத்தை மிகசக்தி வாய்ந்ததொன்றாக அமெரிக்கா நிறுவியுள்ளது என சோவியத் யூனியன் குற்றஞ் சாட்டிற்று. இந்த வேளையில் தான்

சிறி லங்காவை நிரந்தரமாகத் தன்பிடிக்குள் கொண்டு வரவும் அதன் வெளிச் சுயநிர்ணய உரிமையைத் தனக்கேற்றவாறு கத்தரித்து விடவும் இந்தியா தீர்மானித்தது. இக்குறிக்கோளை அடைந்திடுவதற்குரிய கருவியாக தமிழீழ விடுதலைப் போரை பயன்படுத்துவதற்கு அது ஆவன செய்யலாயிற்று.

11..01.2004



# –24– புலிகளை முடக்கவா இலங்கை – இந்திய பாதுகாப்பு கூட்டுறவு ஒப்பந்தம்

பிசாசுடன் கூட்டுவைத்தாவது தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தை முறியடிக்க வேண்டும் எனக் கூறினார் ஜே.ஆர். ஜெயவர்த்தனா. அவருடைய வழிவந்த சிறி லங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் இதற்கு விதிவிலக்கல்ல. முன்னையவர் தான் எண்ணியதை வெளிப்படையாகச் சொன்னார். பின்னையவர் அதையே தான் மிகுந்த மதிநுட்பத்துடன் செய்ய முற்பட்டதாக எண்ணுகிறார். புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவு பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அரசு வெளியிட்ட அதிகாரபூர்வமான அறிக்கையில் ‘இலங்கைப் பிரதமரும் இந்தியப் பிரதமரும் அண்மையில் சந்தித்தபோது இலங்கை இனச்சிக்கலுக்கான தீர்வு எந்த வரையறைக்குள் அமைய வேண்டும்’ என உடன்பாடு கண்டதாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

புலிகளின் இடைக்கால வரைவைப் பற்றிக் கருத்துக் கூறுகையில் அங்குள்ள இந்தியாவை ஏன் இழுக்க வேண்டும்? இனச்சிக்கலின் இறுதித்தீர்வு எவ்வாறு அமைய வேண்டுமென இந்தியா கொண்டுள்ள கருத்தை ஏன் புலிகளின் இடைக்கால வரைவு பற்றி வெளியிட்ட அறிக்கையினுள் புகுத்த வேண்டும்? நீங்கள் உங்களுடைய உரிமைகளை நிலைநாட்டுகின்ற விடயத்தில் எல்லை மீறினால் அதைத் தடுக்க இந்தியா

எம்பக்கம் நிற்கிறது என மறைமுகமாக விடப்பட்ட மிரட்டலாகவே நாம் மேற்படி அறிக்கையைக் கொள்ள வேண்டியிருக்கிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு சளைத்தவர்கள் அல்ல என்பதைக் காட்டிடும் ஆவலில் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி.யும், புலிகள் மீது இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கூக்குரலிட்டு வருகின்றன.

இந்தியா புலிக்கு எதிரி, புலி நமக்கு எதிரி எனவே எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் சிங்கள அரசியலாளர் பலர் சிறுபிள்ளைத்தனமாக எண்ணுவதும், பேசுவதும் அதைக்கண்டு எம்மத்தியிலுள்ள படித்த பேதைகள் பலர் 'ஆகா, நம் பாரதத்தாயை சிங்களப் பேரினவாதிகள் குழப்பி விட்டார்கள். நாம் உண்மையை எடுத்தியம்பி இந்தியாவை எம்பக்கம் திருப்பிட வேண்டும்' என அங்கலாய்ப்பர். இவற்றிடையே 'புலிகளின் கடற்படை இந்தியாவின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது என டெல்லியில் உள்ளவர்கள் கவலை கொள்கின்றனர். புலிகள் எங்ஙனம் தமது படைபலத்தை இந்த அமைதிப் பேச்சுவார்த்தையின் போது இரட்டிப்பாக்கியுள்ளனர் என நான் இந்தியாவிற்கு விளக்கினேன்' என்பது போன்ற கூற்றுகளை அடிக்கடி வெளியிட்டு அவருக்கே கைவந்த பாணியில் கோமாளிக் கூத்தாடுகிறார் கதிர்காமர்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல் சிறி லங்காவும் இந்தியாவும் விரைவில் பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தம் (Defense Cooperation Agreement) ஒன்றில் கைச்சாத்திட இருப்பதாகவும் அதுபற்றி இருதரப்பும் தற்போது பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் ஒரு தகவல் கிளம்பி எம்மிடையே வலம் வந்து கொண்டிருக்கிறது. இந்த ஒப்பந்தம் எழுதப்பட்டால் புலிகளின் படைவலு முடக்கப்பட்டுவிடும் எனவும் பேச்சுவார்த்தை பிழைத்து சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்கள் மீது போரைக் கட்டவிழ்த்து விடும் போது மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் சிறி லங்காப் படைகளுக்கு இந்தியா உதவும் எனவும் ஒரு கருத்து இப்போது உலவுகிறது.

இவ்வொப்பந்தம் நமது உரிமைப் போராட்டப் பாதையில் ஒரு பெரும் பின்னடைவை ஏற்படுத்தப் போகின்றது என வீரியமற்ற தமிழ்க் கருத்தியலாளர் முனகுவதையும் நாம் கேட்கக் கூடியதாயுள்ளது. பழம் எப்போ நழுவிப் பாலில் விழும் அது எப்போ நழுவி வாயில் விழும் என எம்மிடையே காத்துக்கிடந்த எட்டப்பர்கள் சிலர் இதுதான் சரியான சந்தர்ப்பமென எண்ணி “இந்தியாவே தமிழரின் தாயகம். எனவே இந்தியா இங்கு வந்து தமிழரைக் காப்பாற்ற வேண்டும்” என்று நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள்.

மேற்படி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு விட்டால் புலிகளைப் பற்றிப் பயப்படத் தேவையில்லை எனக் கனவு காண்கின்றனர் இந்தியதாசர்களாக மாறியுள்ள ஜே.வி.பி. போன்ற பல சிங்களப் பேரினவாதிகள்.

இனி பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தம் என இந்தியா கூறுவது என்ன என்பதைப் பார்ப்போம்.

இதில் முதலாவதாக நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில் இவ்வொப்பந்தம் சிறி லங்காவுக்கென பிரத்தியேகமாக இந்தியாவால் தயாரிக்கப்பட்ட ஒன்றல்ல. 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தம் சிறி லங்காவுக்கெனவே விசேடமாகத் தயாரிக்கப்பட்டது. ஆனால் மேற்படி பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தமானது சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், திறந்த வான்பறப்பு ஒப்பந்தம் ஆகியவற்றைப்போல ஒரு பொதுச் சட்டகத்தின் அடிப்படையில் அமைந்ததாகும்.

2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியா வியட்நாம் அரசுடன் மேற்படி பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டது. வியட்நாமினுடைய ரஷ்ய தயாரிப்பு மிக் வேக வானூர்திகளை பழுதுபார்க்கவும், அவற்றிற்கான புதிய ஓட்டிகளுக்குப் பயிற்சியளிக்கவும், சிறிய மற்றும் நடுத்தர ஆயுத உற்பத்தி செய்ய உதவி வழங்கவும், வியட்நாமியக் கடற்படையின் சண்டைப்படகுகள், கப்பல்கள் ஆகியவற்றைப் பழுதுபார்க்கவும், தரமுயர்த்தவும் மேற்படி ஒப்பந்தத்தின் கீழ்

இந்தியா ஒத்துக் கொண்டது. அத்துடன் இந்தியா தயாரிக்கும் போர்த் தளபாடங்களை முன்னிணக்க விலைக்கு வியட்நாமிற்கு விற்கவும் இந்த ஒப்பந்தம் வழிசமைத்தது. இந்தியப் படைகளுக்கு விசேட காட்டுச்சண்டைப் பயிற்சி வழங்கவும் இந்தியாவிடமிருந்தது அதிவேக ரோந்துப் படகுகளை வாங்கவும், இந்தியக் கடலோர பாதுகாப்புப் படையுடன் கூட்டாகச் செயற்படவும் மேற்படி பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தத்தின்படி வியட்நாம் ஒத்துக் கொண்டது. 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி வியட்நாம் தலைநகர் சென்ற இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அங்கு ஐந்துநாள் தங்கி மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

இதைத் தொடர்ந்து இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி டெல்லி சென்ற சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சர் தியோசீ ஹியானும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பெர்னாண்டஸும் இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். கடந்த ஆண்டு சிங்கப்பூர் சென்ற இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஆரம்பித்த பேச்சுவார்த்தைகளின் பயனாகவே இவ்வொப்பந்தம் நிறைவேறியது. தென் கிழக்காசியாவின் அமெரிக்கச்சார்புக் கூட்டணியான ஆசியான் (ASEAN) அமைப்பைச் சேர்ந்த நாடுகளில் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்ட முதலாவது நாடு சிங்கப்பூராகும்.

புலனாய்வுப் பரிமாற்றம், படைத்துறைப் பயிற்சி, படையதிகாரிகள் பரிமாற்றம், கூட்டுக் கடற்படைப் பயிற்சி நடவடிக்கை என்பன இந்திய – சிங்கப்பூர் பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தத்தின் கீழ் நடைபெறும். இந்து மாகடல் வரைபடத்தை நீங்கள் அவதானித்தால் சிங்கப்பூரின் இருப்பிற்கும் பொருளாதார நலனுக்கும் இன்றியமையாத மலாக்கா நீரிணையின் வாயிலாக இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள அந்தமான், நிக்கோபார் தீவுகள் அமைந்துள்ளதைக் காணலாம். இந்த வகையிலும், மலேசியா, இந்தோனேசியா ஆகிய பெரிய நாடுகளின் பிராந்தியச்

செல்வாக்கை ஓரளவு சமநிலைப்படுத்தவும் சிங்கப்பூருக்கு இருக்கும் தேவையைக் கணக்குப் பண்ணி இந்த பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தத்தை இந்தியா ஏற்படுத்திக் கொண்டுள்ளது எனலாம். (எனினும் இது அமெரிக்காவிற்கும் சிங்கப்பூருக்குமிடையில் இருக்கும் மிக நெருக்கமான பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தை எவ்வகையிலும் பாதிக்காது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.)

நவம்பர் மாத இறுதியில் இந்தியத் தலைநகரம் வந்த பிறேசில் நாட்டின் பாதுகாப்பு அமைச்சரும் அந்நாட்டின் உயர்மட்ட படைத்துறைக் குழுவினரும், இந்தியப் பாதுகாப்பு அமைச்சருடன் ஒரு விரிவான பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தமொன்றைத் தயாரிப்பது தொடர்பான பேச்சுவார்த்தை களில் ஈடுபட்டனர். ஆயுதம் மற்றும் பல்வேறு போர்த்தளபாட, சண்டை வானூர்தி உற்பத்தியில் முன்னணி வகிக்கும் மூன்றாம் உலக நாடு பிறேசிலாகும். அதன் போர்த்தளபாட, ஆயுதத் தொழிற்றுறையில் பங்கெடுக்கவும், பயனடையவும் அந்நாட்டுடனான பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தம் வாய்ப்பளிக்கும் என்பது டெல்லியின் கணிப்பு.

இதுபோல செக் குடியரசுடனும் இந்தியா இந்த பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுபற்றி விரிவான பேச்சுக்களை நடத்துமுகமாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதியிலிருந்து 23 ஆம் திகதி வரை செக்குடியரசின் தலைநகரான பிராக் சென்றிருந்தார். 'இந்தியப் படைகளுக்கான பார ஊர்திகளை கூட்டாக உற்பத்தி செய்வது தொடர்பாகவும் T-72 தாங்கிகளையும் MI ரக உலங்கு வானூர்திகளையும் தரமுயர்த்துவது பற்றியும், இரு நாடுகளுக்கும் பொதுவான பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாகவும் பெர்னாண்டஸூக்கும் செக் பாதுகாப்பு அமைச்சர் மிரேஸ்லாவ் கொஸ்டெல்காவிற்கும் இடையில் விரிவான பேச்சுகள் நடைபெற்றன' என இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருந்தார். பெர்னாண்டஸும் செக் பாதுகாப்பு அமைச்சரும் அக்டோபர் 20

ஆம் திகதி பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

கடந்த மாதம் ஓமான் நாட்டுடனும் மேற்படி பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான விரிவான பேச்சுவார்த்தைகளை இந்தியா ஆரம்பித்தது. அதற்குரிய இறுதிவரைவு தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு அது கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஓமானின் படைவீரர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கு இந்தியா பயிற்சி வழங்கும். அத்துடன் இந்தியப் போர்த் தளபாடங்களை ஓமான் இதனடிப்படையில் வசதிவிலைக்கு வாங்கவும் ஏற்பாடாகிறது.

இவற்றையெல்லாம் கவனமாக ஆராய்ந்து பார்ப்போமேயானால் இந்தியாவின் பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தம் யாதென்பது ஓரளவேனும் புரியும். உலகின் பல்வேறு படைகளுடன் நேரடிப் பயிற்சி, கூட்டு நடவடிக்கைகள், தகவல் மற்றும் புலனாய்வுப் பரிமாற்றம் என்பவற்றூடாக தொடர்புகளை வளர்த்தெடுத்தல், போர்த்தளபாட விற்பனவு, கூட்டு உற்பத்தி என்பவற்றிற்கான வாய்ப்புக்களைப் பெருக்குதல் என்பவற்றையே மேற்படி இந்திய பாதுகாப்புக் கூட்டுறவு ஒப்பந்தம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. தென்னாசியப் பிராந்தியத்திற்கு அப்பாலும் போரியற் செல்வாக்குள்ள ஒரு அரசாக உலக அரங்கில் காலடி எடுத்துவைக்கவும் இவ்வொப்பந்தம் இந்தியாவிற்கு வழிசமைக்கிறது. அதைவிட மிக முக்கியமானதாக இவ்வொப்பந்தத்தில் நாம் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் இது எவ்வகையிலும் ஒரு பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் அல்ல என்பதே. அந்த நோக்கில் அதன் சட்டகம் வடிவமைக்கப் படவில்லை என்பது மேற்கூறிய உதாரணங்களிலிருந்தும் நாம் புரிந்து கொள்ளலாம்.

பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தமாயின் அதைக் கைச்சாத்திடும் இரு நாடுகளில் ஒன்றுக்கு ஏதாவது பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டால் மற்ற நாடு படையுதவி செய்யவேண்டுமென்பதே அதன் அடிப்படை. இவ்வாறான ஒரு

ஒப்பந்தத்தை 1971 ஆம் ஆண்டு சோவியத் குடியரசுடன் மட்டுமே இந்தியா செய்திருந்தது. அதுவும் 2001 ஆம் ஆண்டு காலாவதியாகிவிட்டது. இந்தப் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தின் எதிர்மறையான விளைவுகளிலிருந்து விடுபடுவதும் மேற்படி கூட்டுறவு ஒப்பந்தங்களை பரவலாக இந்தியா செய்வதன் பின்னணியிலுள்ள ஒரு நோக்கமாகும்.

இது சிறி லங்காவிற்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட ஒப்பந்தமல்ல என்பதும் தெளிவு.

21.12.2003



## –25– கடலாதிக்கப் போட்டியில் சிக்கியுள்ள இந்துமா கடல்

இந்து மாகடல் பிராந்தியத்தில் அமெரிக்காவுடன் கூட்டாக இணைந்து ஒரு செல்வாக்குள்ள சக்தியாக ஜப்பான் தன்னை வளர்த்துக் கொள்வதை கடந்த நான்கு வருடங்களில் வெளிப்படையாகக் காண முடிகிறது. ஆனால் ஜப்பான் காலடி வைத்த எல்லா முயற்சிகளுமே படுதோல்வியில் முடிந்திருக்கின்றன.

அடுத்ததாக சீனாவை எடுத்துக் கொண்டால் சீனா தங்களுடைய போரியல் நோக்கங்களைவிட தன்னுடைய வளர்ச்சிக்குத் தேவையான மூலவளங்கள் வருவதற்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான வேலையில் நீண்டகாலமாகச் செயற்பட்டு வருகிறது.

அமெரிக்காவினுடைய நோக்கங்களிற்கும் சீனாவுடைய நோக்கங்களிற்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. சீனாவைப் பொறுத்தவரையில் அது மிகத் துரிதமாக வளர்ந்துவருகின்ற பொருளாதார நாடாகும்.

அந்தப் பொருளாதாரம் இயங்குவதற்கு எரிபொருள் என்பது மிக மிக அத்தியாவசியமானதாகக் கருதப்படுகிறது. சூடானிலிருந்துதான் இந்த எரிபொருட்கள் செல்கின்றன. சீனா மீது ஒரு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டுமானால் இந்த எரிபொருள் விநியோகத்தின் மீது ஒரு அழுத்தத்தைக்

கொடுத்தால் சீனா இரண்டு நாள் தொடர்ந்து இயங்குவது கூட நெருக்கடியாக இருக்கும்.

ஆகவேதான் சீனா தன்னுடைய எரிபொருள் கடற்பாதைக்கு தானே கடற்பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளைச் செய்து வருகிறது.

ஹோர்முஸ் நீரிணையின் தென்பக்கத்தை அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் கட்டுப்படுத்துகின்றன. இதனுடைய வட முனையில் ஈரான் இருக்கிறது. ஈரானுடைய கரையோரத்தில் வண்டர் அபாஸ் என்கின்ற துறைமுகத்தை கடற்படைத் தளமாக சீனா நீண்ட காலமாக விரிவாக்கும் நோக்கில் ஈரானுடன் இணைந்து செயற்பட்டு வருகிறது. அந்தப் பாதையில் வரும்போது அடுத்ததாக வருவது பாகிஸ்தானின் கரையோரம். இந்த கரையோரத்தில் குவாடார் என்கின்ற இடத்தில் உள்ள கடற்படைத் தளத்தை விரிவாக்குவதற்கு சீனா முயற்சி செய்கின்றது.

போர் அல்லாத சிவிலியன்களின் தேவைகளுக்காகவே இந்த கடற்படைத் தளத்தை விரிவாக்குவதற்கு பாகிஸ்தானுக்கு உதவுவதாக சீனா கூறினாலும், சீனாவின் பாதுகாப்புக்கு இதுவும் உத்தரவாதமாக அமைந்திருக்கிறது.

இந்தப் பாதை அடுத்ததாகச் சந்திக்கும் இடம் இலங்கையினுடைய முனை. இந்தப் பகுதியில் சீனா முதலாவதாகச் சந்திப்பது மாலைதீவை. 1999 ஆம் ஆண்டு மாலைதீவிலுள்ள மொறர்கோ தீவு என்கின்ற பகுதியை தளமாக மாற்றுவதற்கான பேச்சுவார்த்தைகளை சீனா ஆரம்பித்தது. 2001 ஆம் ஆண்டு சீனப் பிரதமர் அங்கு சென்ற போது அந்த ஒப்பந்தத்தை முடித்துள்ளார்கள்.

2010 ஆம் ஆண்டு அந்தத் தளம் நடைமுறைக்கு வரும் என்று கூறப்படுகிறது. அடுத்ததாக இலங்கை. நீண்டகாலமாக இலங்கையினுடைய எரிபொருள் துறையோடு நெருங்கிய சம்பந்தமுடைய நாடாக சீனா இருந்து வருகிறது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் அதனுடைய வளர்ச்சியில்

நெருங்கிய தொடர்புள்ள நாடாக சீனாதான் நீண்டகாலமாக இருந்து வருகிறது.

இந்தியா குறித்த சிறி லங்கா அரசியல் தலைவர்களுக்கு இருக்கும் அச்சம் காரணமாகவே சீனாவுடன் சிறி லங்கா தலைவர்கள் இந்த உறவை வளர்த்து வந்தார்கள். அதனுடைய வெளிப்பாடாகத்தான் திருகோணமலைக்கு மாற்றான ஒரு எண்ணெய்க் குதத்தை மேற்குக் கரையில் 2001 ஆம் ஆண்டு கட்டத் தொடங்கி அண்மையில் அதை சிறி லங்கா அரசிடம் கையளித்திருக்கிறது.

ஆனால் சீனாவுக்கு தன்னுடைய எரிபொருள் பாதையில் பிரச்சினை ஏற்படும்போது முக்கிய இடமாக முத்துராஜவலையில் இருக்கும் அந்த எண்ணெய்க் குதம் அமையுமென்பது புலனாகிறது.

அண்மையில் இலங்கையின் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை இந்தியாவுக்கு முழுமையாக கொடுக்கக் கூடாது என்பதற்காக சில ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. வேலைநிறுத்த நடவடிக்கைகள் கூட இடம்பெற்றன. அதன் பின்னணியில் சீனாவின் நலன்கள் இருப்பதாகவே கொழும்பிலுள்ள ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர்.

அடுத்ததாக இந்தியாவை எடுத்துக்கொண்டால் இந்தியா ஒரு சுதந்திர நாடாக காலடி எடுத்துவைப்பதற்கு முன்னதாகவே கே.எம். பனிக்கர் இந்தியா ஒரு கடல் வல்லரசாக வரவேண்டும் என்பது குறித்து எழுதியிருந்தார். அவருடைய நூலில் தூரதிருஷ்டியான சில விடயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதாவது இந்தியா வல்லரசாக வரவேண்டுமானால் சொக்கோட்ரா தீவு, ஏடின் என்பவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். மொறீசியஸைக் கட்டுப்படுத்த வேண்டும். மலாக்கா நீரிணையில் இந்தியா மேலாதிக்கம் செலுத்த வேண்டும் என்றெல்லாம் அவர் விரிவாக எழுதியிருக்கிறார். ஆனால், அவற்றையெல்லாம் அவர் கூறிய பின்னர் சுதந்திரமடைந்த இந்தியாவின் கருத்துகள் நீண்டகாலமாக இந்திய பெருநிலப் பரப்பில்தான் குறியாக

இருந்தன. காரணம் சீனாவின் அச்சுறுத்தலும் பாகிஸ்தானின் சிக்கலும். இவற்றின் காரணமாக இந்தியாவின் கவனமெல்லாம் இந்திய பெரு நிலப்பரப்பில் தான் இருந்து வந்தது. ஆனால், 1970 களின் ஆரம்பத்தில் டியூகோ கார்சியாத் தீவில் அமெரிக்கா காலடி எடுத்து வைத்த பின்னரும் 1977 ஆம் ஆண்டு பங்களாதேஷ் போரின்போதும் இந்த கடல் எந்தளவுக்கு முக்கியமான பங்கை வகித்தது?

அந்தவேளை அந்தக் கடல் பகுதிக்கு அமெரிக்கா தன்னுடைய விமானந்தாங்கி கப்பலான US Enterprices I ஐ எவ்வாறு அனுப்பி ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்தியது என்பவற்றையெல்லாம் அறிந்து கொண்ட பின்னர் இந்தக் கடலைப் பற்றிய சிந்தனை இந்தியாவுக்கு மீண்டும் தோன்றுகின்றது. அதனுடைய வெளிப்பாடாக இந்துமா கடலில் அநேகமான பகுதிகளில் இந்தியா கடல் ஒப்பந்தங்களைச் செய்வதற்கான ஊக்கத்தைக் கொடுக்கின்றது. அதில் இலங்கையுடனான கடல் ஒப்பந்தம், மாலைதீவுடனான முன்னீர்ச் சந்தி ஒப்பந்தம் என பல ஒப்பந்தங்களை இந்தியா செய்து வருகிறது.

அதனூடாக இந்தப் பிராந்தியத்தை தெளிவாக வரையறுக்கும் வேலையை இந்தியா செய்கிறது.

அதற்கு அடுத்ததாக இந்தியா இப்போது முதன்முறையாக தென்கரையோரத்தில் Sea Bird என்கின்ற பெயரில் கடற்படைத் தளத்தை நிறுவி வருவதோடு ரஷ்யாவிடமிருந்து வான்படைத் தாங்கி கப்பல் ஒன்றை வாங்குவதற்கான ஒப்பந்தத்தை இந்த வருடம் ஜனவரியில் செய்து கொண்டது. அதாவது இந்தியா ஒரு கரையோரப் பாதுகாப்பு முறையில் இருந்து இந்து மாகடல் பகுதியை கண்காணிக்கக்கூடிய ஒரு வளர்ச்சிப் போக்குக்கு வந்திருக்கிறது.

வங்காள விரிகுடாவின் வழியாகச் செல்லும் கடல் பாதை தொடுகின்ற இடம் இந்தியாவுக்குச் சொந்தமானது. அதாவது அந்தமான், நிக்கோபார் தீவுகள். இந்த தீவுகளுக்கு

நடுவாகத்தான் இந்தப் பாதை போகின்றது. அந்தப் பகுதியைத் தனிக் கட்டளைத்தளமாக இந்தியா தற்போது உருவாக்கியுள்ளது. அடுத்ததாக இந்தியாவுக்கு இயற்கையான அரணாக இலட்சத் தீவுகள் உள்ளன.

இந்தியா நீண்ட காலமாக நம்பியிருப்பது இரண்டு இயற்கை அரண்களான இலட்சத் தீவுகளையும் அந்தமான், நிக்கோபார் தீவுகளையும் தான். அவை மட்டும் போதாது என்ற நிலை தற்போது ஏற்பட்டு வருகிறது. அதற்கு முக்கிய காரணம் அமெரிக்கா தற்போது இப்பிராந்தியத்தில் ஏற்படுத்தி வரும் ஒழுங்குகள்.

அடுத்ததாக டியூகோ கார்சியா தீவு. இந்த தீவுதான் இப்பொழுதும் அமெரிக்காவினுடைய படைபலத்திற்கு அடித்தளமாகவுள்ளது.

அந்த விடயத்தில் இந்தியாவுக்கு இருக்கும் நிலைப்பாட்டையும் பார்க்கவேண்டும். டியூகோ கார்சியா தீவு பிரிட்டிஷாரால் அமெரிக்காவிற்கு வழங்கப்பட்ட தீவாகும்.

மொறிசியஸினுடைய ஒரு பகுதியாகத்தான் இத்தீவு இருந்து வந்தது. மொறீசியஸ் சுதந்திரமடைந்தபோது சட்டப்படி டியூகோ கார்சியா தீவு மொறீசியஸிற்கு சொந்தமானதாக இருக்க வேண்டும். ஆனால் அது கொடுக்கப்படவில்லை.

ஆனால், இந்தியா இப்போது வெளிப்படையாக மொறிசியஸ் தீவினுடைய இறைமையை வெளிப்படுத்தி வருகிறது. மொறிசியஸ் மீண்டும் டியூகோ கார்சியாவை சொந்தமாக்கிக் கொள்ள வேண்டுமென இந்தியா வலியுறுத்தி வருகிறது. இதனுடைய அடிப்படை என்னவென்பது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. அதாவது மொறீசியஸ் தீவிற்கு டியூகோ கார்சியா மீண்டும் சொந்தமாகும் பட்சத்தில் அமெரிக்கா இந்துமா கடலில் காலூன்றுவதற்கு அடிப்படையான தளம் இல்லாமல் போகும். இதை அமெரிக்காவும் உணர்ந்திருக்கிறது. அதன் காரணமாகத்தான் இலங்கையில் ஒரு முக்கிய

தளத்தை ஏற்படுத்துகின்ற வேலைகள் அண்மைக்காலமாக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

அதற்கான ஒப்பந்தம் 2002 ஜூலை மாதம் கைச்சாத்திட இருந்த போது இந்தியா அதில் தலையிட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல் தடுத்திருக்கிறது. ஆனால் எவ்வாறாயினும் இலங்கையிலும் மாலைதீவிலும் காலூன்ற வேண்டும் என்பதில் அமெரிக்கா மிகத் திட்டவட்டமாக இருக்கின்றது. இதில் இரண்டாம் பேச்சுக்கே இடமில்லாத அளவுக்கு முன்னர் இரகசியமாக நடந்த இத்திட்டங்கள் தற்போது வெளிப்படையாக நடக்கின்றன. அதற்கான ஆவணங்களையும் காணக் கூடியதாக இருக்கிறது.

இதில் ஈழத் தமிழர்களின் எதிர்காலமும் பின்னிப் பிணைந்துதான் இருக்கின்றது. ஏனென்றால் 1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தினுடைய சாராம்சத்தைப் பார்த்தால், அதனுடைய அடித்தளத்தைப் பார்த்தால் இலங்கையில் வேறு நாட்டுப் படைகள் காலூன்ற முடியாது. இலங்கையின் எந்தவொரு வான்படைத் தளத்தையோ அல்லது கடற்படைத் தளங்களையோ குறிப்பாக திருகோணமலையையோ வேறு எந்த நாடும் பயன்படுத்த முடியாது. இந்தத் தளங்களை, துறைமுகங்களை இந்தியாவுடன் கூட்டாகத்தான் பயன்படுத்த முடியும் என்பது அந்த ஒப்பந்தத்தின் அடிப்படை. ஆகவே, ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிட்டதற்கு அன்று ஏற்பட்ட அமெரிக்க அச்சுறுத்தல்தான் முக்கியமான காரணம். அன்று இதைப் பலர் கண்டுகொள்ளவில்லை.

ஈழத்தமிழர் பிரச்சினையின் ஊடாக ஓர் அழுத்தத்தை இலங்கை அரசுக்கு ஏற்படுத்தி அதனூடாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை இந்தியா கைச்சாத்திட்டுக் கொண்டது. அந்த விடயத்தில் ஈழத் தமிழர்கள் இல்லாத நிலையில் இலங்கை அரசு மீது ஒரு அழுத்தத்தைக் கொடுக்க முடியாது என்பதிலும் இந்தியா தெளிவாக இருக்கிறது.

சிங்கள அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை இந்தியா தங்களை விழுங்கிவிடும் இந்தியா தமக்கு பக்கத்திலிருக்கும் ஒரு பெரிய நாடு என்கின்ற உணர்வில் அவர்கள் வரலாற்று ரீதியாக சீனாவுடனும், அமெரிக்காவுடனும், பாகிஸ்தானுடனும் உறவுகளை வைத்துக் கொண்டு இந்தியாவை சமப்படுத்தப் பார்க்கிறார்கள். இந்தியாவினுடைய செல்வாக்கு பெரியளவில் வந்துவிடக்கூடாது. நேபாளத்தைப் போல் பங்களாதேஷைப் போல் இருக்கக்கூடாது. நாங்கள் தனித்துவமாக இருக்கவேண்டும். அதற்கு சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் அமெரிக்காவுடனும் சில ஒப்பந்தங்களைச் செய்து கொள்வது தான் சிறப்பு வழி என்கின்ற வகையில் வரலாற்று ரீதியில் இலங்கை சிங்கள அரசியல்வாதிகள் செயல்பட்டுள்ளனர்.

உதாரணமாக இலங்கையினுடைய வெளிநாட்டு வியாபாரம் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சரி அரைப் பங்கு இந்தியாவிடமிருந்தது. ஆனால் சுதந்திரமடைந்து பத்து வருடங்களில் அதை இருபது சதவீதத்திற்கு மாற்றி விட்டார்கள்.

மீண்டும் இலங்கை கை நழுவிச் சென்று விடாமல் இருப்பதற்கு ஈழத் தமிழர்களுடைய அழுத்தம் தேவையாக இருக்கிறது என்பதை இந்தியா சரியான முறையில் கணிப்பிட்டுச் செயற்படுமென நம்புகிறேன்.

19.12.2004

## –26–இந்தியாவின் தென்னாசிய பாதுகாப்பு வலயத்தில் சிறி லங்கா – தமிழீழம்

நொக்கியா செல்லிடத் தொலைபேசியை அறியாத தமிழர் ஒரு சிலரே உள்ளனர். அது உற்பத்தி செய்யப்படும் நாடு பின்லாந்து என்பது கூட நம்மவர் சிலருக்குத் தெரியும்.

பின்லாந்து ரஷ்யாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த எல்லைப்புற நாடு. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த பின்னர் தனது சுற்றுப்புறப் பிராந்தியப் பாதுகாப்பை மிகக் கவனமாகப் பலப்படுத்தவேண்டிய தேவை அப்போதைய சோவியத் யூனியனுக்கு ஏற்பட்டது.

அமெரிக்காவும் அதன் பிரதான நேசநாடான பிரித்தானியாவும் சோவியத் யூனியனுடைய ஐரோப்பிய எல்லைப்புறத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கில் வட அத்திலாந்திக் ஒப்பந்த அணியை (North Atlantic Treaty Organization - NATO) ஐரோப்பாவின் கிழக்குப் புறமாகவும் வடக்குப் பக்கமாகவும் விரிவாக்கலாயின.

இதைத் தடுப்பதற்காக கிழக்கு ஐரோப்பாவின் சில நாடுகளை மறைமுகமாகவும் சிலவற்றை நேரடியாகவும் தனது நேரடிக் கேந்திரப் பாதுகாப்பு வலயத்தினுள் சோவியத் யூனியன் கொண்டு வந்தது. மேற்படி கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வலுவுள்ள சோவியத் சார்பு இடதுசாரி இயக்கங்கள் இருந்ததும்

சோவியத் யூனியனுக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது. ஆனால், வடஜரோப்பாவில் சோவியத் யூனியனின் எல்லைப்புற நிலைமை வேறாகக் காணப்பட்டது.

சோவியத் யூனியன் தனது வட ஜரோப்பிய பாதுகாப்பு வலயமாகக் கருதிய பிராந்தியத்தினுள் முதலாவதாகப் பின்லாந்தும் இரண்டாவதாக சுவீடனும் மூன்றாவது நோர்வேயும் நான்காவதாக டென்மார்க்கும் காணப்பட்டன. (இந்நான்கு நாடுகளையுமே ஸ்கந்திநேவிய நாடுகள் என அழைக்கிறோம்) நான்கு நாடுகளுக்கும் அப்போதிருந்த சிக்கல் சோவியத் யூனியனுடைய பாதுகாப்பு வட்டம் என்பதற்குள் நேரடியாக மாட்டிக்கொண்டு கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் போல் தமது இறைமையை முற்றாக இழப்பதா அல்லது தமது சுதந்திரத்தைப் பேணக்கூடிய முறையில் சமரசம் செய்து கொள்வதா என்பதே. இதில் பின்லாந்தும், சுவீடனும் அமெரிக்காவின் நேட்டோ (NATO) இராணுவக் கூட்டில் இணையாமல் தவிர்த்துக் கொண்டன. நோர்வேயும் டென்மார்க்கும் நேட்டோவில் இணைந்து கொண்டபோதும் சோவியத் யூனியனுடைய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய எந்த இராணுவ ரீதியிலான அலுவலிலும் ஈடுபடுவதில்லை என அறிவித்தன. (இதில் நோர்வே பின்னர் சோவியத் யூனியன் மீது அமெரிக்கா இலத்திரனியல் புலனாய்வு வேலைகளை செய்வதற்குப் பெருமளவு ஒத்துழைத்தது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.)

மேற்படி நான்கு ஸ்கந்திநேவிய நாடுகளில் பின்லாந்து சோவியத் யூனியனுடன் நீண்ட நேரடி எல்லைப்புறத்தைக் கொண்டதாகும். எனவே சோவியத் யூனியனுடைய பாதுகாப்பிற்குக் குந்தகமாக அமையக்கூடிய எந்தவொரு உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கையையோ நடைமுறையையோ கடைப்பிடிப்பதில்லை என்ற அடிப்படையில் பின்லாந்து அன்றைய அந்த உலக வல்லரசுடன் ஒரு 'நட்புறவு' ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. இவ்வொப்பந்தம் பின்லாந்தினுடைய இறைமையை தனித்துவத்தை பறித்தெடுத்து விட்டது என அமெரிக்கா சார்பு விமர்சகர்கள்

அன்று கண்டித்தனர். ஆனால் சோவியத் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு தளமாகாமல் தனது சுதந்திரத்தைப் பேணுவதே ஸ்கந்திநேவியத் பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கு அடித்தளமாகும் என பின்லாந்து தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நியாயப்படுத்தியது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் போல் பின்லாந்து சோவியத் யூனியனின் இரும்புத் திரைக்குள் மறைந்து போகாது மேற்குடனும் தனது பொருளாதார உறவுகளைத் தொடர்ந்து பேணிட இவ்வொப்பந்தமே காரணமாயிற்று எனச் சில ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுவர். பின்லாந்தின் இந்த அனுபவம் சர்வதேச அரசியற் கற்கைகளில் ஒரு முக்கிய கோட்பாட்டின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. இதுவே 'பின்லாந்துப்படுத்தல்' (Finlandisation) என்றறியப்படும். 1987 ஆம் ஆண்டு சிறி லங்கா இந்தியாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் மூலம் அது பின்லாந்துப் படுத்தப்பட்டுவிட்டது எனச் சில உலக அரசியல் ஆய்வாளர்கள் கூறுவர். இக்கருத்தை கலாநிதி அமால் ஜயவர்த்தன அந்நேரத்தில் 'ஐலண்ட்' ஆங்கில நாளேட்டில் எழுதிய ஒரு ஆய்வுக்கட்டுரையில் முன்வைத்தார்.

அவருடைய கருத்தைப் பல சிங்கள ஆய்வாளர் ஏற்க மறுத்து வருகின்றனர். கொழும்பிலுள்ள "விவரமறிந்த" ஆங்கில பத்தி எழுத்தாளர் ஒருவர் அண்மையில் என்னுடன் இந்தியா பற்றி பேசிக்கொண்டிருக்கும்போது 1987 சிறி லங்கா - இந்தியா ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என ஆணித்தரமாகக் கூறினார். அவரைப்போலவே பல சிங்களக் கருத்தியலாளரும் அரசியலாளரும் எண்ணுகின்றனர்.

சிறி லங்காவின் வெளியுறவுக் கொள்கையை மட்டுமல்லாது அதனுடைய உள்நாட்டுக் கொள்கையையும் இந்திய - இலங்கை ஒப்பந்தமும் அதன் பின்னிணைப்பான கடிதப் பரிமாற்றமும் கட்டுப்படுத்துகின்றன என்ற இந்த உண்மையை கண்ணை மூடிப் பால்குடித்த பூனையைப் போல இவர்கள் காண மறுக்கின்றனர். இந்த வகையில் சிறி லங்கா

முழுமையாகப் பின்லாந்துப் படுத்தப்படவில்லை எனக் கூற வேண்டியுள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இன்றுவரை பின்லாந்து சோவியத் யூனியனுடனான ஒப்பந்தத்திற்கு முரணாக எதுவும் செய்திடாத வகையில் தனது இறைமையைப் பேணுவதில் தெளிவாகச் செயற்பட்டு வருகிறது. (ஆலாந்து என்ற சிறிய பகுதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சிறப்பு தன்னாட்சி முறையும் இந்தப் பின்னணியில் புரிந்து கொள்ளப்படலாம்). ஆனால் தென்னாசியாவிற்கு ஒரு பொதுமையான பாதுகாப்பு ஒழுங்கு இருக்கின்றது எனவே அதற்குத் தனது பின்லாந்துப்படுத்தல் இன்றியமையாத ஒன்று எனவே சிங்கள அரசியலாளரோ, வெளியுறவுக் கொள்கையாளரோ அன்றும் இன்றும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை - இருக்கப் போவதுமில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தமானது சிறி லங்காவின் உள்ளக மற்றும் வெளிசுயநிர்ணய உரிமையையும், இறைமையையும் சட்டரீதியாக மட்டுப்படுத்தி விட்டது என்பதை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. இதன் காரணமாக இந்திய — சிறி லங்கா உறவு ஒரு போதும் முழுமையான பின்லாந்துப்படுத்தலின் அடிப்படையில் அமையமுடியாது எனக் கூறலாம். கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்காவுடனும் பாகிஸ்தானுடனும் சிறி லங்கா செய்ய முற்பட்ட ஒப்பந்தங்கள் இரண்டும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு மிக முரணாகவும் இந்தியாவின் பாதுகாப்பிற்கு நேரடியாக அச்சுறுத்தல் விடுபவையாகவும் இருந்தமை எனது மேற்படி கூற்றிற்கு வலுச்சேர்ப்பதாகும்.

இலங்கை, நேபாளம், பங்களாதேஷ், பூட்டான் ஆகிய நான்கு நாடுகளும் தனது பாதுகாப்பு வலயத்திற்கு இன்றியமையாத பின்லாந்துப் படுத்தப்படவேண்டிய நாடுகள் என இந்தியா நீண்டகாலமாகக் கருதி வருகிறது. ஆனால் ஸ்கந்திநேவியப் பிராந்திய நாடுகளைப் போலன்றி மேற்படி நான்கு நாடுகளும் இதை தமது வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கோட்பாடுகளின் ஒரு இன்றியமையாத அம்சமாக ஆரம்பத்திலிருந்தே ஏற்க மறுத்து வருகின்றன.

இனி தென்னாசியப் பிராந்தியத்தில் இவ்வாறான ஒரு நிலைப்பாட்டை எடுப்பதற்கு இந்தியா சுதந்திரமடைந்த காலத்திலிருந்து அதற்கு இருந்து வந்த உந்துதல்கள் என்ன என்பதையும் அவை காலத்திற்குக்காலம் உலக அரசியற் சூழ்நிலைகளுக்கு ஏற்ப எங்ஙனம் மாற்றமடைந்து வருகின்றன என்பதையும் பார்ப்போம்.

இந்தியா சுதந்திரமடைந்த பொழுது தனது பாதுகாப்பிற்கு இன்றியமையாத ஒரு அரணாக இமயமலைத் தொடரைக் கருதிற்று. ஆனால் இமயமலை அடிவாரத்தின் முக்கிய பகுதிகள் அப்போது தனி இறைமையுள்ள அரசுகளாக இருந்த நேபாளம், பூட்டான், சீக்கிம் மற்றும் காஷ்மீர் ஆகியவற்றின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன.

இவற்றில் காஷ்மீர் இராச்சியத்தின் மன்னர் தனது நாட்டின் உரிமையை இந்தியா சுதந்திரமடைந்த கையோடு அதனுடன் பேரம் பேசிக் கொடுத்து விட்டார். இதைப் பாகிஸ்தான் ஏற்க மறுத்ததும், காஷ்மீர் மீது அது படையெடுத்து அந்நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றியதும், அச்சிக்கல் இன்றுவரை தொடர்வதும் நீங்களறிந்த விடயங்களே. இமயமலையின் அடிவாரத்திலிருந்த நாடுகளைத் தன் நேரடி அல்லது மறைமுக கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என இந்தியா கருதியமைக்கு ஒரு மிக முக்கியமான போரியல் காரணம் உண்டு.

மலையும் சமதரையும் உள்ள ஒரு பிராந்தியத்தில் இருபடைகள் மோதுமாயின் மலை உச்சிகள் யார் கைகளில் உண்டோ அவர்களே வெல்வர் என்பது மரபுவழிப் போரியலின் பொதுநியதி. எனவே சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றின் படைகள் நேபாளம், பூட்டான், சீக்கிம், காஷ்மீர் ஆகியவற்றின் எல்லைப்புறங்களாக அமைந்துள்ள இமயமலைத் தொடரின் முக்கிய உச்சிகளை — குறிப்பாகக் கணவாய்கள், பனிநகர்விடங்கள் (Glaciers) போன்றவற்றின் மேலாக உள்ளவற்றை — தமது செல்வாக்கினுள் கொணர்ந்து விட்டால் தனது பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிவிடும் என இந்தியா கருதிற்று.

எனவே பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடம் இருந்து சுதந்திரம் கிடைத்த அடுத்த ஆண்டே அதாவது 1949 இலே இந்தியா இமயமலைத் தொடரின் மிகக் கேந்திரநுட்பம் வாய்ந்த இடத்தில் அமைந்திருந்த பூட்டானுடன் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்து கொண்டது. இதன்படி பூட்டான் தனது வெளிவிவகாரங்களை இந்தியாவின் மதியுரைப்படியே செய்யுமெனவும், ஆனால் இந்தியா அந்நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையிடாது எனவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

1949 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கைச்சாத்திடப்பட்ட இந்தியா — பூட்டான் ஒப்பந்தத்தின் 6 ஆவது பிரிவின்படி பூட்டான் தனக்குத் தேவையான ஆயுதங்கள், ரவைகள், இயந்திரங்கள் என அனைத்துப் போர்த் தளபாடங்களையும் இந்தியாவினூடாகவே கொள்வனவு செய்ய வேண்டுமென வரையறுக்கப்பட்டது. இவ்விடத்தில் ஒன்றைக் குறிப்பிடவேண்டும். தென்னாசியாவின் பின்லாந்துப்படுத்தலில் அகப்பட்ட நாடுகளுள் சிறி லங்கா பூட்டானை விடக் கவலைக்கிடமான நிலையில் உள்ளதென்பதே அது.

இந்தியா — பூட்டான் ஒப்பந்தத்தில் பின்னைய நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடமாட்டேன் என இந்தியா எழுத்தில் கொடுத்துள்ளது. ஆனால் சிறி லங்காவின் உள்நாட்டுச் சிக்கல்களிலெல்லாம் தலையாய சிக்கலான தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்ற விடயத்தில் இந்தியாவிற்கு மிக முக்கிய பங்குள்ளது என இந்தியா - இலங்கை ஒப்பந்தம் கூறுகிறது.

பூட்டானை அடுத்து இந்தியா நேபாளத்துடன் 1950 ஆம் ஆண்டு ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. இவ்வொப்பந்தத்தை ஒட்டியும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் போன்று ஒரு கடிதப் பரிமாற்றம் செய்யப்பட்டது. இக்கடிதப் பரிமாற்றத்தின் உட்கிடை 1959 ஆம் ஆண்டு வரை இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. (ஒப்பந்தங்களை ஒட்டிய கடித அல்லது குறிப்புப் பரிமாற்றங்கள் (Exchange of Letters or Notes) ஒப்பந்தங்களைப் போலவே முழுச் சட்டவலுவுள்ளவை

என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டும்) இந்திய — நேபாள ஒப்பந்தத்தின்படி இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகமாக நேபாளம் எந்தவொரு வெளிநாட்டுச் சக்தியையும் தனது மண்ணில் அனுமதிக்காது எனவும் இந்தியாவும் அங்ஙனமே நடந்து கொள்ளும் எனவும் இணங்கப்பட்டது.

அத்துடன் அந்த ஒப்பந்தத்தின் ஐந்தாவது பிரிவின்படி நேபாளம் தனது போர்த் தளபாடங்களை இந்தியாவின் ஊடாகவே வாங்க வேண்டுமெனவும் வரையறுக்கப்பட்டது. ஒப்பந்தம் எழுதியாயிற்று, வேலை முடிந்தது என்றபடி இந்தியா சும்மா இருப்பதில்லை என்பதை இங்கு நாம் நோக்கவேண்டும். இந்தியாவின் பிடியிலிருந்து சிறிது சிறிதாக விடுபட்டு தனது நாட்டின் முழு இறைமையை நிலைநாட்டிடும் நோக்கில் நேபாள மன்னர் தனது அடுத்த அண்டை நாடான சீனாவுடன் பலதரப்பட்ட உறவுகளை வளர்க்கலானார்.

இவ்வுறவு படிப்படியாக வளர்ச்சியடைந்து 1986 — 87 இல் சீனாவிடமிருந்து சில போர்த் தளபாடங்களை நேபாளம் வாங்குமளவிற்குச் சென்றது. இதையறிந்த உடனேயே நேபாளத்துடனான தனது எல்லையை இந்தியா மூடிவிட்டது. இதனால் அந்நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி உருவாயிற்று. இச்சூழலைப் பயன்படுத்தி ஜனநாயகத்துக்கான இயக்கம் என ஒன்று இந்தியாவின் மறைமுக உதவியோடு கிளம்பி மன்னராட்சியின் அதிகாரத்தை மட்டுப்படுத்திடப் போராட்டத்தில் இறங்கியது. இதனால் இந்தியாவின் கைப்பொம்மையாகக் கருதப்பட்ட கிரிஜா பிரசாத் கொய்ராலா பிரதமராக அதிகாரத்திற்கு வந்தார்.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்தியப் பிரதமரும் நேபாளப் பிரதமரும் சந்தித்து கூட்டாக ஒரு அறிக்கை வெளியிட்டனர். இதில் நேபாளம் இந்தியாவின் பாதுகாப்பு பற்றிய அக்கறைகளை முழுமையாக மதிக்கும் எனவும் தனது மண்ணில் இந்தியாவிற்கு அச்சுறுத்தலோ பாதுகாப்புக்குக் குந்தகமோ ஏற்படுத்தக்கூடிய மூன்றாம் தரப்பினரை அனுமதிக்காது எனவும், இந்தியாவும் நேபாளத்தைப் பொறுத்தவரை மேற்படியே நடந்துகொள்ளுமெனவும் பாதுகாப்பு

விடயங்களில் இரு நாடுகளும் கலந்தாலோசித்தே முடிவுவெடுக்கும் எனவும் பிரகடனப் படுத்தப்பட்டது.

அதாவது 1950 ஆம் ஆண்டு உடன்படிக்கையிலிருந்து இம்மியளவும் நேபாளம் வழுவாமலிருக்க வேண்டும் என்பதில் இந்தியா மிக உன்னிப்பாகச் செயல்பட்டு வருவதை இதிலிருந்து நாம் புரிந்துகொள்ளலாம். 1987 இலங்கை – இந்திய ஒப்பந்தமும் இதற்கு விதிவிலக்கல்ல. 1950 இல் அப்போது சுதந்திர இராச்சியமாகவிருந்த சீக்கிம்முடனும் இந்தியா மேற்கூறியது போன்ற பின்லாந்துப்படுத்தும் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டது. சீக்கிம் இந்தியாவினுடைய ''கையாளலை'' எதிர்கொண்டு அல்லது வெட்டியோடி தனது இறைமையைப் பேணிடக் கூடிய தகைமை கொண்ட அரசாட்சியற்ற நாடாக இருந்தமையால் 1975 இல் அதை தனது இருபத்தியிரண்டாவது மாநிலமாக இந்தியா உள்வாங்கிவிட்டது.

இது மட்டுமன்றி பாகிஸ்தானிடமிருந்து தனிநாடாக பங்களாதேஷ் பிரிந்தவுடனேயே அதனுடன் இந்தியா ஒரு பாதுகாப்பு மையப்பட்ட ஒரு நட்புறவு ஒப்பந்தத்தை 1972 இல் ஏற்படுத்திக் கொண்டது. இதன்படி பங்களாதேஷ் இந்தியா தவிர்ந்த வேறு எந்த நாட்டுடனும் இராணுவக் கூட்டு வைத்துக்கொள்ளக்கூடாது என வரையறுக்கப்பட்டது.

(இவ்வொப்பந்தம் இப்போது காலாவதியாவிட்டதாக அண்மையில் நான் சந்தித்த ஒரு வங்காள அரசியல்துறைப் பேராசிரியர் கூறுகிறார்) இந்தியா பின்லாந்துப்படுத்திய அல்லது பின்லாந்துப்படுத்திட முயன்றுவரும் மேற்படி நாடுகளுக்கும் இலங்கைக்கும் அடிப்படைப் பாதுகாப்பு மற்றும் போரியல் சார் வேற்றுமைகள் உண்டு. தமிழீழத்திற்கும் இவை செல்லுபடியாகும்.

28.12.2003

## -27-தமிழர் போராட்டமும் பெருஞ் செஞ்சீனமும்

சீனாவின் பெரும் பொருளாதாரம் மிகத் துரிதமாக வளர்ந்து நவீனமயமாகி வருகின்றது. இந்தப் பொருளாதாரம் தங்கு தடையின்றி இயங்குவதற்கு எண்ணெய் மற்றும் நிலவாயு என்பன இன்றியமையாதனவாகும். சீனாவின் பொருளாதாரம் இயங்குவதற்குத் தேவையான மொத்த எரிபொருளின் 60 சதவீதம் இலங்கையின் வடக்கு கிழக்கை அண்டிச் செல்லும் கடற்பாதைகள் வழியாகவே போகிறது. இக்கடற்பாதைகள் இலங்கைக்கு அடுத்த படியாக இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் அந்தமான், நிக்கோபார்த் தீவுகளைத் தழுவி குறுகலான மலாக்கா நீரிணை ஊடாக தென் சீனக் கடலை அடைகின்றன.

சோவியத் யூனியனுக்கு சார்பான நாடாக தமிழீழம் உருவாகிற்று என வைத்துக் கொள்வோம். சீனாவிற்கு இந்தியாவுடனோ சோவியத் யூனியனுடனோ அன்று ஒரு பெரும் முறுகல் நிலை தோன்றியிருந்தால் இலங்கையின் வடக்கு கிழக்கை அண்டி மலாக்கா நீரிணையூடாகச் செல்லும் கடற்பாதையை சீனா பயன்படுத்த முடியாதபடிக்கு தமிழீழ அரசின் கடற் செயற்பாடுகள் தவிர்க்க முடியாதபடி அமைந்து விடலாம். வளைகுடா நாடுகளுடனும் தனக்குச் சாதகமான அபிவிருத்தி நாடுகளுடனுமான தனது தொடர்புகளை குறிப்பாக எரிபொருள் வரவை இது பெரும் பாதிப்புக்குள்ளாக்கலாம்

சீனா ஆசியாவின் மிகப்பெரிய நாடு. தன்னுடைய பொருளாதார மேம்பாட்டிற்கும் எரிபொருட் பாதுகாப்பிற்கும் போர்வலு மேலாண்மைக்கும் அடிப்படையாக அது கொள்கின்ற விடயங்களில் வங்காள விரிகுடாவும், அரபிக் கடலும் முக்கயமானவையாகும். ஆசியக்கண்டத்தின் கடல் இந்து மாகடலாகும். எனவே ஆசியாவின் முதன்மை வல்லரசாக விரும்பும் எந்தவொரு நாடும் அதன் மீது ஆதிக்கம் செலுத்த விரும்புவது இயற்கை.

ஆனால் ஆசியாவின் மிகப் பெரிய நாடாக சீனா இருந்த போதும் அதற்கு இந்து சமுத்திரத்தின் நேரடி புவியியற் தொடர்பு இல்லை. நாம் மேற்குறிப்பிட்டது போல் இக்கடற் பிராந்தியத்தில் குறிப்பாக அரபிக் கடல், வங்காள விரிகுடா என்பவற்றில் உள்ள கடற்பாதைகள் சீனாவின் பொருளாதாரத்திற்கும், பாதுகாப்பிற்கும், அதன் ஆசிய மேலாண்மைக்கும் இன்றியமையாதனவாக உள்ளன.

இந்தச் சிக்கலை சீனா இரண்டு வழிகளில் அணுகுகின்றது. ஒன்று, தனக்கும் இந்து மாகடலுக்கும் இடையில் புவியியற் தொடர்ச்சியாக அமைந்துள்ள பாகிஸ்தான் மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளுடன் நீண்ட காலமாக மிக இறுக்கமான தொடர்புகளை வளர்த்தெடுத்துள்ளது. இதில் பாகிஸ்தான் அரபிக் கடலுக்கும், மியன்மார் வங்காள விரிகுடாவிற்கும் சீனாவிற்கு வழி சமைக்க உதவியுள்ளன. அரபிக்கடலை தரை வழியாக மிக விரைவாக அடைந்திடக் கூடிய வகையில் தனது எல்லையில் இருந்து பாகிஸ்தானின் முக்கிய அரபிக் கடல் துறைமுகப் பட்டணமான கராச்சி வரை ஒரு நெடுஞ்சாலையை சீனா உருவாக்கியுள்ளது. (கராக்கோரம் நெடுஞ்சாலை) மியன்மார் நாட்டின் இராணுவ ஆட்சியாளர் சீனச் சார்பாளராக உள்ளமையினால் வங்காள விரிகுடாவிற்கான தொடர்பும் சிக்கலில்லாமல் உள்ளது. இது மட்டுமின்றி மியன்மாரின் தென்மேற்கு கரையிலும் அதையண்டிய அந்தமான் தீவுக்கு வடக்காக உள்ள பெருங்கொக்கோ தீவிலும் (Grater Cocos Island) கடற் கண்காணிப்புக்கான தளங்களை சீனா கட்டியுள்ளது.

அடுத்ததாக, மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் வட ஆபிரிக்காவின் இயற்கை வளங்கள் உற்பத்தியாகும் நாடுகளிலிருந்தும் தனக்குத் தோவையானவற்றை கொண்டு வருவதற்கு இன்றியமையாத கடற்பாதைகளைப் பேணிடவும் சீனா நீண்ட காலமாக முயற்சி எடுத்து வருகிறது. இதில் குறிப்பிட்டளவு வெற்றியும் கண்டுள்ளது. இதில்தான் இலங்கையும் அதன் இனப் பிரச்சினையும் சீனாவின் பெரும்பாகத் திட்டமிடலில் (Strategic Planing) முதன்மை பெறுகின்றன. ஈராக், குவைத் ஆகியவற்றின் கரையோரத்திலிருந்து பாரசீக வளைகுடாவின் ஊடாகவும் அதனுடைய குறு நீரிணையான ஹோமுர்ஸ் நீரிணையூடாகவும் (Hormuz Strait) அரபிக் கடல், மன்னர் வளைகுடா, இலங்கையின் கிழக்குக் கடற்கரை என்பவற்றின் வழியாகவும் அந்தமான், நிக்கோபார் தீவுகளைத் தழுவி மலாக்கா நீரிணையூடாக தென் சீனக்கடலை சென்றடையும் பாதை மீது தனது ஆதிக்கத்தை வளர்த்தெடுக்க சீனா நீண்ட காலமாக முயற்சி எடுத்து வருகிறது.

மேற்படி கடற்பாதையில் தனது கப்பல்களின் பாதுகாப்பை எந்த நேரத்திலும் உறுதிப்படுத்துவதற்கும் அப்பாதையின் மீது மறைமுகமான மேலாதிக்கத்தை செலுத்துவதற்கும் சீனாவிற்கு நான்கு இடங்கள் முக்கியமானவை. அவற்றில் முதலாவது ஹோமுர்ஸ் நீரிணை. இதன் ஒரு முனையில் அமைந்துள்ளது ஈரானின் பன்டர் அப்பாஸ் துறைமுகம். இங்கு சீனா ஈரானுடன் கூட்டாக ஒரு பெரும் கடற்படைத்தளத்தை நிறுவி வருகிறது. அத்துடன் அந்நாட்டுடன் நெருக்கமான படைத்துறை உறவுகளை குறிப்பாக கடற்படை விடயங்களில் சீனா பல ஆண்டுகளாக வளர்த்தெடுத்துள்ளது.

அடுத்தது குவாடார் முனை. பாரசீக வளைகுடாவிலிருந்து வரும் மேற்படி கடற்பாதை அரபிக் கடலை சந்திக்கும் இடத்தில் இம்முனை பாகிஸ்தானின் தென் கரையோரம் அமைந்துள்ளது. இங்குள்ள பழைய துறைமுகத்தை திருத்தி பாகிஸ்தானுடன் கூட்டாக ஒரு

கடற்படைத்தளத்தை சீனா நிறுவி வருகிறது. இது பற்றி அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் விமர்சிக்கத் தலைப்பட்ட போது குவாடார் துறைமுகம் போரியல் நோக்கில் விரிவாக்கப்படவில்லை என சீனா கூறிற்று.

எனினும் அதைக் கவனமாக நோக்கும் போரியல் ஆய்வாளர்கள் குவாடார் ஒரு பெரும் கடற்படைத் தளமாக இயங்கக் கூடிய வகையிலேயே வடிவமைக்கப்பட்டு வருகிறது எனக் கூறுவர். பாகிஸ்தானுக்கும் சீனாவிற்கும் மிக நீண்ட காலமாக இருந்த உறவும் அது எங்ஙனம் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையில் உறவுப்பாலம் ஏற்படுத்திட உதவிற்று என்பது போன்ற விடயங்கள் யாவரும் அறிந்தவையே என்பதால் இங்கு விரிவஞ்சி விடுகின்றேன்.

குவாடாருக்கு அடுத்தது இலங்கை வன்னியின் மேற்குக் கரையோரம் அமைந்துள்ள மன்னார் வளைகுடாவும் கிழக்கு கடற்கரையை அண்டிய வங்காள விரிகுடாப் பிராந்தியமும் சீனா மேலாதிக்கம் செலுத்த முயலுகின்ற கடற்பாதைக்கு இன்றியமையாதவை.

இது விடயத்திலும் தமது பெரும்பாகப் பொருளாதார மற்றும் போரியற் திட்டமிடலுக்கும் இலங்கை எந்தளவிற்கு முக்கியமென்பதை நீண்ட காலத்திற்கு முன்பே சீனா உணர்ந்து கவனமாகச் செயல்பட்டு வந்துள்ளது. சீனாவின் மிகத் தொலை நோக்குள்ள செயற்பாட்டிற்கு ஒன்றை உதாரணமாகக் கூறலாம். 1960 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் ராஜதந்திரிகளாக வேலை பார்ப்பதற்கென சில இளையவர்களைத் தெரிவு செய்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மொழியில் படிக்க சீனா அனுப்பியது. இப்போதுள்ள இலங்கைக்கான தூதுவர் இவ்வாறு சிங்கள மொழி பயின்றவரே. இது மட்டுமின்றி சிறி லங்கா சுதந்திரக் கட்சியுடன் மிக இறுக்கமான உறவுகளையும் வளர்த்தெடுத்தது.

சிங்கள ஆட்சியாளருக்கு இந்தியாவின் மேலாதிக்க நோக்கங்கள் தொடர்பாக இருந்த அச்சங்களை சீனா தனக்குச்

சாதகமாக பயன்படுத்தத் தவறவில்லை. 1970 களின் ஆரம்பத்தில் சிறி லங்கா சுதந்திரக் கட்சி பதவியில் இருந்த காலத்திலிருந்து இரண்டு முக்கியமான விடயங்களில் சீனா நீண்ட கால முதலீட்டைச் செய்யலாயிற்று. ஒன்று சிறி லங்காவின் கடற்படை, இரண்டு சிறி லங்காவின் எரிபொருள் துறை. இக்காலகட்டத்திலிருந்து சிறி லங்கா கடற்படை யினருக்கும் சீனாவிற்கும் இடையில் இன்றியமையாதபடி நெருங்கிய உறவுகள் உருவாகியமை அனைவரும் அறிந்ததே.

1987 ஆம் ஆண்டில் இலங்கையினுடைய துறைமுகங்கள் எவையும் திருகோணமலையிலுள்ள எரிபொருள் குதங்களும் இந்தியாவின் அனுமதியின்றி பயன்படுத்தப்பட முடியாது என டில்லியுடன் ஜே.ஆர். அரசு ஒப்பந்தம் செய்து கொண்டதால் சீனாவின் பல நோக்கங்கள் தடைப்பட்டன. இந்தியா மேற்படி ஒப்பந்தத்தை ஏற்படுத்தியதற்கு அமெரிக்கா மட்டுமல்ல சீனாவின் இலங்கை மீதான அக்கறையும் ஒரு காரணமெனக் கூறப்படுகின்றது.

குவாடார் முனைக்கு அடுத்ததாக முக்கியமாக அமைந்த இடமான இலங்கையின் கடல் எல்லையில் செல்வாக்கை உருவாக்க வேண்டிய தேவையும் இங்கு எரிபொருளை பெரியளவில் திரட்டி வைக்க வேண்டிய தேவையும் தனது கடற்பாதையை பேணுவதற்கு சீனாவிற்கு அவசியமாயிற்று. இந்த வகையில் இரண்டாயிரம் ஆண்டு மே மாதமளவில் கொழும்புக்கு வடக்காகவுள்ள முத்துராஜவெல பகுதியில் திருகோணமலையில் உள்ளதைப் போன்ற 33 குதங்களைக் கொண்ட ஒரு எண்ணெய் களஞ்சியத்தையும் அதைக் கடலில் நின்றவாறே கப்பல் பயன்படுத்தக் கூடிய ஒரு தளத்தையும் கட்டுவதற்கான ஒப்பந்தமொன்றை சந்திரிகா அரசுடன் சீனா செய்து கொண்டது.

திருகோணமலை களஞ்சியங்களுக்கு மாற்றீடாகவே இதை சீனா உருவாக்க முனைந்தது. வளை குடாவிற்கும் மலாக்கா நீரிணைக்கும் இடையில் செல்லும் கடற் பாதையின் சரி நடுவில் இலங்கை இருப்பதால் இங்கு எரிபொருள் களஞ்சியப்படுத்தல் சீனாவிற்கு இன்றியமையாத தேவையாகும்.

இந்து மாகடலின் இலங்கையின் இந்த நடுநாயகமான அமைவைக் கருத்திற்கொண்டே பிரித்தானியப் பேரரசு திருமலையில் எண்ணெய்க் குதங்களை அமைத்தது என்பதை இங்கே நாம் கவனிக்க வேண்டும். எனினும் சீனாவின் இந்த கேந்திர முன்னெடுப்புக்களைத் தடுப்பதற்கு இவை யாவும் முயற்சிகளை எடுக்கலாயிற்று. இந்த எண்ணெய் நிறுவனம் இங்கு பெரியளவு அண்மையில் காலூன்றியமைக்கு சீனாவின் நடவடிக்கைகளும் காரணம் என நம்பப்படுகிறது.

தனது கடற்பாதைப் பாதுகாப்புக்கும் எரிபொருள் சேமிப்பு முயற்சிகளுக்கும் இலங்கையில் இந்தியா தொடர்ந்து குந்தகம் விளைவிக்கும் நிலை தொலைவில் தென்படத் தொடங்கிய காலத்திலிருந்து சீனா இந்தியாவுடன் எவ்வித ஒப்பந்த கடப்பாடுமற்ற மாலைதீவு அரசுடன் நெருக்கமான இராணுவ உறவுகளை எடுத்தலாயிற்று. இதன் உச்சக்கட்டமாக 2001 ஆம் ஆண்டு மே மாதமளவில் சீன அதிபர் மாலைதீவுக்குச் சென்ற வேளையில் அந்நாட்டின் மரோ என்ற தீவில் தளம் அமைப்பதற்கான ஒப்பந்தத்தை சீனா செய்து கொண்டது. இதன்பின்னரும் இலங்கை மீதான சீனாவின் அக்கறை குறைந்து விட்டது என நாம் கூற முடியாது.

மாலைதீவில் தளம் இருந்தாலும் இலங்கையிலும் அதையண்டிய கடல் பரப்பிலும் தனது நலன்களுக்குச் சாதகமற்ற சக்திகள் தலையெடுத்ததால் அது தனது கடற்பாதைப் பாதுகாப்பிற்கு குந்தகமாக அமையுமென சீனா கருதுகிறது.

இதில் முக்கியமாக இலங்கையிலும், மலாக்கா நீரிணைக்குள் செல்கின்ற நுழைவாயிலிலும் இந்தியா செலுத்தி வருகின்ற ஆதிக்கமும் இலங்கை தொடர்பான அக்கறையினை சீனாவுக்கு ஏற்படுத்துகின்றது.

06.07.2003

## -28-'ஆர்ச்' பிரச்சினையில் இருந்து பெற்ற அனுபவம்

இந்தோனேசியாவின் 'ஆர்ச்' மானிலப் பிரச்சினையும், அதனைத் தீர்த்துவைப்பதற்காக அண்மையில் நடைபெற்ற சமாதான முயற்சிகளும், தமிழ் மக்களின் பிரச்சினையை ஒத்ததாகவே இருக்கின்றன.

வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரையில், எதுவுமே நிச்சயமில்லாத இந்தக் காலகட்டத்தில், 'ஆர்ச்' பிரச்சினை தொடர்பாக வெளிப்படையாகத் தெரிகின்ற சில விடயங்களை நாம் நிச்சயம் கவனத்தில் எடுத்தேயாகவேண்டி உள்ளது.

இந்தோனேசியப் பிரச்சினையை டோக்கியோவில் வைத்து சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலமாகத் தீர்த்து வைப்பதற்கு ஜப்பான் மேற்கொண்ட முயற்சிகள் கடந்த வாரம் தோல்வியில் முடிவடைந்தது. அதனைத் தொடர்ந்து, 'ஆர்ச்' விடுதலைப் போராளிகளை ஒழித்துக்கட்டுவதற்காக இந்தோனேசிய இராணுவம் ஆயிரக்கணக்கான தனது படையினரைப் 'பரசூட்டுக்கள்' மூலம் 'ஆர்ச்' மாநிலத்தில் தரையிறக்கியது.

டோக்கியோ சமாதான மாநாடு தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்று பலரும்,

சண்டையை நிறுத்தும்படி இரண்டு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்திருந்தார்கள். இப்படியான சமாதானத்திற்கான கோரிக்கைகள் பலதரப்பாலும் முன்வைக்கப்பட்டிருக்கும் போதிலும், இந்தோனேசிய இராணுவத் தளபதி ஜெனரல் எந்ரியார்தனோ சுடார்டோ, போராளிகளை அழித்தொழிக்கும் படி தனது இராணுவத்தினருக்குக் கட்டளையிட்டிருந்தார். இப்படி சமாதானத்திற்கான அழைப்பை விடுத்திருந்த பெரிய சக்திகளோ, உண்மையிலேயே இந்தோனேசிய இராணுவத்தினது திட்டங்களைப் பூரணமாக அறிந்திருந்த அதேவேளை, மிகவும் துரித கதியில் போராளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் இவற்றில் சில சக்திகள் ஆவல் கொண்டிருந்தன.

'ஆர்ச்' மாநிலத்தில் காணப்படுகின்ற வளங்களில் இருந்து கிடைக்கும் நன்மைகளை, இந்தோனேசிய மத்திய அரசு, 'ஆர்ச்' மாநிலத்துடனும் பங்கிட்டுக் கொள்ளவேண்டும் என்பதும், விடுதலைப் போராளிகளது ஒரு முக்கியமான கோரிக்கையாக முன்வைக்கப்பட்டிருந்தது. 'ஆர்ச்' பிரதேசங்களில் எந்தவிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளும் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்படவில்லை. முன்னைய இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. இதன் காரணமாக, இப்பிரதேச வாழ் மக்கள் மிகவும் வறுமையான நிலையிலேயே தொடர்ந்து காணப்படுகின்றார்கள்.

தேசிய வருமானம் அனைத்தும் மத்திய அரசாங்கத்தினாலேயே கையாளப்பட்டு வருவதால், தங்களது தாயகப் பிரதேசங்கள் அபிவிருத்தி அடையாமல் இருப்பதுடன், தமது தாயகப் பூமியில் இருந்து கிடைக்கும் வளங்கள் கூட மத்திய அரசாங்கத்தின் சுரண்டல்களுக்கு உள்ளாகி விடுவதாக, 'ஆர்ச்' கெரில்லாக்கள் தெரிவிக்கின்றார்கள்.

'ஆர்ச்' மாநிலமானது, மிகுந்த வளங்களைக் கொண்ட ஒரு பிரதேசம் என்பதுடன், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அமைவிடமாகவும் அது உள்ளது. உலகின் பெரும்பாலான

வர்த்தகப் போக்குவரத்து நடைபெறுகின்றதான 'மலாக்கா' கால்வாயின், 'வாய்' என்று கூறப்படுகின்ற இடத்தில், 'ஆர்ச்' தனது அமைவிடத்தைக் கொண்டிருப்பது இதன் சிறப்பம்சம் ஆகும்.

'ஆர்ச்' ஆனது, இந்தோனேசிய நாட்டின் ஒரு பகுதி என்றாலும், தமது சொந்த நன்மைகளை அடிப்படையாகக் கொண்டே இந்தப் பிரதேசம் தொடர்பாக, மேற்குலகம் அதிக அக்கறை செலுத்தி வருகின்றது.

'ஆர்ச்' பிரச்சினையில் இருந்து, இலங்கையின் வடக்குகிழக்கு பிரச்சினை அதிக வேறுபாடுகளைக் கொண்டிருக்கவில்லை. இந்து மகா சமுத்திரத்தின் இரண்டு முக்கிய கடற்பாதைகள், இலங்கையின் வடக்கு கிழக்கை அண்டியதாகவே அமைந்துள்ளன. இந்து சமுத்திரத்தின் முக்கியமான ஒரு சந்தி, மன்னார் குடாவை அண்டியும், வங்காள விரிகுடா கடற் போக்குவரத்துப் பாதை இலங்கையின் கிழக்குக் கடற்பரப்பை அண்டியுமே அமைந்துள்ளன.

'ஆர்ச்' போன்று அல்லாமல், வடக்கு கிழக்குப் பிரதேசம் எண்ணெய்வளம் அற்ற ஒரு பிரதேசமாக இருக்கலாம். ஆனால், வடக்கு கிழக்கின் சில கரையோரப் பிரதேசங்கள் இல்மனைட் மற்றும் 'ரூட்டில்' தாதுப் பொருட்களை பெருமளவு தமதாகக் கொண்டிருக்கின்ற பிரதேசங்களாகும். புல்மோட்டை, முல்லைத்தீவு பிரதேசங்களின் நிலங்களில் பெருமளவு டைட்டானியம் மற்றும் டைட்டானியம் ஒக்சைட் போன்ற உலோகத் தாதுப்பொருட்கள் காணப்படுகின்றன.

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஏற்படுத்திய அழுத்தத்தின் காரணமாக, இந்தோனேசிய அரசாங்கம் 'ஆர்ச்' விடுதலை அமைப்புடன் 2002 மே மாதம் 9 ஆம் திகதி சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது. ஜெனிவாவில் உள்ள சுவிஸ் நிறுவனமான Henry Dunant Centre (HDC) என்ற அமைப்பின் மத்தியஸ்தத்துடன் ஆரம்பமான

சமாதானப் பேச்சுவார்த்தைகள், கடந்த டிசம்பர் மாதத்தில் ஒரு தேக்கநிலையை அடைந்தது.

ஒப்பந்தத்தின் முக்கிய விடயமாக, இரண்டு தரப்பினருக்கும் இடையில் யுத்தநிறுத்தம் ஏற்படுத்தப்பட்டது. 150 சர்வதேச கண்காணிப்பாளர்கள் இந்த யுத்த நிறுத்தத்தை கண்காணிப்பதற்கு ஏற்பாடாகி இருந்தது.

யுத்த நிறுத்த அமுலாக்கலுக்கு, போராளிகளிடம் இருந்து ஆயுதக்களைவை மேற்கொள்ள வேண்டியது அவசியமாக இருந்தது. அதேவேளை, ஆயுதங்களை தாம் கையளித்துவிட்டால், இந்தோனேசியப் படையினர் தம்மீது தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிடக்கூடும் என்று 'ஆர்ச்' போராளிகள் அச்சம் அடைந்திருந்தார்கள். இதனால் யுத்த நிறுத்தம் எதிர்பார்த்த வெற்றியை அளித்திருக்கவில்லை.

டோக்கியோ பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட தடங்கல்களைத் தொடர்ந்து, இந்தோனேசிய சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தன. இரண்டு வாரங்களின் முன்னர் சுவிற்சர்லாந்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில், 'ஆர்ச்' விடுதலை அமைப்பு சார்பாகக் கலந்து கொண்ட ஐவரை, இந்தோனேசியப் பொலிஸார் கைது செய்ததைத் தொடர்ந்தே, இந்தத் தேக்கநிலை ஏற்பட்டது.

இதுபற்றி, நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தின் பேச்சாளரான ஸ்டீவ் டாலி என்பவர் கருத்துத் தெரிவிக்கும் பொழுது, "மறுநாள் டோக்கியோ பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள இருந்த மக்களை, எதற்காக கைது செய்யவேண்டும் என்று, அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பப்பட வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.

பேச்சுவார்த்தைகள் குழம்புவதற்கு இரண்டு நாட்கள் முன்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கருத்துத் தெரிவிக்கையில், போராளிகளுடன் பேசியதன் மூலம், சமாதானத்தின் அதிக தூரத்தைக் கடக்கும் இந்தோனேசிய

ஜனாதிபதி மேகவதி சுவர்ணபுத்திரியின் ஆர்வத்தைத் தான் பாராட்டுவதாகத் தெரிவித்திருந்தார்.

1976 ஆம் ஆண்டு 'ஆர்ச் மேர்தகா' (சுதந்திர ஆர்ச்) என்ற ஆயுத அமைப்பு உருவாக்கப்பட்டது. (இதே ஆண்டுதான் விடுதலைப் புலிகள் அமைப்பும் ஸ்தாபிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது)

சுவீடனுக்கு நாடு கடத்தப்பட்டிருந்த தெங்கு ஹாசன் டீ டிரோ என்பவர், இந்த அமைப்புக்கு தலைமை ஏற்று நடத்தி வருகின்றார்.

70 களின் பிற்பகுதியில், 'ஆர்ச் மேர்தகா' அமைப்பின் உறுப்பினர்களுக்கு எதிராக இந்தோனேசிய ஆயுதப்படைகள் கடும் நடவடிக்கைகள் எடுத்ததுடன் 1989 ஆம் ஆண்டு வரை அதன் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி வந்தன. இந்த அமைப்பு 1989 ஆம் ஆண்டு Arch Sumatra National Liberation Front (ASNLF) என்ற பெயருடன் கிளர்ந்தெழுந்ததுடன், விடுதலை வேண்டி பொலிஸ் நிலையங்கள், இராணுவ நிலைகளின் மீது புதிய தாக்குதல்களை ஆரம்பித்திருந்தது. 1991 ஆம் ஆண்டு இந்தோனேசியா 'ஆர்ச்' பிரதேசத்தை தாக்குதல் நடவடிக்கைப் பிரதேசமாகப் பிரகடனம் செய்து, அந்த அமைப்பிற்கு எதிராகப் பாரிய இராணுவ நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டது. சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட கணிப்பீட்டின்படி, 1989 முதல் 1992 வரை, 2000 மக்கள் இராணுவ நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சுயாதீன அறிக்கைகளின்படி இந்தக் காலப்பகுதிகளில் ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டும் காணாமல் போயும் உள்ளதுடன், ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் இந்தோனேசிய இராணுவத்தின் சிறைகளில் அடைத்து வைக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரிவினைவாதப் போராட்டத்தைத் தணிக்கும் வகையில், 2002 ஜனவரியில், 'ஆர்ச்' மக்களுக்கு சுயாட்சி

அதிகாரத்தை வழங்குவதற்கு இந்தோனேசிய அரசாங்கம் முன்வந்தது. தேசிய வளங்களுக்கான வருமானத்தை பங்கீட்டுக் கொள்ளும் வகையிலும் இந்தச் சுயாட்சி அதிகாரங்கள் வகுக்கப்பட்டிருந்தன.

இருந்தபோதிலும், 'ஆர்ச்' மக்கள் பயனடையும் வகையில் திட்டங்கள் எதுவும் நடைமுறையில் அமைந்திருக்கவில்லை. 'ஆர்ச்' பிரதேசத்திற்கு குறிப்பிடப்பட்ட பணம் வழங்கப்படவில்லை. அபிவிருத்தி நடவடிக்கைகள் எதுவும் அங்கு மேற்கொள்ளப்படவில்லை. வறுமை அம்மக்களைத் தொடர்ந்து வாட்டி வந்தது.

எந்தவித ஒழுங்கான முறைகளிலோ, திட்டங்களின் அடிப்படையிலோ அல்லாமல், கண்டபடி அரசாங்கம் பணத்தை இறைத்து வந்ததாகப் பிராந்திய சுயாட்சி அமைப்பின் முன்னாள் அமைச்சரான ரியாஸ் ரிட் தெரிவித்திருந்தார்.

தங்கள் பிரதேசத்தைக் கொள்ளையிடும் ஒரு அரசாகவே ஜகார்த்தாவை ஆர்ச் பிரதேசத்து மக்கள் நோக்கினார்கள்.

ஆர்ச் விடுதலை அமைப்புக்கள் பேச்சுவார்த்தைகளின் மூலமே பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதே ஜப்பானினதும், அமெரிக்காவினதும் விருப்பமாக இருந்தது. மலாக்கா கால்வாய் வழியான கடற் போக்குவரத்திற்கு, ஆர்ச் போராளிகள் அச்சுறுத்தலாக இருந்துவிடுவார்கள் என்ற எண்ணமே இதற்குக் காரணம்.

அதேவேளை, இந்தோனேசிய அரசாங்கம், ஆர்ச் விடுதலை அமைப்பை அழித்துவிடும் நோக்கத்தில்தான், பேச்சுவார்த்தை இடைவெளியைப் பயன்படுத்த முனைகின்றது என்பதை, இந்த இரண்டு சக்திகளும் புரிந்துகொள்ளவில்லை.

தங்களது எண்ணப்படி ஆர்ச் விடுதலை அமைப்பு பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் செயற்படாத காரணத்தினால், அந்த அமைப்பை செயலிழக்க

வைக்கும்படியான நடவடிக்கைகளை எடுக்கும்படி இந்தோனேசிய அரசாங்கத்தை அமெரிக்க மற்றும் ஜப்பான் நாடுகள் இரகசியமாக ஊக்குவித்திருந்தன.

ஆனால், பேச்சுவார்த்தைகளில் எவ்வாறான விடயங்கள் பேசப்படவேண்டும் என்பதில், ஆர்ச் விடுதலை அமைப்பு உறுதியாகவே இருந்தது. ஆயுதங்களைக் களைவது, சுயநிர்ணய உரிமை, வளங்களைப் பங்கிடுவதற்குத் தேவையான கட்டமைப்பு போன்ற விடயங்களில் ஆர்ச் அமைப்பு மிகவும் உறுதியான நிலைப்பாட்டையே எடுத்து வந்தது.

ஆனால் இந்தோனேசிய அரசோ, தனது இராணுவ நடவடிக்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, ஜகார்த்தாவின் சுயாட்சித் திட்டத்தை ஆர்ச் அமைப்பு ஏற்றுக்கொள்வதுடன், உடனடியாகவே ஆயுதக் கையளிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியது. அமெரிக்காவும் ஜப்பானும் இந்தோனேசியாவின் இந்த இராணுவ நகர்விற்குத் தமது ஆதரவை வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஆர்ச் சமாதான முன்னெடுப்புக்களை நாம் கவனமாக ஆராய்ந்து, எமது நாட்டின் பிரச்சினைகளுடன் ஒப்பிட்டோமேயானால், அங்கு உபயோகிக்கப்பட்ட முறைகள் மிகவும் பொருந்துவதை காண முடியும்.

இராஜதந்திர ஏமாற்றுப் பேச்சுவார்த்தைகளின் அடியில் மறைத்து வைக்கப்பட்டுள்ள தடி ஒன்றினால் நாம் தாக்கப்பட்டுவிடக்கூடிய ஆபத்துக்கள் பற்றி நாம் நிச்சயம் கவனம் செலுத்துபவர்களாக இருக்க வேண்டும்.

14.06.2003

## -29-சூடான் - தமிழ் ஈழம். அமெரிக்கா இரட்டை வேடம் போட இயலாது

புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்திற்கும் நீங்கள் அருந்துகின்ற 'பன்ரா' போன்ற மென்பானங்களில் நிறக் கலவை போத்தலடியில் படியாமலிருப்பதற்கும் என்ன தொடர்பு? (இக்கேள்வியைப் பார்த்தவுடன் 'ஆஹா! கடைசியாக ஆளுக்கு மூளையில் தட்டிவிட்டது' என எண்ணுவோரை சற்றுப்பொறுமையாக மேற்கொண்டு படிக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்)

புலிகள் பல்வேறு நாடுகளில் சிறி லங்கா அரசுடன் (ஆறுமுறை) பேசி கிடைத்தபலன் ஒன்றுமில்லை. நீண்டகாலமாக சிறி லங்கா அரசும் சிங்களத் தேசியவாதிகளும் சர்வதேச சமூகத்திடம் ஒரு குற்றச்சாட்டை முன்வைத்து வந்தனர். 'புலிகள் பேச்சுவார்த்தைகளை தமது போரியல் தயாரிப்புகளை செய்வதற்கான ஒரு சுத்துமாத்தாகவே பயன்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஓர் அரசியல் தீர்வில் உண்மையான நாட்டமெதுவும் கிடையாது. அதனாலேயே அவர்கள் தமது சார்பில் எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் முன்வைப்பதில்லை. இலங்கையில் அமைதிப் பேச்சுகள் குழம்புவதற்கு இதுவே முக்கிய காரணமாகிறது' என்பதே சிங்களப் பேரினவாதிகளும் சிறி லங்கா அரசும் தங்களுடைய அடாவடித்தனங்களை நியாயப்படுத்தவென சர்வதேச சமூகத்திடம் எடுத்தியம்பி வந்த விளக்கமாகும்.

இனப்பிரச்சினை தொடர்பான உண்மைகளை மறைப்பதற்கும், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை இருட்டடிப்புச் செய்வதற்கும், விடுதலைப் போராட்டத்தை சுத்த இராணுவக் கண்ணோட்டம் கொண்ட பயங்கரவாதமாகக் காட்டுவதற்கும் மேற்படி வாதம் அவர்களுக்கு மிகவும் பயன்பட்டுவந்தது. இதற்கொரு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவே விடுதலைப் புலிகள், தமிழர் கடந்த 50 வருடங்களாக கடந்து வந்த அரசியல் பாதையின் முக்கிய மைல்கற்களை அடித்தளமாகக் கொண்டு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என சர்வதேச தமிழ் சட்ட வல்லுனர்களால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை சிறி லங்கா அரசிடம் கையளித்தனர். இதைக் கண்டதும் சிங்களத் தேசியவாதிகள் போட்ட பெரும் கூச்சலின் அதிர்வலைகள் இன்னும் ஓய்ந்தபாடில்லை.

சிங்களப் பேரினவாதிகளின் அபிமான நாயகனான கதிர்காமர் அமெரிக்கா மற்றும் இந்தியத் தலைநகரங்களுக்குச் சென்று 'இது இடைக்காலத் தீர்வல்ல தனித் தமிழீழத்தை அமைப்பதற்கான நகல்திட்டம்' என்று கொக்கரித்தார்.

சந்திரிகாவும் கதிர்காமரும் ஜே.வி.பி.யும் சிங்களப் பேரினவாதப் புத்திஜீவிகளும் அத்தோடு நடுநிலையாளர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் சில சிங்கள அறிஞர்களும் அவர்களுக்கு ஒத்து ஊதுகின்ற சில தமிழர்களும் சர்வதேச சமூகம் ஒட்டுமொத்தமாக புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தை நிராகரித்து விடும் என திட்டவட்டமாக நம்பினர்.

ஏனெனில், அடக்கு முறைக்கு எதிராகவும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் போராடுகின்ற ஒடுக்கப்பட்ட பல்வேறு சமூகங்களுக்கு தமது அரசியல் நோக்கங்களை அடைவதற்கு புலிகளின் திட்டம் முன்னுதாரணமாக அமைந்துவிடும் எனவும், அதனால் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா ஆகிய நாடுகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளமாட்டா என்பதும் மேற்படியாரின் நம்பிக்கையாக இருந்தது.

புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவை சர்வதேச ஆதரவோடு புறக்கணித்து புலிகளை வழிக்குள் கொணரலாம் என எண்ணிய சந்திரிகாவும் அவரது மதியுரைஞர்களும் ‘அதைப்பற்றிப் பேசலாம் ஆனால், நாம் முன்வைக்கின்ற மாற்றுத் தீர்வுத்திட்டத்தைப் பற்றியும் பேசினால் என்ன?’ எனப் புலிகளைக் கேட்குமளவிற்கு இன்று நிலைதடுமாறியுள்ளனர்.

இங்கு ஏலவே குறிப்பிடப்பட்டதைப்போல, புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்திற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவில்லை என நாடிபிடித்து அறிந்திருந்தால் சந்திரிகாவும் சிங்களப் பேரினவாதிகளும் மேற்குறிப்பிட்ட ஏனையோரும் பேச்சுவார்த்தையைக் குழப்பி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒரு பயங்கரவாத வன்முறையாக காட்டும் வேலையில் முழு மூச்சாக இறங்கியிருப்பார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், புலிகளை வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கமெனப் பட்டியலிட்டுள்ள அமெரிக்காவும் அதன் கூட்டுநாடுகளும் கூட ஏன் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை கண்டிக்காமலும் அதைக் கைவிட்டு சிறி லங்கா அரசுக்கு ஏற்புடைய வேறொரு அடிப்படையில் பேசுமாறு புலிகளை வற்புறுத்தாமலும் இருக்கின்றன என்பதை சிங்களப் பேரினவாதிகளும் புத்திஜீவிகளும் புரிந்துகொள்ளாமல் இன்று புலம்பி வருகின்றனர்.

அண்மையில், அமெரிக்க இராஜாங்க பிரதி உதவிச் செயலர் டொனால்ட் காம்ப் கொழும்பில் பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்தபோது தொடுக்கப்பட்ட பெரும்பாலான கேள்விகளில் இந்த ஆதங்கத்தைக் காணலாம்.

உலகின் இரு முக்கிய மூலப்பொருட்களை கையகப்படுத்தும் நோக்குடன் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவு போன்றதொரு இடைக்காலத் தீர்வுத் திட்டத்துக்கு அமெரிக்காவும் அதன் கூட்டு நாடான

பிரித்தானியாவும் முழுமையான ஆதரவு வழங்கியுள்ளன என்பது அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. எமது விடுதலைப் போராட்டம் பெருமெடுப்பில் ஆயுதக் கிளர்ச்சியாக பரவிய அதே ஆண்டு (1983) சூடான் நாட்டின் தென்பகுதியில் உள்ள கிறிஸ்தவப் பெரும்பான்மை மக்கள் அந்நாட்டின் இஸ்லாமிய அரசுக்கு எதிராக ஆயுதப்போராட்டத்தில் இறங்கினார்கள். சூடான் அரசு தம்மை இஸ்லாமிய மேலாதிக்கத்துக்கும் இஸ்லாமிய சட்டங்களுக்கும் உட்படுத்தி நசுக்கப் பார்க்கிறது என்பதே தென் சூடான் போராட்டக் குழுக்களின் நிலைப்பாடாக இருந்தது.

மத்திய தரைக்கடல், சுயெஸ் கால்வாய், இந்து மாகடல் என்பவற்றின் ஊடாக அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடற்பாதைகளின் பாதுகாப்பிற்கும் அதை ஒட்டிய வேறு அலுவல்களுக்கும் சூடானின் புவியியல் அமைவிடம் இன்றியமையாதது என 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரித்தானியா உணர்ந்து கொண்டதாலும் இந்தியாவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு மேற்படி கடற்பாதைகள் கட்டாயம் தேவை என்பதாலும் சூடானில் பிரித்தானியப் பேரரசு கால்வைத்தது. அதற்குப் போட்டியாக அங்கு வல்லாதிக்கம் செலுத்த பிரான்ஸூம் முனைந்தது. நவீன உலகின் இயக்கத்திற்கு இன்றியமையாத ஒரு மூலப்பொருளாக எண்ணெய் தோன்றிய பின்னரும் அது செங்கடலின் ஒரு கரையில் அமைந்துள்ள சவூதி அரேபியாவில் பெருமளவில் கண்டு பிடிக்கப்பட்ட பின்னரும் சூடானின் கேந்திர முக்கியத்துவம் மேலும் அதிகரித்தது. இதன் காரணமாக பிரித்தானியப் பேரரசு சூடான் மீது தன் பிடியை மேலும் இறுக்கிக் கொண்டது.

ஏகாதிபத்தியத்துக்கு எதிராக சூடான் மக்களால் முன்னெடுக்கப்பட்ட பல போராட்டங்கள், பல ஆயுதக் கிளர்ச்சிகள் முறியடிக்கப்பட்டன. இதன் காரணமாக, சூடான் மக்களை பிரித்தாளும் நோக்கில் அந்நாட்டின் தென்பகுதியில் வாழ்ந்த மக்களை கிறிஸ்தவத்திற்கு மாற்றுவதற்கு பிரித்தானியப் பேரரசு முயற்சியெடுத்து அதில் வெற்றி கண்டது.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் சுயெஸ் கால்வாய் பிரித்தானியாவின் கட்டுப்பாட்டிலிருந்து நழுவிப்போனதால் செங்கடல் மீதும் சூடான் மீதும் பிரித்தானியாவுக்கிருந்த அக்கறை அருகிப்போயிற்று. இது 1956 ஆம் ஆண்டு சூடான் சுதந்திரமடைவதற்கு வழிவகுத்தது. எனினும், சூடான் அரசு மீது அழுத்தங்களை ஏற்படுத்துவதற்கு தென்சூடான் மக்களின் பிரச்சினைகளை அமெரிக்காவும் அதன் சார்பு நாடுகளும் காலத்துக்குக் காலம் பயன்படுத்தத் தவறவில்லை.

எண்ணெய்வளம் நிரம்பிய சவூதி அரேபியாவின் பாதுகாப்பை முன்னிட்டு அமெரிக்கா செங்கடல் பிராந்தியத்தில் பிரித்தானியா விட்டுச் சென்ற ஏகாதிபத்திய இடைவெளியை நிரப்பிற்று.

சிறி லங்கா அரசு மீது அழுத்தத்தைச் செலுத்தி அதைத் தன் வழிக்கு வரவைப்பதற்காக இந்தியா தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பயன்படுத்த முயற்சித்த அதே பாணியில் அமெரிக்காவும் அதன் கூட்டு நாடான பிரித்தானியாவும் தென் சூடான் மக்களின் போராட்டத்தை பயன்படுத்தின.

இதனிடையே, தென் சூடானில் பெரும் எண்ணை வளமிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அமெரிக்காவிற்கும் அதன் கூட்டு நாடுகளுக்கும் எதிராகத் தன்னை பாதுகாத்துக் கொள்ள எண்ணிய சூடான் அரசு இந்த எண்ணெய் வளத்தை அபிவிருத்தி செய்யும் தனி உரிமையை சீனாவுக்கு வழங்கியது.

தென் சூடானின் எண்ணெய் வளத்தை சீனா முழுமையாகக் கையகப்படுத்திக் கொண்டால், அது தனக்குச் சவால் விடக்கூடிய உலக வல்லரசாக வளர்ந்துவரும் வேகம் மேலும் துரிதப்படும் என்பதை உணர்ந்த அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் வேலையில் இறங்கின.

தென் சூடான் போராட்ட இயக்கத்துக்கு அமெரிக்கா கூடிய இரகசிய ஆதரவு வழங்கத் தொடங்கியது. சூடானின்

இறைமையைச் சிதைத்து அதன் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து அதை தம் வழிக்குக் கொண்டுவர அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் எடுத்த முயற்சிக்கு இன்னொரு முக்கிய காரணமும் உண்டு.

நீங்கள் கையில் வைத்திருக்கும் காகிதத்தின் மீது அச்சடிக்கப்படும் மை பரவி ஊறாமல் சீராக அடிக்கப்படும் வடிவத்திற்கு அமைய நிற்பதற்கு ஒரு மூலப் பொருள் இன்றியமையாதது ஆகும். அதுதான் அரபிப் பசை (Gum Arabic). இந்த மூலப் பொருள் இல்லாவிட்டால் நீங்கள் அருந்தும் மென்பானங்களின் செயற்கை நிறங்கள் போத்தலின் அடியில் படிந்து விடும். அது மட்டுமன்றி அழகு சாதனப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், இனிப்பு வகைகள் எனப் பல்வேறு உற்பத்திகளுக்கு அரபிப் பசை முக்கியமான மூலப் பொருள் ஆகும்.

உலகின் மொத்த அரபிப் பசை உற்பத்தியின் 80 சதவீதத்திற்கு மேல் சூடானிலிருந்தே ஏற்றுமதியாகிறது. இந்த ஏற்றுமதியை முழுமையாக கட்டுப்படுத்துகின்ற நிறுவனத்தின் (Gum Arabic Company) உரிமையாளராக இருந்து வந்தவர் ஒஸாமா பின்லேடன் ஆவார்.

1996 ஆம் ஆண்டு இஸ்லாமியப் பயங்கரவாதிகளுக்கு சூடான் அரசு தஞ்சமளிக்கிறது எனக் கூறி சூடான் மீது அமெரிக்கா வரையறுக்கப்பட்ட ஏவுகணைத் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தது. அதேவேளை, சூடானிலிருந்து அரபிப் பசையை இறக்குமதி செய்வதை அமெரிக்கா நிறுத்தியது.

இற்கெதிராக உடனடியாகவே அமெரிக்காவின் பெரும்பலம் படைத்த மென்பான உற்பத்தியாளர் சங்கமும் அமெரிக்க அச்சக உரிமையாளர் சங்கமும் போர்க்கொடி தூக்கின. இவற்றின் அரசியல் மற்றும் பணச் செல்வாக்கைக் கண்டு பயந்த அமெரிக்க அரசு தடையை நீக்கியது.

ஆனால், சீனாவின் கைக்குள் சூடானின் எண்ணெய் வளம் போகாமல் இருப்பதற்கும், அரபிப் பசை உற்பத்தி மீது

செல்வாக்குச் செலுத்துவதற்கும் ஏதுவாக அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் திட்டம் தீட்டிச் செயல்பட்டன.

தென் சூடான் போராட்ட இயக்கம் தன் சொந்தக் காலில் சுதந்திரமாக நின்று செயல்படும் ஓர் அமைப்பு அல்ல. அமெரிக்க, பிரித்தானிய செல்வாக்கிற்கு அமையவே அதன் தலைமை செயல்பட்டு வருகிறது. இதைப் பயன்படுத்தி சூடான் அரசு மீது படிப்படியாகத் தமது செல்வாக்கை அதிகரிக்கும் நோக்கில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் தென் சூடான் போராட்ட இயக்கத்தை பேச்சுவார்த்தையில் இறக்கின.

சூடான் அரசுக்கும் தென்சூடான் போராட்ட அமைப்பிற்கும் இடையில் ஆரம்பித்த பேச்சுக்களுக்கு நோர்வே அனுசரணையாளராக நியமிக்கப்பட்டது.

(நோர்வேயை அனுசரணையாளராக கொண்டு வருவதில் அமெரிக்காவே பின்னின்று செயற்பட்டது.)

மேற்படி பேச்சுக்களின் ஊடாக சூடான் அரசு மீது தனது செல்வாக்கைப் பெருக்கி அதன் மூலம் அந்நாட்டின் எண்ணெய் வளம், கனிம வளம், அரபிப் பசை மற்றும் செங்கடல் பாதைகள் ஆகியவற்றை தான் முழுமையாகக் கட்டுப்படுத்தலாம் என அமெரிக்கா கருதுகிறது.

நோர்வேயின் அனுசரணையோடு நடைபெற்ற பேச்சுக்களின் விளைவாக சூடான் அரசுக்கும் தென் சூடான் போராட்ட அமைப்பிற்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒரு இடைக்கால ஒழுங்கு பற்றிய உடன்பாடு காணப்பட்டது.

இந்த இடைக்கால நிர்வாக அமைப்பு பற்றிய உடன்படிக்கை 'மச்சாக்கோஸ் ப்றொட்டக்கோல் (Machakos Protocol) என அறியப்படுகிறது.

இந்த உடன்பாட்டின் கீழ் தென் சூடான் மக்களின் சுயநிர்ணய உரிமை எந்தவித தங்குதடையுமின்றி ஏற்றுக்

கொள்ளப்படுகிறது. இந்த உடன்படிக்கையின் கீழ் நிறுவப்படும் இடைக்கால நிர்வாக அமைப்பின் காலமுடிவில் (6 ஆண்டுகள்) தென் சூடான் மக்கள் ஐக்கியப்பட்ட சூடானுக்குள் இருப்பதா அல்லது பிரிந்து தனிநாடாகச் செல்வதா என்பதைத் தீர்மானிப்பதற்காக சர்வதேச ரீதியாகக் கண்காணிக்கப்பட்ட தேர்தல் ஒன்று நடத்தப்படும் என வரையறுக்கப்பட்டது.

ஈராக்கிற்கு அடுத்ததாக சூடான் பிரச்சினை சர்வதேச கவனத்தை இன்று ஈர்த்து வருகிறது. இதன் காரணமாக, உள்நாட்டுப் போரொன்றின் தீர்வுக்கு ஒரு இடைக்கால நிருவாகக் கட்டமைப்பு முக்கியமானது என்பதும் ஒரு சமூகத்தின் சுயநிர்ணய உரிமை ஜனநாயக ரீதியாக தீர்மானிக்கப்படலாம் என்பதும் ஒதுக்க முடியாத விடயங்களாக உள்ளன.

ஐக்கிய சூடானுக்குள் தென்சூடான் மக்கள் தொடர்ந்து வாழலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த இடைக்கால ஒழுங்கு பயன்படவேண்டும் என மச்சாகோஸ் உடன்பாடு கூறுகிறது.

அதேபோல ஐக்கிய இலங்கைக்குள் தாம் தொடர்ந்து வாழலாம் என்ற நம்பிக்கையை தமிழருக்கு ஏற்படுத்த சிறி லங்கா அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு வரலாற்று வாய்ப்பாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை நோக்கப்பட வேண்டும் என்பதை நாம் சர்வதேச சமூகத்திற்கு எடுத்தியம்ப வேண்டும்.

சூடானில் ஒரு கதை இலங்கையில் ஒரு கதை என ஆகவும் பம்மாத்து விட முடியாத நிலையில் அமெரிக்காவும் ஏனைய மேற்கு நாடுகளும் உள்ளன.

இதில் மிக முக்கியமானது என்னவெனில், சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிப்பதற்கான வரலாற்றுக் காரணங்கள் தென் சூடான் மக்களைவிட தமிழீழ மக்களுக்கே மிக அதிகமாகவே உள்ளன.

சூடானின் இடைக்காலத் தீர்வுத்திட்டத்தைப் போலல்லாது புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத்திட்டம் எமது முழுச் சுயநிர்ணய உரிமையைக் கொள்கையளவில் மட்டுமன்றி நடைமுறையிலும் செயற்படுத்தும் கட்டமைப்புகளைப் பற்றியும் பேசுகிறது.

எமது வளங்கள், எமது நிலம் ஆகியவற்றின் மீதான எமது உரிமையையும் வலியுறுத்துகிறது. ஆனால், சூடானில் இடைக்காலத் தீர்வு அமெரிக்க நலன்களையும் உள்ளடக்குவதால் இவை பற்றித் தெளிவாகப் பேசவில்லை.

எனினும், சூடானின் இடைக்காலத்தீர்வும் அதன் அடிப்படையாக அமைந்துள்ள சுயநிர்ணய உரிமைக் கோட்பாடும் இவற்றிற்கு மேற்கு நாடுகள் வழங்கிய ஆதரவும் எமக்கு சாதகமாகவே உள்ளன. இதனாலேயே, சிங்களப் பேரினவாதிகள் கலங்கிக் குழம்புகின்றனர்.

சிறி லங்கா நாடாளுமன்றத்தில் முழங்குவது மட்டுமே எமது அரசியல் வேலை என்று சும்மாயிருக்காது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல்வாதிகள் இதுபோன்ற விடயங்களை மேலும் கற்று மக்களிடையே இறங்கி வேலை செய்ய வேண்டும்.

08.08.2004